# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் – மே 2024

www.tnpscthervupettagam.com



















SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy in India
SINCE 2004

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

SHANKAR IAS ACADEMY
THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

TNPSC THERVU PETTAGAM
Information is a Blessing
A Shankar IAS Academy Initiative

# உள்ளடக்கம்


TNPSC துளிகள் ..... 10

தமிழ்நாடு செய்திகள் ..... 23

- கேரளாவில் இருந்து சட்டவிரோதமான முறையில் திடக்கழிவு இடமாற்றல் ..... 23
- தமிழ்நாடு பாரம்பரிய ஆணையச் சட்டம் ..... 24
- கல்லணை கால்வாய் மறுசீரமைப்பு திட்டத்தின் இரண்டாம் கட்டம் ..... 24
- தமிழ்நாட்டில் 42 யானை வழித்தடங்கள் ..... 25
- கைகளால் கழிவுகளை அள்ளும் பணியாளர்கள் குறித்து சென்னை உயர்நீதிமன்றம் ..... 25
- புவிசார் குறியீடு பெற்றத் தயாரிப்புகளின் தாக்கம் ..... 26
- வருடாந்திரக் காவிரி நீர் திறப்பு ..... 27
- பவானிசாகர் அணையால் மூழ்கிய கோவில் ..... 28
- பசுமை மதிப்பீடு திட்டத்தின் கீழ் நிலங்கள் மறுசீரமைப்பு ..... 29
- நகரம் மற்றும் கிராம திட்டமிடல் சட்டம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் கருத்து ..... 30
- தமிழ்நாட்டில் சம்பா/தாளடி சாகுபடிப் பருவம் - 2024 ..... 31
- 2024-25 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பொருளாதாரம் ..... 31
- தமிழ்நாட்டில் குறைவான தனிநபர் வருமானம் கொண்ட மாவட்டங்கள் ..... 32
- தமிழ்நாடு 12 ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள் 2024 ..... 33
- பழவேற்காடு பறவைகள் சரணாலயத்தின் எல்லைகள் ..... 34
- பொருளாதார வளர்ச்சி மற்றும் அரசுக் கடன் – தமிழ்நாடு ..... 35
- பத்தாம் வகுப்பு தேர்வு முடிவுகள் ..... 36
- உயிரிழந்த உறுப்பு தானம் செய்தவர்களின் எண்ணிக்கை ..... 37
- மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 2023-24 ..... 38
- நிலச்சரிவைத் தடுக்கப் பசுமைத் தீர்வு ..... 39
- தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கான ஊதிய விகிதம் ..... 39
- குறுவை சாகுபடியின் பரவல் 2024 ..... 40
- 2024 ஆம் ஆண்டில் வண்ணத்துப்பூச்சிகளின் இடம்பெயர்வு ..... 41
- நெல் கொள்முதல் 2023-24 ..... 41
- 2வது ஒத்திசைக்கப்பட்ட யானைகள் மதிப்பீடு ..... 42
- ஆறு புதிய மருத்துவக் கல்லூரிகள் ..... 42
- PM-KUSUM திட்டம் ..... 43
- மாநிலத்தின் அரிசி விளைச்சல் 2024 ..... 44
- சேலம் மத்திய சிறை ..... 44

தேசியச் செய்திகள் ..... 45

- அங்கீகரிக்கப்பட்ட பொருளாதாரச் சேவை வழங்குநர் (AEO) நிலை ..... 45
- EVM தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு ..... 45
- குறைந்து வரும் சூரியக் கதிர்வீச்சின் அளவு ..... 46

**ISSAR 2023 அறிக்கை ..... 47**
**காங்கேசன்துறை துறைமுகத்தில் இந்தியாவின் பங்கு ..... 48**
**இந்தோனேசியாவுடனான 75 ஆண்டுகால அரசுமுறை உறவு ..... 48**
**எதிர்பாராத விதமான சூழல்களால் எளிதில் ஏற்படக் கூடிய சேதத்திற்கான இழப்பீட்டு விதி ..... 49**
**ஷக்ஸ்காம் பள்ளத்தாக்கு ..... 49**
**இந்தியாவின் கடலோரப் பகுதிகளில் சீறும் கடல் அலைகள் ..... 50**
**மின்சார உற்பத்தியில் நிலக்கரியின் பங்கு ..... 51**
**மாநிலச் சட்டங்களின் வருடாந்திர மதிப்பாய்வு 2023 ..... 52**
**புதிய உணவு முறை வழிகாட்டுதல்கள் ..... 53**
**2023 ஆம் ஆண்டில் சூரிய சக்தி உற்பத்தி ..... 54**
**சமயச் சிறுபான்மையினரின் பங்கு (1950-2015) ..... 55**
**ஐக்கிய நாடுகள் சபையின் தீவிரவாத எதிர்ப்பு நிதிக்குப் பங்களிப்பு ..... 55**
**இந்தியாவில் விளம்பரத்திற்குப் பிறகு அசல் விலையினை வெளிப்படுத்துதல் ..... 56**
**அதிக மகசூல் தரும் கோதுமை வகை - HD 3386 ..... 57**
**மாலத்தீவில் இருந்து இராணுவப் படைகள் விலக்கம் ..... 57**
**உணவுப் பொருட்களின் உறைகளில் தவறான தகவல்கள் ..... 58**
**ETO கலப்பினைத் தடுப்பதற்கான வழிகாட்டுதல்கள் ..... 59**
**போட்டியிடும் இடங்களுக்கான விதிகள் ..... 60**
**சாபஹர் துறைமுக ஒப்பந்தம் ..... 61**
**ஆதார் அடிப்படையிலான சரக்கு மற்றும் சேவை வரி பதிவு ..... 61**
**BHISHM - இடம் பெயர்த்தும் வகையிலான மருத்துவமனைகள் ..... 62**
**உலகப் பல்கலைக்கழக தரவரிசை மையம் ..... 62**
**இந்தியாவில் கடுமையான வெப்ப அலைகள் ..... 63**
**இந்தியாவில் தட்டம்மை தடுப்பூசி ..... 64**
**இக்லா-S வான்வழிப் பாதுகாப்பு அமைப்புகள் ..... 64**
**MDL கப்பல் கட்டும் நிறுவனத்தின் 250வது ஆண்டு விழா ..... 65**
**புதிய பல்கலைக்கழகங்களின் தரவரிசை 2024 ..... 66**
**தேசிய மனித உரிமைகள் ஆணையத்திற்கான சர்வதேச அங்கீகாரம் ..... 66**
**நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தில் இருந்து விலக்கு ..... 67**
**UAPA சட்டம் குறித்து உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு ..... 68**
**வடமேற்கு காற்று ஆராய்ச்சிக்கான சோதனைக் கூடம் ..... 68**
**இந்தியாவின் முதல் அணுகுண்டு சோதனையின் 50வது ஆண்டு நிறைவு ..... 69**
**அரசியலமைப்பு அமர்வின் தீர்ப்பு ..... 70**
**இந்தியர்களின் மனதில் பருவ நிலை மாற்றம் பற்றிய கருத்து, 2023 ..... 70**
**ஒட்டாத தன்மை கொண்ட டெஃப்ளான் ரக சமையல் பாத்திரங்களின் பயன்பாடு ..... 71**
**குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின் கீழ் இந்தியக் குடியுரிமை ..... 72**
**பல்வேறு பிரிவினர்களின் மாணவர் சேர்க்கை ..... 73**
**உணவு மற்றும் ஊட்டச்சத்து வாரியம் ..... 73**
**புதிய ஓட்டுநர் உரிம விதிகள் 2024 ..... 74**

படிவம் 17C ..... 75
ஒருங்கிணைந்த போர்க்கள கட்டுப்பாட்டுப் பிரிவுகள் ..... 76
பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் முழுமையான எண்ணிக்கை ..... 76
BIMSTEC சாசனம் ..... 77
சர்வதேசச் செய்திகள் ..... 78
அறிவுசார் சொத்துப் பாதுகாப்பிற்கான முன்னுரிமை கண்காணிப்புப் பட்டியல் ..... 78
பருவநிலை நெகிழ்திறன் நிதி - UNHCR ..... 79
2030 ஆம் ஆண்டிற்கான உலக சுகாதார அமைப்பின் புதிய உலகளாவிய மலேரியா உத்தி ..... 80
LGBT சமூகத்தினருக்கு எதிரான சட்டம் – ஈராக் ..... 81
கோவிஷீல்டு தடுப்பூசி குறித்த சர்ச்சை ..... 81
நகுரு அணை சேதம் ..... 82
பாகிஸ்தானின் முதலாவது நிலவு ஆய்வுக் கலம் ..... 83
G7 நாடுகள் & அதன் நிலக்கரி இலக்குகள் ..... 83
ஹாங்கோர் ரக நீர்மூழ்கிக் கப்பல் ..... 84
மோதல் நிறைந்த பகுதிகளில் கிடைக்கப் பெறும் தாதுக்கள் ..... 84
சிறப்பு 301 அறிக்கை 2024 ..... 85
புதினின் ஐந்தாவது ஆட்சிக்காலம் ..... 86
பெண்கள் மீதான வன்முறைக்கு எதிரான சட்டம் ..... 87
உலகின் மிகப்பெரிய கார்பன் பிடிப்பு ஆலை ..... 87
ஹேக் உடன்படிக்கையின் 70வது ஆண்டு நிறைவு ..... 88
HIV பற்றிய உலக சுகாதார அமைப்பின் சான்றிதழ் ..... 89
ஆப்கானிஸ்தான் நாட்டில் ஏற்பட்ட திடீர் வெள்ளம் ..... 89
ஒராங்குட்டான் யுக்தி ..... 90
வடி/இணைப்புக் குழாயைப் பயன்படுத்துவதற்கான புதிய வழிகாட்டுதல்கள் ..... 91
மவுண்ட் நெம்ருட் எரிமலை ..... 92
உலக சுகாதார அமைப்பு - உப்பு நுகர்வு மற்றும் உயர் இரத்த அழுத்தம் மீதான நடவடிக்கை ..... 92
நாகோர்னோ-கராபாக் சர்ச்சை ..... 93
உலகளாவிய ஒத்துழைப்பு மற்றும் பெருந்தொற்று ஒப்பந்தம் ..... 94
பாக்டீரிய நோய்க்கிருமிகளின் முன்னுரிமைப் பட்டியல் ..... 94
MATES புலம்பெயர்வு திட்டம் ..... 95
டோக்கியோ அட்டகாமா ஆய்வகம் ..... 95
பாதரசம் கொண்ட மருத்துவ சாதனங்களை நீக்குதல் ..... 96
மனிதர்களில் பதிவான முதல் ‘பறவைக் காய்ச்சல்’ பாதிப்பு ..... 96
கோப்பர்நிக்கஸ் EMS விரைவு தகவல் அளிப்பு சேவை ..... 97
ஆயுட்காலத்தில் பதிவான வீழ்ச்சி ..... 98
தாய்ப்பால் மற்றும் சுற்றுச்சூழல் ..... 99
ரஷ்யாவுக்கு எதிரான ‘ஆளில்லா விமானங்கள் கொண்ட கவச அமைப்பு’ ..... 100
பொருளாதாரச் செய்திகள் ..... 101
மக்கள்தொகை ஈவு குறித்த தரவு – இந்திய ரிசர்வ் வங்கி ..... 101

இந்தியாவின் இறக்குமதியில் சீனாவின் பங்கு ....... 101
அதிக சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் வசூல் - ஏப்ரல் 2024 ....... 102
உலக அளவிலான பண அனுப்பீடுகளில் இந்தியா முன்னிலை ....... 103
இந்தியாவின் பொம்மை ஏற்றுமதி ....... 103
இந்தியாவின் மருத்துவ நுகர்பொருட்கள் ஏற்றுமதி ....... 104
2024 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் சிறந்த வர்த்தகப் பங்குதாரர் ....... 105
2024 ஆம் நிதியாண்டில் பொதுத்துறை வங்கிகளின் ஈவுகள் ....... 106
மகாராஷ்டிரா வங்கி வளர்ச்சி விகிதம் ....... 106
அரசிற்கு இதுவரை இல்லாத அளவிற்கான அதிகபட்ச ஈவுத் தொகை ....... 107
இந்தியாவின் சந்தை மூலதனம் ....... 108
வருடாந்திர தொழிலாளர் வளக் கணக்கெடுப்பு ....... 108
2023-24 ஆம் ஆண்டில் இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை ....... 109
**அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ....... 110**
கரும்புற்றுநோய்க்கான தனிப்பயனாக்கப்பட்ட mRNA தடுப்பூசி ....... 110
சீனாவின் சென்ஷூவோ - 18 பயணக்குழு ....... 111
வேகமாக மின்னேற்றம் செய்யும் சோடியம்-அயனி மின்கலம் ....... 111
ஈரானின் காமிகேஸ் ஆளில்லா விமானங்கள் ....... 112
செயற்கை நரம்பிணைப்பு ....... 112
குரல் மீளுருவாக்கத் தொழில்நுட்பம் ....... 113
DRDO அமைப்பின் SMART அமைப்பு ....... 113
LSAM 20 இழுவைப் படகு ....... 114
நிலவில் மாபெரும் உறைபனி ....... 114
பூமியின் காந்தப்புலத்திற்கான மிகப் பழமையான சான்று ....... 115
K2-18b மற்றும் டை மெத்தில் சல்பைடு ....... 115
அன்டரேசினை கடந்து சென்ற நிலவு ....... 116
உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முதல் ஆளில்லா குண்டுவீச்சு விமானம் ....... 117
2D புரத ஒற்றையடுக்கு ....... 117
JWST தொலைநோக்கியின் காஸ்மிக் வெளிப்பாடு படம் ....... 118
விண்வெளி தொலைநோக்கிகளில் உருமாற்றத் தக்க கண்ணாடிகள் ....... 118
'All-in-one' தடுப்பூசி ....... 119
எட்டா அக்வாரிட் விண்கல் பொழிவு ....... 119
நிலவில் இரயில் பாதைகளை உருவாக்குதல் ....... 120
சக்தி வாய்ந்த சூரியப் புயல்கள் ....... 121
தங்கத் தகடு ....... 121
Secure IoT நுண்செயலி ....... 122
முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட ஏவுகல இயந்திரம் ....... 123
அண்டங்களில் அலைவு மாற்றம் ....... 123
OpenAI நிறுவனத்தின் Sora ....... 124
ஃபுசோபாக்டீரியம் நியூக்ளியேட்டம் ....... 124

குளோரோபிரின் - இரசாயன ஆயுதம் ........ 125
பூமியைத் தாக்கிய வலுவான சூரியப் புயல் ........ 126
சாகிட்டாரியஸ் A கருந்துளையின் விரைவான சுழற்சி ........ 126
நான்சி கிரேஸ் ரோமன் தொலைநோக்கி ........ 127
பகுதியளவு மீக்குளிர் நிலையிலான இயந்திரம் ........ 127
புற்றுநோய் எதிர்ப்பு மருந்து - Ph-Cys-Au ........ 128
பாறைக் கோள் - 55 கேன்கிரி e ........ 129
IBM நிறுவனத்தின் காண்டோர் ........ 129
OpenAI GPT-4o ........ 130
உயர் ஆற்றல் கொண்ட ஃபோட்டான் தோற்றுவாய் ........ 131
கருந்துளைகளைச் சுற்றி "மூழ்கும் பகுதிகள்" ........ 131
SPECULOOS-3b - புதிய குறுங்கோள் ........ 132
இரட்டை கருந்துளை அமைப்பு ........ 132
சூரியனின் காந்தப்புலம் ........ 133
eVTOL விமானங்கள் ........ 134
ஒளியிழை நுண் அளவியல் வடிவங்களைக் கட்டுருவாக்கல் செயல்முறை ........ 134
சுற்றுச்சூழல் செய்திகள் ........ 135
செங்கடலில் கார்பன் உமிழ்வு ........ 135
விரைவாக வெப்பமயமாகும் இந்தியப் பெருங்கடல் ........ 136
லா கும்ப்ரே எரிமலை & நிலவாழ் பேரோந்திகள் ........ 136
கடல்சார் பகுதியில் மேகங்களின் ஒளி திருப்புதல் திறனை மேம்படுத்துதல் ........ 137
பாட்டிலிப்ஸ் சந்திராயணி ........ 138
ஓட்டோலித் வளையங்கள் ........ 139
லட்சத்தீவில் பவளப் பாறை நிறமாற்ற நிகழ்வு ........ 139
க்ளைப்டோதோராக்ஸ் புண்யபிரதாய் ........ 140
உலகின் மிகப்பெரிய நிரந்தர உறைபனி பள்ளம் ........ 140
இந்தியப் பெருங்கடலின் வெப்பநிலை மற்றும் டெங்கு பாதிப்பின் தீவிரம் ........ 141
பச்சை இலைகளின் ஆவியாகும் சேர்மங்கள் ........ 142
லெபிடோபிகோப்சிஸ் டைஃப்பஸின் மரபணு ........ 142
புதிய முரல் மீன் இனங்கள் ........ 143
UNFF-19 ........ 143
கடற்சாமந்தி ........ 144
க்ஷேய் திமிங்கலங்கள் – அர்ஜென்டினா ........ 144
வெனிசுலாவின் ஹம்போல்ட் பனிப்பாறை வீழ்ச்சி ........ 145
கவச பாய்மர கெளுத்தி மீன் ........ 146
சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையிலான நீர் சுத்திகரிப்பு முறை ........ 146
கடந்த 2,000 ஆண்டுகளில் இல்லாத வெப்பமான ஆண்டு ........ 147
அழியும் நிலையில் உள்ள மெய்டே சிறு குதிரைகள் ........ 148
இந்தியாவில் கங்கை ஓங்கில்கள் ........ 148

உலக மேய்ச்சல் நிலங்களின் தரமிழப்பு ........ 149
முதலாவது உலகளாவியச் சதுப்புநில மதிப்பீடு ........ 150
GSAP SkILLS இயங்குதளம் ........ 151
அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ........ 151
"Technology on her Terms" அறிக்கை ........ 151
உலகப் பத்திரிகை சுதந்திரக் குறியீடு 2024 ........ 152
'Aging Well In Asia' அறிக்கை 2024 ........ 153
OECD அமைப்பின் பொருளாதாரக் கண்ணோட்ட அறிக்கை ........ 154
வேளாண் உணவு உற்பத்தி முறை பற்றிய உலக வங்கி அறிக்கை ........ 155
உலகப் புலம்பெயர்வு அறிக்கை 2024 ........ 156
உலகின் செல்வ வளம் மிக்க நகரங்கள் 2024 அறிக்கை ........ 157
வேலைப் போக்கு குறியீடு 2024 ........ 158
இந்தியப் பெருங்கடல் படுகை வாரியான குறியீடு ........ 158
உலக வனவிலங்குகள் மீது இழைக்கப்படும் குற்றங்கள் குறித்த அறிக்கை 2024 ........ 159
CWUR 2024 அறிக்கை ........ 160
2023 ஆம் ஆண்டில் இணைய முடக்கங்கள் ........ 161
உள்நாட்டுப் புலம்பெயர்வு பற்றிய உலகளாவிய அறிக்கை 2024 ........ 162
புவி கண்காணிப்பின் உலகளாவிய மதிப்பைப் பெருக்குதல் ........ 162
ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியப் பொருளாதாரக் கண்ணோட்டம் ........ 163
புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் பற்றிய உலகளாவிய அறிக்கை 2024 ........ 164
ஆக்ஸ்போர்டு பொருளாதார அமைப்பின் உலகளாவிய நகரங்களின் குறியீடு 2024 ........ 165
WEF பயணம் & சுற்றுலா மேம்பாட்டுக் குறியீடு 2024 ........ 166
உலகளாவிய தண்ணீர் நெருக்கடி அறிக்கை ........ 166
புத்தொழில் மேம்பாட்டிற்கு உகந்த உலகின் 10 முன்னணி நகரங்கள் – 2024 ........ 167
கார்பன் விலை நிர்ணயத்தின் நிலை மற்றும் போக்குகள் 2024 ........ 168
மாநிலச் செய்திகள் ........ 169
மக்களவைத் தேர்தலில் புரு சமூகம் ........ 169
காலேசர் வனவிலங்கு சரணாலயம் ........ 169
உத்தரகாண்ட் மாநிலத்தில் காட்டுத் தீ ........ 170
நெரியம் ஒலியாண்டர் – கேரளா ........ 171
தீர்த்தஹள்ளி பாக்கு ........ 171
மேற்கு நைல் வைரஸ் – கேரளா ........ 172
இந்தியாவில் முதல் முறையாக தென்பட்ட ஜெயிண்ட் ஷ்ரைக் ........ 172
A வகை கல்லீரல் அழற்சி நோய்த்தொற்று ........ 173
சரிஸ்கா புலிகள் வளங்காப்பகம் குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ........ 174
மேற்கு வங்காளம் மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் OBC இட ஒதுக்கீடு ........ 175
மணிப்பூர் புலம்பெயர்வு 2023 ........ 175
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ........ 176
மனித ஆய்விற்கான உலாவிக் கலத்திற்கான போட்டி 2024 விருதுகள் ........ 176

சுப்ரமண்ய தரேஷ்வர் ...... 176
2024 புலிட்சர் பரிசு வெற்றியாளர்கள் ...... 177
ஃபோர்ப்ஸ் இதழின் 30 வயதிற்குட்பட்ட 30 ஆசிய தொழில்முனைவோர் பட்டியல் 2024 ...... 177
ஃபோர்ப்ஸ் இதழின் உலகில் அதிக ஊதியம் பெறும் விளையாட்டு வீரர்கள் பட்டியல் 2024 ...... 178
சர்வதேசப் புக்கர் பரிசு 2024 ...... 178
இராணுவ தளபதி ஜெனரல் பாண்டேவின் பதவிக் காலம் ...... 179
**விளையாட்டுச் செய்திகள் ...... 179**
எலோர்டா கோப்பை 2024 ...... 179
ICC ஆடவர் T20 உலகக் கோப்பை போட்டியின் விளம்பரத் தூதர் ...... 180
**முக்கிய தினங்கள் ...... 180**
சர்வதேச தொழிலாளர் / மே தினம் - மே 01 ...... 180
மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநில தினம் - மே 01 ...... 181
உலக சூரை மீன் தினம் - மே 02 ...... 182
பத்திரிக்கைச் சுதந்திர தினம் - மே 03 ...... 182
சர்வதேச சூரிய தினம் - மே 03 ...... 182
நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் தினம் - மே 04 ...... 183
சர்வதேச தீயணைப்பு வீரர்கள் தினம் - மே 04 ...... 183
உலக கை சுகாதார தினம் - மே 05 ...... 184
சர்வதேச பேறுகால மருத்துவப் பணியாளர்கள் தினம் - மே 05 ...... 184
சர்வதேச சிறுத்தைகள் தினம் - மே 03 ...... 185
உலகத் தடகளத் தினம் - மே 07 ...... 185
உலக ஆஸ்துமா தினம் - மே 07 ...... 186
ரவீந்திரநாத் தாகூர் ஜெயந்தி - மே 07 ...... 186
உலக கேலிச் சித்திர நிபுணர்கள் தினம் - மே 05 ...... 187
BRO அமைப்பின் 65வது ஸ்தாபன தினம் - மே 07 ...... 188
உலகச் செஞ்சிலுவை மற்றும் செம்பிறை தினம் - மே 08 ...... 188
உலக இரத்த அழிவுச் சோகை நோய் தினம் - மே 08 ...... 189
உலக இடம்பெயரும் பறவைகள் தினம் - மே 11 ...... 189
மகா ராணா பிரதாப் ஜெயந்தி - மே 09 ...... 190
உலக தோல் அழிவு நோய் தினம் - மே 10 ...... 190
தேசியத் தொழில்நுட்பத் தினம் - மே 11 ...... 191
சர்வதேச செவிலியர் தினம் - மே 12 ...... 192
சர்வதேச குடும்ப தினம் - மே 15 ...... 192
தேசிய டெங்கு தினம் - மே 16 ...... 192
சர்வதேச ஒளி தினம் - மே 16 ...... 193
உலக தொலைத் தொடர்பு தினம் - மே 17 ...... 193
ஹோமோஃபோபியா, பைபோபியா மற்றும் டிரான்ஸ்ஃபோபியாவுக்கு எதிரான சர்வதேச தினம் - மே 17 ...... 194
உலக உயர் இரத்த அழுத்த தினம் - மே 17 ...... 194

உலக எய்ட்ஸ் தடுப்பூசி தினம் - மே 18 ..... 194
சர்வதேச அருங்காட்சியக தினம் - மே 18 ..... 195
உலக அளவியல் தினம் - மே 20 ..... 195
சர்வதேச வானியல் தினம் - மே 18 ..... 196
உலக தேனீ தினம் - மே 20 ..... 196
தேசிய தீவிரவாத எதிர்ப்பு தினம் - மே 21 ..... 197
உலகப் பேச்சுவார்த்தை மற்றும் மேம்பாட்டிற்கான கலாச்சாரப் பன்முகத்தன்மை தினம் - மே 21 ..... 197
சர்வதேச உயிரியல் பன்முகத் தன்மை தினம் - மே 22 ..... 198
மகப்பேறின் போது பிறப்புறுப்பில் ஏற்படும் காயத்தினைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் - மே 23 ..... 198
உலக கடலாமைகள் தினம் - மே 23 ..... 199
கடல்சார் பணிகளில் பெண்களுக்கான சர்வதேச தினம் - மே 18 ..... 200
காமன்வெல்த் தினம் - மே 24 ..... 200
ஆப்பிரிக்க தினம் - மே 25 ..... 200
சர்வதேச மார்கோர் தினம் - மே 24 ..... 201
உலக மனப்பித்து நோய் விழிப்புணர்வு தினம் - மே 24 ..... 202
காணாமல் போன குழந்தைகளுக்கான சர்வதேச தினம் – மே 25 ..... 202
சுய-ஆட்சி அல்லாத பிரதேசங்களின் மக்களுடனான சர்வதேச ஒற்றுமைக்கான வாரம் - மே 25 - 31 ..... 203
உலக கால்பந்து தினம் 2024 - மே 25 ..... 204
சர்வதேசப் பெண்களின் ஆரோக்கியத்திற்கான நடவடிக்கை தினம் - மே 28 ..... 204
உலகப் பட்டினி தினம் - மே 28 ..... 205
ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படை வீரர்களுக்கான சர்வதேச தினம் - மே 29 ..... 205
சர்வதேச எவரெஸ்ட் சிகர தினம் – மே 29 ..... 205
உலக செரிமான ஆரோக்கிய தினம் - மே 29 ..... 206
உலக தைராய்டு தினம் - மே 25 ..... 206
சர்வதேச உருளைக்கிழங்கு தினம் - மே 30 ..... 207
கோவா மாநில தினம் - மே 30 ..... 207
உலக ஆவுளியா தினம் - மே 28 ..... 208
புகையிலை எதிர்ப்பு தினம் - மே 31 ..... 208
இதரச் செய்திகள் ..... 209
விண்கல் மோதலால் உருவான லூனா பள்ளம் ..... 209
90 மில்லியன் ஆண்டுகள் பழமையான தாவர உண்ணி டைனோசர் ..... 210
உலகின் ஆழமான கடல் துளை ..... 210
பறவைக் காய்ச்சலால் ஏற்பட்ட முதல் கடற்பசு உயிரிழப்பு ..... 211
7000 ஆண்டுகள் பழமையான வரலாற்றுக்கு முந்தைய குடியேற்றம் - செர்பியா ..... 212
புவியின் ஒளிச்சேர்க்கைக்கான பழமையான சான்று ..... 212
நியண்டர்தால்களின் பேச்சு திறன் ..... 213
டிரைக்கோடெர்மா ஆஸ்பெரெல்லம் ..... 214
யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பிராந்தியப் பதிவேட்டின் நினைவகம் ..... 214

சாஹுல் கண்டம் ....................215
பண்டைய போபாப் மரங்கள்....................215
1.5 பில்லியன் ஆண்டுகள் பழமையான "மாபெரும்" வைரஸ்கள்....................216
நைல் நதியின் பழமையான கிளை ....................217
பழமையான அறியப்பட்ட மனித வைரஸ்கள் ....................218
ரெமல் புயல்....................218

# TNPSC துளிகள்

- இந்திய அரசானது, UAE நாட்டின் அபுதாபியில் நடைபெற்ற உலக வர்த்தக அமைப்பின் 13வது அமைச்சர்கள் மாநாட்டில் (MC13) உலக வர்த்தக அமைப்பின் 164 உறுப்பினர் நாடுகளுடன் இணைந்து பங்கேற்றது.
- SJVN லிமிடெட் நிறுவனமானது, இமாச்சலப் பிரதேசத்தின் ஜக்ரி எனுமிடத்தில் உள்ள அதன் 1,500 மெகாவாட் திறன் கொண்ட நாத்பா ஜாக்ரி நீர் மின் நிலையத்தில் (NJHPS) இந்தியாவின் முதல் பல்நோக்கு பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி நிலையத்தினைச் சோதனை முறையில் தொடங்கியுள்ளது.
- கேரளாவில் அமைந்துள்ள அதானி குழுமத்தின் விழிஞ்சம் துறைமுகம் ஆனது இந்தியாவின் முதல் சரக்குப் பரிமாற்றத் துறைமுகமாகச் செயல்படுவதற்காக கப்பல் போக்குவரத்து அமைச்சகத்திடம் அனுமதி பெற்றுள்ளது.
- இந்திய வரலாற்று ஆவணங்கள் ஆணையம் (IHRC) ஆனது, ஒரு புதிய முத்திரைச் சின்னம் மற்றும் முழக்கத்தினை ஏற்றுக் கொண்டுள்ளது.
    - ‘யத்ர இதிஹாஸம் பவிஷ்யம் ப்ரசக்சாந்தஹ்’ என்பது அதன் புதிய முழக்கம் ஆகும்.
- மைக்ரோசாப்ட் நிறுவனமானது, அதன் ‘இலகுரக’ செயற்கை நுண்ணறிவு மாதிரியின் சமீபத்திய வடிவத்தினை பை-3-மினி வெளியிட்டுள்ளது.
    - இது மிகவும் திறன் மிக்க மற்றும் செலவு குறைந்த சிறிய மொழி மாதிரிகள் (SLMs) கிடைக்கப் பெறுகின்ற திறந்தநிலை மூலச் செயற்கை நுண்ணறிவு மாதிரிகளின் தொகுப்பாகும்.
- கருக்கு, சங்கதி, மனுஷி போன்ற இலக்கியப் படைப்புகளால் புகழ் பெற்ற எழுத்தாளரும் கவிஞருமான பாமா என்பவர் வேர்ச்சொல் தலித் இலக்கிய விருதைப் பெற்றுள்ளார்.
- இந்தியப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமையானது மத்தியப் பொது நிறுவனங்களின் துறையின் ‘நவரத்னா அந்தஸ்தினைப்’ பெற்றுள்ளது.
- துபாய் நாடானது, 35 பில்லியன் டாலர் செலவில் 400 நுழைவுவாயில்கள் மற்றும் ஐந்து இணை ஓடுபாதைகளைக் கொண்டுள்ள வகையில் அமைந்த "உலகின் மிகப்பெரிய" விமான நிலைய முனையத்தினைக் கட்டமைக்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- 'முக்கிய கனிமங்கள் குறித்த உச்சி மாநாடு: பலன் மற்றும் செயலாக்கத் திறன்களை மேம்படுத்துதல்' என்ற மாநாடானது புது டெல்லியில் நடைபெற்றது.
- சத்தீஸ்கர் பச்சாவ் அந்தோலனின் ஒருங்கிணைப்பாளரும், ஹஸ்தியோ ஆரண்ய பச்சாவோ சங்கர்ஷ் சமிதியின் ஸ்தாபன உறுப்பினருமான அலோக் சுக்லா, ஆசியாவின் 2024 ஆம் ஆண்டு கோல்ட்மேன் பரிசினைப் பெற்றுள்ளார்.
- சரக்கு இரயில் போக்குவரத்தின் மூலமான வருவாயினை அதிகரிப்பதற்காகவும், இரயில் சேவை வலையமைப்புகளில் உள்ள நெரிசலைக் குறைப்பதற்காகவும், வேகமான பயணியர் இரயில் இயக்கத்தினை செயல்படுத்துவதற்காகவும் கூடுதலாக 200 கதி சக்தி சரக்கு இரயில் முனையங்களை அமைக்க இந்திய இரயில்வே நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.
    - இந்த விரிவாக்கம் ஆனது 2022-23 ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட முதல் 100 கதி சக்தி சரக்கு ரயில் முனையங்களை வெற்றிகரமாக செயல்படுத்தியதைத் தொடர்ந்து மேற்கொள்ளப் படுகிறது.

- பேரிடர் தாங்கும் உள்கட்டமைப்புகள் குறித்த 6வது சர்வதேச மாநாடானது (ICDRI) புது டெல்லியில் நடைபெற்றது.
  - இந்நிகழ்வின் கருத்துரு, ‘மிக உறுதியான எதிர்காலத்திற்காக இன்றைக்கு முதலீடு செய்தல்’ என்பதாகும்.
- டாடா குழுமம் நிறுவனமானது, இராணிப்பேட்டையில் தனது மையத்தினை நிறுவச் செய்வதற்காக தமிழக அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
  - இது தமிழ்நாட்டில் டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் முதலாவது முதலீடு என்ற நிலையில் கர்நாடகாவின் தார்வாட் தொழிற்சாலைக்கு பிறகு தென்னிந்தியாவில் அந்த நிறுவனத்தின் இரண்டாவது முதலீடு இது ஆகும்.
- சீதனம் என்பது ஒரு பெண்ணின் "முழுமையான சொத்து" என்றும், கணவனுக்கு அந்த சொத்தின் மீது எந்தவித உரிமையும் இல்லை என்றும் உச்ச நீதிமன்றம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.
- 26வது உலக ஆற்றல் காங்கிரஸ் மாநாடு நெதர்லாந்தின் ரோட்டர்டாம் நகரில் நடத்தப் பட்டது.
- ஸ்காட்லாந்தின் முதல் மந்திரி, ஹம்சா யூசுஃப், முதலாவது அமைச்சர் (பிரதமர்) பதவி மற்றும் ஸ்காட்லாந்து தேசியக் கட்சியின் (SNP) தலைமைப் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.
- இந்தியத் தடுப்பூசி உற்பத்தியாளர்கள் சங்கம் (IVMA) ஆனது பாரத் பயோடெக் நிறுவனத்தின் இணை நிறுவனரும் செயல் தலைவருமான டாக்டர். கிருஷ்ணா M. எல்லா என்பவரை 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2026 ஆம் காலக் கட்டம் வரையிலான இரண்டு ஆண்டுகளுக்கு அச்சங்கத்தின் புதிய தலைவராக அறிவித்தது.
- அமெரிக்கத் தொழில்துறை தானியக்க மற்றும் எண்ணிமப் பரிமாற்றத் தொழில் நுட்ப நிறுவனமான ராக்வெல் ஆட்டோமேஷன், சென்னையில் தனது புதிய உற்பத்தி நிலையத்தைத் திறக்கும் திட்டத்தை அறிவித்துள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையானது சமீபத்தில் "ஆற்றல் மாற்றத்திற்கான முக்கிய தாதுக்கள்" என்ற புதிய பிரிவினை அறிமுகப் படுத்தியுள்ளது.
  - இது "பொருள்-ஆற்றல் ஒன்றிணைப்பின்" சவால்களை எதிர்கொள்வதையும், பொறுப்பு மிக்க மற்றும் நியாயமான மதிப்புச் சங்கிலி அமைப்புகளை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐரோப்பிய மருத்துவ நுண்ணுயிரியல் மற்றும் தொற்று நோய்கள் சங்கம் (ESCMID) மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பு மீதான உலகளாவியத் தலைமைத்துவக் குழு (GLG) ஆகியவை இணைந்து ‘அறிவியல் மற்றும் கொள்கைகள் ஆகியவற்றுக்கு இடையே உள்ள கூட்டாண்மைகளை உருவாக்குதல்’ என்ற உயர்மட்ட நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்தன.
  - நுண்ணுயிர் எதிர்ப்பு (AMR) பற்றிய ஆராய்ச்சி, அறிவியல் மற்றும் செயல் படுத்துதலை அரசியல் சார்ந்த செயல்பாட்டு நிரலில் சேர்ப்பதை இது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தமிழில் அதிக பாடல்களைப் பாடியுள்ள இந்தியப் பின்னணிப் பாடகி உமா ரமணன் சமீபத்தில் காலமானார்.
- ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷார்ஜா நகரைச் சேர்ந்த இந்திய ஆசிரியை ஜினா ஜஸ்டஸ், மதிப்பு மிக்க கேம்பிரிட்ஜ் ஆசிரியர் விருதை வென்றுள்ளார்.

- உணவுப் பொருட்களில் திரவ நைட்ரஜனைப் பயன்படுத்துவதைத் தடை செய்து, தடையை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தமிழக அரசு அறிவுறுத்தி உள்ளது.
- ICICI வங்கியானது, 8 டிரில்லியன் ரூபாய் என்ற வரம்பைக் கடந்து இந்தியாவின் சந்தை மூலதனம் கொண்ட முதல் ஐந்து நிறுவனங்களுக்குள் இடம் பெற்றுள்ளது.
- இந்திய இராணுவம், புனித் பாலன் குழுமம் ஆகியவற்றினால் இணைந்து உருவாக்கப் பட்ட இந்தியாவின் முதல் அரசியலமைப்புப் பூங்கா புனே நகரில் திறக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவானது கௌகாத்தியில் உள்ள தேசிய சிறப்பு உயர்திறன் கொண்ட மைதானத்தில் 2025 ஆம் ஆண்டின் BWF உலக இளையோர் சாம்பியன்ஷிப் போட்டியினை நடத்தவுள்ளது.
- பெருநிறுவன சமூகப் பொறுப்பிற்கு ஆற்றிய சிறந்தப் பங்களிப்பிற்காக டாக்டர் பினா மோடி என்பவருக்கு இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் அவர்களால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- மைக்ரான் இந்தியா, அடுத்த ஆண்டு தொடக்கத்தில் குஜராத்தில் உள்ள அதன் சனந்த் உற்பத்தி மையத்தில் தொகுக்கப்பட்ட சில்லுகளின் (Chip) முதல் தொகுப்பை வெளியிட உள்ளதாக தெரிவித்துள்ளது.
- புவி அறிவியல் துறை அமைச்சகம் (MoES) ஆனது, தேசிய துருவ மற்றும் பெருங்கடல் ஆராய்ச்சி மையம் (NCPOR) மூலம் கேரளாவின் கொச்சி நகரில் 46வது அண்டார்டிக் ஒப்பந்த ஆலோசனைக் கூட்டம் (ATCM 46) மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழுவின் (CEP 26) 26வது கூட்டம் ஆகியவற்றினை நடத்த உள்ளது.
- காத்மாண்டுவில் உள்ள காற்றின் தரம் ஆனது, உலகில் 'ஆரோக்கியமற்ற காற்று' உள்ள நகரங்களின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
  - மாசுபாட்டின் அடிப்படையில், புது டெல்லி, தாய்லாந்தின் சியாங் மாய், வியட் நாமின் ஹனோய், தாய்லாந்தின் பாங்காக் மற்றும் வங்காளதேசத்தின் டாக்கா ஆகியவை முறையே இரண்டாவது, மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களில் உள்ளன.
- சிவிங்கிப் புலி வளங்காப்புத் திட்டத்தின் அடுத்த கட்டத்திற்காக, கிழக்கு ஆப்பிரிக்க நாட்டிலிருந்து சிவிங்கிப் புலிகளை கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக, கென்ய அதிகாரிகளின் தூதுக் குழுவை இந்தியா வரவேற்க உள்ளது.
  - மத்தியப் பிரதேசத்தில் உள்ள காந்தி சாகர் வனவிலங்கு சரணாலயம் ஆனது சிவிங்கிப் புலிகளை மறு அறிமுகப்படுத்துவதற்கான இரண்டாவது இடமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- பிரதீப் செபாஸ்டியன் எழுதிய 'The Book Beautiful' என்ற புத்தகத்திற்கான அட்டைப் பட வடிவமைப்பிற்காக பவி மேத்தா, 9வது ஆக்ஸ்போர்டு புக்ஸ்டோர் புத்தக அட்டைப் பட பரிசை (2024) வென்றுள்ளார்.
- சமீபத்தில், ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் முகமையின் அரசுகளுக்கு இடையேயான பேச்சுவார்த்தைக் குழுவின் (INC-4) நான்காவது அமர்வானது கனடாவின் ஒட்டாவா நகரில் நடைபெற்றது.
- ஆண்டுதோறும் மே 05 ஆம் தேதியானது ஆப்பிரிக்க உலகப் பாரம்பரியத் தினமாக அனுசரிக்கப் படுகிறது.

- அசாம் மாநிலத்தின் வனவிலங்கு வளங்காப்பாளரான டாக்டர் பூர்ணிமா தேவி பர்மனுக்கு இந்த ஆண்டிற்கான விட்லி தங்க விருது வழங்கப்பட்டுள்ளது.
- உத்தரகாண்ட் சுற்றுலா மேம்பாட்டு வாரியம் மற்றும் ஸ்டார்ஸ்கேப்ஸ் ஆகியவை இணைந்து, ஒரு விரிவான வானியல் சார் சுற்றுலா அனுபவத்தினை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட நக்சத்ரா சபா எனும் முன்னெடுப்பினைத் தொடங்க கை கோர்த்து உள்ளன.
- பழம்பெரும் கலைஞர் ராஜா ரவிவர்மா அவர்களின் இந்துலேகா ஓவியத்தின் முதல் அசல் பிரதி கேரளாவின் கிளிமானூர் அரண்மனையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
- பெரும்பாலும் குஜராத்தின் மேற்குப் பகுதியில் மேற்கொள்ளப்படும் புகழ்பெற்ற ஒரு கைவினை ஜவுளித் தயாரிப்பான அஜ்ரக் என்ற தயாரிப்பிற்குப் புவிசார் குறியீடு வழங்கப் பட்டுள்ளது.
- இந்தியத் தேசியக் கொடுப்பனவுக் கழகம் (NPCI) ஆனது, நமீபியாவிற்கான ஒருங்கிணைந்த பண வழங்கீட்டு இடைமுகம் போன்ற உடனடிக் கட்டண முறையை உருவாக்குவதற்காக நமீபியா வங்கியுடன் ஒரு ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளது.
- காஸா பகுதி தொடர்பான செய்தி சேகரிக்கும் பாலஸ்தீன ஊடகவியலாளர்கள் 2024 ஆம் ஆண்டிற்கான யுனெஸ்கோ/கில்லர்மோ கானோ உலகப் பத்திரிகை சுதந்திரப் பரிசினைப் பெற்றவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- எண்ணிமப் பொது உள்கட்டமைப்புத் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் முதல் சர்வதேச மாநாடு ஆனது இந்தியாவின் தலைமையில் நடைபெற்றது.
- சீனாவின் சங்'கே 6 என்பதின் பணியானது நிலவின் தொலைதூரப் பகுதிகளிலிருந்து - பூமியிலிருந்துப் பார்க்க முடியாத பக்கத்திலிருந்து - நிலவுப் பொருட்களைக் கொண்டு வருவதற்கான உலகின் முதல் முயற்சியாகும்.
- அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள மக்கள் தொகை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் (CPD57) 57வது அமர்வின் போது, "நிலையான மேம்பாட்டு இலக்குகளை வட்டாரமயமாக்குதல்: இந்தியாவின் உள்ளாட்சி நிர்வாகத்தில் பெண்களின் முன்னிலை" என்ற தலைப்பிலான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.
    - ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நிதியத்துடன் (UNFPA) இணைந்து ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்தியாவின் நிரந்தர தூதரகம் மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்தது.
- உலகப் போர்த்துகீசிய மொழி தினம் ஒவ்வோர் ஆண்டும் மே 05 ஆம் தேதியன்று கொண்டாடப் படுகிறது.
- நியூஸ்பேப்பர் டிசைன்.இன் என்ற நிறுவனம் ஏற்பாடு செய்த 6வது சர்வதேச செய்தித் தாள் வடிவமைப்புப் போட்டியில் தி ஹிந்து இதழின் விளக்க கட்டுரைப் பக்கம் (Hindu's explainer) மூன்று விருதுகளை வென்றுள்ளது.
- ஓய்வூதியத் துறையானது அரசாங்க ஓய்வூதியதாரர்களுக்கு வேண்டிய ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மற்றும் அனுமதிகளைக் கண்காணிப்பதற்காக வேண்டி பவிஷ்யா என்ற இயங்கலை தளத்தினைத் தொடங்கியுள்ளது.
- KP.2 மற்றும் KP 1.1 வகைகளை உள்ளடக்கிய, FLiRT என அழைக்கப்படும் ஒமைக்ரான் JN.1 மரபு வழியில் உள்ள கோவிட்-19 வகைகளின் பாதிப்பு ஆனது அமெரிக்காவில் வேகமாகப் பரவி வருகிறது.

- ஐரோப்பிய ஒன்றியம் ஆனது சமீபத்தில் லெபனான் நாட்டிற்கு 1 பில்லியன் டாலர் நிதி உதவி வழங்குவதாக உறுதியளித்துள்ளது.
- சிரிப்பதால் ஏற்படும் மகிழ்ச்சியையும் அதன் பல ஆரோக்கிய நன்மைகளையும் மேம்படுத்துவதற்காக ஆண்டுதோறும் மே மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமையன்று (மே 05) உலக சிரிப்பு தினம் கொண்டாடப்படுகிறது.
- அரசுக்குச் சொந்தமான பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் (BSNL) நிறுவனமானது 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் தேசிய அளவில் 4G இணையச் சேவைகளை வழங்க உள்ளது.
- ஸ்பெயின் நாட்டுக் கால்பந்து குழுமமான ரியல் மாட்ரிட், காடிஸ் அணியினை வீழ்த்தி லா லிகா 2023-24 போட்டித் தொடரில் வெற்றி பெற்றுள்ளது.
- வரலாற்றில் முதல் முறையாக, உக்ரைனின் வெளியுறவுத் துறை அமைச்சகம் ஆனது விக்டோரியா ஷி எனப்படும் ஒரு மெய்நிகர் செயற்கை நுண்ணறிவு செய்தித் தொடர்பாளரினை அறிமுகப் படுத்தியுள்ளது.
  - ரஷ்யாவுடன் நடைபெற்று வரும் போர் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்த தகவல்களை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- எடை பாகுபாடு மற்றும் அதிக கொழுப்பு தொடர்பான பயம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக என்று மே 06 ஆம் தேதியன்று சர்வதேச உணவுக் கட்டுப்பாடுத் தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Embrace Yourself: Reject Diet Culture, Love You" என்பதாகும்.
- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) ஆனது, தமிழ்நாட்டில் மகேந்திர கிரியில் உள்ள இஸ்ரோ உந்துவிசை சோதனை வளாகத்தில் உள்ள பகுதியளவு மீக்குளிர் நிலையிலான எரி தூண்டலுக்கு முன்னதாக தீப்பற்றும் திறன் சோதனை அமைப்பின் முதல் தீப்பற்றல் சோதனையை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.
- இந்திய இராணுவத்தின் கர்கா படைப்பிரிவு ஆனது, மேற்கத்திய படைப்பிரிவின் கீழ், இந்திய விமானப் படையுடன் இணைந்து மூன்று நாட்கள் அளவிலான ககன் ஸ்ட்ரைக்-II எனப்படும் கூட்டுப் பயிற்சியை பஞ்சாபில் பல இடங்களில் வெற்றிகரமாக மேற் கொண்டது.
- பஜாஜ் ஆட்டோ நிறுவனமானது மிகவும் எதிர்பார்க்கப்பட்ட தனது அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயுவினால் (CNG) இயங்கும் மோட்டார் சைக்கிளின் அறிமுகத்திற்கு தயாராகி வருகிறது.
- உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத்தின் (SCBA) நிர்வாகக் குழுவில் மூன்றில் ஒரு பங்கு இடங்களை உச்ச நீதிமன்றம் பெண்களுக்கு ஒதுக்கியுள்ளது.
- தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்த பூதலூர் அருகே உள்ள சித்திரக்குடி கிராமத்தில் சிதிலமடைந்த சோழர் கால விஷ்ணு சிலை மற்றும் நந்தி சிலை ஆகியவை பகுதியளவு புதைக்கப் பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- தமிழக - ஆந்திர எல்லையில் அமைந்த திருப்பத்தூரில் உள்ள புல்லர் கிராமத்தில் உள்ள தடுப்பு அணை அருகே நூற்றாண்டு காலப் பழமையான மகேஸ்வரி தேவியின் சிலை கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- யுஸ்வேந்திர சாஹல், டி20 கிரிக்கெட் போட்டிகளின் வரலாற்றில் 350 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் இந்தியப் பந்துவீச்சாளர் என்ற முக்கிய மைல்கல்லினை எட்டினார்.

- இந்திய நிதித் தொழில்நுட்ப நிறுவனமான சேது, மிகவும் முதன்மையாக வங்கி, நிதிச் சேவைகள் மற்றும் காப்பீடு (BFSI) ஆகிய துறைக்காக வடிவமைக்கப்பட்ட Sesame எனப் படும் இந்தியாவின் முதல் மாபெரும் மொழி மாதிரியினை (LLM) அறிமுகப்படுத்தி உள்ளது.
- 126வது ஆண்டு மலர்க் கண்காட்சி உதகமண்டலத்தில் சமீபத்தில் துவங்கியது.
- மக்களுக்கு "ஆபத்தானவை" என்று கருதப்படும் 33 வகை இன நாய்களை இறக்குமதி செய்யவோ, இனப்பெருக்கம் செய்யவோ அல்லது விற்பனை செய்யவோ தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறை தடை விதித்துள்ளது.
- 2033 ஆம் ஆண்டிற்குள் 30,000 விளையாட்டுச் செயலி உருவாக்க வல்லுநர்களை ஈர்ப்பதன் மூலம் அந்த நகரத்தை உலகளாவிய விளையாட்டுத் துறை மையமாக மாற்றுவதற்காக துபாய் அரசு ஒரு புதுமையான விளையாட்டு துறை சார் நுழைவு இசைவுச் சீட்டினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- சமூக சேவகர் திரு. பவன் சிந்திக்கு 2024 ஆம் ஆண்டிற்கான குளோபல் பிரைடு ஆஃப் சிந்தி விருது வழங்கப்பட்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையின் வனங்களுக்கான மன்றத்தின் (UNFF19) 19வது அமர்வு ஆனது அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடைபெற்றது.
- கூகுள் நிறுவனத்தின் டீப்மைன்ட் என்ற கிளை நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் புரதங்கள், DNA மற்றும் RNA உள்ளிட்ட உயிரியல் மூலக்கூறுகள் மற்றும் மருந்துகளாக செயல்படக் கூடிய சிறிய மூலக்கூறுகளின் கட்டமைப்பு மற்றும் இடைவினைகளை கணிக்க கூடிய AlphaFold 3 என்ற ஒரு செயற்கை நுண்ணறிவு மாதிரியை உருவாக்கி உள்ளனர்.
- இரண்டாம் உலகப் போரின் போது உயிர் இழந்தவர்களுக்கான நினைவு மற்றும் நல்லிணக்க நேரமானது மே 08-09 ஆம் தேதிகளில் அனுசரிக்கப் பட்டது.
- 1945 ஆம் ஆண்டில் நாஜி ஜெர்மனிக்கு எதிரான சோவியத் ஒன்றியத்தின் வெற்றியை நினைவு கூரும் வகையில் மே 09 ஆம் தேதியை ரஷ்யா வெற்றி தினமாக அனுசரித்தது.
- காஷி சமூகத்தினைச் சேர்ந்த இடாஷிஷா நோங்ராங் மேகாலயாவின் முதல் பெண் காவல்துறைத் தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
    - இவர் காவல்துறையின் முதல் பழங்குடியினப் பெண் ஆவார்.
- இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு இடையேயான 'சக்தி' எனப்படும் 7வது கூட்டு இராணுவப் பயிற்சியானது மேகாலயா மாநிலத்தின் உம்ரோய் மாவட்டத்தில் தொடங்கியது.
- ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் தனது முன்னாள் பிரதமர் மிகைல் மிஷுஸ்டினை மீண்டும் அப்பதவிக்கு நியமித்துள்ளார்.
- சர்வதேச அர்கானியா தினம் அல்லது சர்வதேச அர்கான் மர தினம் ஆனது உலகளவில் அதன் சுற்றுச்சூழல் பெரும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வையும் புரிதலையும் மேம்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் மே 10 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.
- அன்னையர் தினம் என்பது மே மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமையன்றுக் கொண்டாடப் படுகிறது என்பதோடு இந்த ஆண்டு இத்தினம் மே 12 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்டது.

- இந்திய இராணுவம் ஆனது தனது முதல் ஹெர்மிஸ்-900 ஸ்டார்லைனர் ஆளில்லா விமானத்தினை விரைவில் பெற உள்ளது.
    - த்ரிஷ்டி-10 ஆளில்லா விமானம் எனப்படும் ஹெர்மிஸ்-900 ஆனது, இந்திய இராணுவம் மற்றும் கடற்படைக்கு அதானி பாதுகாப்பு நிறுவனங்களால் வழங்கப் படுகிறது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் சேர்வதற்கான தகுதியை அங்கீகரிப்பதன் மூலம், பாலஸ்தீனிய நாட்டினை ஐக்கிய நாடுகள் சபையின் முழு உறுப்பினராக மாற்றச் செய்வதற்கான ஒரு முயற்சிக்கு ஆதரவளிக்கும் வகையில் தனது அதீத வாக்குகளை அளித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபைக்குப் பரிந்துரை செய்துள்ளது.
- இன்ஃபோசிஸ் நிறுவனம் செயற்கை நுண்ணறிவு மேலாண்மை அமைப்புக்கான ISO 42001:2023 சான்றிதழைப் பெற்றுள்ளது.
- உலக சுகாதார நிறுவனத்தின் தலைமை அறிவியலாளர் டாக்டர் சௌமியா சுவாமிநாதன், கனடாவின் மெக்கில் பல்கலைக்கழகத்தில் இருந்து கௌரவப் பட்டங்களைப் பெறும் 10 சிறப்பு மிக்க நபர்களில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளார்.
- டாடா சன்ஸ் தலைவரான என். சந்திரசேகரன், டாடா எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் தலைவராகப் பொறுப்பேற்க உள்ளார்.
- புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளர் ரஸ்கின் பாண்டுக்கு மதிப்புமிக்க சாகித்ய அகாடமி உறுப்பினர் பதவி வழங்கப்பட்டுள்ளது.
- பன்றிக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்து வரலாறு படைத்த முதல் நபரான அமெரிக்காவின் ரிச்சர்ட் "ரிக்" ஸ்லேமன் (62) சமீபத்தில் காலமானார்.
- பீகாரின் முன்னாள் துணை முதல்வர் சுஷில் குமார் மோடி காலமானார்.
    - இவர் 2005 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையிலும், மீண்டும் 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலும் பீகாரின் துணை முதல்வராகப் பணி ஆற்றினார்.
- நேபாளிய ஷெர்பா மலை ஏறும் வீரரான கமி ரிட்டா 28 முறை மலையேறிய அவரதுச் சொந்தச் சாதனையை முறியடித்து, 29வது முறையாக எவரெஸ்ட் மலையினை ஏறி சாதனை படைத்துள்ளார்.
    - 71 ஆண்டு கால மலையேறுதல் வரலாற்றில் உலகின் மிக உயரமான சிகரத்தை அதிக முறை ஏறி சாதனைப் படைத்தவர் என்ற ஒரு பெருமையினை அவர் பெற்று உள்ளார்.
- ஐக்கியப் பேரரசு ஆனது, அதன் மக்கள்தொகையில் சுமார் 0.7%, அரை மில்லியன் அளவிலான மக்களின் முழுமையான-மரபணு வரிசையாக்கத்தினை நிறைவு செய்வதாக அறிவித்துள்ளது.
    - உயிரியல் அறிவியலில் உடனடி மற்றும் நீண்ட கால முன்னேற்றங்களுக்கான தொலைநோக்கு தாக்கங்களுடன் கூடிய இத்தகைய தரவுத் தொகுப்புகள் மாற்றம் மிக்க ஒன்றாக அமையும்.
- பட்டினி நிலையினைத் தடுக்கவும், வறுமையைக் குறைக்கவும், பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாக்கவும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்குமான தாவர ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதன் அவசியத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மே 12 ஆம் தேதியன்று சர்வதேச தாவர ஆரோக்கிய தினம் (IDPH) அனுசரிக்கப் படுகிறது.
    - 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'தாவர ஆரோக்கியம், பாதுகாப்பான வர்த்தகம், எண்ணிமத் தொழில்நுட்பம்' என்பதாகும்.

- தமிழகத்தைச் சேர்ந்த P ஷியாம்நிகில் அவர்கள் நாட்டின் 85வது செஸ் கிராண்ட் மாஸ்டர் பட்டத்தினைப் பெற்றுள்ளார்.
- ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையானது, மே 25 ஆம் தேதியை உலக கால்பந்து தினமாக அறிவித்துள்ளது.
- இந்திய அரசாங்கத்தின் பொது ஒளிபரப்புச் சேவை நிறுவனமான பிரசார் பாரதி விரைவில் தனது சொந்த இணையவழி ஒளிபரப்பு சேவை தளத்தினை (OTT) தொடங்க உள்ளது.
- சந்திரா சேர்க்கை ஆலோசனை வழங்கீட்டு நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சந்திரகாந்த் சதிஜா, "விதர்பா பிராந்தியத்தின் மிகவும் நம்பகமான சேர்க்கை ஆலோசனை வழங்கீட்டு நிறுவனமாக" விளங்குவதற்காக 2024 ஆம் ஆண்டிற்கான உலகின் சிறந்த நிறுவனங்கள் விருதை வென்றுள்ளார்.
- பாரத் ஸ்டேட் வங்கியானது, காந்திநகரில் உள்ள GIFT நகரில் உள்ள நாட்டின் முதல் தங்க நாணயப் பரிமாற்ற நிறுவனமான இந்திய சர்வதேச நாணய (புல்லியன்) பரிமாற்ற (IIBX) நிறுவனத்தில் அங்கம் பெற்ற முதல் வர்த்தக மற்றும் வர்த்தக மேலாண்மை உறுப்பினராக மாறியுள்ளது.
- சர்வதேச அமைதியுடன் ஒன்றுபட்டு வாழ்தலுக்கான தினம் ஆனது உலகம் முழுவதும் ஒவ்வோர் ஆண்டும் மே 16 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.
- தேசிய பாதுகாப்புப் படைக்கும் (NSG) அமெரிக்க சிறப்பு நடவடிக்கைப் படைக்கும் (SOF) இடையேயான “தர்காஷ்” எனப்படும் 7வது இந்திய-அமெரிக்க கூட்டுத் தீவிரவாத எதிர்ப்புப் பயிற்சி சமீபத்தில் கொல்கத்தாவில் நடைபெற்றது.
- TATA AIG நிறுவனமானது, இந்தியாவில் முதல் முறையாக, சுற்றுப்பாதையில் உள்ள செயற்கைக் கோள்களுக்கான மூன்றாம் தரப்பு பொறுப்புக் காப்பீட்டை அறிமுகப் படுத்தியுள்ளது.
- HDFC வங்கியானது, விசா கடன் அட்டை வலையமைப்புகளுடன் சேர்த்து PIXEL எனப்படும் அதன் முதல் மெய்நிகர் கடன் அட்டையினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- சிறுகதையில் வல்லமை பெற்று விளங்கியதற்காக நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் கனடா நாட்டின் ஆலிஸ் மன்ரோ சமீபத்தில் காலமானார்.
  - 2013 ஆம் ஆண்டில் இலக்கியத்திற்கான நோபல் பரிசினையும், 2009 ஆம் ஆண்டில் அவரது படைப்பிற்காக சர்வதேசப் புக்கர் பரிசினையும் அவர் பெற்றுள்ளார்.
- ஜப்பானியக் கூட்டமைப்பு ஆனது, சமீபத்தில் உலகின் முதல் அதிவேக 6G முன்மாதிரி சாதனத்தை வெளியிட்டுள்ளது.
  - இது வினாடிக்கு 100 ஜிகாபிட் வேகத்தில் (Gbps), 300 அடிக்கு மேலான தூர வரம்பிற்கு தரவை அனுப்பும் திறன் கொண்டது.
- துபாயின் DP வேர்ல்ட் எனப்படும் விநியோகச் சங்கிலி தீர்வுகளை வழங்கும் உலகளாவிய வழங்குநர் நிறுவனம் ஆனது, அந்த நிறுவனத்தின் மிகப்பெரிய மூன்று இலவச வர்த்தகக் கிடங்கு மண்டலத்தில் ஒன்றை (FTWZ) சென்னையின் மணலியில் தொடங்க உள்ளது.
- 2024 ஆம் ஆண்டு உலக ஹைட்ரஜன் உச்சி மாநாடு ஆனது நெதர்லாந்தின் ரோட்டர்டாம் நகரில் நடைபெற்றது.
- இந்திய இராணுவம் ஆனது, உலகின் மிக உயரமான இரண்டு பீரங்கி பழுதுபார்க்கும் வசதிகளை லடாக்கில் உள்ள மெய்க் கட்டுப்பாட்டுக் கோட்டுப் (LAC) பகுதிக்கு அருகில் நிறுவியுள்ளது.

- இந்தியக் கால்பந்து வீரர் சுனில் சேத்ரி சர்வதேச கால்பந்துப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.
- பெங்களூருவில் உள்ள சர்வதேச தகவல் தொழில்நுட்பக் கல்விக் கழகம் (IIITB) ஆனது, பக்கவாத நோயாளிகளின் அறுவைச் சிகிச்சைக்குப் பிந்தைய மறுவாழ்வு நல சேவைகளின் போது உதவும் வகையில், இணைய உலக இணைப்புகள் (IoT) செயல் படுத்தப் பட்ட 'XoRehab' எனப்படும் சக்கர நாற்காலி சாதனத்தினை உருவாக்கியுள்ளது.
- மே மாதத்தின் மூன்றாவது வெள்ளிக்கிழமையன்று (மே 17) அமெரிக்காவின் தேசிய அருகி வரும் உயிரினங்கள் தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- ஐக்கிய அரபு அமீரகம் ஆனது, 'ப்ளூ ரெசிடென்சி' என்று அழைக்கப்படும் சுற்றுச்சூழல் வாகையர்களுக்கான நீண்ட காலம் வசிப்பதற்கான திட்டத்தினை அறிமுகப்படுத்தி உள்ளது.
    - இந்த 10 ஆண்டு கால நுழைவு இசைவுச் சீட்டு என்பது குறிப்பாக சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மகத்தான அர்ப்பணிப்பு மற்றும் முயற்சிகளை மேற்கொண்ட நபர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ஆப்பிரிக்காவில் தூய்மையான சமையல் குறித்த தொடக்க உச்சி மாநாடு ஆனது பாரீஸ் நகரில் நடைபெற்றது.
    - இது ஆப்பிரிக்காவில் நிலவும் பாரம்பரிய சமையல் முறைகளால் ஏற்படும் மோசமான உடல்நலம் மற்றும் பருவநிலைத் தாக்கங்களை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டது.
- இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம் (IN-SPACe) ஆனது, “பொதுக் கொள்கையை செயல்படுத்துதல்” பிரிவின் கீழ் 2024 ஆம் ஆண்டின் புவி இடம் சார் உலக முன்னணித்துவ விருதினை வென்றுள்ளது.
- உச்சநீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத்தின் (SCBA) தலைவராக மூத்த வழக்கறிஞர் கபில் சிபல் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- FIFA காங்கிரசில் 2027 ஆம் ஆண்டு மகளிர் உலகக் கோப்பைப் போட்டியினை பிரேசில் நடத்த உள்ளதாக அறிவிக்கப்பட்டது.
- குஜராத்தின் அம்பாஜியில் வெட்டியெடுக்கப்படும் பளிங்குக் கல் சமீபத்தில் புவிசார் குறியீட்டினைப் பெற்றுள்ளது.
    - இது அம்பா வெள்ளைப் பளிங்குக் கல் என்றும் அம்பே வெள்ளை பளிங்கு கல் என்றும் அழைக்கப் படுகிறது.
- அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள அனைத்து வானிலையிலும் அணுகக்கூடிய வகையிலான சேலா சுரங்கப்பாதையானது, இங்கிலாந்தின் சர்வதேச கௌரவப் புத்தகத்தில் நாட்டின் மிகவும் உயரமான சுரங்கப் பாதையாக அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
    - இது கடல் மட்டத்திலிருந்து 13,000 அடி உயரத்தில் அமைந்துள்ளது.
- ஆப்பிள் நிறுவனம் ஐபேட் ப்ரோ சாதனத்தில் அறிமுகப்படுத்திய 16-செயலாக்க அலகுகள் கொண்ட செயற்கை நுண்ணறிவு முடுக்கிகளை உள்ளடக்கிய M4 சில்லு ஆனது, ஆப்பிள் நிறுவனத்தினால் இயந்திரக் கற்றல் செயலாக்க அலகு (NPU) என குறிப்பிடப் படுகின்றது.
- புளூம்பெர்க் பில்லியனர்கள் குறியீட்டில் உலகின் முதல் 15 மிகப்பெரியப் பெரும் பணக்காரர்களின் பட்டியலில் முகேஷ் அம்பானி (12வது) மற்றும் கௌதம் அதானி (14வது) ஆகிய இரு இந்தியர்கள் இடம் பெற்றுள்ளனர்.

- 90 வயதான சிற்பி மற்றும் முன்னாள் விமானப்படை சோதனை விமானி எட் டுவைட், ஜெஃப் பெசோஸின் விண்கலத்தில் பயணித்ததன் மூலம் முதல் கருப்பின விண்வெளி வீரர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது, அதன் வளாகத்தில் IIT-M இசைஞானி இளையராஜா இசை கற்றல் மற்றும் ஆராய்ச்சி மையத்தினை அமைத்துள்ளது.
- இலங்கையில் இந்திய வம்சாவளி தமிழர்களின் 200 ஆண்டுகள் நிறைவடைந்ததை நினைவு கூரும் வகையில் வெளியிடப்பட்ட முதல் தபால் தலையை இந்திய ஆன்மீக குரு ரவிசங்கர் பெற்றுக் கொண்டார்.
- ஐக்கியப் பேரரசு நாட்டினைச் சேர்ந்த விட்லி ஃபண்ட் ஃபார் நேச்சர் (WFN) தொண்டு நிறுவனமானது, இந்திய நாட்டினைச் சேர்ந்த டாக்டர் பூர்ணிமா தேவி பர்மனுக்கு 2024 ஆம் ஆண்டிற்கான மதிப்பு மிக்க விட்லி தங்க விருது வழங்கி கௌரவித்துள்ளது.
    - ஓ ஹர்கிலா என்று அன்புடன் அழைக்கப்படும் பெரிய சிப்பாய் நாரைகளை (கிரேட்டர் அட்ஜுடண்ட் ஸ்டோர்க்) மீட்பதற்கான அவரது அசாதாரண பணியை அங்கீகரித்து இந்த விருது வழங்கப் பட்டுள்ளது.
- தேயிலையின் கலாச்சார மற்றும் பொருளாதார முக்கியத்துவத்தை முன்னிலைப் படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபையினால் நியமிக்கப்பட்ட மே 21 ஆம் தேதி அன்று உலகம் முழுவதும் சர்வதேச தேயிலை தினம் கொண்டாடப்பட்டது.
- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், சென்னை உயர் நீதிமன்றத்தின் மூத்த நீதிபதியான நீதிபதி R. மகாதேவனை தற்காலிக தலைமை நீதிபதியாக நியமித்து உள்ளார்.
- மாரியப்பன் தங்கவேலு, 2024 ஆம் ஆண்டு உலக மாற்றுத் திறனாளிகளுக்கான தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவர் உயரம் தாண்டுதல் T63 இறுதிப் போட்டியில் 1.88 மீட்டருக்கு மேலான உயரத்தினைத் தாண்டி சாம்பியன்ஷிப் போட்டியின் முந்தைய சாதனையை முறியடித்துள்ளார்.
- தமிழகத்தின் சந்துரு G, பஞ்சாப் குத்துச்சண்டை வீரர் ஜஸ்கரன் சிங்கை வீழ்த்தி, WBC இந்தியா அதிக எடை கொண்ட வீரரர்களுக்கான சாம்பியன்ஷிப் பட்டத்தை கைப்பற்றினார்.
- ஹெலிகாப்டர் விபத்தில் அதிபர் இப்ராஹிம் ரைசி இறந்ததை அடுத்து ஈரானின் முதல் துணை அதிபர் முகமது மொக்பர் ஈரானின் தற்காலிக அதிபராக நியமிக்கப் பட்டு உள்ளார்.
- புகழ்பெற்ற வங்கியாளரும், ICICI வங்கியின் முன்னாள் தலைவருமான நாராயணன் வகுல் சமீபத்தில் காலமானார்.
- ஜெர்மனி நாட்டின் டென்னிஸ் வீரர் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் இத்தாலி ஓபன் ஒற்றையர் பட்டத்தை இரண்டாவது முறையாக வென்று வரலாறு படைத்துள்ளார்.
- கூகுள் நிறுவனத்தின் கூகுள் I/O 2024 எனப்படும் இந்த ஆண்டிற்கான மிகப்பெரிய வருடாந்திர நிரலாக்க வல்லுநர்களுக்கான நிகழ்வு ஆனது சமீபத்தில் நடைபெற்றது.
- தாய்லாந்து ஓபன் பட்டம் வென்றதைத் தொடர்ந்து BWF தரவரிசையில் இந்தியாவின் சாத்விக்சாய்ராஜ் ராங்கிரெட்டி-சிராக் ஷெட்டி மீண்டும் முதல் இடத்தைப் பிடித்தனர்.
- ITC லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரான சஞ்சீவ் பூரி, 2024-25 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தொழில்துறைக் கூட்டமைப்பின் (CII) தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- ஒடிசாவின் புவனேஸ்வர் நகரில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டு ஃபெடரேஷன் கோப்பை தடகளப் போட்டியில் ஆடவர்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் இந்திய தடகள வீரர் நீரஜ் சோப்ரா தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- இந்தியப் பாதுகாப்புப்படையின் இணையவெளி முகமையானது, நாட்டிலுள்ள அனைத்து இணையவெளிப் பாதுகாப்பு அமைப்புகளின் பாதுகாப்புத் திறன்களை மேம்படுத்துவதற்காக சைபர் சுரக்சா - 2024 என்ற பயிற்சியை நடத்தியது.
- இந்திய வம்சாவளி அமெரிக்க அறிவியலாளரும், கலிபோர்னியா தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் பேராசிரியருமான ஸ்ரீனிவாஸ் R. குல்கர்னிக்கு 2024 ஆம் ஆண்டிற்கான வானியலுக்கான ஷா பரிசு வழங்கப்பட்டுள்ளது.
- சர்வதேச சூரியசக்தி கூட்டணியில் (ISA) 99வது உறுப்பினராக ஸ்பெயின் நாடு இணைந்துள்ளது.
- ஜப்பானில் நடைபெற்ற உலக மாற்றுத் திறனாளிகளுக்கான தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் தீப்தி ஜீவன்ஜி உலக சாதனை படைத்து தங்கம் வென்றுள்ளார்.
  - அவர் 400 மீ T20 பந்தயத்தினை வெறும் 55.07 வினாடிகளில் நிறைவு செய்து, 2023 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் பிரேனா கிளார்க் படைத்த 55.12 வினாடிகள் என்ற முந்தைய சாதனையை முறியடித்துள்ளார்.
- ஷீ ஜின்பிங் சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட புதிய பெரிய மொழி மாதிரி (LLM) செயற்கை நுண்ணறிவு அமைப்பினை சீனா அறிமுகப் படுத்தியுள்ளது.
  - இது இணைய வெளிப் பாதுகாப்பின் மீது கடுமையான ஒழுங்குமுறைக் கட்டுப்பாட்டினை மேலாண்மை செய்வதோடு, பல்வேறு துறைகளில் செயற்கை நுண்ணறிவினை ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு ATD BEST விருதுகளில் உலகளவில் 3வது தரவரிசையைப் பெற்றதன் மூலம் தேசிய அனல் மின் கழகம் (NTPC) ஒரு அற்புதமான மைல்கல்லை எட்டியுள்ளது.
- விண்வெளிக்கு ஒரு குறுகிய பொழுதுபோக்குப் பயணத்தை மேற்கொண்ட ஆறு விண்வெளி சுற்றுலாப் பயணிகளில் இந்தியாவில் பிறந்த விமானி கோபி தோட்டகுராவும் ஒருவர் ஆவார்.
- 2024 ஆம் ஆண்டு சியோல் செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாடு ஆனது, தென் கொரிய மற்றும் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் இணைந்து நடத்தப்பட்டது.
- 10வது உலக நீர் மன்றம் இந்தோனேசியாவின் பாலி நகரில் “பகிரப்பட்ட செழுமைக்கான நீர்” என்ற தலைப்பில் நடைபெற்றது.
- மாலத்தீவுகள் "அந்நாட்டு நாணயமான Rufiyaa-வின் சேவையினை மேம்படுத்தச் செய்வதற்காக" இந்தியாவின் RuPay சேவையை விரைவில் தொடங்க உள்ளது.
- திருவனந்தபுரம் சர்வதேச விமான நிலையம், குப்பைக் கிடங்கில் கொட்டப்படாமல் முழுவதும் கழிவகற்றிய (ZWL) விமான நிலையம் என்ற பெருமையைப் பெற்ற இந்தியாவின் முதல் விமான நிலையமாக வரலாறு படைத்துள்ளது.
- கோவாவில் உள்ள தேசிய துருவப் பகுதி மற்றும் பெருங்கடல் ஆராய்ச்சி மையம் (NCPOR) மற்றும் அண்டார்டிக் உடன்படிக்கை செயலகம் ஆகியவை இணைந்து கேரளாவின் கொச்சி நகரில் 46வது அண்டார்டிக் ஒப்பந்த ஆலோசனைக் கூட்டங்களை ஏற்பாடு செய்தன.

- உலகப் பொருளாதார மன்றத்தின் (WEF) நிறுவனரும் செயல் தலைவருமான கிளாஸ் ஷ்வாப், தனது தற்போதையப் பொறுப்பில் இருந்து விலகி, வரும் ஆண்டின் ஜனவரி மாதத்திற்குள் அறங்காவலர் குழுவின் தலைவராக பதவியேற்க உள்ளார்.
- உலக சுகாதார அமைப்பின் (WHO) 194 உறுப்பினர் நாடுகள் ஒரு பெருந்தொற்றிற்கு எதிரான நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வது என்பதற்கான புதிய விதிகள் குறித்த இரண்டு ஆண்டுகாலப் பேச்சுவார்த்தையினை ஜெனீவாவில் நிறைவு செய்ய உள்ளன.
  - எதிர்காலத்தில் ஏற்பட உள்ள பெருந் தொற்றுநோய்களுக்கு எதிராக உலகளாவிய பாதுகாப்பை வலுப்படுத்துவதே இந்தப் பேச்சுவார்த்தைகளின் மிகவும் முக்கிய குறிக்கோள் ஆகும்.
- ஐக்கிய நாடுகள் சபையின் குற்றத்தடுப்பு மற்றும் குற்றவியல் நீதிக்கான ஆணையத்தின் (CCPCJ) 33வது அமர்வு வியன்னா நகரில் நடைபெறவுள்ளது.
- இமாச்சலப் பிரதேசத்தின் லஹுவுல் & ஸ்பிட்டி பகுதியில் உள்ள வனவிலங்கு அதிகாரிகள், கணக்கெடுப்பின் ஒரு பகுதியாக, நீல மலையாடுகள் அல்லது பரல் மற்றும் இமாலயப் பனிப்பிரதேச ஆடு ஆகியவற்றின் எண்ணிக்கையை மதிப்பிடச் செய்வதற்காக ஆய்வுகளைத் தொடங்கியுள்ளனர்.
- G7 அமைப்பானது 2050 ஆம் ஆண்டிற்குள் தனது நிகரச் சுழிய உமிழ்வு நிலையினை அடைவதற்கான அதன் உறுதிப்பாட்டினை அறிவித்துள்ளது.
- நார்வே, அயர்லாந்து மற்றும் ஸ்பெயின் ஆகியவை பாலஸ்தீனத்தை அங்கீகரித்து உள்ள நிலையில் ஒரு மேற்கு ஐரோப்பிய நாடு அத்தகைய அங்கீகாரத்திற்கு உறுதி அளித்தது இதுவே முதல் முறையாகும்.
- உலகெங்கிலும் உள்ள நிறுவனங்கள் AI தொழில்நுட்பத்திற்கான தடைகளை அறிமுகப் படுத்தப் போட்டியிட்டு வருவதால், ஐரோப்பிய ஒன்றிய அமைப்பின் உறுப்பினர் நாடுகள் ஆனது, செயற்கை நுண்ணறிவினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான உலகின் முதல் மாபெரும் சட்டத்திற்கு தனது இறுதி ஒப்பந்தத்தினை அளித்துள்ளது.
- மதிப்புமிக்க பிரான்ஸ் நாட்டின் கேன்ஸ் திரைப்பட விழாவில் சிறந்த நடிகைக்கான விருதை வென்ற முதல் இந்திய நடிகை என்ற பெருமையினை அனசுயா சென்குப்தா பெற்றுள்ளார்.
- சமீபத்தில், 2030 ஆம் ஆண்டிற்குள் விண்வெளி சார்ந்த நடவடிக்கைகளை குப்பைகள் இல்லாத வகையில் மேற்கொள்வதற்கு உறுதியளிக்கும் விதமாக பன்னிரண்டு நாடுகள் ESA/EU விண்வெளி சபையில், கழிவுகளற்ற விண்வெளி என்ற சாசனத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- 2024 ஆம் ஆண்டு IPL போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியை வீழ்த்தி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி தனது மூன்றாவது IPL பட்டத்தினை வென்றுள்ளது.
- IUCN அமைப்பின் முதல் உலகளாவியச் சதுப்புநில மதிப்பீட்டின்படி, தென்னிந்தியக் கடற்கரையோரங்களில் உள்ள சதுப்புநிலங்கள், குறிப்பாக தமிழகத்தை உள்ளடக்கிய கிழக்குக் கடற்கரையோரப் பகுதிகள், மிகவும் அருகி வரும் நிலையில் உள்ள பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- உத்தரப் பிரதேசத்தின் பஹ்ரைச் நகரைச் சேர்ந்த 18 வயது ரிக்சா ஓட்டுநர் ஆர்த்தி, இலண்டனில் அமல் குளூனி மகளிர் அதிகாரமளிப்பு விருதைப் பெற்றுள்ளார்.
- பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் அமைப்புகளால் ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்தப்படும் பணிகள் மற்றும் பதவிகளில் பெண்களுக்கு 33% இடஒதுக்கீடு வழங்குவதை கர்நாடக அரசு தற்போது கட்டாயமாக்கியுள்ளது.

- சர்வதேச ஒலிம்பிக் குழுவானது (IOC) 'Let's Move India' என்ற திட்டத்தை அறிவித்துள்ளது.
    - பாரீஸ் நகரில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் விளையாட்டு வீரர்களைக் கொண்டாடுவதற்காக மக்களை ஊக்குவிப்பதே இந்த முன்னெடுப்பின் நோக்கமாகும்.
- 2023-24 ஆம் ஆண்டில் மாநில மின் பகிர்மான நிறுவனங்களால் மின்பகிர்மானக் கம்பி வடங்களை இணைத்ததன் அடிப்படையில் உத்தரப் பிரதேச மாநிலம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.
    - அதைத் தொடர்ந்து குஜராத் மற்றும் தமிழ்நாடு ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- தென்மேற்கு பலுசிஸ்தான் மாகாணத்தில் 2024 ஆம் ஆண்டின் மூன்றாவது போலியோ நோய்ப் பாதிப்பு பதிவாகியுள்ளதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.
    - ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரண்டு நாடுகளில் மட்டுமே போலியோ இன்னும் பொதுவாக காணப்படுகிறது.
- 1986 ஆம் ஆண்டில் பண்டிட் ஜுகல் கிஷோர் சுக்லா அவர்களால் தொடங்கப்பட்ட உதாந்த் மார்தண்ட் எனப்படும் இந்தியாவின் முதல் இந்தி மொழி செய்தித்தாள் வெளியான நாளினை நினைவுகூரும் விதமாக இந்தி மொழி இதழியல் தினமானது ஒவ்வோர் ஆண்டும் மே 30 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.
    - உலக மின்சார சிகரெட்டுகள் தினம் ஆனது மே 30 ஆம் தேதியன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டது.
- மின்சார சிகரெட்டுகள் பற்றிய விழிப்புணர்வினை அதிகரிப்பது மற்றும் புகைபிடிப்பதை நிறுத்த முடியாத புகைப்பிடிக்கும் பழக்கத்தினை நிறுத்துவதற்கு உதவுவதும் இதன் நோக்கமாகும்.
- திருவனந்தபுரம் பொறியியல் கல்லூரி (CET) மற்றும் சென்னையின் இந்தியத் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் (IIT) ஆகியவை இணைப்பு இல்லாத மின்னழுத்த அளவீட்டுச் சாதனத்தை வடிவமைப்பதற்கான காப்புரிமையைப் பெற்றுள்ளன.
- எண்ணிமப் பொருளாதாரத்திற்கான இயங்குதிறன் அறக்கட்டளை (FIDE) பயனரின் சார்பாக வணிகப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளக்கூடிய பல் வலையமைப்பு செயற்கை நுண்ணறிவு முகவு அமைப்பினை வெளியிட்டுள்ளது.
- GAIL (இந்தியா) லிமிடெட் நிறுவனமானது, தேசியப் பசுமை ஹைட்ரஜன் திட்டத்தின் கீழ் மத்தியப் பிரதேசத்தின் விஜயப்பூரில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதல் 10 மெகாவாட் திறன் கொண்ட பசுமை ஹைட்ரஜன் ஆலையை திறந்துள்ளது.
- அருணாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்த மலையேறும் வீரரும் கிரிக்கெட் வீரருமான கபக் யானோ, எவரெஸ்ட் சிகரத்தை ஏறி சாதனை படைத்த முதல் நிஷி பழங்குடிப் பெண் என்ற வரலாற்றினைப் படைத்துள்ளார்.
- மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த ஜோதி ராத்ரே (55) எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய இந்தியாவின் முதியப் பெண்மணி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- நேபாளத்தைச் சேர்ந்த பூர்ணிமா ஸ்ரேஸ்தா, ஒரே பருவத்தில் 13 நாட்களில் மூன்று முறை எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய உலகின் முதல் பெண் என்ற ஒரு வரலாற்றினைப் படைத்துள்ளார்.
- ஜிம்னாஸ்டிக் வீராங்கனை தீபா கர்மாகர், 2024 ஆசிய முதுநிலை சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிர் வால்ட் பிரிவில் பட்டத்தை வென்றதன் மூலம் தங்கப் பதக்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

- ஃபெராரி கார் பந்தய வீரரான சார்லஸ் லெக்லெர்க், 2024 மொனாக்கோ கிராண்ட் பிரிக்ஸ் பந்தயத்தில் வென்ற முதல் மொனாக்கோவைச் சேர்ந்த பந்தய ஓட்டுநர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.
- திரைப்படத் தயாரிப்பாளர் பயல் கபாடியா, 'All We Imagine As Light' என்ற அவரது திரைப் படம் ஆனது 2024 ஆம் ஆண்டு பிரான்ஸ் கேன்ஸ் திரைப்பட விருது விழாவில் மதிப்பு மிக்க கிராண்ட் பிரிக்ஸ் விருதினை வென்றதையடுத்து ஒரு வரலாற்றினைப் படைத்து உள்ளார்.
- 2024 ஆம் நிதியாண்டில் 42% வளர்ச்சியுடன் சுமார் 15.6 பில்லியன் டாலராக ஏற்றுமதி உயர்ந்ததையடுத்து திறன்பேசிகள் ஆனது இந்தியாவில் அதிகம் ஏற்றுமதி செய்யப் படும் நான்காவது பொருளாக மாறியுள்ளது.
- இந்தியாவின் முதன்மையான நீர்மின்னாற்றல் உற்பத்தி நிறுவனமான தேசிய நீர் மின்னாற்றல் கழகம் ஆனது (NHPC) 'தி எகனாமிக்ஸ் டைம்ஸ் இதழின் 2024-25 ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க 'The Economic Times HR World Future Ready Organization' என்ற விருதினைப் பெற்றுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## கேரளாவில் இருந்து சட்டவிரோதமான முறையில் திடக்கழிவு இடமாற்றல்

- மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் (CPCB) ஆனது, கேரளாவில் இருந்து தமிழகத்திற்கு சட்ட விரோதமான முறையில் மாநிலங்களுக்கு இடையேயான திடக்கழிவுகளைக் கொண்டு வருவதைத் தடுப்பதற்கான ஒரு செயல் திட்டத்தை வகுத்துள்ளது.
- கேரளாவில் இருந்து கொண்டு வரப்படும் கழிவுகளைச் சட்டவிரோதமாக ஆனைமலை அருகே கொட்டுவதற்கு எதிராக தானாக முன்வந்து இந்த வழக்கை விசாரித்து வரும் தேசியப் பசுமைத் தீர்ப்பாயத்தின் தென்னக அமர்வின் ஒரு உத்தரவின் பேரில் இந்த செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.
- வீடுகளில் இருந்து உருவாக்கப்படும் உயிரி மருத்துவக் கழிவுகள் ஆனது, 2016 ஆம் ஆண்டு உயிரியல் மருத்துவக் கழிவு மேலாண்மை விதிகளுக்கு எதிராக தவறான முறையில் மேலாண்மை செய்யப் படுவதை மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் கண்டறிந்தது.
- அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் தங்கள் அதிகார வரம்பில் உள்ள கழிவு மேலாண்மை அமைப்பின் விரிவான பட்டியலைத் தயாரிப்பதை உறுதி செய்யுமாறு கேரள மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திடம் கோரப்பட்டுள்ளது.
- திடக்கழிவு மேலாண்மைத் திறனை வலுப்படுத்துவதற்காக வேண்டி, மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆனது, திடக்கழிவு மேலாண்மையில் உள்ள குறிப்பாக மறு சுழற்சி செய்ய முடியாத கழிவுகள் தொடர்பாக உள்ள இடைவெளிகளைக் கண்டு அறியுமாறு, கேரளாவின் சுசித்வா திட்ட அமைப்பிற்கு உத்தரவிட்டுள்ளது.

## தமிழ்நாடு பாரம்பரிய ஆணையச் சட்டம்


- தமிழ்நாடு அரசு ஆனது சட்டமன்றத்தினால் இயற்றப்பட்டு 12 ஆண்டுகள் கழித்து, 2012 ஆம் ஆண்டின் தமிழ்நாடு பாரம்பரிய ஆணையச் சட்டத்தினை (2017 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது) நடைமுறைக்குக் கொண்டுவர உள்ளது.
- உயர் நீதிமன்றமானது, மாநிலத்தில் உள்ள பாரம்பரியக் கட்டமைப்புகளை வெகுவாக பாதுகாப்பதற்கான ஆணையத்தினை அமைக்குமாறு அரசிற்கு தற்போது உத்தரவு இவிட்டுள்ளது.
- இந்தச் சட்டமானது தமிழ்நாடு பாரம்பரிய ஆணையம் அமைக்கப்பட வேண்டும் என்பதனைக் கட்டாயமாக்குகிறது.
- பாரம்பரிய வளங்களின் பாதுகாப்பில் ஈடுபாடுள்ள மற்றும் உயர்மட்ட அரசு அதிகாரிகளை உள்ளடக்கிய ஒரு புகழ்பெற்ற நபரின் தலைமையில் இது அமைக்கப் பட உள்ளது.
- 1958 ஆம் ஆண்டில் மத்திய அரசால் இயற்றப்பட்ட மற்றும் மாநில அரசின் (1966) பழங்கால நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் தளங்கள் மற்றும் எஞ்சியப் பகுதிகள் சட்டங்களின் விதி வரம்பிற்கு உட்படாத பல வரலாற்றுக் கட்டிடங்கள் நமது மாநிலத்தில் உள்ளன.
- இச்சட்டத்தின் கீழ் உத்தரவிடப்பட்டுள்ளபடி, மாநிலத்தில் உள்ள பாரம்பரிய இடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை ஆணையம் பாதுகாக்க உள்ளது.

## கல்லணை கால்வாய் மறுசீரமைப்பு திட்டத்தின் இரண்டாம் கட்டம்

- காவிரி வடிநிலப் பகுதியில் அமைந்துள்ள கல்லணையின் கால்வாய் அமைப்பின் 'விரிவாக்கம், புதுப்பித்தல் மற்றும் நவீனமயமாக்கலுக்கான' இரண்டாம் கட்ட நடவடிக்கைகளுக்கு தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது.
- இந்தக் கால்வாய் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டது.
- தஞ்சாவூர் மாவட்டத்தில் பூதலூர், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, பேராவூரணி போம்ற பகுதிகளிலும், புதுக்கோட்டை மாவட்டத்தின் சில பகுதிகளிலும் சுமார் 2.25 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கான பாசனத்திற்கான ஆதாரமாக இது விளங்குகிறது.

## தமிழ்நாட்டில் 42 யானை வழித்தடங்கள்

- இம்மாநிலத்தில் உள்ள யானை வழித்தடங்களை அடையாளம் காண்பதற்காக தமிழக அரசானது குழு ஒன்றினை அமைத்திருந்தது.
- இது 42 யானை வழித்தடங்களின் பட்டியலை வெளியிட்டு, பொதுமக்களிடம் இருந்து கருத்துகளை கோரியுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் யானைகள் வளங்காப்பு திட்டப் பிரிவு பட்டியலிட்ட யானை வழித்தடங்களின் எண்ணிக்கையை விட இந்த எண்ணிக்கை அதிகமாகும்.
- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சகத்தின் பிரிவு 20 வழித் தடங்களை அடையாளம் கண்டுள்ளது: அவற்றுள் 15 மாநிலத்திற்குள்ளே அமைந்த வழித் தடங்கள், ஐந்து கர்நாடகா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் உள்ள காடுகளை இணைக்கும் மாநிலங்களுக்கு இடையேயான பகுதிகளில் அமைந்து உள்ள வழித்தடங்கள் ஆகும்.
- 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒத்திசைவு கணக்கெடுப்பின்படி, மாநிலத்தில் 2,961 யானைகள் இருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் உள்ள 26 வனப் பிரிவுகளுள் 20 வனப் பிரிவுகளில் 9217.13 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் யானைகள் பரவிக் காணப் படுகின்றன.




## கைகளால் கழிவுகளை அள்ளும் பணியாளர்கள் குறித்து சென்னை உயர்நீதிமன்றம்

- சென்னை உயர்நீதிமன்றம் ஆனது கழிவுகளை வெறும் கைகளால் அள்ளும் துப்புரவுத் தொழிலாளர்கள் பிரச்சினையைத் திறம்பட கையாள்வதற்காக 19 வழிகாட்டுதல்கள் கொண்ட தொகுப்பினை அரசுக்கு வழங்கியுள்ளது.
- மேலும் குறைந்தபட்சமாக 2026 ஆம் ஆண்டிற்குள் இந்த நடைமுறையை ஒழிக்குமாறு நீதிமன்றம் அரசாங்கத்திடம் கோரியுள்ளது.
- இந்த வழிகாட்டுதல்கள் பாதாளச் சாக்கடை, மலம் மக்கும் தொட்டி மற்றும் மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்வதை இயந்திரமயமாக்குவதை உறுதி செய்வதற்கான வழிமுறைகளை உள்ளடக்கியது.

- இந்தச் சுத்திகரிப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக தொழிலாளர்கள் உயிரிழந்தால், அந்த வழக்கில் ஒப்பந்ததாரர்கள் மட்டுமின்றி குடிமை அமைப்பின் தலைவர் (மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பஞ்சாயத்து ஒன்றிய ஆணையர்கள்) மீது முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்ய நீதிமன்றம் பரிந்துரைத்தது.
- தற்போது, உயிரிழப்பு வழக்குகளில் மட்டுமே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப் படுகின்றன என்பதோடு அதுவும் "குற்றம் சுமத்துவதற்கு ஏதுவான ஒருவரை, பொதுவாக ஒரு ஒப்பந்தக் காரரின் கீழ்நிலை ஊழியரை அடையாளம் கண்டு அவர் மீதே பழி சுமத்தப் படுகிறது".
- கழிவகற்றல் பணியில் உயிரிழக்கும் தொழிலாளர்களின் குடும்பத்திற்கு வழங்கப் படும் இழப்பீட்டுத் தொகையை 10 லட்சத்தில் இருந்து 20 லட்சமாக உயர்த்த நீதிமன்றம் பரிந்துரைத்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டு கழிவுகளை வெறும் கைகளால் அள்ளும் பணியில் மக்கள் பணி அமர்த்தப் படுவதைத் தடைசெய்தல் மற்றும் அவர்களது மறுவாழ்வுச் சட்டத்தினைக் கடுமையான முறையில் செயல்படுத்துவதையும், அந்தச் சட்ட விதிமுறைகளுக்கு இணங்குவதையும் உறுதி செய்யுமாறு அதிகாரிகளை வலியுறுத்துகிறது.
- 2024 ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் தேதியன்று வெளியிடப்பட்ட அரசாணையின் மூலம் மனிதக் கழிவகற்றல் பணியில் ஈடுபடும் போது ஏற்படும் உயிரிழப்புகளுக்கான இழப்பீடு 10 இலட்சம் ரூபாயில் இருந்து 30 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது.



BOOK MUNICIPAL COMMISSIONERS FOR DEATHS DURING MANUAL SCAVENGING, SAYS MADRAS HIGH COURT

## புவிசார் குறியீடு பெற்றத் தயாரிப்புகளின் தாக்கம்

- புவிசார் குறியீடு பெற்றத் தயாரிப்புகளின் தாக்க மதிப்பீடு குறித்த ஆய்வினை மேற் கொள்வதற்கு சிம்பயோசிஸ் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் நிறுவனத்திற்கு தேசிய வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி (NABARD) அனுமதி அளித்துள்ளது.
- இந்தக் குறிப்பிட்ட ஆய்வானது, பல ஆண்டுகளாக புவிசார் குறியீடுகளால் கை வினைஞர்கள் / தயாரிப்பாளர்களுக்கு ஏற்பட்ட பெரு நன்மைகள் குறித்து பகுப்பாய்வு செய்ய NABARD வங்கிக்கு உதவும்.

- இன்றைய நிலவரப்படி, NABARD வங்கியின் ஆதரவினைப் பெற்ற 144 தயாரிப்புகள் புவிசார் குறியீடு பெற்றுள்ளன.
- NABARD வங்கியின் ஆதரவுடன் புவிசார் குறியீட்டினைப் பெற்ற முதல் தயாரிப்பு, தெலுங்கானாவைச் சேர்ந்த போச்சம்பள்ளி இகாட் (புடவை) ஆகும்.




## வருடாந்திரக் காவிரி நீர் திறப்பு



**Falling short:** The current water year will mark the third occasion of T.N.'s annual quota of the Cauvery water not exceeding 100-tmc ft.

### Grim situation

A rundown of realisation of the Cauvery water in 2023-24

(in tmc ft)

| Month | Realisation | Month | Realisation |
|---|---|---|---|
| June | 2.833 | December | 5.4469 |
| July | 8.7476 | January | 2.6147 |
| August | 19.9961 | February | 0.6607 |
| September | 13.5857 | March | 0.9401 |
| October | 12.8447 | April | 0.4385 |
| November | 10.658 | **TOTAL** | **78.765** |

- நடப்பு நீர் அளவீட்டு ஆண்டு 2023-24 ஆனது இம்மாதத்துடன் முடிவடையும் நிலையில், இந்த ஆண்டில் மாநில அரசினால் திறக்கப்பட உள்ள ஒட்டுமொத்த நீரின் அளவானது 1974 ஆம் ஆண்டிலிருந்து 2016-17 ஆம் ஆண்டின் போது வெளியிடப்பட்ட 69 ஆயிரம் மில்லியன் கன அடி என்ற மிகக் குறைந்த அளவிற்கு சிறிது அதிகமாக இருக்கும்.
- ஏப்ரல் 30 ஆம் தேதியன்றான நிலவரப்படி, 2023 ஆம் ஆண்டு ஜூன் 01 ஆம் தேதி முதல் மொத்த நீர் வரத்து சுமார் 78.8 ஆயிரம் மில்லியன் கன அடியாகும்.

- இது 2003-04 ஆம் ஆண்டில் பதிவான 75.6 ஆயிரம் மில்லியன் கன அடியை விட சற்று அதிகமாக இருந்தது.
- அனைத்து சாத்தியக் கூறுகளிலும், நடப்பு நீர் அளவீட்டு ஆண்டு ஆனது, தமிழக மாநிலத்திற்கு 100 ஆயிரம் மில்லியன் கன அடிக்கு மிகாமல் காவிரி நீர் வழங்கப்பட்ட மூன்றாவது சந்தர்ப்பத்தைக் குறிக்கும்.
- 2000 ஆம் ஆண்டிலிருந்து, மேலும் இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கான வருடாந்திரப் பங்கு 100 ஆயிரம் மில்லியன் கன அடியை மிகவும் சிறு வித்தியாசத்தில் தாண்டியது.
- 2012-13 ஆம் ஆண்டில் 100.4 ஆயிரம் மில்லியன் கன அடியாகவும், 2002-03 ஆம் ஆண்டில் 109.9 ஆயிரம் மில்லியன் கன அடியாகவும் வழங்கப்பட்டது.
- காவிரி நீர்ப் பங்கீடு தொடர்பான கர்நாடகாவின் வாதத்தின் படி, 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் 50 ஆண்டு காலம் 1974 ஆம் ஆண்டில் முடிவடைந்தது.
- 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி, தமிழகம் மற்றும் புதுச்சேரிக்கு 75% உபரி நீரும், கர்நாடகாவுக்கு 23% நீரும் கிடைக்கப்பெறும்.
- மீதமுள்ள நீர் கேரளாவுக்கு வழங்கப்படும்.


## பவானிசாகர் அணையால் மூழ்கிய கோவில்

- 1,000 ஆண்டுகளுக்கு முன்பு, மேற்கு தமிழ்நாட்டின் கொங்கு மண்டலத்தைத் தெற்கு கர்நாடகா மற்றும் கேரளாவுடன் இணைக்கும் ஒரு பெரிய வணிகப் பாதை ஒன்று இருந்தது.
- ஸ்ரீ மாதவப் பெருமாள் கோயிலில் காணப்படும் கல்வெட்டுகள் மூலம் இது தெரிய வந்துள்ளது.
- ஈரோடு மாவட்டத்தில் உள்ள பவானிசாகர் அணையின் நீர்பரப்புப் பகுதியில் இந்தக் கோயில் பெரும்பாலும் மூழ்கியே காணப்படுகிறது.
- அணையின் நீர்மட்டமானது 105 அடி என்ற முழு கொள்ளளவில் இருந்த நிலையில், அணையின் நீர்மட்டம் 46 அடிக்கும் கீழாக குறைந்ததைத் தொடர்ந்து, இக்கோயில் தற்போது சிதிலமடைந்த நிலையில் காட்சியளிக்கிறது.
- ஒவ்வொன்றும் பல்வேறு காலகட்டத்தைச் சேர்ந்த 10 முதல் 15 கல்வெட்டுகள் இங்கு கண்டறியப் பட்டுள்ளன.
- 1,000 ஆண்டுகளுக்கு முன்னதாக தொண்டரீஷ்வரமுடையார் (சிவன்) கோயில் அமைந்திருந்த துறைவலூர் என்ற கிராமம் அங்கு இருந்ததையும் இது வெளிப்படுத்தி உள்ளது.
- இப்பகுதி பெருவழியாக (பிரதான நெடுஞ்சாலை) செயல்பட்டது என்பதோடு இங்கு வணிகர்கள் கேரளாவின் வயநாடு மற்றும் கர்நாடகாவின் பல்வேறு இடங்களுக்குச் செல்ல பவானி நதி மற்றும் மோயாறு நதியைக் கடந்து சென்றனர்.
- இப்பகுதி ஹொய்சாள ஆட்சியாளர்களின் கீழ் இருந்தது.
- ஹொய்சாளப் பேரரசின் கடைசிப் பெரு மன்னன் மூன்றாம் வீர பல்லலா (1292-1342) இப்பகுதியை ஆட்சி செய்தார்.



## பசுமை மதிப்பீடு திட்டத்தின் கீழ் நிலங்கள் மறுசீரமைப்பு

- தமிழ்நாட்டில் மொத்தம் 263.4 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள 13 தரமிழந்த நிலங்கள் பசுமை மதிப்பீட்டுத் திட்டத்தின் கீழ் மறுசீரமைக்கப்படவுள்ளது.
- இந்தத் திட்டமானது ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சகத்தினால் தொடங்கப்பட்டுள்ளது.
- இது தனிநபர்கள், சமூகங்கள், தனியார் துறை தொழில்கள் மற்றும் நிறுவனங்களால் பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்படும் தன்னார்வ ரீதியின் அடிப்படையிலான சுற்றுச்சூழல் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட சந்தை அடிப்படையிலான நெறிமுறையாகும்.



- பங்குதாரர்கள் தரமிழந்த நிலங்களை மறுசீரமைப்பதில் முதலீடு செய்வர், அதற்குப் பதிலாக, வன நிலத்தை வனம் அல்லாதப் பயன்பாட்டு நோக்கங்களுக்காக மாற்றும் நடவடிக்கைகளின் போது இழப்பீட்டு காடு வளர்ப்புக்குப் பயன்படுத்தக்கூடிய வகையிலான பசுமை மதிப்பீடுகளைப் பெறுவர்.
- 2,448.57 ஹெக்டேர் பரப்பளவிலான 101 நிலப் பகுதிகள் அடையாளம் காணப்பட்டு, பசுமை மதிப்பீட்டுப் பதிவேட்டிற்கான இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு உள்ளன.
- அதில் 13 (263.46 ஹெக்டேர்) பகுதிகள் அங்கீகரிக்கப் பட்டதோடு, 19 (150.84) பகுதிகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.
- இந்த அங்கீகரிக்கப்பட்ட நிலங்கள் திருவள்ளூர், சிவகங்கை, திண்டுக்கல், ஈரோடு, சேலம், மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

## நகரம் மற்றும் கிராம திட்டமிடல் சட்டம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் கருத்து

- 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் கிராமப்புறத் திட்டமிடல் (TTCP) சட்டம் ஆனது, எந்தவொரு மேம்பாட்டு நடவடிக்கைப் பணிகளும் மேற்கொள்ளக்கூடாத மண்டலம் என்று அறிவிப்பதன் மூலம் தனியார் நில உரிமையாளர்கள் தங்கள் அசையாச் சொத்துக்களில் கட்டிடங்கள் எதுவும் கட்டுவதைத் தடுக்க மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கவில்லை.
- ஏரியின் நீர்ப்பிடிப்புப் பகுதியைப் பராமரித்தல் போன்ற எந்தவொரு பொது நோக்கத்திற்காகவும் அத்தகைய நிலங்களை அரசு கையகப்படுத்த மட்டுமே முடியும் என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- அந்த நிலங்களில் வேளாண்மை மட்டுமே செய்ய வேண்டும் என்று அரசு நில உரிமையாளர்களை வற்புறுத்த முடியாது என்று நீதிமன்றம் கூறியுள்ளது.
- அரசியலமைப்பு சட்டத்தில் இருந்து 19(1)(f) பிரிவு நீக்கப்பட்டதால் சொத்துரிமை என்பது அடிப்படை உரிமையாக இல்லை என்றாலும், 300A என்ற பிரிவின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட உரிமையானது (சட்டத்தின் அதிகாரத்தால் தவிர வேறு வகையில் எந்த நபரின் சொத்தையும் பறிக்க முடியாது) மனித உரிமையாகவும் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

## தமிழ்நாட்டில் சம்பா/தாளடி சாகுபடிப் பருவம் - 2024

**Crop cover**

Paddy coverage during Samba/Thaladi/Pishanam season

(In lakh acres)

| Region | Normal area (5 years' average) | Target | Coverage* | |
|---|---|---|---|---|
| | | | 2023-24 | 2022-23 |
| Cauvery delta | 8.914 | 13.263 | 11.927 | 13.528 |
| Non-delta | 21.716 | 21.902 | 21.055 | 22.984 |
| Total | 30.63 | 35.165 | 32.982 | 36.512 |

| District | Samba/Thaladi 2022-23 03.04.2023 | |
|---|---|---|
| | Samba coverage | Thaladi coverage |
| Cuddalore | 1,29,001 | 18,229 |
| Tiruchi | 90,950 | – |
| Karur | 25,140 | – |
| Ariyalur | 28,706 | – |
| Pudukkottai | 17,594 | – |
| Thanjavur | 1,90,343 | 1,55,632 |
| Nagapattinam | 1,19,526 | 40,548 |
| Mayiladuthurai | 77,773 | 93,067 |
| Tiruvarur | 2,14,749 | 1,51,599 |
| Total | 8,93,782 | 4,59,075 |

- நடப்பு நீர் அளவீட்டு ஆண்டில் தமிழக மாநிலத்திற்கு சரியான நீர் வழங்கீடு இல்லை என்றாலும், டெல்டா பகுதியானது சம்பா/தாளடி சாகுபடி பருவத்தில் இயல்பை விட மூன்று லட்சம் ஏக்கர் பரப்பளவிலான சாகுபடியினைக் கடந்துள்ளது.
- இருப்பினும், இந்த அதிகப்படியான சாகுபடியானது இலக்கை விட சுமார் 1.25 லட்சம் ஏக்கர் குறைந்துள்ளது.
- ஏப்ரல் மாத இறுதியில் காவிரி நீர் வழங்கீடு ஆனது ஒட்டு மொத்தமாக 78.8 ஆயிரம் மில்லியன் கன அடியாக இருந்தது.
- 8.9 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பிற்கு பதிலாக (ஐந்து ஆண்டு காலச் சராசரியின் அடிப்படையில்) டெல்டா பகுதி சுமார் 11.93 லட்சம் ஏக்கர் சாகுபடியினை எட்டியுள்ளது.
- தற்போது சாகுபடி செய்யப்பட்ட பரப்பளவு சுமார் 11.67 லட்சம் ஏக்கர் ஆகும்.
- சம்பா பருவத்தில் மட்டும் நேரடி விதைப்பு சார்ந்த சாகுபடி மேற்கொள்ளப்பட்ட நிலப் பரப்பு சுமார் 45.7% அல்லது 3.32 லட்சம் ஏக்கராக உள்ளது.

## 2024-25 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பொருளாதாரம்

- 2024-25 ஆம் ஆண்டில் தமிழகப் பொருளாதாரம் 8.08% முதல் 10.69% வரை வளர்ச்சி அடையக் கூடும்.
- சமீபத்தில் நிறைவடைந்த 2023-24 ஆம் நிதியாண்டில், மாநிலத்தின் வளர்ச்சி விகிதம் ஆனது 8.08% முதல் 9.44% வரையிலான வரம்புகளில் மாறுபட்டதாக சென்னை பொருளாதாரக் கல்லூரி மதிப்பிட்டுள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் ஆனது 7.3% ஆகும்.
- 2005-06 முதல் 2011-12 ஆம் ஆண்டு வரையிலான (2004-05 தொடர்) காலக் கட்டத்தில் மாநிலத்தில் 10.3% என்ற "வலுவான உண்மைநிலை வளர்ச்சி பதிவானது", அதே சமயம் அகில இந்திய அளவிலான வளர்ச்சி 8.23% ஆகவே இருந்தது.

- இருப்பினும், அதன் சராசரி வளர்ச்சி விகிதம் ஆனது 2012-13 முதல் 2022-23 ஆம் ஆண்டு வரையிலான (2011-12 தொடர்) காலக் கட்டத்தில் 6.21% ஆகக் குறைந்துள்ளது என்ற நிலையில் இது அகில இந்திய அளவில் 5.73% ஆக இருந்தது.

## Studying growth

A look at the assumed growth and GSDP for various sub-sectors in 2024-25, based on two different scenarios



| Sub-sector | Scenario 1 Assumed growth (%) | Scenario 1 GSDP (₹ in crore) | Scenario 2 Assumed growth (%) | Scenario 2 GSDP (₹ in crore) |
|---|---|---|---|---|
| Agriculture & allied | 4.94 | 1,60,181 | 4.94 | 1,60,181 |
| Mining & quarrying | 2.29 | 5,440 | 1.29 | 5,360 |
| Manufacturing | 11.4 | 3,96,109 | 11.4 | 3,96,109 |
| Electricity, gas | 2.05 | 10,504 | 1.05 | 10,350 |
| Construction | 8.51 | 1,77,616 | 8.51 | 1,77,616 |
| Trade, repair, hotels | 7.18 | 1,65,941 | 7.18 | 1,65,941 |
| Transport, storage | 9.16 | 82,474 | 8.16 | 81,343 |
| Financial services | 9.23 | 1,00,310 | 8.23 | 98,935 |
| Real estate | 8.88 | 2,47,416 | 8.88 | 2,47,416 |
| Public administration | 4.82 | 35,873 | 3.82 | 35,361 |
| Other services | 11.49 | 1,43,248 | 10.49 | 1,41,324 |
| Taxes minus subsides | 11.86 | 2,02,168 | 11.86 | 2,02,168 |
| GSDP (Real) | 9.29 | 17,27,280 | 9.08 | 17,22,102 |


**GSDP: Gross State Domestic Product**

Note: The table has been prepared on the basis of two scenarios. In the first scenario, it is assumed that the growth rate of all the sub-sectors along with taxes minus subsidies will be 0.5 percentage points higher than that of 2022-23. In the second, only six major sub-sectors - Agriculture & allied, Manufacturing, Construction, Trade-repair-hotels, Real estate and Taxes minus subsides - will register a 0.5% higher growth while the rest will grow as in 2022-23.

## தமிழ்நாட்டில் குறைவான தனிநபர் வருமானம் கொண்ட மாவட்டங்கள்

- தமிழ்நாட்டில் 2019-20 ஆம் ஆண்டில் (2,36,783 ரூபாய்) இந்த மாநிலச் சராசரியை விட குறைவான தனிநபர் வருமானம் கொண்ட 19 மாவட்டங்கள் உள்ளன.
- மீதமுள்ள 13 மாவட்டங்களின் தனிநபர் வருமானம் தொடர்பான புள்ளிவிவரங்கள் இந்த மாநிலத்தின் சராசரியை விட அதிகமாக உள்ளன.
- சுமார் 3.64 லட்சம் தனிநபர் வருமானத்துடன் திருவள்ளூர் மாவட்டம் முதலிடத்திலும், ஈரோடு (3.57 லட்சம் ரூபாய்), கோவை (3.39 லட்சம் ரூபாய்) ஆகியவை அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.
- அந்த ஆண்டில் இந்த மாவட்டங்களில், தெலுங்கானா, ஹரியானா மற்றும் கர்நாடகா உட்பட முக்கிய இந்திய மாநிலங்களையும் விட தனிநபர் வருமானம் அதிகமாக இருந்தது.

- கடைசி இடங்களில் பெரம்பலூர் (ரூ. 1,07,731), திருவாரூர் (ரூ. 1,25,653), விழுப்புரம் (ரூ. 1,30,103) ஆகியவை உள்ளன.
- ஆனால் இந்த மாவட்டங்களின் நிலைகள் அதே ஆண்டில் அசாம், பீகார், உத்தரப் பிரதேசம், ஜார்க்கண்ட், மத்தியப் பிரதேசம் மற்றும் ஒடிசா ஆகியவற்றினை விட "அதிகமாக" இருந்தன.
- இருப்பினும், அவை அந்த ஆண்டிற்கான 1.32 லட்சம் என்ற அகில இந்திய மதிப்பினை விட குறைவாகக் கொண்டுள்ளன.





## தமிழ்நாடு 12 ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள் 2024

HR. SEC. SECOND YEAR EXAMINATION MARCH - 2024 - GROUP WISE PERFORMANCE

| GROUP | APPEARED | | | | PASSED | | | | PERCENTAGE | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | BOYS | GIRLS | T.G | TOTAL | BOYS | GIRLS | T.G | TOTAL | BOYS | GIRLS | T.G | TOTAL |
| SCIENCE | 216359 | 270601 | 1 | 486961 | 205662 | 263514 | 1 | 469177 | 95.06 | 97.38 | 100.00 | 96.35 |
| COMMERCE | 110590 | 118214 | 0 | 228804 | 99127 | 112418 | 0 | 211545 | 89.63 | 95.10 | 0.00 | 92.46 |
| ART | 4906 | 6679 | 0 | 11585 | 3909 | 6016 | 0 | 9925 | 79.68 | 90.07 | 0.00 | 85.67 |
| VOCATIONAL | 20310 | 12946 | 0 | 33256 | 16607 | 11942 | 0 | 28549 | 81.77 | 92.24 | 0.00 | 85.85 |
| TOTAL | 352165 | 408440 | 1 | 760606 | 325305 | 393890 | 1 | 719196 | 92.37 | 96.44 | 100.00 | 94.56 |

- இந்த ஆண்டு, தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இயக்குனரகம் (TNDGE) ஆனது, மார்ச் 01 முதல் மார்ச் 22 ஆம் தேதி வரை எட்டு லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கான உயர்நிலைக் கல்வி (HSE) பிளஸ் 2 தேர்வுகளை நடத்தியது.
- தமிழ்நாடு +2 தேர்வு எழுதும் மாணவர்களின் எண்ணிக்கையில் கணிசமான சரிவு ஏற்பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் 8,42,512 மாணவர்களும், 2020 ஆம் ஆண்டில் 7,79,931 மாணவர்களும், 2021 ஆம் ஆண்டில் 8,16,473 மாணவர்களும், 2022 ஆம் ஆண்டில் 8,06,277 மாணவர்களும் தேர்வு எழுதினர்.
- இறுதியாக, 2023 ஆம் ஆண்டில், தேர்வெழுதும் மாணவர்களின் எண்ணிக்கை 8,03,385 ஆகக் குறைந்துள்ளது.
- மொத்தம் 2478 பள்ளிகளில் 100 சதவீதம் தேர்ச்சி பதிவாகியுள்ளது.
- இவற்றில் 397 அரசுப் பள்ளிகள் ஆகும்.
- இந்த ஆண்டில் அறிவியல் பிரிவு மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் தேர்ச்சி பெற்று உள்ளனர் (96.35%).
- மொத்தம் 26,352 மாணவர்கள் ஏதேனும் ஒரு பாடத்திலாவது 100 மதிப்பெண்கள் பெற்று உள்ளனர்.
- தேர்ச்சி பெற்ற மாணவர்கள்: 3,25,305 (92.37%)
- தேர்ச்சி பெற்ற மாணவிகள்: 3,93,890 (96.44%)
- மொத்த தேர்ச்சி சதவீதம்: 94.56 சதவீதம்
- திருப்பூர் மாவட்டம் 97.45 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளது.

## பழவேற்காடு பறவைகள் சரணாலயத்தின் எல்லைகள்




- 13 வருவாய் கிராமங்களை உள்ளடக்கிய பழவேற்காடு (புலிகாட்) பறவைகள் சரணாலயத்தின் எல்லைகளை மறுமதிப்பீடு செய்ய தமிழக அரசு நடவடிக்கை மேற்

கொண்டுள்ளது.

- இது அதன் எல்லையிலிருந்து கிராமங்களை விலக்குவதன் மூலம் சரணாலயத்தின் சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலத்தைக் குறைக்கும்.
- தற்போதைய இயல்புநிலை சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலத்திற்குள் மேற் கொள்ளப் படும் துறைமுக விரிவாக்கத் திட்டம் மற்றும் தொழில்துறைப் பூங்கா ஆகியவை அதன் எதிர்கால செயல்பாடுகளை அச்சுறுத்துகின்றன.
- 720 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட இந்த ஏரியின் பெரும்பகுதி ஆந்திரப் பிரதேசத்திலும், 20 சதவீதத்திற்கும் குறைவான பகுதி தமிழ்நாட்டின் திருவள்ளூர் மாவட்டத்திலும் அமைந்துள்ளது.
- 1980 ஆம் ஆண்டில், 1972 ஆம் ஆண்டு வனவிலங்குகள் (பாதுகாப்பு) சட்டத்தின் 18வது பிரிவின் கீழ் இந்த பறவைகள் சரணாலயம் அறிவிக்கப்பட்டது.
- இருப்பினும், சரணாலயத்திற்குள் உள்ள பகுதியின் எல்லைகளைக் குறிப்பிடும் இறுதி அறிவிப்பு 26Aவது பிரிவின் கீழ் அறிவிக்கப்பட வேண்டும்.

## பொருளாதார வளர்ச்சி மற்றும் அரசுக் கடன் – தமிழ்நாடு




- பொருளாதார நிபுணர் C. ரங்கராஜன் மற்றும் சென்னை பொருளாதாரக் கல்லூரியைச் சேர்ந்த K.R. சண்முகம் ஆகியோர், மாநிலப் பொருளாதாரத்தின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய ஆய்வினை மேற்கொண்டனர்.
- தமிழ்நாட்டின் அரசுக் கடனின் வளர்ச்சி "எந்தவித பாதகமான பாதிப்பினையும் ஏற்படுத்த

வில்லை "சாதகமான நிலையிலும் இல்லை".

- இந்தத் தகவல் ஆனது பொதுக் கடன்-மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி விகிதம் உண்மையான பொருளாதார வளர்ச்சியில் எதிர்மறையான விளைவை ஏற்படுத்திய, ஆனால் "குறிப்பிடத்தக்க தாக்கமாக இல்லாத" 2005-06 முதல் 2022-23 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்தினைக் குறிப்பாக கொண்டு கண்டறியப்பட்டுள்ளது.
- இருப்பினும், எதிர்காலத்தில், "அதிக கடன் விகிதம் என்பது வளர்ச்சியை மோசமாகப் பாதிக்கலாம்" என்று எச்சரித்துள்ளது.
- "கடன்-மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி விகிதத்தில் உள்ள சரிவு வளர்ச்சியைத் தூண்டலாம்" என்பதையும் அவர்கள் கண்டறிந்துள்ளனர்.
- கடந்த சில ஆண்டுகளில் பதிவான விகிதத்தின் பாங்கினைப் பகுப்பாய்வு செய்தால், 2016-17 ஆம் ஆண்டில் இந்த விகிதம் 20 சதவீதத்தினைத் தாண்டியுள்ளது.
- 2017 ஆம் ஆண்டில் நிதிப் பொறுப்பு மற்றும் நிதிநிலை அறிக்கை மேலாண்மை (FRBM) மறு ஆய்வுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நிலையான நிலை இதுவாகும்.

## பத்தாம் வகுப்பு தேர்வு முடிவுகள்

- இந்த ஆண்டு பத்தாம் வகுப்பு மாநில தேர்வு வாரியத் தேர்வுகளில் 91.55% மாணக்கர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.
- அரியலூர் மாவட்டம் ஆனது 97.3% தேர்ச்சி பெற்று முதலிடத்திலும், சிவகங்கை மாவட்டம் 97% தேர்ச்சி பெற்று இரண்டாவது இடத்திலும், இராமநாதபுரம் மாவட்டம் 96.3% தேர்ச்சி பெற்று மூன்றாவது இடத்திலும் உள்ளன.
- இந்த ஆண்டு தேர்ச்சி சதவீதம் ஆனது கடந்த ஆண்டு பதிவான 91.39% தேர்ச்சி விகிதத்தினை சிறிய வித்தியாசத்தில் விஞ்சியுள்ளது.
- எனினும், கடந்த ஆண்டு 9,14,320 மாணவர்களாக பதிவான தேர்வெழுதிய மொத்த மாணவர்களின் எண்ணிக்கையானது இந்த ஆண்டு 8,94,260 மாணவர்களாக குறைந்து உள்ளது.
- 94.53% தேர்ச்சியுடன் மாணவிகள் மாணவர்களை விட அதிக தேர்ச்சி பெற்றுள்ளனர் என்ற நிலையில் மாணவர்கள் தேர்ச்சி 88.58% ஆக உள்ளது.
- இது தேர்ச்சி சதவீதத்தில் 5.85% வித்தியாசத்தைக் காட்டுகிறது.
- மாநிலத்தில் உள்ள 12,625 பள்ளிகளில் 4,105 பள்ளிகளும், 1,364 அரசுப் பள்ளிகளும் 100% தேர்ச்சியினைப் பதிவு செய்துள்ளன.
- கணிதத்தில் 20,691 மாணவர்களும், அறிவியலில் 5,104 மாணவர்களும் 100 மதிப்பெண் பெற்றுள்ளனர்.
- தமிழில் எட்டு பேர் மட்டுமே 100 மதிப்பெண் எடுத்துள்ள நிலையில் 415 பேர் ஆங்கில மொழியில் 100 மதிப்பெண் எடுத்துள்ளனர்.
- தமிழக மாநிலத்தில் தேர்வெழுதிய மொத்தம் 260 சிறைக் கைதிகளில் 228 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

| S.NO | DESCRIPTION | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|---|
| 1 | No. of Candidates appeared | 9,39,829 | 9,60,216 | 9,12,620 | 9,14,320 | 8,94,264 |
| 2 | Composition of School Candidates | | | | | |
| | a) Boys | 4,71,759 | 4,91,332 | 4,60,120 | 4,59,303 | 4,47,203 |
| | b) Girls | 4,68,070 | 4,68,883 | 4,52,499 | 4,55,017 | 4,47,061 |
| | c) Transgender | | 1 | 1 | | |
| 3 | Overall Percentage of Pass Among School Candidates | 100.00 % (9,39,829) | 100.00 % (9,60,216) | 90.07% (8,21,994) | 91.39% (8,35,614) | 91.55% (8,18,743) |
| 4 | Percentage of Pass among School Candidates | | | | | |
| | a) Boys | 100.00 % (4,71,759) | 100.00 % (4,91,332) | 85.83% (3,94,920) | 88.16% (4,04,904) | 88.58% (3,96,152) |
| | b) Girls | 100.00 % (4,68,070) | 100.00 % (4,68,883) | 94.38% (4,27,073) | 94.66% (4,30,710) | 94.53% (4,22,591) |
| | c) Transgender | | (100 %) 1 | (100 %) 1 | | |

## உயிரிழந்த உறுப்பு தானம் செய்தவர்களின் எண்ணிக்கை

**TN Records Highest Deceased Organ Donation In 2024**


Tamil Nadu CM MK Stalin's announcement to accord state honors to deceased donors has given an excellent result. In just four months, **the state has reached a record of 102 deceased donors this year while it recorded a total of 178 donors in 2023 and 156 in 2022.** According to Health Department this is the highest number ever registered since the transplantation programme was launched. **The announcement of state honors has created a huge awareness among the public and many are coming forward for donations,** say officials.

- நான்கு மாதங்களில், இந்த ஆண்டு தமிழகத்தில் சாதனை அளவிலான உடல் உறுப்பு தான எண்ணிக்கை பதிவாகியுள்ளது.
- 130 நாட்களில் (2024 ஆம் ஆண்டு மே 09 ஆம் தேதியன்று நிலவரப்படி), மாநிலத்தில் உயிரிழந்த உடல் உறுப்பு தானம் செய்பவர்களின் எண்ணிக்கை 100 என்ற அளவைத் தாண்டி உள்ளது.
- இந்த ஆண்டு இது வரை 102 உயிரிழந்த நபர்கள் உடல் உறுப்பு தானம் செய்துள்ளனர்.
- 2023 ஆம் ஆண்டில் 178 பேரும் மற்றும் 2022 ஆம் ஆண்டில் 156 பேரும் உறுப்பு தானம் செய்தனர்.

- இவர்களிடமிருந்து மொத்தம் 324 முக்கிய உறுப்புகளும் மற்றும் 271 திசுக்களும் பெறப் பட்டன.
- இந்த ஆண்டும் இரண்டு கை மாற்று அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப் பட்டன.
- 2023 ஆம் ஆண்டில் 178 உறுப்பு தானம் செய்பவர்களிடமிருந்து 1,000 உறுப்புகள் பெறப் பட்டன.

## மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 2023-24


- 2023-24 ஆம் நிதியாண்டில் தமிழகத்தின் சொந்த வரி வருவாய் ஆனது, 1,52,030.77 கோடி ரூபாயாக இருந்தது.
- 2022-23 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளில் 1,50,222.75 கோடியாக இருந்த மாநிலத்தின் சொந்த வரி வருவாய் (SOTR) ஆனது சிறிதளவு அதிகரித்துள்ளது.
- தமிழ்நாட்டின் மொத்த வருவாய் வரவுகளில் SOTR 75.6% பங்கினை அளிக்கிறது.
- SOTR மதிப்பீடுகள் ஆனது, 1,81,182 கோடி ரூபாய் என்ற ஆரம்பக்கட்ட மதிப்பீட்டில் இருந்து 2023-24 ஆம் ஆண்டில் 1,70,147 கோடி ரூபாயாக மாற்றப்பட்டது.
- SOTR வருவாய்களில், 2022-23 ஆம் ஆண்டில் 53,822.72 கோடி ரூபாயிலிருந்த மாநில சரக்கு மற்றும் சேவை வரி (SGST) ஆனது, 2023-24 ஆம் ஆண்டில் சுமார் 15.11% அதிகரித்து 61,960.29 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டில் 17,559.89 கோடி ரூபாயாக இருந்த பத்திரங்கள் மற்றும் பதிவுக் கட்டணங்கள் மூலம் பெறப்பட்ட மாநில அரசின் வருவாய் ஆனது 2023-24 ஆம் ஆண்டில் 8.3% அதிகரித்து 19,013.36 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டில் 247.48 கோடி ரூபாயாக இருந்த நில வருவாய் ஆனது 2023-24 ஆம் ஆண்டில் 255.87 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.




- 2022-23 ஆம் ஆண்டில் 59,143.52 கோடி ரூபாயாக இருந்த விற்பனை, வர்த்தகம் போன்றவற்றின் மீதான வரிகள் (பெட்ரோல் மற்றும் டீசல் மற்றும் மதுபானங்கள் மீதான மதிப்புக் கூட்டு வரியும் அடங்கும்) மூலமான வருமானம் ஆனது 2023-24 ஆம் ஆண்டில் 60,026.96 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

- ❖ 10422.61 கோடியாக இருந்த மாநில கலால் வரிகள் 2023-24 ஆம் ஆண்டில் சுமார் 10,774.29 கோடி ரூபாயாக அதிகரித்தது.
- ❖ இவற்றையும் சேர்த்து, 2023-24 ஆம் ஆண்டில் மாநிலத்தின் மொத்த வருவாய் வரவுகள் 2,62,382.45 கோடி ரூபாயாக இருந்தது.
- ❖ 2023-24 ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய் வரவு மதிப்பீடு சுமார் 2,72,576.80 கோடி ரூபாயாக திருத்தியமைக்கப்பட்டது.

## நிலச்சரிவைத் தடுக்கப் பசுமைத் தீர்வு




- ❖ மாநில நெடுஞ்சாலைத் துறையானது, நீலகிரியின் முக்கிய சாலைகளைச் சுற்றியுள்ள சரிவுகளில் மண் அரிப்பைத் தடுக்க, ஐந்து இடங்களில் புற்களை வளர்த்து அதை வளப் படுத்தும் பணியை மேற்கொண்டு வருகிறது.
- ❖ இந்தத் திட்டம், 'மண் இறுக்கமாக்கல் மற்றும் நீர்விதைப்பு முறையைப் பயன்படுத்திச் சரிவை நிலைப்படுத்தல்' என அழைக்கப்படுகிறது.
- ❖ மண் இறுக்கமாக்குதல் என்பது ஒரு புவி தொழில்நுட்பப் பொறியியல் நுட்பமாகும், இது ஒரு குறிப்பிட்ட பகுதியில் வலுவூட்டும் கூறுகளை மண்ணிலிடுவதை உள்ளடக்கிய ஒரு தொழில்நுட்பமாகும்.
- ❖ இந்தத் தொழில்நுட்ப முறையானது கேட்டி, கட்டபெட்டு, பேரார், குடா மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப் படுகிறது.
- ❖ இந்த முறையானது நிலச்சரிவுகளைத் தடுத்து, நீலகிரியில் சாலைகள் போன்ற நேரான குறுகிய உள்கட்டமைப்புகளின் பாதிப்பைக் குறைக்க உதவுகிறது.

## தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கான ஊதிய விகிதம்

- ❖ 2024-25 ஆம் ஆண்டிற்கான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கு (MGNREGS) 1,229 கோடி ரூபாயை வழங்க தமிழக அரசு சமீபத்தில் அனுமதி வழங்கியுள்ளது.

- இந்தத் திட்டத்திற்கான மத்திய அரசின் 75% பங்கு ஆனது 921 கோடி ரூபாய் (பொருள் கூறு), 307 கோடி ரூபாய் என்பது 2024-25 ஆம் ஆண்டிற்கான மாநில அரசின் 25% பங்காகும்.
- இந்திய அரசு ஆனது இந்த ஆண்டின் தொடக்கத்தில் MGNREGS திட்டத்தின் கீழ் ஒரு தொழிலாளிக்கு ஒரு நாளைக்கு 25 ரூபாய் ஊதியம் ஆக உயர்த்தியது.
- இந்த ஆண்டு மார்ச் மாதத்தில், 2024-25 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டிற்கான தொழிலாளர் வரவு செலவுத் திட்டத்தின் கீழ் "20 கோடி பணி நாட்களுக்கு" மத்திய அரசின் அதிகாரமளிக்கப்பட்ட குழு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்திய அரசாங்கம் ஆனது அந்த மாதம் தமிழ்நாட்டிலுள்ள தொழிலாளர்களுக்கு MGNREGS திட்டத்தின் கீழ் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 319 ரூபாய் ஊதியம் வழங்க ஒப்புதல் அளித்தது.
- MGNREGS திட்டத்திற்கான நிதி மூன்று கூறுகளைக் கொண்டுள்ளது
    - தொழில் திறன் சாரா தொழிலாளர்களுக்கான ஊதியம் (100% மத்திய அரசு நிதி),
    - குடிமைச் சேவைப் பணிகளுக்கான பொருட்கள் (75% மத்திய அரசு மற்றும் 25% மாநில அரசு) மற்றும்
    - சம்பளம் மற்றும் இதரச் செலவினங்களுக்காக (100% மத்திய அரசு நிதி).


**MGNREGA WAGES FOR UNSKILLED MANUAL WORKERS**

| States | WAGES IN 2023 | REVISED WAGES IN 2024 | CHANGE IN % |
|---|---|---|---|
| Andhra Pradesh | 272 | 300 | 10.2% |
| Assam | 238 | 249 | 2.9% |
| Bihar | 228 | 245 | 7.4% |
| Chhattisgarh | 221 | 243 | 9.9% |
| Gujarat | 256 | 280 | 9.3% |
| Goa | 322 | 356 | 10.5% |
| Haryana | 357 | 374 | 4.7% |
| J&K | 244 | 259 | 6.1% |
| Jharkhand | 228 | 245 | 7.4% |
| Karnataka | 316 | 349 | 10.4% |
| Kerala | 333 | 346 | 3.9% |
| Madhya Pradesh | 221 | 243 | 9.9% |
| Maharashtra | 273 | 297 | 8.7% |
| Odisha | 237 | 254 | 7.1% |
| Punjab | 303 | 322 | 6.2% |
| Rajasthan | 255 | 266 | 4.3% |
| Tamil Nadu | 294 | 319 | 8.5% |
| Telangana | 272 | 300 | 10.2% |
| Uttar Pradesh | 230 | 237 | 3% |
| Uttarakhand | 230 | 237 | 3% |
| West Bengal | 237 | 250 | 5.4% |

Wages in rupees, States

## குறுவை சாகுபடியின் பரவல் 2024

- காவிரி டெல்டா பகுதியில், கடந்த ஐந்து ஆண்டுகளில், குறுவை சாகுபடி பருவத்திற்கான சராசரி பரப்பளவு அதிகரித்துள்ளது.
- கடந்த ஐந்தாண்டுகளில் குறுவை சாகுபடியின் பரவல் இயல்பை விட 40% அதிகரித்து உள்ளது.
- மாநில வேளாண்மைத் துறையினால் மதிப்பிடப்பட்ட வழக்கமான பருவ சாகுபடியின் பரவல் நிலப்பரப்பு டெல்டா பகுதிக்கு சுமார் 3.24 லட்சம் ஏக்கர் ஆகும்.
- இது தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, அரியலூர், திருச்சி மற்றும் கடலூர் மாவட்டங்களை உள்ளடக்கியது.
- இருப்பினும், கடந்த ஐந்தாண்டுகளின் சராசரியைக் கணக்கிட்டால், இந்த ஆண்டு எண்ணிக்கை சுமார் 40% அதிகரிப்புடன் 4.57 லட்சம் ஏக்கராக உள்ளது.




## 2024 ஆம் ஆண்டில் வண்ணத்துப்பூச்சிகளின் இடம்பெயர்வு

- ❖ தமிழ்நாடு மாநிலத்தில், இந்த ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடர்களில் இருந்து சமவெளி மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளுக்கு வண்ணத்துப் பூச்சிகள் அதிக அளவில் இடம் பெயர்ந்துள்ளன.
- ❖ அதைத் தொடர்ந்து கோடை மாதத்தில் மாநிலம் முழுவதும் பெய்த பருவமழைக்கு முந்தைய மழைப் பொழிவு ஏற்பட்டது.
- ❖ 2013 ஆம் ஆண்டு முதல் இயற்கை மற்றும் வண்ணத்துப்பூச்சி சங்கத்தின் கண்காணிப்புகளின் படி, 2016 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தில் வறட்சி போன்ற சூழ்நிலைகள் ஏற்பட்ட போது வண்ணத்துப்பூச்சிகள் இடம்பெயர்வு பதிவாகவில்லை.
- ❖ 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அவற்றின் இடம்பெயர்வு மேம்பட்டிருந்தாலும், 2019 ஆம் ஆண்டில் இது குறைந்துள்ளது.
- ❖ தென்மேற்குப் பருவமழைக்கு முன்னதாக பதிவான இந்த ஆண்டு இடம்பெயர்வானது கடந்த சில ஆண்டுகளில் இருந்ததை விட ஆரோக்கியமான ஒன்றாக இருப்பதாக இயற்கை மற்றும் வண்ணத்துப்பூச்சி சங்கம் (TNBS) கருதுகிறது.


## நெல் கொள்முதல் 2023-24

| Season | Quantity procured (tonnes) | Payment under MSP (₹ in crore) | Farmers benefitted by MSP |
|---|---|---|---|
| **2023-24** | | | |
| Kharif | 22,09,517.17 | 5,207.82 | 2,91,745 |
| Rabi | 5,64,079.76 | 1,111.83 | 57,642 |
| **TOTAL** | 27,73,596.93 | 6,319.65 | |

- ❖ தமிழ்நாடு அரசானது, 2023-24 ஆம் ஆண்டின் போது, முந்தைய ஆண்டை விட, 17 லட்சம் டன் நெல் குறைவாக கொள்முதல் செய்துள்ளது.

- 2022-23 ஆம் ஆண்டில் நெல் கொள்முதல் அளவானது 44.26 லட்சம் டன்களாக இருந்தது.
- அடுத்த ஆண்டு, இது சுமார் 27.74 லட்சம் டன்களாக இருந்தது என்ற நிலையில் இது மதிப்பிடப்பட்ட எண்ணிக்கையை விட சுமார் ஏழு லட்சம் டன்கள் குறைவாக இருந்தது.


## 2வது ஒத்திசைக்கப்பட்ட யானைகள் மதிப்பீடு




- தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இரண்டாவது ஒத்திசைவு யானை மதிப்பீடு தொடங்கியது.
- தமிழகத்தில் இது 26 வனப் பிரிவுகளிலும், 697 தொகுதிகளிலும் நடத்தப்படுகிறது.
- அண்டை மாநிலங்களில் உள்ள எண்ணிக்கைப் பதிவுகள் பற்றிய சிறந்த தகவல்களை வழங்குவதற்காக தென் மாநிலங்களின் தொகுப்பு அறிக்கைகள் தயாரிக்கப்படும்.
- கடந்த ஆண்டு, தமிழகத்தில் 2,961 யானைகள் இருப்பதாகப் பதிவாகியுள்ளன.

## ஆறு புதிய மருத்துவக் கல்லூரிகள்

- தேசிய மருத்துவ ஆணையம் ஆனது, தமிழகத்தில் 6 மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்க ஒப்புதல் அளித்துள்ளது.
- தென்காசி, மயிலாடுதுறை, பெரம்பலூர், அரக்கோணம், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் ஆகிய 6 மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகள் அமைக்க அங்கீகாரம் வழங்கப் பட்டுள்ளது.
- முன்னதாக 2022 ஆம் ஆண்டில், தமிழ்நாடு மாநிலத்தில் 11 புதிய மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்பட்டன.
- 8 கோடிக்கும் சற்று அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட தமிழ்நாட்டில் 70க்கும் மேற்பட்ட மருத்துவக் கல்லூரிகளில் 10,000-க்கும் மேற்பட்ட இடங்களும் உள்ளன.




## PM-KUSUM திட்டம்




- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோகக் கழகம் (TANGEDCO) ஆனது PM - KUSUM திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு புதிய வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- சூரிய சக்தியில் இயங்கும் நீரேற்றி அமைப்புகளை நிறுவ விவசாயிகளை மிக நன்கு ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும்.
- மாநிலத்தில் 5,000 வேளாண் பயன்பாட்டு நீரேற்றி அமைப்புகளை நிறுவும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

- மாநில மற்றும் மத்திய அரசுகள் இணைந்து இந்தத் திட்டத்திற்கான செலவில் 60 சதவீதத்தினை மானியமாக வழங்கும், மீதமுள்ள 40% செலவை விவசாயி ஏற்க வேண்டும்.
- PM - KUSUM என்பது பிரதான் மந்திரி கிசான் உர்ஜா சுரக்சா ஏவம் உத்தன் மஹாபியன் என்பதாகும்.

## மாநிலத்தின் அரிசி விளைச்சல் 2024

### Dip in performance

A former official of the State Agriculture Department attributes the drop in the yield rate to crop damage caused due to heavy rainfall in districts such as Tiruvarur and Ramanathapuram

**Rice cultivation details of various States**

| State | 2022-23 | | | 2022-23 | | | 2023-24* | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Area in lakh ha | Production in lakh tonnes | Yield in tonnes/ha | Area in lakh ha | Production in lakh tonnes | Yield in tonnes/ha | Area in lakh ha | Production in lakh tonnes | Yield in tonnes/ha |
| Andhra Pradesh | 22.89 | 77.64 | 3.39 | 21.29 | 79.42 | 3.73 | 19.7 | 76.76 | 3.9 |
| Karnataka | 13.98 | 43.18 | 3.09 | 13.28 | 42.8 | 3.22 | 8.99 | 25.5 | 2.84 |
| Kerala | 1.96 | 4.87 | 2.49 | 1.92 | 5.96 | 3.1 | 1.17 | 2.54 | 2.17 |
| **Tamil Nadu** | **22.17** | **79.07** | **3.57** | **21.59** | **75.57** | **3.5** | **18.43** | **42.63** | **2.31** |
| Telangana | 36.55 | 124.1 | 3.4 | 46.62 | 158.77 | 3.4 | 45.25 | 160.25 | 3.54 |
| All India (average) | 462.79 | 1,294.71 | 2.8 | 478.32 | 1,357.55 | 2.84 | 451.52 | 1,236.15 | 2.74 |

*Data for the year 2023-24 is based on 2nd Advance Estimates*

- 2023-24 ஆம் ஆண்டில் காரிஃப் மற்றும் ராபி ஆகிய இரு சாகுபடிப் பருவங்களில் தமிழகத்தின் நெல் விளைச்சல் ஆனது தேசிய சராசரியை விட குறைவாக உள்ளது.
- மாநிலத்தின் அந்த ஆண்டிற்கான மகசூல் ஆனது, ஹெக்டேருக்கு 2.31 டன்னாக உள்ள அதே சமயம் அகில இந்திய சராசரியானது ஹெக்டேருக்கு 2.74 டன்கள் ஆக உள்ளது.
- அகில இந்திய அளவில் தமிழக மாநிலத்தின் மகசூல் அளவானது முந்தைய இரண்டு ஆண்டுகளில் இருந்த அதிகபட்ச அளவை விட அதிகமாகும்.
- மாநிலம் நெல் விளைச்சல் அல்லது உற்பத்தித் திறனையும், மத்திய ஆணையம் ஆனது அரிசி உற்பத்தியினையும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது.
- வரையறைகளின்படி, 100 கிலோ நெல்லில் 67 கிலோ அரிசி அல்லது 68 கிலோ புழுங்கல் அரிசி உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## சேலம் மத்திய சிறை


- முன்னதாக வாடிக்கையான குற்றவாளிகளுக்கான இடமாக நியமிக்கப்பட்ட சேலம் மத்தியச் சிறையானது, தற்போது சாதாரண சிறைச்சாலையாக மாற்றப்பட்டுள்ளது.
- 1862 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களால் கட்டமைக்கப்பட்ட சேலம் மத்திய சிறைச் சாலையானது 1934 ஆம் ஆண்டு இளம் வயது கைதிகளை தங்க வைப்பதற்காக என்று கட்டமைக்கப் பட்ட ஒரு பின் இணைப்புப் பகுதியினை உள்ளடக்கியதாகும்.
- 162 ஆண்டுகளுக்குப் பிறகு, உள்துறை அமைச்சகம் ஆனது சேலம் மத்தியச் சிறையை சாதாரண சிறைச்சாலையாக மறுவகைப்படுத்தியது.
- சேலம் மத்தியச் சிறைச்சாலையில் பல தொழிற்சாலைகள் மற்றும் ஒரு திறந்தவெளி சிறை (பண்ணை வேலைகள் மேற்கொள்ளும் வகையிலான சிறை) உள்ளது.

# தேசியச் செய்திகள்

## அங்கீகரிக்கப்பட்ட பொருளாதாரச் சேவை வழங்குநர் (AEO) நிலை

- ❖ இரத்தினம் மற்றும் நகைத் துறைக்கு அங்கீகரிக்கப்பட்ட பொருளாதாரச் சேவை வழங்குநர் (AEO) அந்தஸ்தை மத்திய அரசு விரிவுபடுத்தியுள்ளது.
- ❖ இரத்தினம் மற்றும் நகைத் துறை ஏற்றுமதி மேம்பாட்டுச் சபை (GJEPC) என்பது இந்தத் துறையின் உயர் நிலை அமைப்பாகும்.
- ❖ AEO என்பது உலகளாவிய வர்த்தகத்தைப் பாதுகாக்கப்பதற்கும் எளிதாக்கச் செய்வதற்குமான உலக சுங்க அமைப்பின் (WCO) SAFE தரநிலைக் கட்டமைப்பின் கீழ் ஒரு திட்டமாகும்.
- ❖ சர்வதேச விநியோகச் சங்கிலிப் பாதுகாப்பை மேம்படுத்துவதும், சட்டப்பூர்வமான பொருட்களின் வர்த்தகத்தினை எளிதாக்குவதும் இதன் நோக்கமாகும்.


## EVM தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு




- ❖ மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் (EVM) தரவுகளை வாக்காளர் சரிபார்க்கக் கூடிய காகிதத் தணிக்கைச் சோதனை (VVPAT) பதிவுகளுடன் கூடிய முழுமையான மறு சரிபார்ப்பு முறையினை கோரும் மனுக்களை உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ளது.
- ❖ மேலும், காகித வாக்குச் சீட்டுகள் மூலமான முந்தைய தேர்தல் முறையினைப் பயன்படுத்தும் நடைமுறைக்கு மாற உத்தரவிடவும் மறுப்பு தெரிவித்துள்ளது.
- ❖ தற்போது 5% EVM-VVPAT எண்ணிக்கைகள் மட்டுமே எந்தவொரு சட்டமன்றத் தொகுதியிலும் தோராயமாக சரிபார்க்கப் படுகின்றன.
- ❖ தேர்தல் முடிவுகள் குறித்து சந்தேகங்கள் உள்ள வேட்பாளர்களுக்கு மட்டும் புதிய சரி பார்ப்புகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.

- இயந்திரங்களில் உள்ள தரவை 45 நாட்களுக்குப் பாதுகாப்பதற்கான வழிகாட்டுதல் மற்றும் மறு சரிபார்ப்புக்கான செயல்முறை ஆகியவை தேர்தல் செயல்முறையினை வலுப்படுத்தும் என்றும் குறைகளை நிவர்த்தி செய்யும் என்றும் கருதப் படுகிறது.
- கட்சிகளுக்கென்று பிரத்தியேக பட்டைக் குறியீடுகளை (QR) உருவாக்குவதற்கான ஒரு ஆலோசனையையும் இது வழங்கியது.


## குறைந்து வரும் சூரியக் கதிர்வீச்சின் அளவு




- சூரியசக்தி உற்பத்தி தகடுகள் மூலம் பொருளாதார ரீதியாக மின்சாரமாக மாற்றக் கூடிய சூரியக் கதிர்வீச்சின் அளவு ஆனது இந்தியாவில் பல இடங்களில் "ஆபத்தான நிலையில் குறைந்து வரும் போக்கை" கொண்டுள்ளது.
- உலகளாவிய சூரியக் கதிர்வீச்சு ஆனது, பொதுவாக 1981-2006 வரையிலான காலக் கட்டத்தில் இருந்து குறைந்து வரும் போக்கைக் காட்டியுள்ளது.
- 1981-2006 காலக் கட்டத்துடன் ஒப்பிடும்போது 1971-2000 காலக் கட்டத்தில் சூரியக் கதிர் வீச்சின் கிடைக்கப் பெறும் அளவு குறைந்திருந்தது.
- இருப்பினும், ஒட்டு மொத்தமாக, 2001 ஆம் ஆண்டிற்குப் பிறகு, சரியான காரணங்கள் தெளிவாகத் தெரியாத வகையில் இந்தப் போக்கில் மாறுதல் ஏற்பட்டது.
- தூசிப் படலங்களின் அளவு அதிகரித்தல் மற்றும் மேகமூட்டம் ஆகியவை இதற்கான காரணிகளாகக் கூறப்பட்டாலும், மிகவும் திறம் மிக்க சூரியசக்தி மின் தகடுகளை நிறுவுவது இதை எதிர்கொள்ள உதவும்.
- தூசிப்படலங்கள் ஆனது சூரிய ஒளியை உறிஞ்சி நிலப்பரப்பில் விழாமல் திசை திருப்புகின்றன என்பதோடு மேலும் அவை அடர்த்தியான மேகங்களை உருவாக்கி, மீண்டும் சூரிய ஒளியானது புவியின் நிலப்பரப்பில் விழாமல் தடுக்கின்றன.
- சூரியசக்தி மின் தகடுகளின் செயல்திறன் ஆனது, அவற்றின் மீது படும் சூரிய ஒளியின் அளவைப் பொறுத்தே அமைகிறது.
- இந்தியாவின் மிகப்பெரிய சூரியசக்தி மின் உற்பத்தி பூங்காக்கள் வடமேற்கில், குறிப்பாக குஜராத் மற்றும் ராஜஸ்தான் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ளன.
- இந்தியாவின் நிறுவப்பட்ட சூரிய சக்தி திறன் ஆனது, சுமார் 81 GW (1 GW என்பது 1,000 மெகா வாட்) அல்லது மொத்த நிறுவப்பட்ட மின்சாரத்தில் தோராயமாக 17% ஆகும்.

## ISSAR 2023 அறிக்கை

- இஸ்ரோவின், தற்போதைய விண்வெளி சூழ்நிலைகள் பற்றிய வருடாந்திர மதிப்பீடு ஆனது இந்திய விண்வெளி சூழ்நிலை மதிப்பீட்டு அறிக்கை (ISSAR) என்ற வடிவத்தில் தொகுக்கப்பட்டுள்ளது.
- விண்வெளியில் இயங்கும் குறுங்கோள்கள், வால் நட்சத்திரங்கள் மற்றும் விண்கற்கள், ஆற்றல் மற்றும் துகள்களின் ஓட்டம் மற்றும் செயற்கை விண்வெளிப் பொருள்கள் போன்ற இயற்கையான அமைப்புகளான விண்வெளிச் சொத்துக்கள் பல்வேறு சுற்றுச்சூழல் அபாயங்களால் பாதிக்கப்படக்கூடியவையாக உள்ளன.
- இந்த அறிக்கையின்படி, அமெரிக்க விண்வெளிக் கட்டுப்பாட்டு அமைப்பிலிருந்து, சுமார் 1,37,565 விண்வெளி பொருட்கள் பாதிப்பை ஏற்படுத்தும் எனும் எச்சரிக்கைகள் பெறப்பட்டுள்ளன.
- மேலும், ஒரு கிலோமீட்டர் தொலைவிற்குள் நெருங்கிய அணுகுமுறைகளுக்கான மொத்தம் 3,033 விண்வெளி அமைப்புகள் புவியை நெருங்கி வர உள்ளதாக கூறப்படும் எச்சரிக்கைகள் இஸ்ரோ செயற்கைக்கோள்களால் வழங்கப்பட்டன.
- இந்திய விண்வெளி செயல்பாடுகளின் சகாப்தத்தின் தொடக்கத்தில் இருந்து, 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31ம் தேதி வரையில் தனியார் நிறுவனங்கள்/கல்வி நிறுவனங்களால் மொத்தம் 127 இந்தியச் செயற்கைக்கோள்கள் விண்ணில் ஏவப்பட்டு உள்ளன.
- 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதியன்று நிலவரத்தின் படி, செயல்பாட்டில் உள்ள அரசுக்குச் சொந்தமான செயற்கைக்கோள்களின் எண்ணிக்கை புவி தாழ்மட்டச் சுற்றுப் பாதையில் (Low Earth Orbit) 22 மற்றும் புவி ஒத்திசைவு சுற்றுப்பாதையில் (Geo-synchronous Earth Orbit) 29 ஆக உள்ளது.
- மேலும், சந்திரயான்-2 சுற்றுக்கலம், ஆதித்யா-L1 மற்றும் சந்திரயான்-3 கலத்தின் உந்து விசை அமைப்பு ஆகிய மூன்று இந்திய விண்வெளி ஆய்வுக் கலங்களும் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் செயல்பாட்டில் இருந்தன.
- 2023 ஆம் ஆண்டின் இறுதி வரை மொத்தம் 21 இந்தியச் செயற்கைக்கோள்கள் மீண்டும் வளிமண்டலத்தில் செலுத்தப்பட்டன.
- 2023 ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 8 இந்தியச் செயற்கைக்கோள்கள் மீண்டும் வளி மண்டலத்தில் செலுத்தப்பட்டன.
- இந்திய நாட்டினால் விண்ணில் ஏவப்பட்டவற்றுள் மொத்தம் 82 ஏவுகல பாகங்கள் 2023 ஆம் ஆண்டு வரை சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தப் பட்டன.



## காங்கேசன்துறை துறைமுகத்தில் இந்தியாவின் பங்கு

- காங்கேசன்துறை துறைமுகத்தின் புனரமைப்புத் திட்டத்திற்கான முழுச் செலவையும் இந்தியா வழங்க ஒப்புக் கொண்டதையடுத்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அமைச்சரவை தீர்மானித்துள்ளது.
- காங்கேசன்துறை துறைமுகம் அல்லது KKS துறைமுகமானது, இலங்கையின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ளது.
- தமிழ்நாட்டின் நாகப்பட்டினத்தினை யாழ்ப்பாணத்திற்கு அருகிலுள்ள காங்கேசன் துறை துறைமுகத்துடன் இணைக்கும் நேரடி பயணிகள் கப்பல் சேவையானது சுமார் மூன்றரை மணி நேரத்தில் 111 கி.மீ. (60 கடல் மைல்) தொலைவினைக் கடக்கிறது.




## இந்தோனேசியாவுடனான 75 ஆண்டுகால அரசுமுறை உறவு




- இந்தியாவிற்கும் இந்தோனேசியாவிற்கும் இடையிலான அரசுமுறை உறவுகள் 1950 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இந்தோனேசிய அதிபரின் வருகை மற்றும் 1951 ஆம் ஆண்டில் நட்பு ஒப்பந்த கையெழுத்தின் மூலம் இது தொடங்கப்பட்டது.
- அணிசேரா இயக்கத்தின் வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வான 1955 ஆம் ஆண்டு பாண்டுங் மாநாட்டில் இரு நாடுகளும் முக்கியப் பங்கேற்பாளர்களாக இருந்தன.

- அவை 2005 ஆம் ஆண்டில் ஒரு உத்திசார் கூட்டாண்மையை நிறுவி, பின்னர் அதனை ஒரு விரிவான உத்திசார் கூட்டாண்மையாக மேம்படுத்தின.
- இந்தியாவின் கிழக்கத்திய நாடுகளுக்கு உகந்த கொள்கை வகுப்பு (ஆக்ட் ஈஸ்ட்) கொள்கையில் இந்தோனேஷியா முக்கியப் பங்குதாரராக உள்ளது.

## எதிர்பாராத விதமான சூழல்களால் எளிதில் ஏற்படக் கூடிய சேதத்திற்கான இழப்பீட்டு விதி


- 'எதிர்பாராத விதமான சூழல்களால் எளிதில் ஏற்படக் கூடிய சேதத்திற்கான இழப்பீட்டு விதி - முட்டை ஓடு போன்ற மண்டை ஓடு' என்ற சட்டக் கோட்பாடு தவறாகப் பயன்படுத்தப் பட்டதைக் கண்டறிந்து, மருத்துவம் சார்ந்த அலட்சியச் செயல்பாடு வழக்கில் மாவட்ட நுகர்வோர் மன்றம் வழங்கிய 5 லட்ச ரூபாய் இழப்பீட்டை உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது.
- எதிர்பாராத விதமான சூழல்களால் எளிதில் ஏற்படக் கூடிய சேதத்திற்கான இழப்பீடு விதி என்பது உரிமையியல் வழக்குகளில் பயன்படுத்தப்படும் ஒரு பொதுவான சட்டக் கொள்கையாகும்.
- அடிப்படையில், காயமடைந்த நபரின் தனிப்பட்ட உடல் நிலைமைகள் மற்றும் அதனைத் தீவிரமடைய செய்யக்கூடிய அனைத்துச் செயல்களுக்கும் அதன் காயங்களுக்கும் அறிந்தே செய்யப்படவில்லை என்றாலும் அதற்குக் குற்றவாளியே பொறுப்பாவார்.
- எளிமையாகச் சொன்னால், பாதிக்கப்பட்டவருக்கு குறிப்பாக மென்மையான மண்டை ஓடு அல்லது 'முட்டை ஓடு' போன்ற மண்டை ஓடு இருந்தாலும், ஒரு நபரின் தலையில் அடிக்கும் போது ஏற்படும் காயங்களுக்கு பிரதிவாதியே பொறுப்பேற்க வேண்டும்.




## ஷக்ஸ்காம் பள்ளத்தாக்கு

- ஷக்ஸ்காம் பள்ளத்தாக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானப் பணிகள் தொடர்பாக சீனாவின் மீது இந்தியா வலுவான புகார் அளித்துள்ளது.
- இது கள நிலவரத்தை மாற்றுவதற்கான ஒரு "சட்டவிரோத" முயற்சியாக விவரிக்கப் படுகிறது.
- ஷக்ஸ்காம் பள்ளத்தாக்கு, உத்திசார் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ள, தற்போது பாகிஸ்தான் நாட்டினால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட காஷ்மீரின் (PoK) ஓர் அங்கமாக விளங்கும் ஒரு பகுதியாகும்.
- ஷக்ஸ்காம் பள்ளத்தாக்கு அல்லது டிரான்ஸ் காரகோரம் பாதையானது, PoK பகுதியின் ஹன்சா-கில்கிட் பிராந்தியத்தின் ஒரு பகுதியாகும்.


- ❖ இதன் வடக்குப் பகுதி சீன மக்கள் குடியரசின் சின்ஜியாங் மாகாணத்தினால் சூழப் பட்டுள்ளது.
- ❖ PoK பகுதியின் வடக்குப் பகுதிகள் அதன் மேற்கு மற்றும் தெற்கிலும், சியாச்சின் பனிப்பாறை பகுதி கிழக்கிலும் உள்ளன.
- ❖ 1963 ஆம் ஆண்டில், பாகிஸ்தான் தனது எல்லைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பெய்ஜிங்குடன் ஒரு எல்லை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதையடுத்து, ஷக்ஸ்காம் பள்ளத்தாக்கைச் சீனாவிற்கு வழங்கியது.
- ❖ 1963 ஆம் ஆண்டின் சீனா-பாகிஸ்தான் எல்லை ஒப்பந்தத்தினை இந்தியா ஒருபோதும் ஏற்கவில்லை என்ற நிலையில் இந்த ஒப்பந்தத்தின் கீழ் இந்தப் பகுதியை பாகிஸ்தான் சீனாவிற்கு சட்டவிரோதமான முறையில் வழங்க முயன்றது.





## இந்தியாவின் கடலோரப் பகுதிகளில் சீறும் கடல் அலைகள்

- ❖ குவிந்து எழும் (சீறும்) கடல் அலைகள் எனப்படும் உயரமான கடல் அலைகள் கடலோர மாநிலங்களை தாக்கக் கூடும் என்று INCOIS கணித்துள்ளது.
- ❖ மார்ச் மாதத்தில், கேரளாவின் பல பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட நிலையில், இதில் ஆலப்புழா, கொல்லம் மற்றும் திருவனந்தபுரம் மாவட்டங்கள் மிக மோசமாகப் பாதிக்கப் பட்டன.
- ❖ இத்தகைய வெள்ள நிகழ்வுகள் கேரளாவில் கள்ளக்கடல் என்று அழைக்கப் படுகின்றன.
- ❖ இத்தகையப் புயல்களின் போது, காற்றில் இருந்து தண்ணீருக்கு மிகப்பெரிய ஆற்றல் பரிமாற்றம் நடைபெறுவதால், மிக உயர்ந்த அலைகள் உருவாக வழிவகுக்கிறது.
- ❖ இத்தகைய அலைகள் புயலின் மையப் பகுதியில் இருந்து கரையைத் தாக்கும் வரை ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் பயணிக்கும்.

- வழக்கமாக, கேரளா போன்ற மாநிலங்கள் கடல் சீற்றம் உருவாகின்ற இந்தியப் பெருங் கடலின் தெற்குப் பகுதியில் பலத்த காற்றின் விளைவாக அலைகளை பெருமளவில் எதிர்கொள்கின்றன.
- இந்த அலைகள் வடக்கு நோக்கிப் பயணித்து இரண்டு அல்லது மூன்று நாட்களில் கரையை அடையும்.
- இவற்றை விட சுனாமி அலைகள் 10 மடங்கு வேகமானவையாகும்.





## மின்சார உற்பத்தியில் நிலக்கரியின் பங்கு




- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (RE) மூலங்கள் ஆனது, அனைத்து வகையான புதிய மின் உற்பத்தி திறனின் 26 GW என்ற மொத்தத் திறனில் சுமார் 71 சதவீதப் பங்கினை வழங்குகின்றன.
- இந்தியாவின் மொத்த நிறுவப்பட்ட திறனில் மாசுபடுத்தும் படிம எரிபொருளான – நிலக்கரி /லிக்னைட்டின் பங்கும் முதல் முறையாக 50 சதவீதத்திற்கும் (217.6 GW) கீழே குறைந்துள்ளது.
- இது தற்போது மொத்த நிறுவப்பட்ட திறனில் 49.2 சதவீதமாக உள்ளது.


## மாநிலச் சட்டங்களின் வருடாந்திர மதிப்பாய்வு 2023




- 2023 ஆம் ஆண்டில், 10 மாநிலங்கள் சமர்ப்பித்த 18.5 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான நிதிநிலை அறிக்கைகளில், 40% ஆனது விவாதமின்றி நிறைவேற்றப்பட்டன.
- 2023 ஆம் ஆண்டில் 20 மாநிலங்களில் 84 அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன.
- உத்தரப் பிரதேசம் (20), அதைத் தொடர்ந்து ஆந்திரப் பிரதேசம் (11), மகாராஷ்டிரா (9) ஆகிய மாநிலங்களில் அதிக எண்ணிக்கையிலான அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப் பட்டன.
- 2022 ஆம் ஆண்டில் 15 மற்றும் 2021 ஆம் ஆண்டில் 144 உடன் ஒப்பிடும்போது, 2023 ஆம், கேரளாவில் நான்கு அவசரச் சட்டங்கள் மட்டுமே பிறப்பிக்கப்பட்டன.
- மத்தியப் பிரதேசம் ஆனது அதன் 3.14 லட்சம் கோடி ரூபாய் நிதிநிலை அறிக்கையில் 85% வரை எந்தவித விவாதமும் இன்றி நிறைவேற்றப்பட்டது, இது பத்து மாநிலங்களின் மத்தியில் அதிகபட்சம் ஆகும்.
- கேரளா 78% உடன் இரண்டாவது இடத்தையும், அதனைத் தொடர்ந்து ஜார்க்கண்ட் (75%) மற்றும் மேற்கு வங்காளம் (74%) ஆகியவை உள்ளன.
- 2023 ஆம் ஆண்டில், பொதுக் கணக்குக் குழு 24 அமர்வுகளை நடத்தி, சம்பந்தப்பட்ட மாநிலங்களில் சராசரியாக 16 அறிக்கைகளை தாக்கல் செய்தது.
- பீகார், டெல்லி, கோவா, மகாராஷ்டிரா மற்றும் ஒடிசா ஆகிய 13 மாநிலங்களுள் தகவல் கிடைக்கப்பெற்ற ஐந்து மாநிலங்களில் பொதுக் கணக்குக் குழுவானது எந்த ஒரு அறிக்கையையும் தாக்கல் செய்யவில்லை.
- இதற்கு மாறாக தமிழ்நாட்டின் பொது கணக்குக் குழுவானது 95 அறிக்கைகளைத் தாக்கல் செய்த வேளையில் அதனித் தொடர்ந்து இமாச்சலப் பிரதேசம் (75) உள்ளது.
- மாநிலச் சட்டமன்றங்கள் மசோதாக்களை நிறைவேற்ற எடுத்துக் கொண்ட நேரத்தின் பகுப்பாய்வு ஆனது, பல மசோதாக்கள் குறைந்தபட்ச விவாதத்துடன் மிக விரைவாக நிறைவேற்றப்பட்டதைக் காட்டுகிறது.

- உண்மையில், 44% மசோதாக்கள் அவை சட்டசபையில் அறிமுகப்படுத்தப்பட்ட அதே நாளிலோ அல்லது அடுத்த நாளிலோ நிறைவேற்றப்பட்டன.
- இந்த எண்ணிக்கையானது 2022 (56%) மற்றும் 2021 (44%) ஆகிய ஆண்டுகளில் காணப் பட்ட போக்குடன் ஒத்துப் போகிறது.
- குஜராத், ஜார்க்கண்ட், மிசோரம், புதுச்சேரி மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் அனைத்து மசோதாக்களும் அறிமுகம் செய்யப்பட்ட நாளிலோ அல்லது மறுநாளோ நிறைவேற்றப்பட்டன.
- 28 மாநிலச் சட்டமன்றங்களுள் 13 சட்டமன்றங்களில், அறிமுகப்படுத்தப்பட்ட ஐந்து நாட்களுக்குள் மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன.
- கேரளா மற்றும் மேகாலயா ஆகிய மாநிலங்கள் 90 சதவீதத்திற்கும் அதிகமான மசோதாக்களை நிறைவேற்ற ஐந்து நாட்களுக்கு மேல் எடுத்தன.
- ராஜஸ்தானில் சுமார் 55% மசோதாக்கள் ஐந்து நாட்களுக்கும் மேலான விவாதத்திற்குப் பிறகு நிறைவேற்றப்பட்டன.

## புதிய உணவு முறை வழிகாட்டுதல்கள்




- இந்தியர்களுக்கான நன்கு திருத்தப்பட்ட உணவுமுறை வழிகாட்டுதல்களை இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபை வெளியிட்டுள்ளது.
- அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களைப் பூர்த்தி செய்வதற்கும், தொற்றாத நோய்ப் பரவலை (NCDs) தடுப்பதற்கும் தேவையான வழிகாட்டுதல்களை இது குறிப்பிடுகிறது.
- இந்த வழிகாட்டுதல்களின்படி, சர்க்கரை உட்கொள்ளல் ஆனது மொத்த ஆற்றல் உட் கொள்ளலில் 5 சதவீதத்திற்கும் குறைவாக இருக்க வேண்டும்.

- ஒரு சீரான உணவு முறையானது தானியங்கள் மற்றும் சிறு தானியங்களில் இருந்து 45 சதவீதத்திற்கு மிகாத வகையில் பெறப்படும் கலோரிகளாக இருக்க வேண்டும்.
- மேலும், பருப்பு வகைகள், அவரை வகைகள் மற்றும் இறைச்சியிலிருந்து பெறப்படும் சர்க்கரை அளவானது 15 சதவிகித கலோரிகளாக இருக்க வேண்டும் என்று அது கூறி உள்ளது.
- மீதமுள்ள கலோரிகள் பருப்புகள், காய்கறிகள், பழங்கள் மற்றும் பாலில் இருந்து பெற வேண்டும்.
- மொத்தக் கொழுப்பு உட்கொள்ளல் ஆனது 30 சதவீத ஆற்றலை விடக் குறைவாகவோ அல்லது சமமாகவோ இருக்க வேண்டும்.
- உடல் தசைகளின் கட்டமைப்பிற்காக துணை புரதச்சத்து உணவுகளை உட்கொள்ள வேண்டாம் என்றும் அது அறிவுறுத்தியுள்ளது.
- இந்தியாவில் உள்ள மொத்த நோய் பாதிப்பில் சுமார் 56.4 சதவீதமானது ஆரோக்கியம் அற்ற உணவு முறைகளால் ஏற்படுகிறது.

## 2023 ஆம் ஆண்டில் சூரிய சக்தி உற்பத்தி




- 2023 ஆம் ஆண்டில் இந்திய நாடானது சூரிய சக்தி உற்பத்தியில் ஜப்பானை விஞ்சி மூன்றாவது பெரிய சூரிய சக்தி உற்பத்தி நாடாக மாறியுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் உலகளாவிய சூரிய சக்தி உற்பத்தியானது 2015 ஆம் ஆண்டில் இருந்த அளவை விட ஆறு மடங்கு அதிகமாக இருந்தது.
- 2023 ஆம் ஆண்டில் உலக மின்சார உற்பத்தியில் சூரிய சக்தி உற்பத்தியின் பங்கானது 5.5 சதவீதமாகும்.
- சூரியசக்தி மின் உற்பத்தியில் சீனா, அமெரிக்கா, பிரேசில் ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக இந்தியா இடம் பெற்றுள்ளது.
- சீனா (+156 TWh), அமெரிக்கா (+33 TWh) மற்றும் பிரேசில் (+22 TWh) ஆகிய நாடுகளுக்குப் அடுத்தபடியாக 2023 ஆம் ஆண்டில் (+18 TWh) இந்தியாவில் உலகின் நான்காவது அதிக சூரிய மின் உற்பத்தி பதிவாகியுள்ளது.

## சமயச் சிறுபான்மையினரின் பங்கு (1950-2015)

- பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழு (EAC-PM) ஆனது, இந்தியா உட்பட 167 நாடுகளில் உள்ள மதச் சிறுபான்மையினரின் பங்கு குறித்த ஆய்வறிக்கை சமீபத்தில் வெளியிட்டுள்ளது.
- இந்தியாவைப் பொறுத்தவரையில், இந்தக் காலக்கட்டத்தில் முஸ்லிம்களின் மக்கள் தொகையில் 43.15% அதிகரித்துள்ள நிலையில், இந்துக்களின் மக்கள்தொகையில் 7.82% குறைந்துள்ளது என்று இந்த ஆய்வறிக்கை வியத்தகு தகவலை முன் வைக்கிறது.
- 1950 ஆம் ஆண்டில், மக்கள்தொகையில் 84.68% ஆக இருந்த இந்துக்களின் பங்கு ஆனது, 2015 ஆம் ஆண்டில் 78.06% ஆகக் குறைந்தது.
- இதேபோல், மக்கள்தொகையில் 9.84% ஆக இருந்த முஸ்லிம்களின் பங்கு ஆனது 14.09% ஆக உயர்ந்துள்ளது.
- இந்துக்களின் பங்கு ஆனது 7.82% குறைந்துள்ளதாகவும், கிறிஸ்தவர்களின் பங்கு 5.38% அதிகரித்துள்ளதாகவும், சீக்கியர்களின் பங்கு 6.58% ஆக அதிகரித்துள்ளதாகவும், பாரசீகர்களின் பங்கு 85% அளவில் குறைந்துள்ளதாகவும் இந்த ஆய்வறிக்கை முடிவு செய்துள்ளது.
- 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, இந்த நாட்டில் 96.63 கோடி இந்துக்கள் (மக்கள்தொகையில் 79.8%) மற்றும் 17.22 கோடி முஸ்லிம்கள் மக்கள் தொகையில் 14.2%) இருந்தனர்.

| Sl. No. | Country | Religious denomination (1950) | Major Religion (1950) | Majority Religion Share (1950) | Majority Religion Share (2015) | Rate of change in share | Religious denomination (2015) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Myanmar | Theravada Buddhists | Buddhist | 78.53 | 70.80 | -9.84 | Theravada Buddhists |
| 2 | India | Hindus | Hindus | 84.68 | 78.06 | -7.82 | Hindus |
| 3 | Nepal | Hindus | Hindus | 84.30 | 81.26 | -3.61 | Hindus |
| 4 | Maldives | Shafii Sunnis | Muslim | 99.83 | 98.36 | -1.47 | Shafii Sunnis |
| 5 | Afghanistan | Hanafi | Muslim | 88.75 | 89.01 | 0.29 | Hanafi |
| 6 | Pakistan | Hanafi | Muslim | 77.45 | 80.36 | 3.75 | Hanafi |
| 7 | Sri Lanka | Theravada Buddhists | Buddhist | 64.28 | 67.65 | 5.25 | Theravada Buddhists |
| 8 | Bhutan | Tibetan Buddhists | Buddhist | 71.44 | 84.07 | 17.67 | Tibetan Buddhists |
| 9 | Bangladesh | Hanafi | Muslim | 74.24 | 88.02 | 18.55 | Hanafi |

## ஐக்கிய நாடுகள் சபையின் தீவிரவாத எதிர்ப்பு நிதிக்குப் பங்களிப்பு

- ஐக்கிய நாடுகள் சபையின் தீவிரவாத எதிர்ப்பு அறக்கட்டளை நிதிக்கு இந்தியா 500,000 டாலர் பங்களித்துள்ளது.
- 2018 ஆம் ஆண்டு முதல், இந்தியா இந்த தீவிரவாத அச்சுறுத்தலை எதிர்த்துப் போராடும் திட்டங்களை தீவிரமாக ஆதரித்து வருகிறது.

- ❖ அதன் தற்போதைய பங்களிப்புடன், அறக்கட்டளை நிதிக்கான இந்தியாவின் ஒட்டு மொத்த நிதி உதவி தற்போது 2.55 மில்லியன் டாலராக உள்ளது.
- ❖ இந்தியாவின் பங்களிப்பு ஆனது முதன்மையாக தீவிரவாதத்திற்கான நிதியுதவி மற்றும் தீவிரவாத பயணத் திட்டத்தை எதிர்ப்பதற்கு ஆதரவாகப் பயன்படுத்தப்படும்.
- ❖ இந்த நிதியானது 2009 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது




## இந்தியாவில் விளம்பரத்திற்குப் பிறகு அசல் விலையினை வெளிப்படுத்துதல்

- ❖ "விளம்பரத்திற்குப் பிறகு அசல் விலையினை வெளிப்படுத்துதல்" என்ற நடைமுறை தொடர்பாக வாடிக்கையாளர்களை எச்சரிப்பதற்காக வேண்டி நுகர்வோர் விவகாரத் துறையானது சமீபத்திய எச்சரிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.
- ❖ இந்தச் சூழ்நிலையில் ஒரு பொருளின் விலையின் ஒரு பகுதி மட்டும் ஆரம்பத்தில் விளம்பரப்படுத்தப்பட்டு, கொள்முதல் செயல்பாட்டில் மேலும் அதற்கான பல்வேறு கட்டணங்கள் கூடுதலாகச் சேர்க்கப் படும்.





- ❖ விளம்பரத்திற்குப் பிறகு அசல் விலையினை வெளிப்படுத்துதல் நடைமுறை என்பது நிறுவனங்கள் ஒரு பொருளின் விலையின் ஒரு பகுதியை மட்டுமே விளம்பரப்படுத்தி, வாடிக்கையாளர் வாங்கும் செயல்முறையைத் தொடங்கிய பின்னர் இதர மற்ற கட்டணங்களை பின்னர் வெளிப்படுத்துகின்ற ஒரு விலை நிர்ணய நுட்பமாகும்.
- ❖ இந்தக் கூடுதல் கட்டணங்கள் ஆனது உல்லாச தங்கும் விடுதிகளுக்கான கட்டணங்கள் அல்லது விருப்பத் தேர்வு வசதிகளின் மேம்படுத்தல்கள் மற்றும் பல்வேறு கூடுதல் வசதிகளுக்கான கட்டணங்கள் போன்ற கட்டாயக் கட்டணங்களாக இருக்கலாம்.

- குறிப்பிடப்பட்ட விலை துல்லியமாக இல்லாத போது, நுகர்வோர் பல்வேறு தவறான பொருளாதார முடிவுகளை எடுக்க வழி வகுக்கும் மற்றும் நேர்மையானப் போட்டி நிறுவனங்களுக்குச் சாதகமற்ற விளைவுகளை ஏற்படுத்தக் கூடும்.

## அதிக மகசூல் தரும் கோதுமை வகை - HD 3386

- இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் ஆனது அதிக மகசூல் தரும் புதிய கோதுமை விதை ரகத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- HD 3386 எனப்படும் புதிய விதை ரகம் ஆனது, சமீபத்தில் மத்திய விதைக் குழுவினால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
- பஞ்சாப், ஹரியானா, உத்தரப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் ஆகிய வடமேற்குப் பகுதியின் முக்கிய கோதுமைப் பகுதியில் பெரும்பாலும் பதிவாகியுள்ள இது மஞ்சள் மற்றும் இலைத் துரு நோய்களுக்கு எதிர்ப்புத் திறன் கொண்டது.
- இது 2010 ஆம் ஆண்டில் இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் உருவாக்கிய தற்போது பயன்படுத்தப்படும் HD2967 விதைக்கு மாற்றாக இதனை அறிமுகப் படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.
- மகசூலைப் பொறுத்தவரை தற்போதுள்ள ரகம் ஏக்கருக்கு 22 குவிண்டால் உற்பத்தித் திறனைக் கொண்டுள்ளது அதே நேரத்தில் இந்தப் புதிய ராகமானது ஏக்கருக்கு 25 குவிண்டால் உற்பத்தித் திறன் கொண்டது.

## மாலத்தீவில் இருந்து இராணுவப் படைகள் விலக்கம்



- இந்தியா மற்றும் மாலத்தீவுகள் ஆனது, மே 10 ஆம் தேதிக்கு முன்னதாக மீதமுள்ள இந்தியப் படைகளைத் திரும்பப் பெற ஒப்புக் கொண்டுள்ளன.
- அதிபர் நிர்ணயித்த ஒரு காலக் கெடுவிற்கு முன்னதாக மாலத்தீவில் இருந்து இந்தியா தனது அனைத்துப் படை வீரர்களையும் திரும்பப் பெற்றுள்ளது.
- இந்தியாவினால் முன்னர் பரிசளிக்கப்பட்ட இரண்டு ஹெலிகாப்டர்கள் மற்றும் டோர்னியர் ரக விமானங்களை இயக்கவும் பராமரிக்கவும் மட்டுமே இந்திய இராணுவ வீரர்கள் மாலத்தீவில் நிலை நிறுத்தப்பட்டனர்.
- மாலத்தீவின் புதிய அதிபர் முகமது முய்சுவின் புகழ்பெற்ற "இந்தியாவை வெளியேற்றுவோம்" என்ற பிரச்சாரம் நாட்டில் இந்திய நாட்டின் செல்வாக்கைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டதாகும்.


## உணவுப் பொருட்களின் உறைகளில் தவறான தகவல்கள்




- இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபையானது பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களின் விளக்க அட்டைகளில் உள்ள பல்வேறு தவறான தகவல்கள் தவறாக வழி நடத்துதலை வழங்குவதாக எச்சரித்துள்ளது.
- சர்க்கரை உட்கூறு இல்லாத உணவுகளில் கொழுப்புகள் இருக்கலாம் அதே சமயம் பொதியாக்கப்பட்ட பழச்சாறுகளில் 10 சதவீதம் மட்டுமே பழ கூழ் இருக்கும்.
- உணவுப் பொருளில் செயற்கை வண்ணமேற்றிகள் மற்றும் செயற்கை சுவையூட்டிகள் அல்லது செயற்கைப் பொருட்கள் எதுவும் சேர்க்கப்படாமல், குறைந்த அளவு பதப்படுத்துதல் செயல்முறைக்கு அவை உட்படுத்தப்பட்டிருந்தாலே அதை 'இயற்கை' உணவுப் பொருள் என்று அழைக்கலாம்.
- 'ஊட்டச்சத்து குறித்த தகவல்கள்' மற்றும் 'ஊட்டச்சத்து அளவு /ஊட்டச்சத்து தகவல் கோரல்கள்' ஆகிய இரண்டும் ஒரே மாதிரியானவை என்ற ஒரு பொதுவான தவறான கருத்து உள்ளது.
- ஊட்டச்சத்து தகவல் குறித்த கோரல்கள் என்பது ஒரு உணவில் குறிப்பிட்ட ஊட்டச்சத்து பண்புகள் இருப்பதைத் தெரிவிக்கும் அல்லது குறிக்கும் எந்தவொரு அறிக்கையையும் குறிக்கிறது.

- விளக்க அட்டையில் குறிப்பிடப்படும் அனைத்து ஊட்டச்சத்து தகவல்களும் குறிப்பிடப் பட்ட உட்கொள்ளல் அளவை அடிப்படையாகக் கொண்டவையாகும்.


## ETO கலப்பினைத் தடுப்பதற்கான வழிகாட்டுதல்கள்




| State | Total score |
|---|---|
| Gujarat | 48.5% |
| West Bengal | 48% |
| Maharashtra | 45% |
| Rajasthan | 45% |
| Himachal Pradesh | 41% |
| Manipur | 40% |
| Uttarakhand | 39% |
| Sikkim | 39.5% |
| Karnataka | 37% |
| Haryana | 33% |
| Telangana | 32% |
| Meghalaya | 30.5% |
| Nagaland | 29% |
| Odisha | 29% |
| Arunachal Pradesh | 25.5% |
| Tripura | 24.5% |

- சமீபத்தில், சில நிறுவனங்களின் தயாரிப்புகளில் புற்றுநோயை உண்டாக்கும் எத்திலீன் ஆக்சைடு என்ற இரசாயனம் இருப்பதைக் கண்டறிந்ததையடுத்து பிரபலத் தயாரிப்பு நிறுவனங்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்ய ஹாங்காங் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் தடை செய்தன.
- இந்தியாவில் இருந்து அனுப்பப்படும் பொருட்களில் உள்ள எத்திலீன் ஆக்சைடு (EtO) கலப்பினைத் தடுப்பதற்கான விரிவான வழிகாட்டுதல்களை ஏற்றுமதியாளர்களுக்கு மசாலா வாரியம் வெளியிட்டுள்ளது.
- பதப்படுத்துதல் செயல்முறையின் அனைத்து நிலைகளிலும் சாத்தியமான மாசுபட்டப் பொருட்களுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பு கொள்வதன் மூலம் மசாலா மற்றும் மூலிகைப் பொருட்கள் மாசுபடுவதைத் தடுப்பதற்காகத் திறன் மிகு நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.
- நீராவி மூலமான கிருமி நீக்கம்; கதிர்வீச்சுப் பதனம் போன்ற மாற்றுக் கிருமி நீக்க முறைகளைப் பயன்படுத்த இதன் மூலம் ஊக்குவிக்கப் படுகின்றது.
- 2023-24 ஆம் ஆண்டில், இந்தியாவின் மசாலா ஏற்றுமதியானது சுமார் 4.25 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது என்பதோடு இது உலகளாவிய மசாலா ஏற்றுமதியில் 12 சதவீதப் பங்கைக் கொண்டுள்ளது.
- உலக மசாலா வர்த்தகம் ஆனது, 2023 ஆம் ஆண்டில் 35 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடையதாக இருந்தது.
- 2023 ஆம் ஆண்டில் 8 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான ஏற்றுமதியுடன் சீனா முதன்மையான ஏற்றுமதியாளராக உள்ளது.

## போட்டியிடும் இடங்களுக்கான விதிகள்




- 1951 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் (RPA) என்ற சட்டத்தின் படி ஒரு வேட்பாளர் தேர்தலில் போட்டியிட, இரண்டு தொகுதிகள் வரை அனுமதிக்கப்படுகிறார்.
- ஆனால் அவர் ஒரே நேரத்தில் இரண்டு தொகுதிகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்டால் ஒரு இடத்தை மட்டுமே தக்க வைத்துக் கொள்ள முடியும்.
- ஒரு வேட்பாளரை இரண்டு இடங்களில் போட்டியிட அனுமதிக்கும் முறையானது 1996 ஆம் ஆண்டில் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில், துணைப்பிரிவு 33 (7) என்ற ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டதன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இதற்கு முன்பு, ஒரு வேட்பாளர் போட்டியிடும் தொகுதிகளின் எண்ணிக்கையில் எந்த வொரு தடையும் இருந்ததில்லை.
- இருப்பினும், அதேச் சட்டத்தின் 70வது பிரிவு, ஒரு வேட்பாளர் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும், ஒரே நேரத்தில் ஒரு இடத்தை மட்டுமே பிரதிநிதித்துவம் செய்ய முடியும் என்று கூறுகிறது.
- எனவே, ஒரு வேட்பாளர் இரண்டு இடங்களில் வெற்றி பெற்றால், அவர்/அவள் பதவி விளக்கிய இடத்தில் இடைத்தேர்தல் நடத்துவது அவசியமாகும்.
- மேலும், ஒரு நபர் ஒரு குறிப்பிட்ட மாநிலத்தில் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட அவர் அந்த மாநிலத்தின் வாக்காளராக இருக்க வேண்டும்.
- ஆனால் மக்களவைத் தேர்தலில் போட்டியிட, நாட்டின் எந்தவொரு தொகுதியிலும் வாக்காளராகப் பதிவு செய்திருக்கலாம்.
- ஒருவர் ஏதேனும் ஒரு தொகுதியில் பதிவு செய்யப்பட்ட வாக்காளராக இருந்தால், அவர் அசாம், லட்சத்தீவுகள் மற்றும் சிக்கிம் தவிர, இந்தியாவில் உள்ள எந்த தொகுதியிலும் போட்டியிடலாம்.

## சாபஹர் துறைமுக ஒப்பந்தம்

- ஈரானின் தென்கிழக்குத் துறைமுகமான சாபஹரை அடுத்த 10 ஆண்டுகளுக்கு நிர்வகிப்பதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா ஈரானுடன் கையெழுத்திட்டது.
- ஈரானின் தென்கிழக்குக் கடற்கரையில் ஓமன் வளைகுடாவைச் சேர்ந்தப் பகுதியில் அமைந்துள்ள சாபஹர் துறைமுகத்தின் ஒரு பகுதியை இந்தியா உருவாக்கி வருகிறது.
- பரபரப்பான தேர்தல் காலத்தின் மத்தியில் நடைபெறும் இந்த நடவடிக்கை, முக்கியப் பிராந்தியத் தாக்கங்களுடன் ஈரானுக்கான குறிப்பிடத்தக்க புவிசார் அரசியல் வெளிப்பாடாகக் கருதப்படுகிறது.
- இது வெளிநாட்டுத் துறைமுகத்தின் நிர்வாகத்தை இந்தியாவானது கைப்பற்றிய முதல் நிகழ்வாக அமைகிறது.




## ஆதார் அடிப்படையிலான சரக்கு மற்றும் சேவை வரி பதிவு

- தெலங்கானா, தமிழ்நாடு மற்றும் கர்நாடகா உட்பட ஐந்து மாநிலங்கள் சரக்கு மற்றும் சேவை வரி பதிவிற்கு ஆதார் அடிப்படையிலான சரிபார்ப்பு முறையினைப் பயன்படுத்துவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளன.
- தற்போது, குஜராத் மற்றும் ஆந்திரப் பிரதேசம் மற்றும் ஒன்றியப் பிரதேசமான புதுச்சேரி ஆகியவை வரி செலுத்துவோரின் ஆதார் சரிபார்ப்பு முறையினைச் சோதனை அடிப்படையில் தொடங்கியுள்ளன.
- சரக்கு மற்றும் சேவை வரி அதிகாரிகள் இதுவரை ஒருமுறை பயன்படுத்தப்படும் கடவுச்சொல் (OTP) அடிப்படையிலான ஆதார் சரிபார்ப்பு முறையினைப் பயன்படுத்தி, விண்ணப்பதாரர்களின் அடையாளத்தை அங்கீகரித்து, பதிவு செய்து வருகின்றனர்.

## BHISHM - இடம் பெயர்த்தும் வகையிலான மருத்துவமனைகள்

- இந்திய விமானப்படையானது, ஆக்ராவில் BHISHM எனப்படும் இடம் பெயர்த்தும் வகையிலான மருத்துவமனைப் பெட்டகங்களை விமானத்தில் இருந்து நிலத்தில் இறக்கும் பரிசோதனையினை மேற்கொண்டது.
- இந்த இடம் பெயர்த்தும் வகையிலான மருத்துவமனைகளை இந்திய விமானப்படை பரிசோதனை செய்தது இதுவே முதல் முறையாகும்.
- எந்தவொரு இடத்திலும் ஏற்படும் அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இடம் பெயர்த்தும் வகையிலான மருத்துவமனைகளைப் பயன்படுத்த இயலும் என்பதால் இந்தப் பரிசோதனையானது மேற்கொள்ளப்பட்டது.
- இந்த இடம் பெயர்த்தும் வகையிலான மருத்துவமனைகள் ஆனது, "BHISHM திட்டம்"- சஹ்யோக், ஹிட்டா மற்றும் மைத்ரிக்கான பாரத் சுகாதார முன்னெடுப்பு என்ற மாபெரும் முன்னெடுப்பின் ஒரு பகுதியாகும்.
- இது விரைவான நடவடிக்கை மற்றும் விரிவான சுகாதார நலனை வழங்கும் வகையில், ஒரே நேரத்தில் பாதிக்கப்பட்ட சுமார் 200 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது.



## உலகப் பல்கலைக்கழக தரவரிசை மையம்

- அகமதாபாத் நகரில் அமைந்துள்ள இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் (IIM) ஆனது, இந்தியாவில் சிறப்பாக செயல்படும் நிறுவனங்களில் முதல் இடத்தைப் பெற்று உள்ளது.
- இந்தியாவில் உள்ள 64 பிற பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆனது 2024 ஆம் ஆண்டு உலகளாவிய 2000 பல்கலைக்கழகங்களின் பட்டியலில் இடம் பெற்று உள்ளன.
- அகமதாபாத் நகரில் அமைந்துள்ள இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் ஆனது, 9 இடங்கள் முன்னேறி 410வது இடத்தைப் பெற்றுள்ளது.
- இந்திய அறிவியல் கல்விக் கழகம் ஆனது 7 இடங்கள் பின்தங்கி 501வது இடத்தைப் பெற்றுள்ளது.
- மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, 14 இடங்கள் சரிந்து 568வது இடத்தில் உள்ளது.
- டெல்லி மற்றும் காரக்பூர் நகரில் அமைந்துள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகங்கள் ஆகியவை சிறப்பாக செயல்படும் ஆண்டின் முதல் பத்து நிறுவனகளின் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது, 12 இடங்கள் பின்தங்கி 582வது இடத்தைப் பெற்றுள்ளது.
- டாடா அடிப்படை ஆராய்ச்சிக் கல்வி நிறுவனம் ஆனது 26 இடங்கள் பின்னடைந்து 606வது இடத்தைப் பெற்றுள்ளது.

| World Rank | Institution | Location | National Rank | Education Rank | Employability Rank | Faculty Rank | Research Rank | Score |
|---|---|---|---|---|---|---|---|---|
| 410 Top 2% | Indian Institute of Management Ahmedabad | India | 1 | 367 | 11 | - | - | 75.4 |
| 501 Top 2.4% | Indian Institute of Science | India | 2 | 323 | 090 | | 476 | 74.3 |
| 568 Top 2.7% | Indian Institute of Technology Bombay | India | 3 | - | 380 | - | 590 | 73.7 |
| 582 Top 2.8% | Indian Institute of Technology Madras | India | 4 | - | 187 | - | 514 | 73.5 |
| 606 Top 2.9% | Tata Institute of Fundamental Research | India | 5 | - | - | - | 573 | 73.3 |
| 615 Top 3% | Indian Institute of Technology Delhi | India | 6 | - | 155 | - | 585 | 73.2 |
| 622 Top 3% | Delhi University | India | 7 | 532 | 100 | | 675 | 73.2 |
| 704 Top 3.4% | Indian Institute of Technology Kharagpur | India | 8 | - | 618 | - | 581 | 72.5 |
| 758 Top 3.9% | Academy of Scientific & Innovative Research | India | 9 | - | - | - | 751 | 71.8 |
| 825 Top 4% | Panjab University | India | 10 | 527 | 745 | - | 734 | 71.6 |

## இந்தியாவில் கடுமையான வெப்ப அலைகள்

**WHAT MAKES FOR A HEATWAVE?**


| Places with normal maximum temperature | Heatwave if temperature higher by | Severe heatwave if temperature higher by |
|---|---|---|
| 40 degree Celsius or less | 5-6 degree Celsius | 7 degree Celsius |
| More than 40 degree Celsius | 3-4 degree Celsius | More than 5 degree Celsius |
| For any place | Maximum temperature remains above 45 degree Celsius for two consecutive days | |

*These criteria have to be met in at least two stations of a meteorological sub-division for at least two consecutive days. Source: Parliament question and IMD*

- இந்த ஏப்ரல் மாதத்தில் கிழக்கு மற்றும் தென்னிந்தியாவின் சில பகுதிகளில் நிலவும் கடுமையான வெப்பம் பருவநிலை மாற்றத்திற்குக் காரணமாக அமைந்துள்ளது.
- தற்போது ஒரு புதிய ஆய்வானது, இந்த அசாதாரணமான அதிக வெப்பநிலையானது பருவநிலை மாற்றத்தினால் 45 மடங்கு அதிகமாகும் என்று கூறியுள்ளது.
- இந்தியாவில் கோடை காலத்தின் தொடக்கத்தில் பருவநிலை மாற்றத்தினால் வெப்ப அலைகள் ஏற்படுவது இது மூன்றாவது முறையாகும்.
- இதே ஆராய்ச்சியாளர்கள் 2022 ஆம் ஆண்டின் மார்ச்-ஏப்ரல் மாதங்கள் மற்றும் 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதங்களில் நிலவிய அதிக வெப்பநிலையானது பெரும்பாலும் பருவநிலை மாற்றத்தினால் ஏற்பட்டிருக்கலாம் என்று குறிப்பிடுகின்றனர்.

- வெப்ப அலைகள் என்பது அதிக வெப்பநிலை கொண்டச் சூழலாக வரையறுக்கப்பட வில்லை.
- அவை வெப்பநிலையில் ஏற்படும் அசாதாரணச் சூழ்நிலைகளாகவே வரையறுக்கப் படுகின்றன.

## இந்தியாவில் தட்டம்மை தடுப்பூசி




- இந்தியாவில் தட்டம்மை தடுப்பூசி பெற தகுதி பெற்ற குழந்தைகளில் சுமார் 12 சதவீதம் குழந்தைகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட இரட்டை தவணை தடுப்பூசிகளைப் பெறவில்லை.
- இது நோய்த்தடுப்புப் பரவலில் ஏற்பட்டுள்ள "இடைவெளியைப் பற்றிய" குறிப்பினை அளிக்கிறது.
- தகுதிப் பெற்ற குழந்தைகளில் சுமார் 30 சதவீதம் பேர் தட்டம்மை வைரசிற்கு எதிரான தடுப்பூசியை (MCV1) மட்டுமே பெற்றுள்ளனர் என்று குழு கண்டறிந்துள்ளது.
- சுமார் 60 சதவீதம் பேர் முழுமையாக நோய்த்தடுப்பினைப் (MCV2) பெற்றுள்ளனர்.
- வடகிழக்கு மாநிலங்களில் எந்தவொரு தவணையினையும் பெறாத குழந்தைகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாக ஆய்வு முடிகள் காட்டுகின்றன என்ற நிலையில் இதில் 26 சதவீதத்துடன் நாகாலாந்து மிகப்பெரியப் பங்கினைக் கொண்டுள்ளது.
- இதில் மிகக் குறைந்த அளவாக 4.6 சதவீதப் பங்கினை தமிழ்நாடு கொண்டுள்ளது.

## இக்லா-S வான்வழிப் பாதுகாப்பு அமைப்புகள்

- ரஷ்ய நாட்டின் மற்றொரு இக்லா-S எனப்படும் மிகக் குறுகிய தூர வரம்புடைய வான்வழிப் பாதுகாப்பு அமைப்புகளை (VSHORAD) இந்திய ராணுவம் விரைவில் பெறத் தயாராக உள்ளது.

- இது ரஷ்ய நாட்டினால் உருவாக்கப்பட்ட மனிதர்களால் சுமந்துச் செல்லக்கூடிய வான் பாதுகாப்பு அமைப்பு (MANPADS) ஆகும்.
- இது ஒரு தனி நபர் அல்லது குழுவினரால் இயக்கப்படக் கூடிய கையில் சுமந்துச் செல்லக் கூடிய வகையிலான பாதுகாப்பு ஆயுத அமைப்பாகும்.
- இது தாழ்வாகப் பறக்கும் விமானங்களை வீழ்த்தும் வகையிலும், சீர்வேக ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்கள் போன்ற விமான இலக்குகளை அடையாளம் கண்டு தடுக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இது 500 மீட்டர் முதல் 6 கிலோமீட்டர் வரையிலான தொலைவில் இயங்கும் திறனையும், 3.5 கிலோமீட்டர் உயரம் வரையுள்ள இலக்குகளையும் தாக்கும் திறன் கொண்டுள்ளது.
- இஸ்ரேலிய நாட்டின் இரண்டு ஹெர்ம்ஸ்-900 எனும் நடுத்தர உயர வரம்புடைய நெடு நேர இயக்க திறன் கொண்ட ஆளில்லா வான்வழி வாகனங்களையும் (UAV) இராணுவம் பெற உள்ளது.





## MDL கப்பல் கட்டும் நிறுவனத்தின் 250வது ஆண்டு விழா

- மும்பையில் மசாகன் கப்பல் கட்டும் நிறுவனமானது (MDL) தனது 250வது ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடியது.
- இந்த நிகழ்வின் போது, அது 'அரோவானா' என்று பெயரிடப்பட்ட உள்நாட்டிலேயே தயாரிக்கப் பட்ட சிறிய நீர்மூழ்கிக் கப்பலின் முன்மாதிரியை அறிமுகம் செய்தது மற்றும் சூரிய சக்தியில் இயங்கும் மின்சாரக் கலப்புப் படகினையும் இயக்கி அதைச் சோதித்தது.
- இந்த நிறுவனம் 1774 ஆம் ஆண்டில் ஒரு சிறிய உலர் கப்பல்துறையாகத் தொடங்கப் பட்டது.
- 1960 ஆம் ஆண்டில், இந்திய அரசாங்கம் ஆனது தனது போர்க்கப்பல் மேம்பாட்டுத் திட்டத்தினை மேலும் மேம்படுத்துவதற்காக இந்தத் துறையினை அரசின் பொறுப்பில் எடுத்து பொதுத்துறை நிறுவனமாக மாற்றியது.

## புதிய பல்கலைக்கழகங்களின் தரவரிசை 2024

- டைம்ஸ் இதழின் 2024 ஆம் ஆண்டு புதிய பல்கலைக்கழகங்களின் தரவரிசையில் இடம் பெற்ற இந்தியப் பல்கலைக்கழகங்களுள் கோட்டயத்தில் உள்ள மகாத்மா காந்தி பல்கலைக் கழகம் தனது முதல் இடத்தைத் தக்கவைத்துள்ளது.
- இந்தத் தரவரிசையானது உலகளவில் 50 ஆண்டுகள் அல்லது அதற்கும் குறைவான ஆண்டுகளுக்குள் நிறுவப்பட்ட பல்கலைக்கழகங்களைத் தரவரிசைப்படுத்துகிறது.
- 2024 ஆம் ஆண்டின் தரவரிசையில் உலகம் முழுவதும் உள்ள 673 பல்கலைக்கழகங்கள் இடம் பெற்றுள்ளன.
- மகாத்மா காந்தி பல்கலைக்கழகம் 81வது இடத்தைப் பெற்றுள்ளது.
- தமிழ்நாட்டில் உள்ள அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் பாரதியார் பல்கலைக் கழகம், பாட்னாவில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆகியவை இந்தியப் பல்கலைக் கழகங்கள் தரவரிசையில் இரண்டு முதல் நான்கு இடங்களைப் பெற்றுள்ளன.




| Rank 2024 | Rank 2023 | Institution | Country/ region |
|---|---|---|---|
| 1 | 1 | Nanyang Technological University, Singapore | Singapore |
| 2 | 3 | Paris Sciences et Lettres – PSL Research University Paris | France |
| 3 | 2 | The Hong Kong University of Science and Technology | Hong Kong |
| 4 | 6 | City University of Hong Kong | Hong Kong |
| 5 | 12 | Université Paris-Saclay | France |
| 6 | 8 | Institut Polytechnique de Paris | France |
| 7 | 4 | Hong Kong Polytechnic University | Hong Kong |
| 8 | 15 | Sorbonne University | France |
| 9 | 14 | Pohang University of Science and Technology (POSTECH) | South Korea |
| 10 | 13 | Maastricht University | Netherlands |

## தேசிய மனித உரிமைகள் ஆணையத்திற்கான சர்வதேச அங்கீகாரம்

- மே 01 ஆம் தேதியன்று, ஐக்கிய நாடுகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் உலகளாவியக் கூட்டணியானது (GANHRI) தேசிய மனித உரிமைகள் ஆணையத்திற்கான அங்கீகாரத்தை தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக ஒத்தி வைத்தது.
- இந்தச் செயல்முறையானது ஐக்கிய நாடுகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் உலகளாவியக் கூட்டணியினால் (GANHRI) நிர்வகிக்கப் படுகிறது.
- தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஆனது 1999 ஆம் ஆண்டு முதல் 'A தர வரிசையினை' கொண்டுள்ளது.
- கடந்த ஆண்டு ஜெனீவாவில் அமைந்துள்ள அமைப்பிடமிருந்து மறு அங்கீகாரம் பெற இருந்தது.
- GANHRI உலகளவில் 120 தேசிய மனித உரிமை நிறுவனங்களை ஒருங்கிணைக்கிறது.
- 1993 ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாரீஸ் கோட்பாடுகளுக்கு இணங்க தேசிய மனித உரிமை ஆணையங்களை மதிப்பாய்வு செய்வதற்கும் அங்கீகாரம் வழங்குவதற்குமான பொறுப்பினை இந்த அமைப்பு கொண்டுள்ளது.

- அங்கீகார வழங்கீட்டிற்கான துணைக் குழு (SCA) ஆனது, அமெரிக்கா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா மற்றும் ஆசியா-பசிபிக் ஆகிய நாடுகளில் உள்ள ஒவ்வொரு பிராந்தியத்திலிருந்தும் நான்கு என பதினாறு 'A' தரவரிசை கொண்ட தேசிய மனித உரிமைகள் ஆணையங்களைக் கொண்டுள்ளது.
- இந்த முடிவு ஆனது மனித உரிமைகள் சபை மற்றும் சில ஐக்கிய நாடுகள் பொது சபை அமைப்புகளில் வாக்களிக்கும் இந்தியாவின் திறனைப் பாதிக்கலாம்.

## நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தில் இருந்து விலக்கு

- 1986 ஆம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், சேவைக் குறைபாட்டிற்கு வழக்கறிஞர்கள் பொறுப்பேற்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- வழக்கறிஞருக்கு எதிராக இது தொடர்பாக எழுப்பப்பட்ட ஒரு புகாரை நுகர்வோர் மன்றத்தில் விசாரிக்க முடியாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மருத்துவ வல்லுநர்கள் பொறுப்புக் கூற வேண்டும் என்ற 1996 ஆம் ஆண்டின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் நீதிமன்றம் சுட்டிக் காட்டியது.
- உச்ச நீதிமன்றத்தின் கூற்றுப்படி, 2019 ஆம் ஆண்டில் திருத்தம் செய்யப்பட்ட, 1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டமானது நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள் மற்றும் நெறிமுறையற்ற வணிக நடைமுறைகளிலிருந்து நுகர்வோருக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கானதாகும்.
- இந்தச் சட்டத்தின் வரம்பிற்குள் தொழில்கள் அல்லது தொழில் வல்லுநர்களை உள்ளடக்கியதாக சட்டமன்றம் பரிந்துரைத்ததாக எதுவும் பதிவு செய்யப் படவில்லை.
- வழக்கறிஞர்கள் உரிமையியல்/குற்றவியல் சட்டத்தின் கீழ் பொறுப்பேற்க வேண்டுமே தவிர, நுகர்வோர் சட்டத்தின் கீழ் அல்ல.

| CONSUMER PROTECTION ACT 1986 | PROVISIONS | CONSUMER PROTECTION ACT 2019 |
|---|---|---|
| No separate regulator | Regulator | Central Consumer Protection Authority (CCPA) to be formed |
| Complaint could be filed in a consumer court where the seller's (defendant) office is located | Consumer court | Complaint can be filed in a consumer court where the complainant resides or works |
| No provision. Consumer could approach a civil court but not consumer court | Product liability | Consumer can seek compensation for harm caused by a product or service |
| District: up to ₹20 lakh<br>State: ₹20 lakh to ₹1 cr<br>National: above ₹1 cr | Pecuniary jurisdiction | District: up to ₹1 cr<br>State: ₹1 cr to ₹10 cr<br>National: Above ₹10 cr |
| No provision | E-commerce | All rules of direct selling extended to e-commerce |
| No legal provision | Mediation cells | Court can refer settlement through mediation |

## UAPA சட்டம் குறித்து உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு

**Targeting terror**

The UAPA (Amendment) Bill will enable the government to designate a person as a terrorist


- The proposal to designate an individual as a terrorist will come from security agencies
- The information will then be corroborated through multiple agencies
- The Home Ministry will examine the proposal. Once the Ministry is convinced, the proposal will be signed by the Home Minister
- The individual can then file an appeal with the Ministry
- The Ministry will have to decide on appeal in 45 days
- The individual can also file an appeal before an independent committee
- The UAPA, first framed in 1967, was amended in 2004, 2008 and 2013

- ❖ நியூஸ் கிளிக் தளத்தின் நிறுவனர் மற்றும் முதன்மை செய்தியாசிரியர் பிரபீர் புர்கயஸ்தாவினை டெல்லி காவல்துறையினர் கைது செய்து, 1967 ஆம் ஆண்டு சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் கீழ் ஒரு வழக்கில் சிறையில் அடைத்ததை உச்ச நீதிமன்றம் சட்டவிரோதமானது என்று அறிவித்துள்ளது.
- ❖ வெளிநாட்டு நிதியுதவி ஒழுங்குமுறைச் சட்டத்தினை மீறி அந்தச் செய்தி வழங்கீட்டு இணைய தளம் வெளிநாட்டு நிதியைப் பெற்றதாகக் கூறப் படுகிறது.
- ❖ கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில், சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் கீழ் டெல்லி காவல்துறையின் சிறப்புப் பிரிவினரால் புர்கயஸ்தா கைது செய்யப் பட்டார்.
- ❖ நியூஸ்க்ளிக் இணையதளத்திற்கு சீனப் பிரச்சாரத்தை ஊக்குவிப்பதற்காக என்று ஒரு அமெரிக்க கோடீஸ்வரரிடமிருந்து நிதி பெறுவதாக நியூயோர்க் டைம்ஸ் இதழில் வெளி வந்த கட்டுரையினைத் தொடர்ந்து நடத்தப்பட்ட பல சோதனைகளுக்குப் பிறகு அவர் கைது செய்யப்பட்டார்.

## வடமேற்கு காற்று ஆராய்ச்சிக்கான சோதனைக் கூடம்

- ❖ கிழக்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகளை முதன்மையாக பாதிக்கும் வடமேற்கு காற்று (நோர்வெஸ்டர்ஸ்) எனப்படும் கடுமையான இடியுடன் கூடிய மழைப் பொழிவு கொண்டு வரும் வானிலை பற்றி ஆய்வு செய்வதற்காக என்று இந்தியா தனது முதல் ஆராய்ச்சி சோதனைக் கூடத்தை நிறுவ உள்ளது.
- ❖ நாட்டின் கிழக்குப் பகுதிகளில் இடியுடன் கூடிய மழை உருவாகும் நிலை, அதன் பெருக்கம் மற்றும் பரவல் ஆகியவற்றை ஆய்வு செய்வதை இது பெரும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இது வானிலை ஆய்வு கருவிகள், ஆளில்லா விமானங்கள் மற்றும் இடியுடன் கூடிய மழையை முறையாகக் கண்காணிக்க உதவும் பிற உபகரணங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும்.

- கிழக்கு மற்றும் வடகிழக்கு இந்தியா, தெற்கு நேபாளம், பூடான் மற்றும் வங்காளதேசம் ஆகியவற்றில் உருவாகும் வடமேற்கு காற்றுகள் கடுமையான இடியுடன் கூடிய பலத்த காற்றுடன் மழைப்பொழிவினை வழங்கும்.



## இந்தியாவின் முதல் அணுகுண்டு சோதனையின் 50வது ஆண்டு நிறைவு

- 1974 ஆம் ஆண்டு மே 18 ஆம் தேதியன்று, இந்திய நாடானது "ஸ்மைலிங் புத்தா" (சிரிக்கும் புத்தர்) நடவடிக்கை என்ற குறியீட்டுப் பெயரிடப்பட்ட தனது முதல் அணுகுண்டு சோதனையை பொக்ரானில் நடத்தியது.
- இதன் மூலம் இந்தியா அணுசக்தி திறன் கொண்ட நாடுகளின் குழுமத்தின் நுழைந்தது.
- சிரிக்கும் புத்தா நடவடிக்கையுடன், ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் உள்ள ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளைத் தவிர்த்து, அணுகுண்டு சோதனை நடத்திய முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றது.
- அணு ஆயுதச் சோதனைக்குப் பிறகு, 1970 ஆம் ஆண்டுகளில் இந்தியா எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சி என்று விமர்சனங்கள் எழுந்தன.
- 1998 ஆம் ஆண்டில், இந்தியா மீண்டும் ஒரு முறை சக்தி நடவடிக்கை என்ற பெயரில் பொக்ரானில் தொடர்ச்சியான அணுசக்திச் சோதனைகளை நடத்தியது.




## அரசியலமைப்பு அமர்வின் தீர்ப்பு

- ❖ உச்ச நீதிமன்றம் ஆனது, அரசியலமைப்பு அமர்வின் தீர்ப்பு குறைவான நீதிபதிகள் கொண்ட அமர்வுகளின் மீதும் "கட்டுப்பட்டதாக" இருக்கும்.
- ❖ ஹரியானாவில் நிலச் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட உச்ச வரம்பு வரம்பில் அசல் உரிமையாளர்களிடமிருந்துப் பறிக்கப்பட்ட நிலத்தின் மீது பஞ்சாயத்து அமைப்பு உரிமை கோர முடியாது என்று உச்ச நீதிமன்றம் கூறியது.
- ❖ உரிமையாளரிடம் இருந்து பறிக்கப்பட்டு உரிமை கோர முடியாமல் உள்ள நிலத்தை மட்டுமே பஞ்சாயத்துகள் நிர்வகிக்கவும் கட்டுப்படுத்தவும் முடியும் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- ❖ முன்னதாக, 1961 ஆம் ஆண்டு ஹரியானா கிராமப் பொது நிலங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் 2 (g) பிரிவின் 6வது துணைப் பிரிவின் சட்டப்பூர்வத் தன்மையை ஆய்வு செய்த பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றத்தின் முழு அமர்வின் தீர்ப்பிற்கு எதிரான மேல்முறையீட்டுக் குழுவின் மீதான தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கி இருந்தது.




## இந்தியர்களின் மனதில் பருவ நிலை மாற்றம் பற்றிய கருத்து, 2023

- ❖ தேசிய அளவில் மேற்கொள்ளப்பட்ட ஒரு பிரதிநிதித்துவக் கணக்கெடுப்பில் பங்கேற்றவர்களில் 90 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள், புவி வெப்பமடைதல் குறித்து தாங்கள் "கவலைப்படுவதாக" கூறியுள்ளனர்.



- இது 2011 ஆம் ஆண்டில் 61 சதவீதமாகவும், 2022 ஆம் ஆண்டில் 81 சதவீதமாகவும் இருந்தது.
- 54 சதவிகித இந்தியர்கள்" புவி வெப்பமடைதல் பற்றி சிறிதே அறிந்திருக்கிறார்கள், 10 சதவிகித மக்கள் மட்டுமே "அதை பற்றி அதிகம்" தெரியும் என்று கூறியுள்ளனர்.
- 32 சதவீதம் பேர் இதைப் பற்றி கேள்விப்பட்டதே இல்லை என்று கூறியுள்ளனர்.
- இந்த மதிப்பீட்டில் பங்கேற்றுப் பதிலளித்தவர்களில் சுமார் 78 சதவீதம் பேர் புவி வெப்பமடைதல் ஏற்படுவதாகவும், சுமார் 52 சதவீதம் பேர் இது மனிதர்களால் ஏற்படுவதாகவும் கூறியுள்ளனர்.
- 70 சதவீதத்திற்கும் அதிகமானோர் இந்த நிகழ்வு தங்கள் உள்ளூர்ப் பகுதியில் வானிலையினையும் நாட்டின் பருவமழைகளையும் பாதிக்கிறது என்று கூறியுள்ளனர்.

## ஒட்டாத தன்மை கொண்ட டெஃப்ளான் ரக சமையல் பாத்திரங்களின் பயன்பாடு

- இந்தியர்களுக்கான திருத்தப்பட்ட உணவுமுறை வழிகாட்டுதல்களில் (DGIs), இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபை (ICMR) மற்றும் தேசிய ஊட்டச்சத்து கல்வி நிறுவனம் (NIN) ஆகியவை டெல்ஃபான் வேதிப்பொருட்கள் பூச்சுகளில் உள்ள PFOA, PFOS ஆகியவற்றால் ஏற்படும் உடல்நல அபாயங்கள் காரணமாக ஒட்டாத தன்மை கொண்ட சமையல் பாத்திர பயன்பாட்டிற்கு எதிராக அறிவுறுத்தியுள்ளன.
- பீங்கான், வார்ப்பிரும்பு மற்றும் துருப்பிடிக்காத எஃகு போன்றச் சுற்றுச்சூழலுக்கு உகந்த விருப்பத் தேர்வுகளை தேர்வு செய்து பயன்படுத்துமாறு ICMR அறிவுறுத்தி உள்ளது.
- ஒட்டாத தன்மை கொண்ட சமையல் பாத்திரங்கள் ஆனது, அதன் ஒட்டாத மேற்பரப்பு காரணமாக சமையலுக்கு ஏதுவான விருப்பத் தீர்வாக நீண்ட காலமாக பயன்படுத்தப் படுகிறது.
- இது சுத்தம் செய்வதை எளிதாக்குவதோடு, இதில் சமைப்பதற்கு மிகவும் குறைந்த எண்ணெயே தேவைப்படுகிறது.
- ஒட்டாதத் தன்மை கொண்ட சமையல் பாத்திரங்கள் குறித்த முதன்மையான அச்சங்களில் ஒன்று பெர்ஃப்ளுரோக்டானோயிக் அமிலம் (PFOA) மற்றும் பெர்ஃப்ளுரோக்டேன்சல்போனிக் அமிலம் (PFOS) ஆகும்.
- அவை டெஃப்ளான் போன்ற ஒட்டாத தன்மை கொண்ட பூச்சுகளை தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் ஆகும்.
- ஒட்டாத தன்மை கொண்ட சமையல் பாத்திரங்கள் அதிக வெப்பநிலையில் சூடாக்கப் படும் போது, இந்த இரசாயனங்கள் நச்சுப் புகைகளை காற்றில் வெளியிடலாம் என்ற நிலையில் இந்தப் புகையினை சுவாசிப்பது பல உடல்நல அபாயங்களை ஏற்படுத்தும்.
- இந்தப் புகைகளை உள்ளிழுப்பது சுவாசப் பிரச்சனைகள், தைராய்டு கோளாறுகள் மற்றும் சில வகையான புற்றுநோய்கள் உள்ளிட்ட பல்வேறு சுகாதார உடல்நலப் பிரச்சனைகளுடன் தொடர்பு கொண்டுள்ளது.
- PFOA ஆனது பெர்- மற்றும் பாலிஃப்ளுரோ அல்கைல் பொருட்கள் (PFAS) எனப்படும் இரசாயனங்களின் ஒரு பெரிய வகுப்பைச் சேர்ந்தது.
- PFOA பயன்பாடானது பெருமளவில் குறைக்கப்பட்டாலும், மற்ற PFAS கலவைகள் இன்னும் சில ஒட்டாதத் தன்மை கொண்ட சமையல் பாத்திரங்களில் பயன்படுத்தப் பட்டிருக்கலாம்.

- ஒட்டாதத் தன்மை கொண்ட சமையல் பாத்திரங்கள், குறிப்பாக பாலிடெட்ரா புளோரோஎத்திலீன் (PTFE அல்லது டெஃப்ளான்) பூச்சு பூசப்பட்டவை, அதிக அளவில் வெப்பமடையும் போது நச்சுப் புகைகளை வெளியிடலாம்.
- அவை மனிதர்களுக்குக் காய்ச்சல் போன்ற அறிகுறிகளை ஏற்படுத்தக் கூடியவை மற்றும் பறவைகளுக்கு ஆபத்தானவை.




## குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின் கீழ் இந்தியக் குடியுரிமை

- 2019 ஆம் ஆண்டு குடியுரிமை (திருத்தம்) சட்டத்தின் கீழ் விண்ணப்பித்த 300க்கும் மேற்பட்டவர்களுக்கு குடியுரிமைச் சான்றிதழ்களை மத்திய அரசு வழங்கியுள்ளது.
- டெல்லியில் சான்றிதழ் பெற்ற 14 பேர் 2013 ஆம் ஆண்டில் பாகிஸ்தானில் இருந்து வந்தவர்கள் ஆவர்.




- இந்தியாவிற்குள் சட்டப்பூர்வமாக நுழைந்த பெரும்பாலான பாகிஸ்தானிய இந்துக்கள் குஜராத், சத்தீஸ்கர், ராஜஸ்தான், ஹரியானா, பஞ்சாப் மற்றும் டெல்லியில் வசிக்கின்றனர்.
- மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த மாதுவாக்கள் மற்றும் நமசுத்ராக்கள் மற்றும் அசாமில் தேசியக் குடிமக்கள் பதிவேட்டில் (NRC) இருந்து விலக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின் கீழ் விண்ணப்பித்துள்ளனர் என்ற விவரங்கள் தெரியவில்லை.
- குடியுரிமை இணைய தளமானது, விண்ணப்பதாரர்கள் பிறந்த நாடு குறித்து அறிவிக்க வேண்டும் என்றும் வங்காளதேசம், பாகிஸ்தான் அல்லது ஆப்கானிஸ்தானில் தங்கள்

தோற்றுருவினைக் கண்டறியும் ஒரு ஆவணத்தையாவது சமர்ப்பிக்க வேண்டும் என கோருகிறது.

- மேற்கு வங்காளத்தில் உள்ள பயனாளிகள் எந்த ஆவணமும் இல்லாமல் இந்தியாவிற்குள் நுழைந்ததால், அவர்களால் இந்தச் சட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க முடியாது.
- மார்ச் 11 ஆம் தேதியன்று, 2024 ஆம் ஆண்டு குடியுரிமைத் திருத்த விதிகளின் அமலாக்கத்தினை உள்துறை அமைச்சகம் அறிவித்தது என்ற நிலையில், இது குடியுரிமைத் திருத்தச் சட்டத்தினை செயல்படுத்த உதவியது.
- இந்தச் சட்டமானது 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப் பட்டது.

## பல்வேறு பிரிவினர்களின் மாணவர் சேர்க்கை

- 2014-15 முதல் 2021-22 ஆம் ஆண்டு வரை பல்வேறு பிரிவுகளின் கீழ் மாணவர் சேர்க்கை கணிசமாக அதிகரித்துள்ளதாக தேசியப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஆணையம் (NCBC) தெரிவித்துள்ளது.
- தரவுகளின்படி, பட்டியலிடப்பட்ட சாதியினர் (SC) பிரிவைச் சேர்ந்த மாணவர்களின் சேர்க்கை 4.61 மில்லியனில் இருந்து 44 சதவீதம் உயர்ந்து 6.62 மில்லியனாக அதிகரித்து உள்ளது.
- அதே காலக்கட்டத்தில் சிறுபான்மையினர் வகுப்பினைச் சேர்ந்த மாணவிகளின் சேர்க்கையானது 42.3 சதவிகிதம் என்ற குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பதிவு செய்து, 1.07 மில்லியனிலிருந்து 1.52 மில்லியனாக அதிகரித்துள்ளது.
- 2014-15 ஆம் ஆண்டில் 1.641 மில்லியனாக இருந்த பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் பிரிவினைச் சேர்ந்த மாணவர்களின் சேர்க்கையானது 2021-22 ஆம் ஆண்டில் 65.2 சதவீதம் உயர்ந்து 2.71 மில்லியனாக அதிகரித்துள்ளது.
- பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் பிரிவினைச் சேர்ந்த மாணவிகளின் சேர்க்கை 80 சதவீதம் அதிகரித்துள்ளது.
- இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த மாணவர்களின் சேர்க்கை 71 சதவீதம் அதிகரித்துள்ளது என்ற நிலையில் இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த மாணவிகளின் சேர்க்கை இரு மடங்காக அதிகரித்துள்ளது.
- 2014-15 ஆம் ஆண்டில் 34.2 மில்லியனாக இருந்த உயர்கல்விச் சேர்க்கை 2020-21 ஆம் ஆண்டில் 41.4 மில்லியனாக உயர்ந்துள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டில் இது 43.3 மில்லியனை எட்டியது என்பதோடு இது 26.5 சதவீத அதிகரிப்பைக் குறிக்கிறது.
- 2014-15 ஆம் ஆண்டில் 15.7 மில்லியனாக இருந்த மாணவிகளின் சேர்க்கையானது 2021-22 ஆம் ஆண்டில் 32 சதவீதம் அதிகரித்து 20.7 மில்லியனாக உயர்ந்துள்ளது.

## உணவு மற்றும் ஊட்டச்சத்து வாரியம்

- சமூக ஊட்டச்சத்து திட்டங்களின் செயல்பாட்டிற்கான தொழில்நுட்ப மற்றும் தளவாட ஆதரவை வழங்குவதற்குப் பொறுப்பு கொண்டுள்ள இந்த வாரியமானது, அரசாங்க அமைப்புகளை திறன்மிக்கதாக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக "அதிகாரப்பூர்வமாக கலைக்கப்பட்டது".

- உணவு மற்றும் ஊட்டச்சத்து வாரியம் ஆனது மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தினால் மூடப்பட்டது.
- இது டெல்லியைத் தலைமையிடமாகக் கொண்ட அமைச்சகத்தின் தொழில்நுட்பப் பிரிவாகும்.
- நான்கு பிராந்திய அலுவலகங்கள் மற்றும் ஃபரிதாபாத், மும்பை, கொல்கத்தா மற்றும் சென்னையில் உள்ள பல தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் உட்பட பலவிதமான அலுவலக வலையமைப்புகளை இந்த வாரியம் கொண்டிருந்தது.
- உணவு மற்றும் ஊட்டச்சத்து வாரியம் ஆனது, முதலில் வேளாண் அமைச்சகத்தின் கீழ் நிறுவப் பட்டது ஆனால் பின்னர் 1993 ஆம் ஆண்டில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்திற்கு அது மாற்றப்பட்டது.

## புதிய ஓட்டுநர் உரிம விதிகள் 2024

- சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் ஆனது 2024 ஆம் ஆண்டு ஜூன் 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வர உள்ள புதிய ஓட்டுநர் உரிம விதிகளை அறிவித்துள்ளது.
- இது ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கான செயல்முறையை எளிதாக்கும் நோக்கில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கொண்டுவருகிறது.
- மிகவும் குறிப்பிடத்தக்க மாற்றங்களில் ஒன்றாக, விண்ணப்பதாரர்கள் இனி பிராந்திய போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநருக்கான சோதனைக்கு உட்பட வேண்டியது இல்லை.
- அதற்குப் பதிலாக அங்கீகாரம் பெற்ற தனியார் ஓட்டுநர் பள்ளிகளில் ஓட்டுநர் தேர்வு நடத்தப்படலாம்.




- விண்ணப்பதாரர் இந்தப் பள்ளிகளில் மேற்கொள்ளப்படும் ஓட்டுநர் தேர்வில் தேர்ச்சி பெற்றால், அவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.

- அந்தச் சான்றிதழை பிராந்திய போக்குவரத்து அலுவலகத்தில் அளித்து மேற்கொண்டு எந்த சோதனையும் இல்லாமல் ஓட்டுநர் உரிமத்திற்கு விண்ணப்பிக்கலாம்.
- இருப்பினும், அங்கீகாரம் பெற்ற பள்ளியின் சான்றிதழ் இல்லாத பட்சத்தில், விண்ணப்பதாரர் பிராந்தியப் போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர் தேர்வில் பங்கேற்க வேண்டும்.
- செல்லுபடியாகும் உரிமம் இல்லாமல் மகிழுந்து ஓட்டினால் 2,000 ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும்.

## படிவம் 17C




- நடந்து வரும் மக்களவைத் தேர்தலின்போது வாக்குச் சாவடிகள் வாரியான வாக்காளர்களின் எண்ணிக்கை விவரங்களைப் பதிவேற்றம் செய்ய தேர்தல் ஆணையத்திற்கு (EC) உத்தரவிட வேண்டும் என்ற ஜனநாயகச் சீர்திருத்தங்களுக்கான சங்கத்தின் (ADR) கோரிக்கையை உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ளது.
- வேட்பாளர் அல்லது அவர்களின் முகவரைத் தவிர வேறு எவருக்கும் 17C படிவத்தினை வழங்க சட்டப்பூர்வ அதிகாரம் எதுவும் இல்லை என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- 1961 ஆம் ஆண்டு தேர்தல் நடத்தை விதிகளின் கீழான படிவம் 17C, கீழ்க்காணும் பல தரவுகளை பதிவு செய்கிறது,
  - ஒவ்வொரு சாவடிக்கும் நியமிக்கப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை
  - ஒரு பகுதியில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை
  - வாக்களிக்க வேண்டாம் என்று முடிவு செய்த வாக்காளர்களின் எண்ணிக்கை
  - வாக்களிக்க அனுமதிக்கப்படாத வாக்காளர்களின் எண்ணிக்கை
  - பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (மின்னணு வாக்குப் பதிவு எந்திரத்தில் இருந்து பெறப்பட்ட தரவு)
  - பதிவான வாக்குகளின் எண்ணிக்கையானது வாக்களிக்காதவர்களின் எண்ணிக்கையினைக் கழித்த பிறகு பெறப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதைக் குறித்தல்
  - வாக்குச் சீட்டுகள் பற்றிய தரவு (பெறப்பட்டது, வழங்கப்பட்டது மற்றும் பயன்படுத்தப் படாதது/திரும்பப் பெறப்பட்டவை)
  - வாக்கு முத்திரைகள் பற்றிய தரவுகள் (வழங்கப்பட்ட/பயன்படுத்தப்பட்ட/திரும்பப் பெறப்பட்டவை).

## ஒருங்கிணைந்த போர்க்கள கட்டுப்பாட்டுப் பிரிவுகள்





- இந்திய ஆயுதப் படைகள் ஆனது ஒருங்கிணைந்த போர்க்களக் கட்டுப்பாட்டுப் பிரிவுகளை உருவாக்குவதற்கான இறுதி வரைவைச் செய்து வருகின்றன.
- சிறிய மோதல் அல்லது போரின் போது வரையறுக்கப்பட்ட இராணுவ இலக்குகளுடன் குறிப்பிட்ட ஒரு எதிரி அடிப்படையிலான பல போர்க்களங்களில் ஒன்றிணைந்து நன்கு செயல்படுவதற்காக மூன்று பாதுகாப்புப் படைகளை மிக நன்கு ஒருங்கிணைப்பதை இந்தச் சீர்திருத்தம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மூன்று பாதுகாப்புப் படைகளும் தற்போது தனித்தனியாக அவற்றின் தனிப்பட்ட செயல்பாட்டுக் கட்டுபாட்டுப் பிரிவுகளின் கீழ் இயங்குகின்றன.
- போர்க்களக் கட்டுப்பாட்டு அமைப்புகளை உருவாக்குவதன் மூலம், அவற்றின் பணியாளர்கள், சொத்துக்கள், உள்கட்டமைப்பு மற்றும் தளவாடங்கள் ஆகியன ஒருங்கிணைக்கப் படும்.
- தற்போது, இராணுவம் மற்றும் இந்திய விமானப் படைக்கு தலா ஏழு கட்டுப்பாட்டுப் பிரிவுகளும், கடற்படைக்கு மூன்று கட்டுப்பாட்டுப் பிரிவுகளும் உள்ளன.
- கூடுதலாக, அந்தமான் மற்றும் நிக்கோபார் கட்டுப்பாட்டுப் பிரிவு மற்றும் உத்திசார் படைகள் பிரிவு (SFC) ஆகிய இரண்டு முப்படை கட்டுப்பாட்டுப் பிரிவுகளும் உள்ளன.

## பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் முழுமையான எண்ணிக்கை


- பொதுத் தேர்தலின் முதல் ஐந்து கட்டங்களில் ஒவ்வொரு தொகுதியிலும் பதிவான வாக்குகளின் முழுமையான எண்ணிக்கையை தேர்தல் ஆணையம் (EC) சமீபத்தில் வெளியிட்டது.
- இந்த மக்களவைத் தேர்தலில் பதிவான மொத்த வாக்குகளின் எண்ணிக்கையை தேர்தல் ஆணையம் பகிர்ந்து கொள்வது இதுவே முதல் முறையாகும்.
- முன்னதாக, வாக்குச்சாவடி வாரியான வாக்காளர்கள் எண்ணிக்கை குறித்த தகவல்களைக் கொண்ட 17C படிவத்தின் விவரங்களை வெளியிட தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது.
- அசாமில் உள்ள துப்ரி தொகுதியில் அதிக வாக்குகள் (24.5 லட்சம்) பதிவானது.

- லட்சத்தீவில் குறைந்த வாக்குகள் (48,630) பதிவாகியுள்ளன.
- வாக்குப் பதிவு எண்ணிக்கை:
  - முதல் கட்டமாக 11,00,52,103 வாக்குகள் (மொத்த பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் - 16,63,86,344)
  - இரண்டாம் கட்டமாக 10,58,30,572 வாக்குகள் (மொத்த வாக்காளர்கள் 15,86,45,484),
  - மூன்றாவது கட்டமாக 11,32,34,676 வாக்குகள் (மொத்த வாக்காளர்கள் 17,24,04,907),
  - நான்காவது கட்டமாக 12,24,69,319 வாக்குகள் (மொத்த வாக்காளர்கள் 17,70,75,629), மற்றும்
  - ஐந்தாம் கட்டமாக 5,57,10,618 வாக்குகளும் பதிவானது (மொத்த வாக்காளர்கள் 8,95,67,973).




## BIMSTEC சாசனம்

- BIMSTEC அமைப்பின் வரலாற்றுச் சிறப்பு மிக்க முதல் சாசனம் நடைமுறைக்கு வந்ததை அடுத்து, BIMSTEC தற்போது புதிய உறுப்பினர் நாடுகளும் பார்வையாளர் நாடுகளும் இதில் இணைவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக் குழுவிற்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு ஒரு ‘சட்டப்பூர்வ ஆளுமையை’ பெற்றுள்ளது.
- இது மற்றக் குழுக்கள் மற்றும் நாடுகளுடன் கட்டமைக்கப்பட்ட அரசுமுறைப் பேச்சு வாரத்தைகளில் ஈடுபட முடியும்.
- 1997 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது BIMSTEC அமைப்பானது நீண்ட காலமாக, அதன் ஏழு உறுப்பினர் நாடுகளிடையே ஒருமித்த கருத்தை உருவாக்க முடியாமல் இருந்தது.
- வங்காளதேசம், பூடான், இலங்கை, நேபாளம், தாய்லாந்து, மியான்மர் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் இந்த அமைப்பின் உறுப்பினர் நாடுகளாக உள்ளன.




# சர்வதேசச் செய்திகள்

## அறிவுசார் சொத்துப் பாதுகாப்பிற்கான முன்னுரிமை கண்காணிப்புப் பட்டியல்

- அமெரிக்க அரசு நிர்வாகத்தின் 2024 சிறப்பு 301 அறிக்கையில் இந்தியா முதல்நிலை கண்காணிப்புப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.
- அறிவுசார் சொத்துரிமையின் (IP) பாதுகாப்பு மற்றும் அமலாக்கத்தில் இந்தியா "உலகின் மிகவும் சவால் மிகுந்த" முக்கியப் பொருளாதாரங்களில் ஒன்றாக உள்ளது.
- இந்தியாவைப் பொறுத்த வரையில் பின்வருவன உள்ளிட்ட பல்வேறு நீண்டகாலப் பிரச்சனைகள் உள்ளன:
  - போதிய அறிவுசார் சொத்துரிமை அமலாக்கம் இல்லாமை,
  - இயங்கலையில் மேற்கொள்ளப்படும் அதிக விகிதங்களிலான கொள்ளை,
  - ஒரு விரிவான வர்த்தக முத்திரை எதிர்ப்பு பின்னடைவு, மற்றும்
  - வர்த்தக இரகசியங்களைப் பாதுகாப்பதற்கான போதுமான சட்ட வழிமுறைகள் இல்லாமை.
- மேலும், இந்தியா இன்றும் WIPO இணைய ஒப்பந்தங்களை முழுமையாகச் செயல் படுத்தவில்லை மற்றும் சட்டப்பூர்வ பதிப்புரிமை உரிமங்கள் ஊடாடும் வகையிலான பரிமாற்றங்களுக்கு நீட்டிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யவில்லை.

❖ இந்தியாவைத் தவிர, அர்ஜென்டினா, சிலி, சீனா, இந்தோனேசியா, ரஷ்யா மற்றும் வெனிசுலா ஆகிய நாடுகளும் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.




## பருவநிலை நெகிழ்திறன் நிதி - UNHCR

❖ ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் முகமையான ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஆணையம் (UNHCR) ஆனது, UNHCR பருவநிலை நெகிழ்திறன் நிதியை அறிமுகப்படுத்தியுள்ளது.

❖ பருவநிலை மாற்றத்தினால் மிகவும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்த சமூகங்களின் பாதுகாப்பை அதிகரிப்பதை இது பெரும் நோக்கமாகக் கொண்டுள்ளது.




❖ இந்த நிதியம் ஆனது முதன்முறையாக, பருவநிலை தொடர்பான அதிர்ச்சிகளுக்குத் தயார் படுத்தவும், அதனை எதிர்கொள்ளவும், அதிலிருந்து மீண்டு வரவும் அவர்களுக்கு ஆற்றலை வழங்கும் வகையிலும் மிகவும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் புலம் பெயர்ந்தச் சமூகங்களைப் பாதுகாப்பதற்குமான பல்வேறு நிதி சார் முயற்சிகளை

மேற்கொள்வதை பிரத்தியேக இலக்காகக் கொண்டுள்ளது.

- 2022 ஆம் ஆண்டில், 70 சதவீதத்திற்கும் அதிகமான அகதிகள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்கள் பருவநிலையால் மிக அதிகம் பாதிக்கப்படக் கூடிய நாடுகளில் இருந்து வெளியேறினர்.
- உலகளவில் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்தில் உள்ள 114 மில்லியனுக்கும் அதிகமான மக்களைப் பாதுகாப்பதற்காக UNHCR செயல்படுகிறது.

## 2030 ஆம் ஆண்டிற்கான உலக சுகாதார அமைப்பின் புதிய உலகளாவிய மலேரியா உத்தி

- உலக சுகாதார அமைப்பின் உலகளாவிய மலேரியா திட்டமானது, மலேரியா பாதிப்பு போக்குகளின் பாதையை மாற்ற உதவும் வகையில் 2030 ஆம் ஆண்டு வரை அதன் முன்னுரிமைகள் மற்றும் முக்கியச் செயல்பாடுகளை குறிப்பிட்டுக் காட்டும் ஒரு புதிய செயல்பாட்டு உத்தியை வெளியிட்டுள்ளது.
- இந்த உத்தியானது உலக சுகாதார அமைப்பு அதன் முயற்சிகளில் கவனம் செலுத்த உள்ள 4 உத்திசார் நோக்கங்களைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது.
  - விதிமுறைகள் மற்றும் தரநிலைகளை உருவாக்குதல்,
  - புதிய கருவிகள் மற்றும் புதுமைகளை அறிமுகப்படுத்துதல்,
  - தாக்கத்திற்கான உத்திசார் தகவலை ஊக்குவித்தல், மற்றும்
  - உலகளாவிய மலேரியா எதிர் நடவடிக்கைகளுக்கு தொழில்நுட்பம் சார்ந்த ஒரு தலைமையை வழங்குதல்.
- 2022 ஆம் ஆண்டில் உலகளவில் 608,000 மலேரியா காரணமான உயிரிழப்புகளும், 249 மில்லியன் புதிய மலேரியா பாதிப்புகளும் பதிவானதாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- உலகளவில் 95% மலேரியா காரணமான உயிரிழப்புகளுடனும் 94% பாதிப்புகளுடனும் ஆப்பிரிக்கா அதிக விகிதாசாரப் பாதிப்பினைக் கொண்டுள்ளது.


| Goals | Milestones | | Targets |
|---|---|---|---|
| | 2020 | 2025 | 2030 |
| 1. Reduce malaria mortality rates globally compared with 2015 | At least 40%<br>18% reduction achieved<br>22% off track | At least 75% | At least 90% |
| 2. Reduce malaria case incidence globally compared with 2015 | At least 40%<br>3% reduction achieved<br>37% off track | At least 75% | At least 90% |
| 3. Eliminate malaria from countries in which malaria was transmitted in 2015 | At least 10 countries<br>On track | At least 20 countries | At least 35 countries |
| 4. Prevent re-establishment of malaria in all countries that are malaria-free | Re-establishment prevented<br>On track | Re-establishment Prevented | Re-establishment prevented |

## LGBT சமூகத்தினருக்கு எதிரான சட்டம் – ஈராக்




- ஈராக் நாட்டுப் பாராளுமன்றம் ஆனது தன் பாலின உறவுகளை 15 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும் வகையிலான குற்றவியல் நடவடிக்கையாக அறிவிக்கும் மசோதாவை நிறைவேற்றியுள்ளது.
- 1988 ஆம் ஆண்டு விபச்சாரத்திற்கு எதிரான சட்டத்தில் மேற்கொள்ளப்படும் சில திருத்தங்களின் கீழ் திருநர்களுக்கு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப் படும்.
- முந்தைய சட்ட வரைவு ஆனது தன்பாலின உறவுகளுக்கு மரணத் தண்டனையை அதற்கான தண்டனையாக முன்மொழிந்தது.
- புதிய சட்டத் திருத்தங்கள் தன்பாலின உறவுகளில் ஈடுபடுபவர்களுக்கு 10 முதல் 15 ஆண்டுகள் வரையில் சிறைத்தண்டனை விதிக்க நீதிமன்றங்களுக்கு வழிவகை செய்கிறது.
- தன்பாலின உறவுகளை "ஊக்குவிப்பதற்கு" குறைந்தபட்சம் ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனையும் வழங்கப்படும்.


## கோவிஷீல்டு தடுப்பூசி குறித்த சர்ச்சை




- ஐக்கியப் பேரரசில் அமைந்துள்ள அஸ்ட்ராஜெனிகா எனப்படும் மருந்து உற்பத்தி நிறுவனமானது, தனது கோவிட் தடுப்பூசியானது, 'மிகவும் அரிதான சந்தர்ப்பங்களில்' இரத்த உறைவு தொடர்பான பக்க விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என்று ஒப்புக் கொண்டதையடுத்து சர்ச்சை வெடித்தது.
- இந்தத் தடுப்பூசி "மிகவும் அரிதான சந்தர்ப்பங்களில்" இரத்தத் தட்டையணுக்கள் குறைபாடுடன் கூடிய (த்ரோம்போசைட்டோபீனியா சிண்ட்ரோம்-TTS) இரத்தக் குழாயில் இரத்த உறைவை ஏற்படுத்தக் கூடும் என்று அதன் சட்டப்பூர்வ ஆவணம் குறிப்பிடுகிறது.
- இந்திய சீரம் நிறுவனத்தினால் (SII) தயாரிக்கப்பட்ட அதே தடுப்பூசியானது இந்தியாவில் கோவிஷீல்டு என்று அறியப்பட்டது.
- TTS என்பது இரத்தக் கட்டிகளுடன் (த்ரோம்போசிஸ்), இரத்த தட்டையணுக்கள் (த்ரோம் போசைட்டோபீனியா) குறைவாக காணப்படும் ஓர் அரிய பாதிப்பு நிலையாகும்.


## நகுரு அணை சேதம்

- தெற்கு கென்யாவின் ரிஃப்ட் பள்ளத்தாக்கு பகுதியில் உள்ள ஒரு கிராமத்திற்கு அருகே பழைய கிஜாபே அணை சமீபத்தில் உடைந்தது.
- இது கென்யாவின் முன்னாள் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியாளர்களால் மேற் கொள்ளப் பட்ட இரயில்வே கட்டுமானப் பணிகளுக்குப் பிறகு பல தசாப்தங்களாக இயற்கையாக உருவான மலையோரத் அணை அமைப்பாகும்.
- அண்டை நாடுகளான தான்சானியா மற்றும் புருண்டியுடன் சேர்ந்து கென்யாவும் சமீபத்தில் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.
- கென்யாவில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் குப்பைகள், கற்கள் மற்றும் மண் ஆகியவற்றினை படியச் செய்துள்ளது.
- இதனால் கால்வாய் அடைக்கப் பட்டு இறுதியில் அணை உடைந்தது.
- கடந்த ஆண்டின் இறுதியில், கென்யா, சோமாலியா மற்றும் எத்தியோப்பியாவில் ஏற்பட்ட மழை மற்றும் வெள்ளத்தில் 300 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.
- ஐக்கிய நாடுகள் சபையின் உலக வானிலை அமைப்பின் கூற்றுப்படி, சமீபத்திய எல் நினோ இதுவரை பதிவாகிய ஐந்தாவது வலிமையான ஒன்றாகும்.



## பாகிஸ்தானின் முதலாவது நிலவு ஆய்வுக் கலம்




- ❖ பாகிஸ்தானின் நிலவு ஆய்வுக் கலமான iCube-Q, சீனாவின் சாங்'கே 6 (Chang'e-6) சந்திர ஆய்வுக் கலத்தின் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது.
- ❖ iCube-Q சுற்றுக் கலம் ஆனது நிலவின் மேற்பரப்பினைப் படம் பிடிப்பதற்காக இரண்டு ஒளியிழை ஒளிப்படக் கருவிகளைச் சுமந்து செல்லும்.
- ❖ இது சீனாவின் ஷாங்காய் பல்கலைக்கழகம் மற்றும் பாகிஸ்தானின் தேசிய விண்வெளி முகமையுடன் இணைந்து பாகிஸ்தானின் விண்வெளி தொழில்நுட்ப நிறுவனத்தினால் (IST) வடிவமைத்து உருவாக்கப்பட்டுள்ளது.
- ❖ சாங்'கே 6 கலம் ஆனது நிலவின் வெகு தொலைவில் உள்ள மண் மற்றும் பாறை மாதிரிகளைச் சேகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## G7 நாடுகள் & அதன் நிலக்கரி இலக்குகள்




- ❖ G7 அமைப்பின் உறுப்பினராக உள்ள முக்கிய ஜனநாயக நாடுகளின் ஆற்றல் அமைச்சர்கள் 2030 ஆம் ஆண்டுகளின் முதல் பாதியில் மின் உற்பத்தியில் நிலக்கரி பயன்பாட்டை நிறுத்த ஒப்புக் கொண்டனர்.

- ஜெர்மனி தனது சட்டத்தில் கடைசியாக 2038 ஆம் ஆண்டிற்குள் நிலக்கரி ஆலைகளை மூடுவதற்கான இறுதி இலக்கை நிர்ணயித்துள்ளது அதே நேரத்தில் ஜப்பான் நாடானது அதற்கான நாளை நிர்ணயிக்கவில்லை.
- நிலக்கரி பயன்பாடு குறித்த ஒப்பந்தம் ஆனது, கடந்த ஆண்டு நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பருவநிலை குறித்த 28வது பங்குதாரர்கள் மாநாட்டின் (COP28) படி புதைபடிம எரிபொருட்களின் பயன்பாட்டினைப் படிப்படியாக அகற்றுவதற்கான திசையில் ஒரு குறிப்பிடத் தக்கப் படிநிலையைக் குறிக்கிறது.

## ஹாங்கோர் ரக நீர்மூழ்கிக் கப்பல்



- பாகிஸ்தான் நாட்டிற்காக சீன நாட்டினால் கட்டமைக்கப்பட்ட முதல் ஹாங்கோர் வகை நீர்மூழ்கிக் கப்பல் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 2028 ஆம் ஆண்டிற்குள் பாகிஸ்தான் கடற்படை தனது கடற்படையில் சேர்ப்பதற்கு திட்டமிட்டுள்ள இந்த வகையைச் சேர்ந்த எட்டு நீர்மூழ்கிக் கப்பல்களில் இதுவே முதலாவது ஆகும்.
- ஹங்கோர்-வகை கப்பல் ஆனது, டீசல் மற்றும் மின்சார எரிபொருளில் இயங்கும் தாக்குதல் வகை நீர்மூழ்கிக் கப்பலான சீனாவின் 039A யுவான் வகுப்பின் ஏற்றுமதிக்காக உருவாக்கப்படும் மாறுபாடாகும்.
- இது பிரான்சு நாட்டின் ஸ்கார்பியன் ரகத்தினை அடிப்படையாகக் கொண்ட இந்தியாவின் கல்வாரி வகை நீர்மூழ்கிக் கப்பல்களின் நேரடி இணை வகையாகும்.

## மோதல் நிறைந்த பகுதிகளில் கிடைக்கப் பெறும் தாதுக்கள்

- காங்கோ ஜனநாயகக் குடியரசு (DRC) ஆற்றல் மற்றும் எண்ணிமப் பரிமாற்றங்களை மேம்படுத்துவதற்காக "இரத்த தாதுக்களை" வாங்கும் பன்னாட்டு நிறுவனங்கள் அதன் பிராந்தியத்தில் மோதல்களைத் தூண்டுவதாகக் குற்றம் சாட்டியுள்ளது.

- அமெரிக்காவின் திறன் பேசித் தயாரிப்பு நிறுவனமான ஆப்பிள், வழங்கீட்டாளர்களை ஆய்வு செய்யாமல் கனிமங்களுக்குப் பணம் செலுத்துவதாக குற்றம் சாட்டியுள்ளது.
- ஆப்பிள் நிறுவனம், அதன் வழங்கீட்டாளர்கள் வாங்கும் டின், டங்ஸ்டன், டான்டலம் - 3Ts - மற்றும் தங்கம் சிக்கல் இல்லாதவை மற்றும் போருக்குப் பயன்படும் வகையில் நிதி அளிப்பதில்லை என்று வாதிட்டது.
- டான்டலம், டின், டங்ஸ்டன் மற்றும் தங்கம் (ஒட்டு மொத்தமாக 3T அல்லது 3TG என அழைக்கப் படுகிறது) ஆகியவை நிறைந்த DRC நாட்டின் கனிமங்கள் நிறைந்த கிழக்குப் பகுதி பல தசாப்தங்களாக வன்முறையால் பாதிக்கப்பட்டுள்ளன.
- கிவு பாதுகாப்புக் கண்காணிப்பு அமைப்பின் கூற்றுப்படி, DRC நாட்டின் கிழக்குப் பகுதியில் தோராயமாக 120 ஆயுதக் குழுக்கள் உள்ளன.
- இந்த ஆயுதக் குழுக்கள் சுரங்கம் மற்றும் கனிமங்களின் வர்த்தகத்தினால் பல்வேறு வகைகளில் பயனடைகின்றன.





## சிறப்பு 301 அறிக்கை 2024

| Priority Watch List | Watch List | |
|---|---|---|
| Argentina | Algeria | Guatemala |
| Chile | Barbados | Mexico |
| China | Belarus | Pakistan |
| India | Bolivia | Paraguay |
| Indonesia | Brazil | Peru |
| Russia | Bulgaria | Thailand |
| Venezuela | Canada | Trinidad and Tobago |
| | Colombia | Türkiye |
| | Ecuador | Turkmenistan |
| | Egypt | Vietnam |

- அமெரிக்க நாடானது, சீனா, ரஷ்யா, வெனிசுலா மற்றும் மூன்று நாடுகளுடன் இந்திய நாட்டினையும் 'முன்னுரிமை கண்காணிப்புப் பட்டியலில்' சேர்த்துள்ளது.

- அறிவுசார் சொத்துரிமைப் பாதுகாப்பு மற்றும் அமலாக்கம் தொடர்பாக இந்தியா "உலகின் மிகவும் சவால் மிகுந்த" முக்கியப் பொருளாதாரங்களில் ஒன்றாக உள்ளது.
- இந்தியா இன்னும் உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பின் (WIPO) இணைய ஒப்பந்தங்களை முழுமையாகச் செயல்படுத்த வேண்டும் மற்றும் பதிப்புரிமை சட்டப் பூர்வ உரிமங்கள் ஊடாடும் வகையிலானப் பரிமாற்றங்களுக்கு நீட்டிக்கப் படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

## புதினின் ஐந்தாவது ஆட்சிக்காலம்




- மே 07 ஆம் தேதியன்று கிரெம்ளினில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில் ரஷ்ய அதிபராகப் பொறுப்பேற்று விளாடிமிர் புதின் அவர்கள் தனது ஐந்தாவது ஆட்சிக் காலத்தினைத் தொடங்கினார்.
- புதின் முதன்முறையாக 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றார் மற்றும் இரண்டாவது முறையாக 2004 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்றார்.
- அதிபராக இரண்டு முறை பதவி வகித்த பிறகு, இரண்டு முறை தொடர்ந்து அரசத் தலைவராகப் பதவி வகிப்பதற்கு அரசியலமைப்புச் சட்டம் விதித்துள்ள தடையைத் தவிர்ப்பதற்காக 2008 ஆம் ஆண்டில் அவர் மீண்டும் பிரதமராகப் பொறுப்பேற்றார்.
- மாஸ்கோவில் ஜனநாயக சார்பு அமைப்புகளின் எதிர்ப்புகள் இருந்த போதிலும் அவர் 2012 ஆம் ஆண்டில் அதிபர் பதவியில் பொறுப்பேற்றதோடு, பின் 2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் நான்காவது முறையாக வெற்றி பெற்றார்.

## பெண்கள் மீதான வன்முறைக்கு எதிரான சட்டம்




- பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் முதல் சட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளது.
- கட்டாயத் திருமணம், பெண் பிறப்புறுப்பைச் சிதைத்தல் மற்றும் இயங்கலை வழியான பாலியல் துன்புறுத்தல் ஆகியவற்றுக்கு எதிரான ஒரு நடவடிக்கை இதில் அடங்கும் ஆனால் இதில் கற்பழிப்பு என்பதன் பொதுவான வரையறை நிர்ணயிக்கப் பட வில்லை.
- 27 நாடுகளில் உள்ள பெண்களை பாலின அடிப்படையிலான வன்முறையில் இருந்து பாதுகாப்பதை இந்த மாபெரும் சட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இயங்கலையில் கண்காணித்துப் பின்தொடர்தல், பாலியல் துன்புறுத்தல், வெறுப்பு அல்லது வன்முறையைத் தூண்டுதல், மற்றும் அந்தரங்கப் படங்களை ஒருவரின் அனுமதி இல்லாமல் பகிர்தல் உள்ளிட்ட பெண்களுக்கு எதிரான இணைய வெளி வன்முறையையும் இது குற்றமாக அறிவிக்கிறது.

## உலகின் மிகப்பெரிய கார்பன் பிடிப்பு ஆலை

- வளிமண்டலத்தில் இருந்து கார்பன் டை ஆக்சைடை அகற்றுவதற்காக வடிவமைக்கப் பட்ட உலகின் மிகப்பெரிய மையமானது ஐஸ்லாந்தில் செயல்படத் தொடங்கியது.
- "மாமோத்" என்று அழைக்கப்படுகின்ற இந்த ஆலையானது, கிளைம்வொர்க்ஸ் என்ற நிறுவனத்தின் இரண்டாவது வணிக ரீதியான நேரடி காற்றுப் பிடிப்பு ஆலை ஆகும்.
- இந்த அதிநவீனத் தொழில்நுட்பம் ஆனது காற்றை இழுத்து, வேதியியல் முறையில் கார்பன் டை ஆக்சைடைப் பிரித்தெடுத்து, பின்னர் அதை நிலத்தடியில் சேமித்து, கல்லாக மாற்றும் அல்லது மீண்டும் பயன்படுத்தும் வகையில் அதனை மாற்றும்.
- க்ளைம்வொர்க்ஸ் நிறுவனத்தினால் இயக்கப்படும் மாமோத் நேரடி காற்றுப் பிடிப்பு மற்றும் சேமிப்பு (DAC+S) ஆலையானது, சுவிஸ் நிறுவனத்தின் ஓர்கா எனப்படும் முந்தைய ஆலையை விட 10 மடங்கு பெரியதாகும்.



## ஹேக் உடன்படிக்கையின் 70வது ஆண்டு நிறைவு

- ஆயுத மோதலில் பண்பாடு சார்ந்த சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான ஹேக் உடன்படிக்கையின் 70வது ஆண்டு நிறைவை யுனெஸ்கோ அமைப்பு நினைவு கூருகிறது.
- இது 1954 ஆம் ஆண்டு மே 14 ஆம் தேதியன்று உருவாக்கப்பட்டது.
- இது 1999 ஆம் ஆண்டு மார்ச் 24 ஆம் தேதியன்று கையொப்பத்திற்காக முன் வைக்கப் பட்ட அதன் இரண்டாவது நெறிமுறையின் 25 வது ஆண்டு நிறைவு விழாவாகும்.
- அமைதிக் காலங்களிலும், ஆயுத மோதலின் போதும் கலாச்சாரம் சார்ந்த பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்காக வேண்டி பிரத்தியேகமாக அர்ப்பணிக்கப்பட்ட முதல் மற்றும் மிக விரிவான பலதரப்பு ஒப்பந்தம் இதுவாகும்.
- இதைத் தொடர்ந்து, முன்னதாக சர்வதேச ப்ளூ ஷீல்டு குழு என அறியப்பட்ட ப்ளூ ஷீல்டு (நீலக் கேடயம்) அமைப்பு 1996 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- ப்ளூ ஷீல்டு வலையமைப்பு ஆனது, கலாச்சாரம் சார்ந்த அமைப்புகளின் பாதுகாப்பில் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு இணையானதாகக் குறிப்பிடப்படுகிறது.
- 1954 ஆம் ஆண்டு ஹேக் உடன்படிக்கையில் இந்தியாவும் அங்கம் பெற்றுள்ளது.



## HIV பற்றிய உலக சுகாதார அமைப்பின் சான்றிதழ்




- ❖ பெலிஸ், ஜமைக்கா, செயின்ட் வின்சென்ட் மற்றும் கிரெனடைன்ஸ் ஆகிய மூன்று சிறிய கரீபியன் நாடுகள் தாயிடமிருந்துக் குழந்தைக்குப் பரவும் HIV மற்றும் சிபிலிஸ் தொற்றுகளை ஒழித்ததற்காக உலக சுகாதார அமைப்பின் சான்றிதழைப் பெற்று உள்ளன.
- ❖ தாயிடமிருந்து குழந்தைக்கு HIV பரவும் விகிதத்தை ஐந்து சதவீதத்திற்கும் குறைவாக குறைத்துள்ள நாடுகளுக்கு உலக சுகாதார அமைப்பினால் இந்தச் சான்றிதழ் வழங்கப் படுகிறது.
- ❖ 2022 ஆம் ஆண்டில் இந்தியாவில் 70,000 குழந்தைகள் உட்பட 2.5 மில்லியன் மக்கள் HIV தொற்றினைக் கொண்டுள்ளனர்.
- ❖ 2022 ஆம் ஆண்டில் சுமார் 66,000 பேர் HIV தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற நிலையில் இது 2021 ஆம் ஆண்டில் இருந்த எண்ணிக்கையினை விட சற்று அதிகம் ஆகும்.
- ❖ 2022 ஆம் ஆண்டில் 32,000 எய்ட்ஸ் தொடர்பான உயிரிழப்புகள் (ஒவ்வொரு மணி நேரத்திற்கும் நான்கு உயிரிழப்புகள்) பதிவாகியுள்ளன.
- ❖ ஆனால் ஓராண்டில் பதிவான ஒட்டு மொத்த உயிரிழப்புகள் எண்ணிக்கையானது 25 சதவீதம் குறைந்துள்ளது.
- ❖ தாய்ப்பால் கொடுக்கும் போது தாயிடமிருந்துக் குழந்தைக்கு வைரஸ் பரவும் விகிதம் 24.3 சதவீதம் ஆகும்.


## ஆப்கானிஸ்தான் நாட்டில் ஏற்பட்ட திடீர் வெள்ளம்

- ❖ பாதக்சான், கோர், பாக்லான் மற்றும் ஹெராத் மாகாணங்கள் ஆகிய அனைத்துப் பகுதிகளும் கடும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.
- ❖ அண்மைக் காலத்தில் ஏற்பட்ட தொடர் இயற்கைப் பேரிடர்களின் வரிசையில் இந்த திடீர் வெள்ளமும் சேர்ந்துள்ளது.
- ❖ பருவநிலை மாற்றத்தின் விளைவுகளால் உலகின் மிகவும் இடர் மிக்க நாடுகளில் ஒன்றாக ஆப்கானிஸ்தான் உள்ளது.




## ஒராங்குட்டான் யுக்தி

- மலேசியா தனது பாமாயிலை வாங்கும் வெளிநாடுகளுக்கு ஒராங்குட்டான்களை பரிசாக வழங்குவது குறித்து பரிசீலித்து வருகிறது என்ற நிலையில் இது "ஒராங்குட்டான் இராஜதந்திரம்/ யுக்தி " என்று அழைக்கப்படுகிறது.
- இந்தத் திட்டமானது சீனாவின் உலகப் புகழ்பெற்ற "பாண்டா ராஜதந்திரத்தை" நன்கு பிரதிபலிக்கிறது.
- தென்கிழக்கு ஆசியாவில் காடுகளை அழிப்பதற்கும், ஒராங்குட்டான் வாழ்விடங்களை அழித்ததற்கும் பாமாயில் தொழில் காரணமென்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.
- பனை எண்ணெய் உற்பத்திக்காக மலேசியா சமீபத்தியத் தசாப்தங்களில் மில்லியன் கணக்கான ஹெக்டேர் காடுகளை இழந்துள்ளது.
- சீனாவின் இந்தத் திட்டமானது, பாதுகாப்பு முயற்சிகளை ஊக்குவிக்க பாண்டாக்களை வழங்குவதை உள்ளடக்கியதாகும்.



- ஆனால் ஒராங்குட்டான் யுக்தி மக்கள் தொடர்புகளில் மட்டுமே கவனம் செலுத்துகிறது.
- போர்னியன், சுமத்ரான் மற்றும் தபனுலி என ஒராங்குட்டான்களில் மூன்று வகைகள் உள்ளன.
- உலக வனவிலங்கு நிதியத்தால் (WWF) போர்னியன் ஒராங்குட்டான்கள் அருகி வரும் வரும் நிலையில் உள்ளவையாக பட்டியலிடப்பட்டுள்ளன.
- சுமத்ரா மற்றும் தபனுலி ஆகிய இனங்கள் மிகவும் அருகி வரும் நிலையில் உள்ளதாக பட்டியலிடப் பட்டுள்ளன.

## வடி/இணைப்புக் குழாயைப் பயன்படுத்துவதற்கான புதிய வழிகாட்டுதல்கள்





- மருத்துவ நடைமுறைகளின் போது சிறிய இரத்த நாளங்களில் வைக்கப்படும் இணைப்புக் குழாயைப் பயன்படுத்துவதால் ஏற்படும் இரத்த ஓட்டம் மற்றும் பிற நோய்த் தொற்றுகளைத் தடுப்பதற்கான முதல் உலகளாவிய வழிகாட்டுதல்களை உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ளது.
- இந்த இணைப்புக் குழாய்களை உட்செலுத்துதல், பராமரித்தல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றில் உள்ள மோசமான நடைமுறைகள் ஆனது கிருமிகளை நேரடியாக இரத்த ஓட்டத்தில் உட்செலுத்தும் அபாயத்தைக் கொண்டுள்ளன.
- இது செப்சிஸ் (புண் காரணமாக இரத்தத்தில் நச்சுத்தன்மை உண்டாதல்) போன்ற தீவிர நிலைகளுக்கும், மூளை மற்றும் சிறுநீரகம் போன்ற முக்கிய உறுப்புகளில் மேற் கொள்ளப் படும் சிகிச்சைகளில் கடினமான சிக்கல்கள் ஏற்படவும் வழிவகுக்கும்.
- இந்த இணைப்புக் குழாய்களை செருகும் இடத்தில் உள்ள மென்மையான திசுக்களில் தொற்றுகளும் ஏற்படலாம்.
- 2000-2018 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பான செப்சிஸ் தொற்றுகளால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த நோயாளிகளின் சராசரி எண்ணிக்கை 24.4% என்று உலக சுகாதார அமைப்பு மதிப்பிட்டுள்ளது.

- தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளில் இந்த உயிரிழப்பு 52.3% ஆக அதிகரித்துள்ளது.
- இந்தப் புதிய வழிகாட்டுதல்களில் 14 நல்ல நடைமுறை குறித்த அறிக்கைகள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கான முக்கியப் பிரிவுகள் குறித்த சுமார் 23 பரிந்துரைகள் உள்ளன.

## மவுண்ட் நெம்ருட் எரிமலை

- துருக்கியில் உள்ள மவுண்ட் நெம்ருட் எரிமலையில் உருவாகும் அசாதாரணமான பள்ளம் அல்லது கால்டெராவின் அரிய காட்சியினை நாசா படம் பிடித்துள்ளது.
- இந்தப் படம் ஆனது, இந்தப் முழுப் பகுதியும் திடப்படுத்தப்பட்ட பாறைக் குழம்புப் பகுதி மற்றும் ஒரு ஏரி என எப்படி இரண்டு பகுதிகளாகப் பிரிகிறது என்று காட்டுகிறது.
- இது சீனத் தத்துவத்தில் கூறப்படும் யின்-யாங் சின்னத்தினை ஒத்துள்ளது.




## உலக சுகாதார அமைப்பு - உப்பு நுகர்வு மற்றும் உயர் இரத்த அழுத்தம் மீதான நடவடிக்கை

- உலக சுகாதார அமைப்பு /ஐரோப்பா "உப்பு நுகர்வு மற்றும் உயர் இரத்த அழுத்தம் மீதான நடவடிக்கை" என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- உப்பு சேர்த்துக் கொள்வதைக் குறைக்கவும், மக்களின் ஆரோக்கியத்தை நன்கு பாதுகாப்பதற்காக உயர் இரத்த அழுத்தத்தைக் கண்டறிந்துக் கட்டுப்படுத்தவும் இந்த அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.
- உடல்நல அபாயங்களைக் குறைக்க மக்கள் தினமும் 5 கிராமுக்குக் குறைவான உப்பை (2 கிராமுக்குக் குறைவான சோடியத்திற்குச் சமம்) உட்கொள்ள வேண்டும்.
- ஐரோப்பிய பிராந்தியத்தில் உடல்நலக் குறைபாடு மற்றும் முன்கூட்டிய மரணத்திற்கு இருதய நோய்கள் (CVDs) முக்கிய காரணமாக உள்ளன.
- ஆண்டுதோறும் 42.5% உயிரிழப்புகளை ஏற்படுத்துகிற இது ஒவ்வொரு நாளும் 10,000 உயிரிழப்புகளுக்குச் சமம் ஆகும்.





## நாகோர்னோ-கராபாக் சர்ச்சை

- ஆர்மீனியா மற்றும் அஜர்பைஜான் ஆகிய நாடுகள் தங்களுக்குள் பகிரப்பட்ட ஒரு எல்லையின் சர்ச்சைக்குரிய பிரிவுகளில் மீதான தீர்வு ஒப்பந்தத்தினை மேற்கொண்டு உள்ளன.
- இரண்டு காகசஸ் நாடுகளுக்கு இடையிலான இந்த ஒப்பந்தம் ஆனது, 1990 ஆம் ஆண்டுகளில் ஆர்மீனியா நாட்டினால் கைப்பற்றப்பட்ட நான்கு எல்லைப்புறக் கிராமங்களை அஜர்பைஜானுக்குத் திரும்ப வழங்குவதை உள்ளடக்கும்.
- இந்த நடவடிக்கை மூலம் பகானிஸ் அய்ரம், அஷாகி அஸ்கிபாரா, கெய்ரிம்லி மற்றும் கிஜில்ஹாஜிலி ஆகிய நான்கு எல்லைப்புறக் கிராமங்கள் அஜர்பைஜான் நாட்டின் கட்டுப்பாட்டிற்குள் வரும்.
- ஆர்மீனியா மற்றும் அஜர்பைஜான் 1990 ஆம் ஆண்டுகளிலும் 2020 ஆம் ஆண்டிலும் அப்போதைய நாகோர்னோ-கராபக் என்ற பிரிந்து சென்ற பகுதியின் மீதான கட்டுப்பாட்டிற்காக இரண்டு போர்களில் ஈடுபட்டன.



## உலகளாவிய ஒத்துழைப்பு மற்றும் பெருந்தொற்று ஒப்பந்தம்




- ❖ உலக நாடுகள் அதிகரித்து வரும் நுண்ணுயிர்களின் எதிர்ப்பு திறன் (AMR) என்ற சுகாதார சவாலை எதிர்கொள்கின்றதையடுத்து சர்வதேச பெருந்தொற்று உடன்படிக்கையை மிக முக்கியத்துவத்துடன் இறுதி செய்ய ஐக்கிய நாடுகள் சபை அழைப்பு விடுத்துள்ளது.
- ❖ பொது சுகாதாரத்திற்கு ஆபத்தை விளைவிக்கும் புதிய நோய்க்கிருமிகளுக்கு எதிரான உலகளாவிய முயற்சிகளை ஒன்றிணைப்பதற்காக இந்தப் பெருந்தொற்று ஒப்பந்தம் திட்டமிடப்பட்டுள்ளது.
- ❖ 2019 ஆம் ஆண்டில், ஆண்டுதோறும் நுண்ணுயிர்களின் எதிர்ப்புத் திறன்களால் சுமார் 1.27 மில்லியன் உயிரிழப்புகளும் மற்றும் நுண்ணுயிர்களின் எதிர்ப்பு திறன் சார்ந்த பிரச்சினைகளால் 4.9 மில்லியன் உயிரிழப்புகளும் பதிவாகின.
- ❖ இதன் மிகவும் சாத்தியமான தாக்கம் 2050 ஆம் ஆண்டில் ஆண்டிற்கு 10 மில்லியன் உயிரிழப்புகளாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## பாக்டீரிய நோய்க்கிருமிகளின் முன்னுரிமைப் பட்டியல்

- ❖ உலக சுகாதார அமைப்பினால் (WHO) புதுப்பிக்கப்பட்ட சமீபத்திய பாக்டீரிய நோய்க் கிருமிகளின் முன்னுரிமைப் பட்டியல் (BPPL) வெளியிடப்பட்டது.
- ❖ பல்வகை பாக்டீரியங்களுக்கு எதிரான நுண்ணுயிர் எதிர்ப்பிகளுக்கு எதிரான கிராம்-நெகட்டிவ் பாக்டீரியாக்கள் மற்றும் ரிஃபாம்பிசின் நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்திற்கு எதிர்ப்புத் திறன் கொண்ட மைக்கோபாக்டீரியம் டியுபர்குளோசிஸ் ஆகியவை இதில் அடங்கும்.
- ❖ நுண்ணுயிர்-எதிர்ப்பு பாக்டீரியாக்களைக் கொண்ட 15 குடும்பங்கள் முக்கியமான, உயர் நிலை மற்றும் நடுத்தர வகைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன.
- ❖ கடைசியாக இது போன்றப் பட்டியலை வெளியிட்டு ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு, சால்மோனெல்லா மற்றும் ஷிகெல்லா உள்ளிட்ட உயர் முன்னுரிமை நோய்க்கிருமிகள், சூடோமோனாஸ் ஏருகினோசா மற்றும் ஸ்டேஃபிளோகோகஸ் ஆரியஸ் ஆகியவற்றுடன் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் அதிக பாதிப்பு கொண்டவை என்று உலக சுகாதார அமைப்பு கூறியது.

- இவை சுகாதாரப் பாதுகாப்பு அமைப்புகளில் சில குறிப்பிடத்தக்கச் சவால்களை முன் வைக்கின்றன.




## MATES புலம்பெயர்வு திட்டம்

- இந்திய நாட்டினருக்கான திறம் மிக்க இளம் தொழில்முறை வல்லுநர்களுக்கான புலம் பெயர்வு திட்டத்திற்கான தொடக்க தேதியை ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது.
- ஆவணத்தின் படி MATES புலம் பெயர்வு திட்டம் ஆனது நவம்பர் 01 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வரும்.
- இது 3,000 இந்தியப் பட்டதாரிகள் மற்றும் இளம் தொழில்முறை வல்லுநர்களுக்கு ஒரு புதிய புலம்பெயர்வு வழி முறையினை உருவாக்கும்.
- MATES திட்டத்தின் கீழ், குறிப்பிட்ட படிப்புத் துறைகளில் அறிவும் திறமையும் கொண்ட இந்தியப் பட்டதாரிகள் மற்றும் இளம் தொழில் முறை வல்லுநர்கள் (18 முதல் 30 வயது வரை) ஆஸ்திரேலியாவில் இரண்டு ஆண்டுகள் வரையில் வாழ்வதற்கும் வேலை செய்வதற்கும் புதிய தற்காலிகப் புலம்பெயர்வு வழி முறை வழங்கப்படும்.


## டோக்கியோ அட்டகாமா ஆய்வகம்

- கடல் மட்டத்திலிருந்து 5,640 மீட்டர் (18,500 அடி) உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள உலகின் மிக உயரமான வானியல் ஆய்வுக் கூடம் தற்போது சிலியின் அடகாமா பாலைவனத்தில் திறக்கப்பட்டுள்ளது.
- அட்டகாமா பாலைவனத்தில் உள்ள ஒரு மலையின் உச்சியில் அமைக்கப்பட்டு வந்த, டோக்கியோ அட்டகாமா ஆய்வகம் (TAO) ஆனது தற்போது முழுவதுமாக கட்டமைக்கப் பட்டு முழுமையாகச் செயல்பட்டு வருகிறது.
- TAO ஆய்வகத்தின் தொலைநோக்கி 6.5 மீட்டர் நீளம் கொண்டது மற்றும் அகச்சிவப்பு அலை நீளத்தில் பேரண்டத்தினைக் கண்காணிப்பதற்காக என்று வடிவமைக்கப்பட்ட இரண்டு ஆய்வுக் கருவிகளைக் கொண்டுள்ளது.

- இந்தக் கருவிகளில் ஒன்றான SWIMS என்பது, ஆரம்பகாலப் பேரண்டத்தில் இருந்த அண்டங்களைப் படம் பிடிக்கும்.
- MIMIZUKU எனப் பெயரிடப்பட்ட இரண்டாவது கருவியானது, தூசிகள் நிறைந்த ஆரம்ப கால வட்டுகளை ஆய்வு செய்வதன் மூலம் முதன்மையான அறிவியல் இலக்கை அடைய உதவும்.

## பாதரசம் கொண்ட மருத்துவ சாதனங்களை நீக்குதல்


- அல்பேனியா, புர்கினா பாசோ, இந்தியா, மாண்டினீக்ரோ மற்றும் உகாண்டா ஆகியவை மருத்துவ நல சேவைத் துறையில் பாதரச மாசுபாட்டைத் தடுப்பதற்காக ஒன்றிணைந்துள்ளன.
- பல நூற்றாண்டுகளாக சுகாதாரப் பாதுகாப்பு அமைப்புகளில் பயன்படுத்தப்படும் பாதரசம், மனித ஆரோக்கியத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் அச்சுறுத்தலாக இருக்கும் ஒரு நச்சு உலோகமாகும்.
- 134-மில்லியன் டாலர் மதிப்பிலான இந்த முன்னெடுப்பானது, பாதரசக் கழிவு மேலாண்மை மற்றும் மாற்று வழிகளை மேம்படுத்துவதற்கான ஒரு முழுமையான அணுகுமுறைக்கு நிதியளிக்கும்.
- மருத்துவ வெப்பமானிகள் மற்றும் இரத்த அழுத்தமானிகளில் பாதரசம் உள்ளது. என்ற நிலையில் அவை அப்படியே இருக்கும் வரை எந்தப் பாதிப்பும் ஏற்படாது.




## மனிதர்களில் பதிவான முதல் ‘பறவைக் காய்ச்சல்’ பாதிப்பு


- ஒரு குழந்தைக்கு பறவைக் காய்ச்சல் இருப்பது தற்போது உறுதிப்படுத்தப்பட்டு உள்ள காரணத்தால் மனிதர்களில் பதிவான முதல் ‘பறவைக் காய்ச்சல்’ பாதிப்புப் பதிவாகி உள்ளதாக ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது.
- இந்தியாவில் இருந்த போது அந்தக் குழந்தைக்கு பறவைக் காய்ச்சல் A (H5N1) தொற்று ஏற்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது.

- மனிதர்களில் ஏற்படும் பறவைக் காய்ச்சல் A (H5N1) நோய்த் தொற்றும் "பறவைக் காய்ச்சல்" என்றே அழைக்கப்படுகிறது.
- இந்த குழந்தைக்கு ஏற்பட்ட நோய்ப் பாதிப்புதான் ஆஸ்திரேலியாவில் பதிவான அதிக நோய்த் தொற்றுள்ளப் பறவைக் காய்ச்சல் வைரசின் முதல் பாதிப்பு மற்றும் நாட்டில் H5N1 மாற்றுரு பாதிப்பு கண்டறியப்பட்ட முதல் பாதிப்பு ஆகும்.





## கோப்பர்நிக்கஸ் EMS விரைவு தகவல் அளிப்பு சேவை

- பாதகமான வானிலை மற்றும் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்கு இருளினால் ஏற்படும் இடையூறுகளின் காரணமாக ஈரானின் வேண்டுகோளின் பேரில் ஐரோப்பிய ஒன்றியம் தனது அவசர செயற்கைக்கோள் வரைபடமாக்கல் சேவையைச் சமீபத்தில் செயல்படுத்தியது.
- விரைவானத் தகவல் அளிப்பு வரைபடமாக்கல் தொழில்நுட்பம் என்பது கோபர்நிகஸ் திட்டத்தில் உள்ள அவசர மேலாண்மை சேவையின் (EMS) முக்கிய அங்கமாகும்.
- 15 ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற அறிவியலாளர் நிக்கோலஸ் கோப்பர்நிக்கஸ் அவர்களின் நினைவாக இதற்கு இப்பெயரிடப்பட்டது.
- இந்தத் திட்டம் ஆனது ஐரோப்பிய ஒன்றியத்தின் விண்வெளி முன்னெடுப்பின் புவிக் கண்காணிப்பு கூறு ஆகும்.
- 1998 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட கோப்பர்நிகஸ் திட்டம் முன்னர் சுற்றுச்சூழல் மற்றும் பாதுகாப்புத் திட்டத்திற்கான உலகளாவிய கண்காணிப்புத் திட்டம் (GMES) என அறியப்பட்டது.
- இத்திட்டமானது பருவநிலை மாற்றம், பேரிடர் மேலாண்மை மற்றும் வேளாண்மை போன்ற பிற பயன்பாடுகளுடன் தொடர்புடைய சிக்கல்களைத் தீர்ப்பதற்காக வேண்டி செயற்கைக் கோள்கள் மற்றும் நிலக் கட்டுப்பாடுகள் அடிப்படையிலான, வான்வழி மற்றும் கடல் சார் அளவீட்டு அமைப்புகளின் உலகளாவிய தரவுகளைப் பயன்படுத்தச் செய்கிறது.
- குறிப்பிடத்தக்க வகையில், கோப்பர்நிக்கஸ் திட்டத்திலிருந்துப் பெறப்படும் தரவுகள் இலவசமாகவும், அனைவரும் அணுகக்கூடிய வகையில் கிடைக்கப் பெறுகிறது.




## ஆயுட்காலத்தில் பதிவான வீழ்ச்சி

- உலகளவில், 2019 ஆம் ஆண்டில் தொற்றா நோய்களால் (NCD) உயிரிழப்பவர்களின் விகிதம் 73.9 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- உயிரிழப்பில் தொற்று நோய்களின் பங்கு 18.2 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- 2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 13 மில்லியன் மக்கள் கோவிட்-19 தொற்று காரணமாக உயிரிழந்ததாக மதிப்பீடுகள் குறிப்பிடுகின்றன.
- 2020 ஆம் ஆண்டில் உலகளவில் பதிவான உயிரிழப்பிற்குக் காரணமான கோவிட்-19 தொற்று உலகளவில் அதிகபட்ச பங்கினைக் கொண்டதாக தரவரிசையில் மூன்றாவது இடத்திலும், 2021 ஆம் ஆண்டில் இரண்டாவது இடத்திலும் இருந்தது.
- லான்செட் ஆய்வின்படி, 1990 முதல் 2019 ஆம் ஆண்டு வரை உலகளாவிய ஆயுட்காலம் 7.8 ஆண்டுகள் அதிகரித்து 71.4 ஆண்டுகளாக இருந்தது.
- கோவிட்-19 தொற்றுநோய் உலகளாவிய ஆயுட்காலத்தை 1.8 ஆண்டுகள் குறைத்தது.



## தாய்ப்பால் மற்றும் சுற்றுச்சூழல்




- வணிக பால் வகை கூறுகளை கொண்ட உணவு உற்பத்தியானது சுமார் 11-14 கிலோ கிராம் அளவிலான பசுமை இல்ல வாயு உமிழ்வினை (முட்டை, கோழி மற்றும் காய் கறிகளை விட அதிகமாக) உருவாக்குகிறது.
- இது அதன் உற்பத்தி மற்றும் பயன்பாட்டுச் சுழற்சியில் 5,000 லிட்டருக்கும் அதிகமான தண்ணீரைப் பயன்படுத்துகிறது.
- இதற்கு நேர்மாறாக, தாய்ப்பால் பொருளாதார ரீதியாக மதிப்புமிக்கதாகவும், குறைந்த கார்பன் தடத்தினைக் கொண்டுள்ளதாகவும், நல்வாழ்விற்கு என்று மிகவும் அவசியமானதாகவும் உள்ளது.
- தாய்ப்பால் கொடுக்கும் பெண்கள் உலகின் பாதி எண்ணிக்கையிலான பச்சிளம் மற்றும் சிறு குழந்தைகளுக்கு ஊட்டமளிக்கின்றனர்.
- இருப்பினும், எந்தவொரு நாடும் இந்த பராமரிப்புப் பணியை அவற்றின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் புள்ளிவிவரங்கள் அல்லது தேசிய வரவு செலவுத் திட்டங்களில் கணக்கிடுவதில்லை.
- ஆறு மாதங்களுக்குப் பிரத்தியேகமாக தாய்ப்பால் கொடுப்பதால் ஒவ்வொரு குழந்தைக்கும் 95-153 கிலோவிற்கு சமமான $CO_2$ உமிழ்வு குறைக்கப்படுகிறது.
- பால் பொடிகளின் சராசரி நீர் உள்ளடக்கம் ஆனது தோராயமாக 4700 லிட்டர்/கிலோ6 (கிட்டத்தட்ட 140 குளியலுக்கு தேவையான நீருக்குச் சமம்).
- இந்தியாவில் பாலிற்கான மாற்றுப் பொருள் சந்தையானது 2024 மற்றும் 2028 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 18.19% வளர்ச்சியடையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

## ரஷ்யாவுக்கு எதிரான 'ஆளில்லா விமானங்கள் கொண்ட கவச அமைப்பு'


- நேட்டோ அமைப்பின் ஆறு உறுப்பினர் நாடுகள் ரஷ்யாவின் அண்டை நாடுகளுடன் இணைந்து தங்கள் எல்லைகளைப் பாதுகாக்க "ஆளில்லா விமானங்கள் கொண்ட ஒரு கவச அமைப்பினை" கட்டமைக்கின்றன.
- ஆளில்லா வான்வழி வாகனங்கள் மற்றும் பல்வேறு மேம்பட்ட கண்காணிப்பு தொழில் நுட்பங்களின் கலப்பினைப் பயன்படுத்தி இந்த கட்டமைப்பு கட்டமைக்கப்பட உள்ளது.
- எல்லை நடவடிக்கைகளைத் தொடர்ந்து கண்காணிப்பதற்காக என்று இந்த ஆளில்லா விமானங்களில் பல்வேறு உணர்விகள் மற்றும் ஒளிப்படக் கருவிகள் பொருத்தப் பட்டு இருக்கும்.
- இதில் பங்கு கொள்ளும் நாடுகள் லிதுவேனியா மற்றும் அதன் பால்டிக் அண்டை நாடுகளான லாட்வியா மற்றும் எஸ்டோனியா, அத்துடன் போலந்து, பின்லாந்து மற்றும் நார்வே ஆகியனவாகும்.
- 2023 ஆம் ஆண்டில் நேட்டோ அமைப்பில் இணைந்த பின்லாந்து, ரஷ்யாவுடன் 832 மைல் எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது.



# பொருளாதாரச் செய்திகள்

## மக்கள்தொகை ஈவு குறித்த தரவு – இந்திய ரிசர்வ் வங்கி

- நாட்டின் மக்கள்தொகை ஈவின் முழுத் திறனையும் பயன்படுத்துவதற்கு என்று அடுத்த பத்தாண்டுகளில் இந்தியப் பொருளாதாரம் ஆண்டுதோறும் சுமார் 8 முதல் 10% வரை வளர்ச்சி அடைய வேண்டும்.
- 2021-31 ஆம் ஆண்டுகளில் ஆண்டிற்கு 9.7 மில்லியனாகவும், 2031-41 ஆம் ஆண்டுகளில் ஆண்டிற்கு 4.2 மில்லியனாகவும் பணிபுரியும் வயதிலான மக்கள் தொகை விரிவு அடையும்.
- அடுத்தப் பத்தாண்டுகளில் இந்தியா 10% வளர்ச்சி விகிதத்தை அடைந்து 2032 ஆம் ஆண்டில் இரண்டாவது பெரிய பொருளாதாரமாகவும், 2050 ஆம் ஆண்டில் மிகப்பெரிய பொருளாதாரமாகவும் மாறும்.
- கடந்த 10 ஆண்டுகளில், இந்தியாவின் சராசரி வருடாந்திர உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 6 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது.




## இந்தியாவின் இறக்குமதியில் சீனாவின் பங்கு

- 2018-19 ஆம் ஆண்டில் சுமார் 70 பில்லியன் டாலர்களாக இருந்த இந்தியாவின் சீனப் பொருட்கள் இறக்குமதி 2023-24 ஆம் ஆண்டில் 101 பில்லியன் டாலரைத் தாண்டியது.
- இந்தியாவின் தொழில்துறை உற்பத்திப் பொருட்களின் இறக்குமதியில் சீன நாட்டின் பங்கு கடந்த 15 ஆண்டுகளில் 21 சதவீதத்திலிருந்து 30% ஆக உயர்ந்துள்ளது.

- கடந்த 15 ஆண்டுகளில் இந்தியாவின் மொத்த இறக்குமதியை விட அதிகமாக சீனப் பொருட்களின் இறக்குமதி 2.3 மடங்கு வேகமாக உயர்ந்துள்ளது.
- இயந்திரங்கள், வேதிப்பொருட்கள், மருந்துப் பொருட்கள் மற்றும் ஜவுளி உள்ளிட்ட எட்டு முக்கிய தொழில்துறைகளில் சீனா முதன்மையான பொருள் வழங்கீட்டாளராக விளங்குகிறது.


**China's share in India's imports**

The table lists commodities imported by India, where China accounts for the largest share in total imports

| Commodity | China's share in imports |
|---|---|
| Electronics/telecom/electrical products | 43.9% |
| Machinery | 39.7% |
| Textiles and clothing | 38.2% |
| Chemicals and pharamceuticals | 26.8% |
| Automobiles | 26% |

## அதிக சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் வசூல் - ஏப்ரல் 2024

- ஏப்ரல் மாதத்தில் சரக்கு மற்றும் சேவை வரி வசூல் 12.4 சதவீதம் உயர்ந்து 2.10 லட்சம் கோடி ரூபாயை எட்டியுள்ளது.
- இந்த அதிகரிப்பு முதன்மையாக 13.4 சதவீதம் என்ற வருடாந்திர அதிக உள்நாட்டுப் பரிவர்த்தனைகள் மற்றும் இறக்குமதிகளால் (8.3% வரை) ஏற்பட்டது.
- சுமார் ஏழு ஆண்டுகளுக்கு முன்பு 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மறைமுக வரிச் சீர்திருத்தம் தொடங்கப் பட்டதிலிருந்து இதுவரையில் பதிவு செய்யப்பட்ட அதிகபட்ச சரக்கு மற்றும் சேவை வரி வசூல் பதிவு இதுவாகும்.
- ஒட்டு மொத்த வசூல் ஆனது 2 லட்சம் கோடி ரூபாயைத் தாண்டியது இதுவே முதல் முறையாகும்.
- முந்தைய அதிகபட்ச வசூலானது 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 1.87 லட்சம் கோடி ரூபாயாக பதிவு செய்யப்பட்டது என்ற நிலையில், இது 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் ஆண்டு இறுதி விற்பனையைப் பிரதிபலிக்கிறது.



## உலக அளவிலான பண அனுப்பீடுகளில் இந்தியா முன்னிலை

- 2022 ஆம் ஆண்டில் அதிக பண அனுப்பீடுகளைப் பதிவு செய்த முதல் நாடுகளைப் கொண்ட முதல் நாடாக இந்தியா வரலாறு படைத்துள்ளது.
- இந்தியாவின் பண அனுப்பீடுகள் ஆனது கடந்த ஆண்டு 111 பில்லியன் டாலராக உயர்ந்து, மற்ற எல்லா நாடுகளையும் விஞ்சியது.
- 2010, 2015, 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் பண அனுப்பீடுகளில் முதல் நாடாக இந்தியா உள்ளது.
- மெக்சிகோ, சீனா, பிலிப்பைன்ஸ் மற்றும் பிரான்ஸ் ஆகிய நான்கு நாடுகளும் பண அனுப்பீடுகளில் முதல் ஐந்து இடங்களில் உள்ளதாக இந்த அறிக்கையானது எடுத்து உரைக்கிறது.
- தெற்காசியப் பிராந்தியத்தில் கணிசமான எண்ணிக்கையிலான புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் காணப்படுவதால், உலகளவில் மிகப் பெரிய அளவிலான பண அனுப்பீடுகளைப் பெறுகிறது.
- இந்தியா, பாகிஸ்தான் மற்றும் வங்கதேசம் ஆகிய மூன்று நாடுகள், உலகில் சர்வதேச அளவிலானப் பண அனுப்பீடுகளில் முதல் பத்து இடங்களில் இடம் பெற்றுள்ளன.

| Rank | Country (2020) | Country (2022) | Remittance amount (2020) | Remittance amount (2022) |
|---|---|---|---|---|
| 1 | India | India | $83.15 | $111.22 |
| 2 | China | Mexico | $59.51 | $51.00 |
| 3 | Mexico | China | $42.88 | $61.10 |
| 4 | Philippines | Philippines | $34.88 | $38.05 |
| 5 | France | France | $30.04 | $30.04 |
| 6 | Pakistan | Pakistan | $26.09 | $29.87 |
| 7 | Egypt | Egypt | $29.60 | $28.33 |
| 8 | Bangladesh | Bangladesh | $21.75 | $21.50 |
| 9 | Germany | Nigeria | $19.32 | $20.13 |
| 10 | Nigeria | Germany | $17.21 | $19.29 |

## இந்தியாவின் பொம்மை ஏற்றுமதி

- முந்தைய நிதியாண்டில் 153.89 மில்லியன் அமெரிக்க டாலராக இருந்த இந்தியாவின் பொம்மை ஏற்றுமதியானது 2023-24 ஆம் ஆண்டில் 152.34 மில்லியன் டாலராக குறைந்து உள்ளது.
- 2020 ஆம் நிதியாண்டு முதல் 2022 ஆம் நிதியாண்டு வரை, 129.6 மில்லியன் அமெரிக்க டாலராக இருந்த பொம்மை ஏற்றுமதி 177 மில்லியன் அமெரிக்க டாலராக மிதமான அளவில் அதிகரித்துள்ளது.
- இருப்பினும் 2024 ஆம் நிதியாண்டில், இதன் ஏற்றுமதி சுமார் 152.3 மில்லியன் அமெரிக்க டாலர்களாக குறைந்துள்ளது.

- 2022-23 ஆம் ஆண்டில் 62.37 மில்லியன் அமெரிக்க டாலராக இருந்த இறக்குமதியானது, 2023-24 ஆம் ஆண்டில் 64.92 மில்லியன் டாலராக அதிகரித்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டில், உலகச் சந்தையில் சுமார் 60.3 பில்லியன் டாலர் மதிப்புள்ள பொம்மைகளை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.
- 22.2 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்புள்ள பொம்மைகளை மட்டும் கொள்முதல் செய்த அமெரிக்கா, பொம்மைகளை அதிக அளவில் இறக்குமதி செய்யும் நாடாக உள்ளது.
- அதைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியம் (9 பில்லியன் டாலர்), ஜப்பான் (2.8 பில்லியன் டாலர்), கனடா (1.6 பில்லியன் டாலர்) ஆகிய நாடுகள் உள்ளன.




## இந்தியாவின் மருத்துவ நுகர்பொருட்கள் ஏற்றுமதி

- இந்தியா முதல் முறையாக தற்போது பழையப் போக்கை மாற்றியமைத்து, மருத்துவ நுகர்பொருட்கள் மற்றும் பயன்பாட்டிற்குப் பிறகு தூக்கி எறியப்படும் பொருட்களின் நிகர ஏற்றுமதியாளராக மாறியுள்ளது.
- தற்போது வரையில், இனித்யாவில் வெளிநாட்டுப் பொருட்கள் நாட்டின் மருத்துவ நுகர் பொருட்களுக்கான சந்தையில் ஆதிக்கம் செலுத்தி வந்தன என்ற நிலையில் இதில் ஊசிகள் மற்றும் வடிகுழாய்கள் அதிகளவில் இறக்குமதி செய்யப்படுகின்றன.
- 2022-23 ஆம் நிதியாண்டில், இந்தியா 1.6 பில்லியன் டாலர் மதிப்புள்ள நுகர்பொருட்கள் மற்றும் பயன்பாட்டிற்குப் பிறகு தூக்கி எறியப்படும் பொருட்களை ஏற்றுமதி செய்தது.
- இது ஏறத்தாழ 1.1 பில்லியன் டாலராக இருந்த இறக்குமதியை விஞ்சியுள்ளது.
- ஏற்றுமதியானது முந்தைய நிதியாண்டை விட 16% அதிகரித்துள்ள அதேசமயம் அதன் இறக்குமதியில் 33% சரிவு என்பது பதிவாகியுள்ளது.




## 2024 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் சிறந்த வர்த்தகப் பங்குதாரர்




- 2023-24 ஆம் நிதியாண்டில் சுமார்118.4 பில்லியன் டாலர் மதிப்பிலான இருவழி வர்த்தகத்துடன் இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகப் பங்குத்தாரராக சீனா உருவெடுத்துள்ளது.
- GTRI எனப்படும் பொருளாதார சிந்தனைக் குழுவின் தரவுகளின்படி அமெரிக்காவினை சீனா விஞ்சியது.
- இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு வர்த்தகம் ஆனது 2023-24 ஆம் ஆண்டில் 118.3 பில்லியன் டாலராக இருந்தது.

- கடந்த நிதியாண்டில் சீனாவுக்கான இந்தியாவின் ஏற்றுமதி 8.7 சதவீதம் அதிகரித்து 16.67 பில்லியன் டாலராக உள்ளது.
- அந்த நாட்டுக்கான ஏற்றுமதியில் வளமான வளர்ச்சிக்குப் பங்களித்த முக்கியத் துறைகளில் இரும்புத் தாது, பருத்தி நூல்/இழைகள்/முழுத் தயாரிப்புகள், கைத்தறி, மசாலாப் பொருட்கள், பழங்கள் மற்றும் காய்கறிகள், நெகிழிப் பொருட்கள் மற்றும் லினோலியம் ஆகியவை அடங்கும்.
- இதற்கிடையில், 2022-23 ஆம் ஆண்டில் 78.54 பில்லியன் டாலர்களாக இருந்த அமெரிக்காவிற்கான ஏற்றுமதியானது 2023-24 ஆம் ஆண்டில் 1.32 சதவீதம் குறைந்து 77.5 பில்லியன் டாலராக இருந்தது, அதே நேரத்தில் இறக்குமதிகள் சுமார் 20 சதவீதம் குறைந்து 40.8 பில்லியன் டாலராக இருந்தது.

## 2024 ஆம் நிதியாண்டில் பொதுத்துறை வங்கிகளின் ஈவுகள்





- 2023 ஆம் நிதியாண்டினை விட 2024 ஆம் நிதியாண்டில் பொதுத்துறை வங்கிகளிடமிருந்து (PSBs) சுமார் 30 சதவீதம் கூடுதல் ஈவுகளை அரசாங்கம் பெறும்.
- முந்தைய நிதியாண்டில் 13,804 கோடி ரூபாயாக இருந்த பொதுத்துறை வங்கிகளின் ஈவுப் பங்கானது 2024 ஆம் நிதியாண்டில் மொத்தமாக 18,013 கோடியாக இருக்கும்.
- இந்தக் கணக்கீடு ஆனது 15 சதவீதப் பங்குப் பங்கீட்டு வரியை கணக்கில் எடுத்துக் கொள்ளாது என்பதோடு அதுவும் அரசாங்கத்திற்கேச் செல்லும்.
- 12 பொதுத் துறை வங்கிகளில், 10 வங்கிகள் பங்குகளை அறிவித்துள்ளன.
- 2024 ஆம் நிதியாண்டில் அதிகப் பங்குகளை (முக மதிப்புடன் ஒப்பிடும் போது) செலுத்தும் முதல் நான்கு பொதுத் துறை வங்கிகள் - பாரத ஸ்டேட் வங்கி (SBI), பரோடா வங்கி (BoB), கனரா வங்கி மற்றும் இந்தியன் வங்கி ஆகியனவாகும்.
- சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி தனது ஈவுப் பங்குகளை அறிவிக்கவில்லை.

## மகாராஷ்டிரா வங்கி வளர்ச்சி விகிதம்

- பொதுத்துறை கடன் வழங்கீட்டு நிறுவனங்களிடையே மொத்தப் பண மாற்றம் மற்றும் வைப்புத் திரட்டலின் அடிப்படையில், அரசுக்குச் சொந்தமான மகாராஷ்டிர வங்கி கடந்த நிதியாண்டில் மிக உயர்ந்த வளர்ச்சி விகிதத்தைப் பதிவு செய்தது.


- இது 2024 ஆம் நிதியாண்டில் மொத்தப் பண மாற்றத்தில் (உள்நாட்டில்) 15.94 சதவீத உயர்வை பதிவு செய்துள்ளது.
- அதைத் தொடர்ந்து 13.12 சதவீத வளர்ச்சியுடன் பாரத் ஸ்டேட் வங்கி (SBI) இடம் பெற்று உள்ளது.
- பாரத் ஸ்டேட் வங்கியின் மொத்தப் பண மாற்றங்கள் (வைப்பு மற்றும் முன்பணம்) 16.7 மடங்கு உயர்ந்து சுமார் 79,52,784 கோடி ரூபாயாக இருந்ததோடு இது மகாராஷ்டிரா வங்கியின் (BoM) முழு அளவின் அடிப்படையில் 4,74,411 கோடி ரூபாயாக இருந்தது.
- 2024 ஆம் நிதியாண்டில் 15.66 சதவீத வளர்ச்சியுடன், வைப்புத் திரட்டலின் வளர்ச்சியின் அடிப்படையில் BoM தொடர்ந்து முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டது.
- அதைத் தொடர்ந்து பாரத் ஸ்டேட் வங்கி (11.07 சதவீதம்), பேங்க் ஆஃப் இந்தியா (11.05 சதவீதம்) மற்றும் கனரா வங்கி (10.98 சதவீதம்) ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- 12 பொதுத் துறை வங்கிகளில், இந்த நான்கு கடன் வழங்கும் நிறுவனங்கள் மட்டுமே 2023-24 ஆம் நிதியாண்டில் வைப்புத் தொகையில் இரட்டை இலக்க வளர்ச்சியைப் பதிவு செய்ய இயலும்.

## அரசிற்கு இதுவரை இல்லாத அளவிற்கான அதிகபட்ச ஈவுத் தொகை





- மார்ச் 31 ஆம் தேதியுடன் முடிவடைந்த நிதியாண்டில் இந்திய ரிசர்வ் வங்கியானது, 2.1 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான ஈவுத் தொகையை அரசுக்கு வழங்க உள்ளது.
- இது நிதிநிலை அறிக்கையில் குறிக்கப்பட்ட மதிப்பினை விட இரண்டு மடங்கு அதிகம் ஆகும்.
- 2024-25 ஆம் நிதியாண்டில் இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து 1.02 லட்சம் கோடி ஈவுத் தொகையாக பெறுவதற்கு வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கம் திட்டமிட்டிருந்தது.
- 2022-23 ஆம் நிதியாண்டில் மத்திய அரசுக்கு இந்திய ரிசர்வ் வங்கி வழங்கிய ஈவுத் தொகை அல்லது உபரி பரிமாற்றம் 87,416 கோடி ரூபாயாகும்.
- முந்தைய அதிகபட்சப் பங்கீடானது 2018-19 ஆம் ஆண்டில் 1.76 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது.

## இந்தியாவின் சந்தை மூலதனம்




- வங்கிகள் மற்றும் வாகனத் தொழில்துறையின் பங்குகளினால் சந்தைக் குறியீடுகள் அதிகளவிலான சாதனை அளவினை எட்டியதையடுத்து மும்பைப் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட பங்குகளின் மொத்தச் சந்தை மூலதனம் 5 டிரில்லியன் டாலருக்கு மேலான மதிப்புடன் முடிவடைந்தது.
- இந்தியாவின் சந்தை மூலதனம் ஆனது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.42 மடங்கு அல்லது 142% ஆக உயர்ந்தது என்பதோடு அது 2007 ஆம் ஆண்டில் காணப்பட்ட உச்சத்தை நெருங்கியது.
- மும்பைப் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட அனைத்து நிறுவனங்களின் சந்தை மூலதனம் 5.05 டிரில்லியன் டாலராக உள்ளது (அல்லது 420.22 லட்சம் கோடி ரூபாய்).
- சந்தை மூலதனம் 5-ட்ரில்லியன் டாலர் மதிப்பைக் கடந்துள்ள நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா, சீனா, ஜப்பான் மற்றும் ஹாங்காங் ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக இந்தியா ஐந்தாவது நாடாக உள்ளது.

## வருடாந்திர தொழிலாளர் வளக் கணக்கெடுப்பு




- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகமானது (MOSPI) சமீபத்திய வருடாந்திர தொழிலாளர் வளக் கணக்கெடுப்பினை (PLFS) வெளியிட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டின் ஜனவரி-மார்ச் மாத காலாண்டில் நகர்ப்புறங்களில் 15-29 வயதிற்கு உட்பட்டவர்களிடையே மிக அதிக வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது கேரளாவில் பதிவாகி யுள்ளது.

- ❖ ஜம்மு & காஷ்மீர், தெலுங்கானா, ராஜஸ்தான் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்கள் இந்த வயது பிரிவில் அதிக வேலைவாய்ப்பின்மை விகிதம் நிலவும் பிற மாநிலங்களாகும்.
- ❖ மூன்று மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் ஒற்றை இலக்க வேலை வாய்ப்பின்மை விகிதங்களைக் கொண்டுள்ளன. அவையாவன: டெல்லி (3.1 சதவீதம்), குஜராத் (9 சதவீதம்), மற்றும் ஹரியானா (9.5 சதவீதம்).
- ❖ கர்நாடகா (11.5 சதவீதம்) மற்றும் மத்தியப் பிரதேசம் (12.1 சதவீதம்) ஆகிய மாநிலங்களில் ஒப்பீட்டளவில் குறைந்த வேலைவாய்ப்பின்மை விகிதங்கள் பதிவாகி உள்ளன.

## 2023-24 ஆம் ஆண்டில் இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை





- ❖ 2023-24 ஆம் ஆண்டில் சீனா, ரஷ்யா, சிங்கப்பூர் மற்றும் கொரியா உள்ளிட்ட அதன் முதல் பத்து வர்த்தகப் பங்குதார நாடுகளுள் ஒன்பது நாடுகளுடன் இந்தியா வர்த்தகப் பற்றாக்குறையைக் கொண்டுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
- ❖ சீனா, ரஷ்யா, கொரியா, ஹாங்காங் ஆகிய நாடுகளுடனான வர்த்தகப் பற்றாக்குறை முந்தைய நிதியாண்டை விட அதிகரித்துள்ளது.
- ❖ ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா, ரஷ்யா, இந்தோனேசியா மற்றும் ஈராக் ஆகியவற்றுடனான வர்த்தகப் பற்றாக்குறை குறைந்துள்ளது.
- ❖ 2023-24 ஆம் ஆண்டில் சீனாவுடனான வர்த்தகப் பற்றாக்குறை 85 பில்லியன் டாலராகவும், ரஷ்யாவுடன் 57.2 பில்லியன் டாலராகவும், கொரியாவுடன் 14.71 பில்லியன் டாலராகவும், ஹாங்காங் நாட்டுடன் 12.2 பில்லியன் டாலராகவும் உயர்ந்து உள்ளது.
- ❖ இது 2022-23 ஆம் ஆண்டில் முறையே 83.2 பில்லியன் டாலராகவும், 43 பில்லியன் டாலராகவும், 14.57 பில்லியன் டாலராகவும், 8.38 பில்லியன் டாலராகவும் இருந்தது.
- ❖ 2023-24 ஆம் ஆண்டில் 118.4 பில்லியன் டாலர் மதிப்பிலான இருவழி வர்த்தகத்துடன் அமெரிக்காவை விஞ்சி இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகப் பங்குதார நாடாக சீனா உருவெடுத்துள்ளது.
- ❖ 2023-24 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம் 118.28 பில்லியன் டாலராக இருந்தது.
- ❖ வாஷிங்டன், 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் புது டெல்லியின் சிறந்த வர்த்தகப் பங்குதரராக இருந்தது.

- சிங்கப்பூர், ஐக்கிய அரபு அமீரகம், கொரியா மற்றும் இந்தோனேஷியா (ஆசியான் நாடுகளின் ஒரு பகுதியாக) ஆகிய நான்கு முக்கிய வர்த்தகப் பங்குதாரர்களுடன் இந்தியா தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தைக் கொண்டுள்ளது.
- இந்தியா 2023-24 ஆம் ஆண்டில் அமெரிக்காவுடன் 36.74 பில்லியன் டாலர் மதிப்பிலான வர்த்தக உபரியினைக் கொண்டிருந்தது.
- இது ஐக்கியப் பேரரசு, பெல்ஜியம், இத்தாலி, பிரான்ஸ் மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகளுடனும் வரத்தக உபரியைக் கொண்டிருந்தது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## கரும்புற்றுநோய்க்கான தனிப்பயனாக்கப்பட்ட mRNA தடுப்பூசி

- மருத்துவர்கள், கரும்புற்றுநோய்க்கான உலகின் முதல் தனிப்பயனாக்கப்பட்ட mRNA புற்றுநோய் தடுப்பூசியினை நூற்றுக்கணக்கான நோயாளிகளிடம் செலுத்திச் சோதனைகளைத் தொடங்கியுள்ளனர்.
- உலகளவில் பதிவாகும் தோல் புற்றுநோய் சார்ந்த உயிரிழப்புகளுக்கு முக்கிய காரணமாக உள்ள கரும்புற்றுநோய், ஆண்டுதோறும் சுமார் 132,000 பேரைப் பாதிக்கிறது.
- mRNA-4157 (V940) எனப்படும் இந்தத் தடுப்பூசி, நோயாளியின் உடலில் உள்ள குறிப்பிட்ட புற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்காக என்று நோயெதிர்ப்பு மண்டலத்தை நன்கு தூண்டுவிக்கும் ஒரு தனிப்பயனாக்கப்பட்ட சிகிச்சையாகும்.
- இது கட்டிகளில் காணப்படும் தனித்துவமான குறிப்பான்கள் மற்றும் நோயெதிர்ப்பு மண்டலத்தால் அடையாளம் காணப்படக் கூடிய பல்வேறு நியோ ஆன்டிஜென்களை குறி வைக்கிறது.




## சீனாவின் சென்ஷூவோ - 18 பயணக்குழு

- ❖ சீனா டியாங்காங் விண்வெளி நிலையத்திற்கு தனது ஏழாவது குழுவை அனுப்பி உள்ளது.
- ❖ ஏவு கலமானது சென்ஷூவோ-18 விண்கலத்தையும் அதன் மூன்று பேர் கொண்ட விண்வெளி வீரர் பயணக் குழுவினரையும் சுமந்து சென்று சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தியது.
- ❖ சென்ஷூவோ-18 விண்கலம் டியாங்காங்கின் ஆர வரைவு வடிவ இணைப்பு பகுதியைச் சந்தித்து அதனுடன் இணைத்தல் ஆகிய பணிகளை நிறைவு செய்தது.
- ❖ 2030 ஆம் ஆண்டிற்குள் விண்வெளி வீரர்களை நிலவிற்கு அனுப்பும் நோக்கில் செயல்படும் பெய்ஜிங்கின் விண்வெளித் திட்டத்தில் இது மிகச் சமீபத்திய விண்வெளித் பயணத்தினைக் குறிக்கிறது.

## வேகமாக மின்னேற்றம் செய்யும் சோடியம்-அயனி மின்கலம்

- ❖ தென் கொரிய ஆராய்ச்சியாளர்கள், சில வினாடிகளில் மின்னேற்றம் செய்யக்கூடிய உயர் ஆற்றல் கொண்ட கலப்பு வகை சோடியம்-அயனி மின்கலத்தினை உருவாக்கி உள்ளனர்.
- ❖ சோடியம் ஆனது லித்தியத்தை விட சுமார் 1000 மடங்கு அதிகமாக காணப்படுகிறது மற்றும் குறைவான விகிதத்திலான அரிய கனிமமாக உள்ளது.
- ❖ எனவே, சோடியம்-அயனி மின்வேதியியல் ஆற்றல் சேமிப்பு ஆனது மலிவான மற்றும் சாத்தியமான ஆற்றல் ஆதாரமாக விளங்கும்.
- ❖ தற்போது, கிடைக்கப் பெறக் கூடிய சோடியம்-அயனி ஆற்றல் சேமிப்பு அமைப்புகள் குறைந்த ஆற்றல் அடர்வினைக் கொண்டிருந்தாலும், ஒப்பீட்டளவில் அதிக ஆற்றல் அடர்வினை வழங்குகின்றன என்பதால் அது மோசமான மின்னேற்ற செயல்திறனைக் கொண்டுள்ளது.




## ஈரானின் காமிகேஸ் ஆளில்லா விமானங்கள்

- பேச்சுவழக்கில் தற்கொலை அல்லது "தற்கொலைப் பாங்கான தாக்குதலில் ஈடுபடும்" ஆளில்லா விமானங்கள் என அறியப்படும் ஒரு புதிய பறக்கும் ஆயுதத்தினை உருவாக்கியுள்ளதாக ஈரான் அறிவித்துள்ளது.
- இந்த ஆளில்லா விமானம் ஆனது, 30 முதல் 60 நிமிடங்கள் வரை வானில் பறக்கும் திறன் கொண்டதாக இருக்கும்.
- இது 40 கிலோமீட்டர் தூர வரம்பிற்குள் 3 முதல் 6 கிலோகிராம் எடை வரை சுமந்து செல்லக் கூடியது.
- சமீபத்தில், ஈரானின் ஆளில்லா விமான உற்பத்தி மற்றும் ஏற்றுமதி முயற்சிகளை குறி வைத்து அமெரிக்கா, ஐக்கியப் பேரரசு மற்றும் கனடா ஆகிய நாடுகள் ஈரானுக்கு எதிராக புதிய தடைகளை விதித்தன.



## செயற்கை நரம்பிணைப்பு




- நீர் மற்றும் உப்பு கலவையைப் பயன்படுத்தி நரம்பிணைப்பு (சினாப்சஸ்) எனப்படும் செயற்கை நரம்பியல் சந்திப்புகளை ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- இது மனித மூளையின் செயல்திறனைப் பிரதிபலிக்கும் வகையிலான மேம்பட்ட கணினிகளின் உருவாக்கத்திற்கு வழி வகுக்கிறது.
- மூளை பயன்படுத்தும் அதே நீர் மற்றும் உப்புப் பொருட்களையே செயற்கை மூளை செல்களும் பயன்படுத்துகின்றன.

- மனித மூளையானது, அயனிகள் எனப்படும் நீர் மற்றும் கரைந்த உப்புத் துகள்களை ஊடகமாகப் பயன்படுத்துகிறது.
- அதே சமயம், தற்போதைய மேம்பட்ட கணினி அமைப்புகள் அதே செயல்பாட்டிற்காக வழக்கமான திடப் பொருட்களைச் சார்ந்துள்ளன.


## குரல் மீளுருவாக்கத் தொழில்நுட்பம்




- கௌகாத்தியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் குரல் நாண் அதிர்வு சமிக்ஞைகளிலிருந்து நேரடியாக மனித பேச்சு/குரல் சமிக்ஞைகளை உருவாக்குவதற்கான "LOQU" என்ற ஒரு புதிய முறையினை உருவாக்கி உள்ளனர்.
- இந்த நுட்பத்தில் தொண்டையின் மேல் வைக்கப்பட்டுள்ள பல்வேறு உணர்விகளைப் பயன்படுத்தி, உட்செலுத்துதல் நடைமுறைகள் இல்லாமல் குரல்வளை மடிப்பு (நாண்) இயக்கத்தை ஆய்வு செய்ய முடியும்.
- பேசும் போது, உள்ளார்ந்த குரல்வளை தசை இயக்கம் காரணமாக குரல் மடிப்புகள் அதிர்வுறும்.
- உணர்வியக்கமின்மை (அப்ராக்ஸியா) பாதிப்பினால் ஏற்படும் பிறழ்வு போன்ற சில சந்தர்ப்பங்களில், சிலருக்கு ஒலி உற்பத்தி இல்லாமல் சாதாரண குரல் மடிப்பு அதிர்வு நிகழலாம்.
- மேற்கண்ட குறைபாட்டிற்கு, குரல் நாண் அதிர்வுகளிலிருந்துப் பேச்சு சமிக்ஞைகளை மீளுருவாக்குவதற்கு LOQU என்பதினைப் பயன்படுத்த முடியும்.

## DRDO அமைப்பின் SMART அமைப்பு


- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் மீயொலி ஏறிகணை உதவியுடன் கூடிய கடற்கணை (SMART) ஏவுதல் அமைப்பின் ஏவுதல் சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.
- SMART என்பது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் வடிவமைக்கப் பட்டு, உருவாக்கப்பட்ட அடுத்த தலைமுறை நுட்பத்திலான ஏறிகணை அடிப்படையிலான இலகுவான எடை கொண்ட கடற்கணை ஏவுதல் அமைப்பு ஆகும்.
- இலகுரக கடற்கணைகளின் வழக்கமான தாக்குதல் வரம்பிற்கு அப்பால், இந்தியக் கடற்படையின் நீர்மூழ்கி எதிர்ப்பு போர் திறனை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.




## LSAM 20 இழுவைப் படகு

- ஒரு தனியார் நிறுவனத்தால் கட்டமைக்கப்பட்ட LSAM 16 (யார்டு 130) தொடரில் தயாரிக்கப் பட்ட ஆறாவது இழுவைப் படகு ஆனது மகாராஷ்டிராவின் தானேயில் இந்தியக் கடற்படையில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இதற்கு ‘படைத் தளவாடத்துடன் கூடிய கடற்கணை கொண்ட எறிகணை இழுவைப் படகு, LSAM 20’, என்று பெயரிடப்பட்டுள்ளது.
- "படைத் தளவாடங்களைக் கொண்டு செல்லும் கப்பல்" என்பதன் சுருக்கமான LSAM என்பது இந்தியக் கடற்படைக்குத் தேவையான வெடிமருந்துகளைக் கொண்டு செல்வதில் இந்தப் படகு கொண்டுள்ளப் பங்கைக் குறிக்கிறது.


## நிலவில் மாபெரும் உறைபனி



- நிலவின் துருவப் பகுதிகளில் அமைந்துள்ள பல்வேறு பள்ளங்களில் உறைபனி ஏற்படுவதற்கான மிகவும் அதீத சாத்தியக் கூறுகளுக்கான ஆதாரங்களை இஸ்ரோ வெளிப்படுத்தியுள்ளது.
- முதல் இரண்டு மீட்டர்களில் காணப்படும் நிலத்தடி உறைபனியின் அளவு பூமியின் இரு துருவங்களின் மேற்பரப்பில் உள்ளதை விட சுமார் ஐந்து முதல் எட்டு மடங்கு பெரியது ஆகும்.

- வட துருவப் பகுதியில் உள்ள உறைபனியின் அளவு தென் துருவப் பகுதியை விட இரு மடங்கு அதிகமாக இருப்பதாகவும் ஆய்வு தெரிவிக்கிறது.
- உறைபனியின் இந்தப் பரவல் "மாபெரும் எரிமலைச் செயல்பாடுகளால்" பரவலாக்கப் படுகிறது என்றும் ஆய்வு முடிவுகள் தீர்மானிக்கின்றன.

## பூமியின் காந்தப்புலத்திற்கான மிகப் பழமையான சான்று



- பூமியின் ஆரம்பகாலக் காந்தப்புலத்தின் பழமையான எச்சங்களைக் கொண்டுள்ளப் பழங்காலப் பாறைகளைக் கிரீன்லாந்தில் புவியியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்தப் பாறைகள் சுமார் 3.7 பில்லியன் ஆண்டுகள் பழமையானவை என்றும், குறைந்த பட்சம் 15 மைக்ரோ டெஸ்லா வலிமை கொண்ட காந்தப்புலத்தின் அடையாளங்களை தக்கவைத்துக் கொள்வதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தீர்மானித்தனர்.
- பழமையான காந்தப் புலம் இன்று பூமியின் காந்தப்புலத்தின் அளவை ஒத்துள்ளது.
- முந்தைய ஆய்வுகள் பூமியில் குறைந்தது 3.5 பில்லியன் ஆண்டுகள் மிகப் பழமையான காந்தப் புலத்திற்கான ஆதாரங்களை வழங்கியுள்ளன.
- இந்தப் புதிய ஆய்வானது காந்தப்புலத்தின் காலக் கட்டத்தினை மேலும் 200 மில்லியன் ஆண்டுகள் பழமையானதாக குறிப்பிடுகிறது.

## K2-18b மற்றும் டை மெத்தில் சல்பைடு

- ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியானது, வேறொரு கிரகத்தில் உயிர்கள் வாழ்வதற்கான "உறுதியான, மிகவும் நம்பகமான அறிகுறிகளை" கண்டறிந்து உள்ளதாக கூறப்படுகிறது.
- K2-18b எனப்படும் புறக்கோள் ஆனது, பூமியிலிருந்து 124 ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.
- அதன் வளிமண்டலத்தில் டைமெத்தில் சல்பைடு (DMS) வாயு இருக்கலாம் என நம்பப் படுகிறது.
- டைமெத்தில் சல்பைடு (DMS) வாயு பூமியில் உள்ள உயிரினங்களால் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது.




## அன்டரேசினை கடந்து சென்ற நிலவு





- பெங்களூரைச் சேர்ந்த இந்திய வானியற்பியல் நிறுவனம் (IIA) ஆனது பிரகாசமான செந்நிற நட்சத்திரமான அன்டரேஸின் முன் நிலவு கடந்து செல்வதை படம் பிடித்து உள்ளது.
- ஏப்ரல் 27 ஆம் தேதியன்று இரவு நிலவு அன்டரேஸ் பகுதியின் முன்னால் கடந்து சென்றதனால் 40 நிமிடங்கள் மறைந்து காணப் பட்டது.
- நிலவானது அதன் சுற்றுப்பாதையில் நகரும் போது தோராயமாக மாதத்திற்கு ஒரு முறை, சில சமயம் மறைந்திருக்கும், அல்லது அதன் பின்னால் இருக்கும் பிரகாசமான நட்சத்திரங்கள், மற்றும் சில நேரங்களில், கிரகங்களை கூட மறைக்கும்.
- ஸ்கார்பியஸ் விண்மீன் திரளில் பிரகாசமான நட்சத்திரமான அன்டரேஸ் (ஜ்யேஷ்தா) நட்சத்திரத்திற்கு இந்த நிகழ்வு அவ்வப்போது நடக்கும்.
- இந்தியாவில் இருந்து காணக் கூடிய வகையிலான அன்டரேஸின் மறைப்பு நிகழ்வு என்பது இந்த ஆண்டு பிப்ரவரி 05 ஆம் தேதியன்று நிகழ்ந்தது.

- இது போன்ற அடுத்த நிகழ்வு 2027 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நிகழும்.
- இருப்பினும், நிலவு சனிக் கோளினை மறைத்திருப்பதை ஜூலை 24 ஆம் தேதியும், மீண்டும் 2024 ஆம் ஆண்டு அக்டோபர் 14 ஆம் தேதியும் இந்தியாவில் காண இயலும்.

## உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முதல் ஆளில்லா குண்டுவீச்சு விமானம்

- ஃபிளையிங் வெட்ஜ் டிஃபென்ஸ் மற்றும் ஏரோஸ்பேஸ் டெக்னாலஜிஸ் ஆகியவை FWD-200B என்ற விமானத்தினை அறிமுகம் செய்துள்ளன.
- இது நாட்டின் முதல் உள்நாட்டு ஆளில்லா வான்வழி குண்டுவீச்சு வாகனம் (UAV) ஆகும்.
- FWD-200B என்பது நடுத்தர உயரத்தில் பயணிக்கும், நீண்ட நேரம் இயங்கக் கூடிய (MALE) ஆளில்லா போர் விமானம் ஆகும்.
- 100 கிலோ வரையிலான எடையினைச் சுமக்கும் திறன் கொண்ட இது ஒளியிழை கண்காணிப்பு அமைப்புகளையும் துல்லியமான வான்வழித் தாக்குதல் ஆயுதங்களையும் சுமந்து செல்லக் கூடியது.

## 2D புரத ஒற்றையடுக்கு




- அறிவியலாளர்கள் லைசோசைம் மூலக்கூறுகளைப் பயன்படுத்தி 2D புரத ஒற்றை அடுக்கினை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளனர்.
- புரதத் திரட்சி தசை நோய் (அமிலாய்டோசிஸ்) போன்ற நோய்களைப் புரிந்து கொள்வதற்கான மாதிரிப் புரதமாக இது செயல்படுகிறது.
- இந்த ஆராய்ச்சியானது அமிலாய்டோசிஸ் பற்றிய ஆழ்ந்தப் புரிதலுக்கு வழி வகுப்பது மட்டுமல்லாமல், நோய்த் தொற்று வழிமுறைகளை ஆய்வு செய்வதற்கான பல்துறை தளத்தையும் நிறுவுகிறது.
- லைசோசைம் என்பது கண்ணீர், உமிழ்நீர், சளி போன்ற பல்வேறு உடல் சுரப்பு நீர்களில் காணப்படும் இயற்கையாக உருவாகும் நொதி ஆகும்.
- பாக்டீரியாவுக்கு எதிரான உடலின் பாதுகாப்பு அமைப்பில் இது ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது.
- அமிலாய்டோசிஸ் என்பது அமிலாய்டு எனப்படும் புரதமானது பல்வேறு உறுப்புகளில் திரள்வதால் ஏற்படும் ஓர் அரிய பாதிப்பு நிலையாகும்.


- இதயம், சிறுநீரகம், கல்லீரல், மண்ணீரல், நரம்பு மண்டலம் மற்றும் செரிமானப் பாதை போன்ற முக்கிய உறுப்புகளின் செயல்பாட்டை இந்த திரளாக்கம் மோசமாக பாதித்து, இறுதியில் பல்லுறுப்பு செயலிழப்பிற்கு வழிவகுக்கும்.

## JWST தொலைநோக்கியின் காஸ்மிக் வெளிப்பாடு படம்

- நாசாவின் ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியானது, சாகிட்டாரியஸ் C மண்டலத்திற்குள் 500,000 நட்சத்திரங்கள் காணப்படும் ஒரு மிகவும் பிரம்மாண்டமான படத்தை நமக்கு அளித்துள்ளது.
- இது பால்வெளி அண்டத்தின் மையத்திலிருந்து தோராயமாக 300 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள ஒரு நட்சத்திரத்தை உருவாக்கும் பகுதியாகும்.
- சாகிட்டாரியஸ் C மண்டலம் ஆனது பூமியிலிருந்து 25,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.
- இது நட்சத்திர உருவாக்கம் குறித்தத் தகவல்களை வழங்கும்.




## விண்வெளி தொலைநோக்கிகளில் உருமாற்றத் தக்க கண்ணாடிகள்



- நாசா அறிக்கைகளின்படி, இந்தக் கண்ணாடிகள் விண்வெளித் தொலைநோக்கியில் உள்ள குறைபாடுகள் அல்லது வடிவ மாற்றங்களைத் துணை அணு துகள் அளவுகள் வரை சிறிய அளவில் குறைப்பதன் மூலம் புறக்கோள்களின் நேரடி ஆய்வுகளை மேற் கொள்ளச் செய்யலாம்.
- குறிப்பிடத்தக்க வகையில், தகவமைப்பு ஒளியியல் அலைமுகப்பு உணரிகள் மற்றும் நிகழ் நேரக் கட்டுப்பாட்டு அமைப்புகளுடன் சேர்த்து இந்த உருமாற்றத் தக்க கண்ணாடிகள் பயன்படுத்தப் படுகின்றன.
- உருமாற்றத்தக்க கண்ணாடிகள் என்பது அலைமுகப்புக் கட்டுப்பாடு மற்றும் ஒளியியல் மாறுபாடு திருத்தம் ஆகியவற்றை மேற்கொள்வதற்காக மேற்பரப்புகளை வளைக்கக் கூடிய வகையில் அமைந்த கண்ணாடிகள் ஆகும்.
- மேலும், அவற்றின் வடிவத்தை வேகத்தைக் கொண்டும் கட்டுப்படுத்தலாம்.

## 'All-in-one' தடுப்பூசி

- அறிவியலாளர்கள் இன்னும் வெளிவராதவை உட்பட பரந்த அளவிலான கொரோனா வைரஸ்களுக்கு எதிரான பாதுகாப்பினை மனிதர்களுக்கு வழங்கும் என்று கருதுகின்ற வகையில் அவர்கள் 'All-in-one' தடுப்பூசியை உருவாக்கியுள்ளனர்.
- கோவிட்-19 பெருந்தொற்றினை ஏற்படுத்திய SARS-CoV-2 வைரஸ் உட்பட, எட்டு வெவ்வேறு கொரோனா வைரஸ்களின் குறிப்பிட்டப் பகுதிகளை அடையாளம் காண உடலின் நோயெதிர்ப்பு மண்டலத்திற்குப் பயிற்சி அளிப்பதன் மூலம் இந்தத் தடுப்பூசி செயல்படுகிறது.
- இந்தப் புதிய தடுப்பூசியானது நுண் துகள்கள் - நம்பமுடியாத வகையிலான வலுவான தலையீடுகளால் ஒன்றிணைக்கப்பட்ட புரதங்களின் பந்து போன்ற அமைப்பு - எனப் படும் ஒரு கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டது.
- பல்வேறு வைரஸ் ஆன்டிஜென்களின் தொடர்கள் இந்த நுண் துகள்களுடன் "புரத அதி இணை ஒட்டுப் பொருளை" பயன்படுத்தி இணைக்கப்பட்டுள்ளன.

## எட்டா அக்வாரிட் விண்கல் பொழிவு

- ஏப்ரல் 15 ஆம் தேதி முதல் பொழியத் தொடங்கிய எட்டா அக்வாரிட் என்ற விண்கல் பொழிவானது, மே 5 மற்றும் 6 ஆகிய தேதிகளில் உச்சத்தில் இருந்தது.
- இவை பூமியின் வளிமண்டலத்தில் வினாடிக்கு 66 கி.மீ. (2.37 லட்சம் கி.மீ.) வேகத்தில் நகரும் எரியும் விண்வெளிக் குப்பைகளை உள்ளடக்கியது.
- இந்த விண்கல் பொழிவானது ஒவ்வோர் ஆண்டும் மே மாதத்தில் நிகழ்கிறது.
- எட்டா அக்வாரிட் விண்கல் பொழிவானது அதன் விரைவான வேகத்திற்கு பெயர் பெற்றது என்ற நிலையில் இது பல நிமிடங்கள் வரையில் நீடிக்கும் நீண்ட, ஒளிரும் ஒளிக்கற்றைகளை உருவாக்குகிறது.
- தென் அரைக்கோளத்தில் உள்ள இந்தோனேசியா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் அவை புலப்படும்.
- சுமார் 4.6 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு நமது சூரிய குடும்பம் உருவானதில் இருந்து உறைந்த எஞ்சியிருக்கும் வால் நட்சத்திரங்களில் இருந்து இந்த விண்கற்கள் பொழிகின்றன.

- வால் நட்சத்திரங்கள் தூசி, பாறை மற்றும் பனிக்கட்டிகளால் ஆனவை என்பதோடு அவை உயர்நிலை நீள்வட்டப் பாதையில் சூரியனைச் சுற்றி வருகின்றன.
- சில சந்தர்ப்பங்களில், அவை தனது சுற்றுப் பாதையினை நிறைவு செய்வதற்கு நூறாயிரக்கணக்கான ஆண்டுகள் ஆகும்.
- நாசாவின் கூற்றுப்படி, மொத்தம் 3,910 வால் நட்சத்திரங்கள் தற்போது கண்டறியப் பட்டுள்ளன.
- நெப்டியூனுக்கு அப்பால் அமைந்த, குய்பர் மண்டலம் மற்றும் இன்னும் தொலைவில் அமைந்த ஊர்ட் மேகம் ஆகியவற்றில் மேலும் பல பில்லியன் வால் நட்சத்திரங்கள் சூரியனைச் சுற்றி வருவதாகக் கருதப் படுகிறது.




## நிலவில் இரயில் பாதைகளை உருவாக்குதல்

- நாசா நடைமுறைக்கு எட்டாததாக கருதப்படும் திட்டங்களுக்கு நிதியுதவி அளித்து வருகிறது ஆனால் இது விரைவில் நிறைவு பெற்றால் விண்வெளியில் மனிதகுலத்தின் சாதனைகளை புதிய உச்சத்திற்குக் கொண்டு செல்ல முடியும்.
- இந்த 'இலட்சியமிகு' திட்டங்களில் திரவ அடிப்படையிலான தொலைநோக்கி, மனிதர்கள் மற்றும் சரக்குப் பொருட்களை செவ்வாய்க் கிரகத்திற்கு இடம் மாற்றச் செய்வதற்கான போக்குவரத்து அமைப்பு மற்றும் நிலவு இரயில் அமைப்பு ஆகியவை அடங்கும்.
- இந்தத் திட்டங்கள் இன்னும் ஆய்வுக் கட்டத்தில் தான் உள்ளன என்ற நிலையில் இது வெற்றி பெறுவதற்கான உத்தரவாதம் எதுவும் இல்லை.



- FLUTE திட்டம் ஒரு பெரிய துளை அல்லது பிரிக்கப்படாத பிரதான திரவ கண்ணாடிகள் (பிரதிபலிப்பு திரவம்) கொண்ட விண்வெளி கண்காணிப்புகளை உருவாக்குவதற்கான சாத்தியமான தீர்வை வழங்குகிறது.
- நுண் ஈர்ப்பு விசையில் திரவ வடிவமைப்பினை பயன்படுத்துவதன் மூலம் இத்தகைய பிரதான திரவ கண்ணாடிகள் விண்வெளியில் உருவாக்கப்படுகின்றன.

## சக்தி வாய்ந்த சூரியப் புயல்கள்




- சில நாட்களுக்கு முன்பு, AR3663 என்ற சூரிய கரும்புள்ளிப் பகுதியிலிருந்து இரண்டு மகத்தான சூரியச் சுடரொளிகள் வெளிப்பட்டன என்பதோடு அதன் சுடர் பரவல் பகுதியில் பூமி அமைந்துள்ளது.
- அதன் முதல் வெடிப்பு ஆனது மே 02 ஆம் தேதியன்று ஏற்பட்டது என்ற நிலையில் இது சூரியச் சுடரொளிகளில் மிகவும் சக்திவாய்ந்த வகையான X-வகை சுடரொளி ஆகும்.
- இது ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் சீனாவின் பெரும்பகுதி முழுவதும் குறு அலை ரேடியோ தாக்க நிகழ்வுகளை ஏற்படுத்துகிறது.
- X சுடரொளி! என்ற சூரியக் கரும்புள்ளி பகுதி AR3663 ஆனது தற்போது ஒரு X1.7 சுடரொளியினை உருவாக்கியுள்ள வகையில் இது இதுவரை இந்த சுழற்சியில் நிகழ்ந்த 11வது பெரிய சுடரொளி ஆகும்.
- இரண்டாவது வெடிப்பு ஆனது M-வகை சுடரொளி என்று அறிவிக்கப்பட்டது.
- சுடரொளி அவற்றின் வலிமைக்கு ஏற்ப வகைப்படுத்தப் படுகின்றன.
- மிகவும் சக்தி வாய்ந்த X-வகைக்கு அடுத்தபடியாக, 10 மடங்கு மிக குறைவான சக்தி வாய்ந்த M-வகை சுடரொளிகள் உள்ளன.
- அதைத் தொடர்ந்து C-வகை மற்றும் இறுதியாக, B-வகை சுடரொளிகள் உள்ளன.

## தங்கத் தகடு

- முதன்முறையாக, ஓர் அணு அளவிலான தடிமன் கொண்ட தங்கத் தகடினை அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

- இது தங்கத்தினை இரு பரிமாணத் தகடாக முதல் உலோகமாக உருவாக்குகிறது என்ற வகையில் இது எதிர்காலத்திற்கான சில சாத்தியக் கூறுகளை வெளிக்கொணர்வதற்கு உதவும்.
- இது போன்ற இரு பரிமாணப் பொருட்கள் இதற்கு முன் உருவாக்கப்படவில்லை.
- 2004 ஆம் ஆண்டு கார்பனால் ஆன அணு அளவிலான மெல்லிய பொருளான கிராபெனின் உருவாக்கத்திலிருந்து, அறிவியலாளர்கள் நூற்றுக்கணக்கான இரு பரிமாணப் பொருட்களைக் கண்டறிந்துள்ளனர்.




## Secure IoT நுண்செயலி




- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் மைண்ட்கிரோவ் நிறுவனமானது, இந்தியாவின் முதல் வணிகரீதியான உயர் செயல்திறன் கொண்ட RISC-V அடிப்படையிலான சில்லு (SoC) அமைப்பினை 'Secure IoT' என்ற பெயரில் உருவாக்கியுள்ளது.

- இது இந்திய அசல் உபகரண உற்பத்தியாளர்கள் (OEM) நிறுவனத்தினைத் தங்கள் தயாரிப்புகளில் இந்திய சில்லு அமைப்பினை (SoC) பயன்படுத்த வழி வகுக்கும்.
- இது உயர்தர அம்சங்களில் எந்தவித சமரசமும் செய்யாமல், அவர்களின் அதிக அம்சம் நிறைந்த சாதனங்களின் விலையைக் குறைக்க உதவும்.

## முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட ஏவுகல இயந்திரம்



- முப்பரிமாண அச்சிடல் தொழில்நுட்ப முறையில் தயாரிக்கப்பட்டத் திரவ ஏவுகல இயந்திரத்தின் செயல்பாட்டு நிலைச் சோதனையை இஸ்ரோ வெற்றிகரமாக மேற் கொண்டது.
- PSLV ஏவுகலத்தின் கடை நிலையின் PS4 இயந்திரம் இதற்காகப் பயன்படுத்தப்பட்டது.
- PSLV ஏவுகலத்தின் முதல் நிலையின் (PS1) எதிர்வினைக் கட்டுப்பாட்டு அமைப்பிலும் (RCS) இதே இயந்திரம் பயன்படுத்தப்படுகிறது.
- நைட்ரஜன் டெட்ராக்ஸைடினை ஆக்சிஜனேற்றியாகவும், மோனோ மெத்தில் ஹைட்ரேசினை எரிபொருளாகவும் பூமியில் சேமிக்கக் கூடிய இரட்டை உந்துவிப்பு எரிபொருள் கலவைகளை இந்த இயந்திரம் பயன்படுத்துகிறது.

## அண்டங்களில் அலைவு மாற்றம்


- புவியீர்ப்பு விசையில் "அண்டங்களில் அலைவு மாற்றம்" என்று கூறப்படும் ஒரு நிகழ்வினை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இது பேரண்டத்தின் விசித்திரமான நடத்தையை அண்ட அளவில் விளக்க உதவும்.
- இதனால், ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் பொது சார்பியல் கோட்பாடு ஆனது பேரண்டத்தின் வேகமான விரிவாக்கத்தை விளக்கப் போதுமானதாக இருக்காது என்று அவர்கள் கூறுகின்றனர்.
- ஐன்ஸ்டீனின் புவியீர்ப்பு மாதிரியானது பெருவெடிப்பு நிகழ்வினைக் கோட்படுத்துவது முதல் கருந்துளைகளைப் புகைப்படம் எடுப்பது வரையிலான அனைத்திற்கும் மிகவும் இன்றியமையாததாக உள்ளது.

- அண்டங்கள் நெடுந்தொலைவில் தோன்றாதொழிதலால் அவை முடுக்குவிக்கப்பட்டு, ஐன்ஸ்டீனின் கோட்பாட்டால் நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளை மீறுகின்றன.
- அவர்களின் கண்டுபிடிப்புகள் ஆனது, எதிர்பார்க்கப்படும் ஈர்ப்பு நடத்தையில் இருந்து விலகுவதை, குறிப்பாக அபரிமிதமான தொலைவில், அண்டங்களின் அலைவு மாற்றம் போன்ற நிகழ்வைக் குறிக்கின்றன.
- பேரண்டங்களின் தூரங்களைக் கடக்கும்போது, சில கூடுதல் பரிசீலனைகள் தேவைப் படுகின்றன.

## OpenAI நிறுவனத்தின் Sora

- OpenAI நிறுவனமானது, அதன் Sora எனப்படும் சமீபத்திய செயற்கை நுண்ணறிவு மாதிரியினை வெளியிட்டுள்ளது என்ற நிலையில் இது விரவல் நிலைமாற்றி (DiT) மூலம் இயக்கப் படுகிறது.
- இது எதிர்காலத்தில் திரைப்படத் தயாரிப்பு முறையினை மாற்றியமைக்கக் கூடிய ஒளிப்படக் காட்சியை உருவாக்கும் திறன்களைக் கொண்டுள்ளது.
- DiT என குறிப்பிடப்படும் விரவல் நிலைமாற்றி என்பது நிலைமாற்றிக் கட்டமைப்பின் அடிப்படையிலான விரவல் மாதிரிகளின் வகுப்பாகும்.
- DiT ஆனது Sora மாதிரிக்கு, உரை உள்ளீடுகளைப் புரிந்துகொள்ளவும், அவற்றைச் சிறிய பகுதிகளாகப் பிரித்து, சிறிது சீரற்றத் தன்மையைச் சேர்ப்பதன் மூலமும், பின்னர் உரையின் அடிப்படையில் உள்ளீடுகளைச் சரி செய்வதன் மூலமும் முறையான ஒளிப் படக் காட்சிகளை உருவாக்க உதவுகிறது.

## ஃபுசோபாக்டீரியம் நியூக்ளியேட்டம்




- மனிதர்களின் வாய்ப்பகுதியில் காணப்படுகின்ற ஃபுசோபாக்டீரியம் நியூக்ளியேட்டம் எனப்படும் பாக்டீரியாக்கள் அரிதாகவே வேறு இடங்களில் காணப்படுகின்றன.
- ஆனால் பெருங்குடல் அல்லது மலக்குடலில் புற்றுநோய் ஏற்பட்டால், குடலில் உள்ள கட்டிகளில் இந்தப் பாக்டீரியாக்கள் காணப்படுகின்றன.

- அங்கு, அவை புற்றுநோய் செல்கள் நோயெதிர்ப்பு மண்டலத்திலிருந்து தப்பி உடலின் மற்ற பகுதிகளுக்குப் பரவ உதவுகின்றன.
- பெருங்குடல் புற்றுநோய் (CRC) கட்டிகளில் ஒப்பீட்டளவில் அதிக அளவில் காணப்படும் பாக்டீரியத்தின் தனித்துவமான துணை வகையை ஆராய்ச்சியாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.
- 2004 முதல் 2014 ஆம் ஆண்டு வரையில் பாதிப்புகளின் எண்ணிக்கை 20% உயர்ந்து உள்ளதையடுத்து, பெருங்குடல் புற்றுநோய் இந்தியாவில் ஏழாவது பொதுவான வகை புற்றுநோயாக உள்ளது.


## குளோரோபிரின் - இரசாயன ஆயுதம்




- இரசாயன ஆயுதங்கள் உடன்படிக்கையை மீறி உக்ரைன் நாட்டின் படைகளுக்கு எதிராக இரசாயன ஆயுதத்தை ரஷ்யா பயன்படுத்தியதாக அமெரிக்க வெளியுறவுத் துறை குற்றம் சாட்டியுள்ளது.
- உக்ரைனில் இரசாயன காரணியான குளோரோபிரைனை ரஷ்யா பயன்படுத்துவதாக அமெரிக்காவின் தகவல் அறிக்கை குற்றம் சாட்டுகிறது.
- குளோரோபிரின் என்ற இரசாயன மூலக்கூறானது போரில் ஆயுதமாகவும் பூச்சிக் கொல்லியாகவும் பயன்படுத்தப்படுகிறது.
- இதனை சுவாசித்தால், அது உடல் ஆரோக்கியத்திற்கு ஆபத்தை விளைவிக்கும்.
- நைட்ரோகுளோரோஃபார்ம் என்றும் அழைக்கப்படும், குளோரோபிரின் ஒரு நுண்ணுயிர் எதிர்ப்புக் காரணியாகவும், களைக்கொல்லி மற்றும் நூற்புழுக் கொல்லியாகவும் பயன்படுத்தப்படுகிறது.

- இது முதல் உலகப் போரில் நேச நாடுகளாலும் அச்சு நாடுகளாலும் முதலில் உருவாக்கப் பட்டது.
- குளோரோபிரின் மனிதர்களில் எரிச்சலூட்டும் தன்மை மற்றும் கண்ணீரைத் தூண்டும் விளைவுகளை ஏற்படுத்துவதாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது என்பதோடு மேலும் இது மிகவும் நச்சுத்தன்மையுடையது மற்றும் புற்றுநோயை உண்டாக்கும் தன்மையையும் கொண்டது என்றும் அறியப் படுகிறது.


## பூமியைத் தாக்கிய வலுவான சூரியப் புயல்



- வழக்கத்திற்கு மாறாக பூமியைத் தாக்கிய வலுவான சூரியப் புயல் அமெரிக்காவில் வட துருவ மின்னொளிகளை உருவாக்கக் கூடும்.
- 1859 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வரலாற்றில் மிக வலுவான சூரியப் புயல், மத்திய அமெரிக்காவிலும் மற்றும் ஹவாயிலும் கூட துருவ மின்னொளிகளின் ஒரு உருவாக்கத்தினைத் தூண்டியது.
- எடுத்துக்காட்டாக, 2003 ஆம் ஆண்டில் ஒரு வலுவான புவிக் காந்தப் புயல், சுவீடனில் மின்சாரத்தை உள்ளிழுத்து, தென்னாப்பிரிக்காவில் பல்வேறு மின்மாற்றிகளை சேதப் படுத்தியது.
- மே 08 ஆம் தேதி முதல் சூரியன் சில வலுவான சூரியச் சுடரொளிகளை உருவாக்கி உள்ளதன் விளைவாக குறைந்தது ஏழு பிளாஸ்மா (அயனிமம்) வெடிப்புகளை ஏற்பட்டு உள்ளன.

## சாகிட்டாரியஸ் A கருந்துளையின் விரைவான சுழற்சி

- விண்மீனின் மையத்தில் உள்ள பிரம்மாண்டமான கருந்துளையான சாகிட்டாரியஸ் A*, மிகவும் வேகமாகச் சுழன்று, அதைச் சுற்றியுள்ள விண்வெளி நேரத்தை மறு வடிவமைப்பதாக சமீபத்திய ஆராய்ச்சி வெளிப்படுத்தியது.
- விண்வெளி நேரம் என்பது, ஒரு பரிமாண நேரம் மற்றும் முப்பரிமாண விண்வெளி ஆகியவற்றின் கலவையாகும்.
- இது ஒரு தொடர்ச்சியான அமைப்பாகச் செயல்படுகிறது என்பதோடு மாபெரும் வானியல் அமைப்புகளின் தாக்கத்தின் கீழ் மாறி பின்பு வளைகிறது.
- இந்த கருந்துளையானது பூமியில் இருந்து 26,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது.




## நான்சி கிரேஸ் ரோமன் தொலைநோக்கி

- நாசாவின் நான்சி கிரேஸ் ரோமன் விண்வெளித் தொலைநோக்கியானது ஓர் அற்புதமான ஆய்வுப் பணியைத் தொடங்க தயாராக உள்ளது.
- இது பெருவெடிப்பு காலத்திற்கு பல பில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய பழமையான கருந்துளைகள் குறித்த ஆய்வினை மேற்கொள்ள தொடங்கும்.
- இந்த ஆய்வுப் பணியானது 2026 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தொடங்கப்பட உள்ளது.
- அத்தகைய "பழமையான கருந்துளைகள்" இருப்பது நிரூபிக்கப் பட்டால், சுமார் 13.8 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பேரண்டத்தின் ஆரம்ப காலத்திய சகாப்தங்களைப் பற்றிய நமது புரிதலுக்கு இது சவாலாக அமையும்.
- ஹாக்கிங்கின் ஹாக்கிங் கதிர்வீச்சு கோட்பாடு ஆனது கருந்துளைகள் கதிர்வீச்சை "கசியச்" செய்து இறுதியில் ஆவியாகிவிடும் என்று முன்மொழிகிறது.
- பிரதான கருந்துளைகள் ஆவியாகாமல் பல பில்லியன் ஆண்டுகள் நீடித்திருக்க, அவை ஹாக்கிங்கின் கணிப்புகளை மீறியதாக இருக்க வேண்டும்.


## பகுதியளவு மீக்குளிர் நிலையிலான இயந்திரம்

- மகேந்திரகிரியில் உள்ள ஒருங்கிணைந்த பகுதியளவு மீக்குளிர் நிலை இயந்திர சோதனை மையத்தில் (SIET) SCE-200 (பகுதியளவு மீக்குளிர் நிலையிலான இயந்திரம் -200) இயந்திரத்திற்கான முதல் தீப்பற்றல் சோதனையை இஸ்ரோ மேற்கொண்டது.
- பகுதியளவு மீக்குளிர் நிலையிலான இயந்திரம் தீப்பற்றல் செயல்முறையானது ட்ரை எதில் அலுமினியம் மற்றும் ட்ரைஎத்தில் போரான் ஆகியவற்றின் ஒரு கலவையைப் பயன்படுத்துகின்ற ஒரு தொடக்க உட்செலுத்துக் குழாயினைப் பயன்படுத்தி மேற் கொள்ளப் படுகிறது.
- இது இஸ்ரோவில் முதல் முறையாக 2000 kN பகுதியளவு மீக்குளிர் நிலையிலான இயந்திரத்தில் பயன்படுத்தப்படுகிறது.


- SCE-200 என்பது இஸ்ரோவின் திரவ உந்துவிசை அமைப்புகள் மையத்தினால் (LPSC) உருவாக்கப்பட்ட 2MN உந்துதல் ரக திரவ ஏவுகல இயந்திரம் ஆகும்.
- இந்த அடுத்த தலைமுறை தொழில்நுட்பத்திலான ஏவுகல இயந்திரம் ஆனது, இஸ்ரோவின் ஏவு வாகனம் மார்க்-III ஏவுகலம் மற்றும் பிற எதிர்கால ஏவு வாகனங்களின் விண்வெளிப் பொருட்களின் சுமந்து செல்லும் திறனை மேம்படுத்தச் செய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

## புற்றுநோய் எதிர்ப்பு மருந்து - Ph-Cys-Au

- பாஸ்போரின், சிஸ்டைன் மற்றும் தங்கம் (Ph-Cys-Au) ஆகியவற்றைப் பயன்படுத்தி இயல்புக்கு மாறான ஒளியியல் பண்புகளைக் கொண்ட ஒரு புதிய உயர் ஒளிரும் தன்மை கொண்ட பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.
- இது நுரையீரல், வயிறு மற்றும் இதயத்தின் மீது நச்சு விளைவைக் கொண்டிருக்கும் MTX என்ற புற்றுநோய் எதிர்ப்பு மருந்தின் அதிக அளவைக் கண்டறிவதற்கான ஒரு காட்சி வகை உணர்திறன் தளமாகப் பயன்படுத்தப்படலாம்.
- அவை மனித உடலில் கடுமையான பக்க விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்பதால் சிகிச்சையளிப்பு மருந்துகளைக் கண்காணிப்பது மற்றும் அவற்றை நீக்குவது மிகவும் முக்கியமானதாகும்.
- மெத்தோட்ரெக்ஸேட் (MTX) என்பது பரவலாகப் பயன்படுத்தப்படும் ஒரு புற்றுநோய் எதிர்ப்பு மருந்து ஆகும்.
- இரத்தத்தில் உள்ள பிளாஸ்மாவில் 10 μMக்கும் அதிகமான காணப்படும் MTX என்ற அளவானது, 10 மணி நேரத்திற்கும் மேலாக இரத்த அமைப்பில் இருந்தால் ஆபத்தானது ஆகும்.
- இது நுரையீரல் மற்றும் வயிற்றில் உள்ள புண்கள் ஆகியவற்றில் மிகப்பெரும் நச்சு விளைவுகளையும் மாரடைப்பையும் ஏற்படுத்தும்.



## பாறைக் கோள் - 55 கேன்கிரி e




- நமது சூரியக் குடும்பத்திற்கு அப்பால் வளிமண்டலத்துடன் கூடிய பாறைகளால் ஆன கோள் ஒன்றை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- 55 கேன்கிரி e அல்லது ஜேன்சன் என்று அழைக்கப்படும் இந்தக் கிரகம் ஆனது, நமது கிரகத்தை விட இரண்டு மடங்கு விட்டத்துடன் பூமியை விட சுமார் 8.8 மடங்கு பெரியது ஆகும்.
- இது நமது சூரியக் குடும்பத்தின் உள் கோளான புதனுக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள தூரத்தில் 25 பங்கில் ஒரு பங்கு தொலைவில் அதன் நட்சத்திரத்தைச் சுற்றி வருகிறது.
- இதன் விளைவாக, அதன் மேற்பரப்பு வெப்பநிலையானது சுமார் 3,140 டிகிரி பாரன்ஹீட் (1,725 டிகிரி செல்சியஸ்/2,000 டிகிரி கெல்வின்) ஆக உள்ளது.
- இந்தக் கிரகம் ஆனது அநேகமாக சுழற்சி முறையினால் ஈர்க்கப் பட்டிருக்கலாம்.
- அதாவது நிலவு பூமியை நோக்கிச் சுழன்று வருவதைப் போலவே அது எப்போதும் அதன் நட்சத்திரத்தை ஒரே புறம் எதிர்கொள்ளும் வகையிலேயே சுழன்று வருகிறது.
- இது உயிர்கள் வாழ்வதற்கு அவசியமான திரவ நீரை தக்க வைக்க முடியாத அளவிற்கு அது மிகவும் சூடாக இருக்கிறது என்பதால் இந்தக் கோளில் உயிர்கள் வாழ முடியாது.

## IBM நிறுவனத்தின் காண்டோர்


- IBM குவாண்டம் (துளிமம்) அறிவியலாளர்கள் ஒரு மாபெரும் தொடர் குளிர்விப்பு "மீக்குளிர்விப்பான்" உள்ளே காண்டோர் எனப்படும் 1,121-Qubit செயலியுடன் கூடிய ஒரு குவாண்டம் கணினியை உருவாக்கியுள்ளனர்.
- காண்டோர் ஆனது முழுமையாக பிழை-திருத்தப்பட்ட, ஒன்றோடொன்று இணைக்கப் பட்ட, 1-மில்லியன்-பிளஸ்-கியூபிட் குவாண்டம் கணினிகளுக்கான ஒரு அடித்தளத்தை அமைக்கிறது.
- இது மதிப்பீடு மற்றும் எதிர்கால வன்பொருள் வடிவமைப்பில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்து புத்தாக்கத்தில் ஒரு மைல்கல்லாக கருதப்படுகிறது.

- 2021 ஆம் ஆண்டில், IBM 127- Qubit "ஈகிள்" சில்லுகளை அறிமுகப் படுத்தியது.




## OpenAI GPT-4o

- OpenAI நிறுவனம் ஆனது, உரை, காட்சி மற்றும் ஒலி ஆகியவற்றின் திறன்கள் மேம்படுத்தப்பட்ட செயல்திறனுடன் கூடியதாக ChatGPT என்ற உரையாடு மென்பொருளினை மாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள அதன் GPT-4 மாதிரியின் புதிய மறு வடிவமான GPT-4o அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது உரை, ஒலி மற்றும் ஒளிப்படம் ஆகியவற்றின் அதிகரித்த வேகம் மற்றும் நிகழ்நேர பகுத்தறிதல் திறனை வழங்குகிறது.
- இது வாய்மொழி பதில்களில் மனித நடவடிக்கைகளைப் பிரதிபலிக்கும் வகையிலான பல்வேறு திறன்களையும், மனிதர்களின் மனநிலைகளைக் கண்டறியும் திறனையும் அறிமுகப்படுத்துகிறது.




## உயர் ஆற்றல் கொண்ட ஃபோட்டான் தோற்றுவாய்

- பெய்ஜிங்கில் உள்ள ஹுவாயிரோ அறிவியல் நகரத்தில், சீனாவின் உயர் ஆற்றல் கொண்ட ஃபோட்டான் மூலமானது (HEPS) வெற்றிகரமாக நிறுவப்பட்டது.
- HEPS, நிறைவு செய்யப்பட்டதும் உலகின் பிரகாசமான சின்க்ரோட்ரான் கதிர்வீச்சு (SR) மூலங்களில் ஒன்றாக விளங்கும்.
- இது சீனாவின் முதல் உயர் ஆற்றல் கொண்ட சின்க்ரோட்ரான் கதிர்வீச்சு மையமாகும்.
- HEPS ஆனது அதன் 1.36-கிலோமீட்டர் சுற்றளவிலான சேமிப்புச் சுற்றளவிற்குள் 6 ஜிகா எலக்ட்ரான் வோல்ட் ஆற்றல் வரை எலக்ட்ரான்களை துரிதப்படுத்துவதற்காக வடிவமைக்கப் பட்டுள்ளது.
- இந்தச் செயல்முறையானது, பல மாதிரிகளில் ஆழமாக ஊடுருவி, நானோமீட்டர் என்ற அளவிலான துல்லிய விவரங்களை வெளிப்படுத்துகின்ற உயர் ஆற்றல் கொண்ட X-கதிர்களை உருவாக்கும்.




## கருந்துளைகளைச் சுற்றி "மூழ்கும் பகுதிகள்"




- கருந்துளைகளைச் சுற்றி "தோய்வுறும் பகுதிகள்" இருப்பதைப் பற்றிய ஐன்ஸ்டீனின் ஈர்ப்பியல் கோட்பாட்டிற்கான முக்கிய கணிப்புக்கான முதல் ஆதாரமானது ஒரு புதிய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

- அண்டத்தில் இதுவரையில் அடையாளம் காணப்பட்ட சில வலிமையான ஈர்ப்பு விசைகளையும் இது கொண்டுள்ளது.
- ஐன்ஸ்டீனின் கோட்பாட்டின்படி,
  - கருந்துளைக்குச் சற்று அருகில் இருந்தால், துகள்கள் வட்ட சுற்றுப் பாதையை பாதுகாப்பாகப் பின்தொடர்வது சாத்தியமில்லை.
  - மாறாக அவை ஒளியின் வேகத்திற்கு சற்று அருகில் கருந்துளையை நோக்கி வேகமாக "அமிழ்ந்தி" – மூழ்கும் பகுதியினுள் நுழைகிறது.

## SPECULOOS-3b - புதிய குறுங்கோள்


- மீகுளிர் செந்நிற குள்ள நட்சத்திரத்தைச் சுற்றி வரும் புதிய பூமி அளவிலான கிரகத்தை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- SPECULOOS-3b என்று அழைக்கப்படும் இது பூமியிலிருந்து சுமார் 55 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது.
- இது ஒவ்வொரு 17 மணி நேரத்திற்கும் ஒரு முறை செந்நிற குள்ள நட்சத்திரத்தினைச் சுற்றி வருகிறது என்பதோடு இது இந்தக் கிரகத்தில் ஓர் ஆண்டினைப் பூமியில் ஒரு நாளிற்கும் குறைவான காலம் கொண்டதாக மாற்றுகிறது.
- மேலும், இதில் வளிமண்டல அமைப்பு காணப்படவில்லை மற்றும் இதன் சுற்றுச்சூழல் நிலைமைகளில் பூமியை விட பெரிய வேறுபாடுகள் காணப்படுகிறது.




## இரட்டை கருந்துளை அமைப்பு

- ஆஸ்ட்ரோசாட் ஆனது, ஸ்விஃப்ட் J1727.8-1613 எனப்படும் கருந்துளை இரட்டை மூலம் குறித்த குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்பினை மேற்கொண்டுள்ளது.
- கருந்துளை ஊடுகதிர் இரட்டை அமைப்பில் (BH-XRB), கருந்துளை மற்றும் அதன் துணை நட்சத்திரம் ஈர்ப்பு விசையால் பிணைக்கப்பட்டுள்ளன.
- கருந்துளை அதன் துணை அமைப்பிலிருந்து பருப்பொருளை இழுத்து, ஒரு பிரகாசமான திரள் வட்டினை உருவாக்குகிறது.
- இந்த பருப்பொருள் வெப்பமடையும் போது, அது அதிக ஆற்றல் கொண்ட ஊடு கதிர்களை வெளியிடுகிறது. இது அறிவியலாளர்கள் இந்தக் கருந்துளைகளைக் கண்டு அறிந்து ஆய்வு செய்ய உதவுகிறது.

- கருந்துளை என்பது ஒளி உட்பட எதுவும் தப்ப முடியாத, விண்வெளியில் ஈர்ப்பு விசை மிகவும் வலுவாக இருக்கும் ஒரு பகுதியாகும்.
- ஆஸ்ட்ரோசாட், இந்தியாவின் முதல் பிரத்தியேக பல் அலைநீள விண்வெளி ஆய்வுக் கலனாகும்.




## சூரியனின் காந்தப்புலம்





- புவியின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தும் சூரியப் புயல்களுக்குக் காரணமான சூரியனின் சக்தி வாய்ந்த காந்தப்புலமானது, நட்சத்திரத்தின் உள்ளார்ந்தப் பகுதியில் தோன்றியதாக இதுவரை அறிவியலாளர்கள் கருதினர்.
- ஆனால் சமீபத்திய ஆய்வுகளின்படி, சூரியனில் காந்தப்புலத்தினை உருவாக்கும் செயல்முறையான சூரியனின் செயல்முறை என்பது, அந்த நட்சத்திரத்தின் வெளிப்புற அடுக்குகளில் மேற்பரப்புக்கு மிக அருகில் அமைந்திருக்கலாம்.


- சூரியனின் மேற்பரப்பிலிருந்து 20,000 மைல்களுக்கு கீழே காந்தப்புலம் உருவாகிறது என்று ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன.
- இது சூரியனின் மேற்பரப்பிலிருந்து சுமார் 130,000 மைல்களுக்குக் கீழே இருந்து தோன்றியதாகக் கூறப்பட்ட முந்தைய ஆய்வுகளுக்கு முரணாக உள்ளது.

## eVTOL விமானங்கள்

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் தொழில் காப்பு பெற்ற ePlane நிறுவனம் ஆனது, பெங்களூரில் eVTOL (மின்சாரத்தில் இயங்கும் செங்குத்தான புறப்பாடு மற்றும் தரையிறக்கம்) வசதி கொண்ட விமானத்தை அறிமுகப்படுத்த உள்ளது.
- eVTOL விமானங்கள் நகர்ப்புறங்களில் செயல்படுவதற்காகவும், போக்குவரத்து நெரிசல் மற்றும் காற்று மாசுபாட்டைக் குறைக்கவும், இணைப்பு மற்றும் அவசர சேவைகளை மேம்படுத்துவதற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- இவை மின்சார உந்து விசையைப் பயன்படுத்தி மிகவும் செங்குத்தாக புறப்பட்டு தரையிறங்கக் கூடிய விமானங்கள் ஆகும்.
- தினசரி பயணத்தில் சாலைப் போக்குவரத்தை குறைக்கும் என்றும் சரக்கு விநியோகம் மற்றும் ராணுவப் பயன்பாடுகளுக்காக கூட இது பயன்படுத்தப்படும் என்றும் மிகவும் எதிர்பார்க்கப் படுகிறது.




## ஒளியிழை நுண் அளவியல் வடிவங்களைக் கட்டுருவாக்கல் செயல்முறை




- கௌஹாத்தியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழகம் ஆகியவற்றின் அறிவியலாளர்கள் குழு ஒரு எளிய மேற்பரப்பு அகச்சிவப்பு ஒளிக்கற்றையினைப் பெருமளவில் பயன்படுத்தி நுண் அளவியல் வடிவங்களைக் கட்டுருவாக்கல் செயல்முறையை உருவாக்கியுள்ளனர்.
- மேசயின் மேலுள்ள ஓர் எளிய அகச்சிவப்பு ஒளிக்கற்றை, பொருட்களை அவற்றின் ஒத்ததிர்வு அதிர்வெண்ணில் அவற்றை நேரடியாகத் தொடாமல் அவற்றின் பல்வேறு பண்புகளை மாற்றப் பயன்படுகிறது.
- நுண் அளவியல் வடிவங்களைக் கட்டுருவாக்கல் செயல்முறை என்பது நுண் அளவில் உள்ள பொருட்களின் மீது வடிவங்களை உருவாக்கும் செயல்முறையை வெகுவாக உள்ளடக்கியதாகும்.
- இது ஒரு மனித முடியின் அகலத்தை விட நூறு ஆயிரம் மடங்கு சிறியதாகும்.


# சுற்றுச்சூழல் செய்திகள்

## செங்கடலில் கார்பன் உமிழ்வு

- ஹைதி கிளர்ச்சியாளர்களின் தொடர்ச்சியான பாதுகாப்பு அச்சுறுத்தல்களால் செங்கடலைச் சுற்றி பயணிக்கும் கப்பல்களில் இருந்து வெளியாகும் கார்பன் உமிழ்வு அதிகரிப்பிற்குப் பங்களிக்கின்றன.
- சூயஸ் கணவாய் வழியாகச் செல்வதற்குப் பதிலாக, கப்பல்கள் டிசம்பர் மாத நடுப் பகுதியில் இருந்து தென்னாப்பிரிக்காவின் நன்னம்பிக்கை முனையைச் சுற்றிய ஒரு நீண்ட பாதையில் செல்ல வேண்டியதாயிற்று.
- இந்த திசைதிருப்பல் ஆனது கடந்த நான்கு மாதங்களில் சுமார் 13.6 மில்லியன் டன்கள் கூடுதலாக CO2 உமிழ்வினை ஏற்படுத்தியுள்ளது.
- இது அதே காலக் கட்டத்தில் சுமார் 9 மில்லியன் மகிழுந்துகளால் வெளியிடப்பட்ட மாசுபாட்டிற்குச் சமம் ஆகும்.



## விரைவாக வெப்பமயமாகும் இந்தியப் பெருங்கடல்


IN TROUBLED WATERS


- Marine heatwaves (periods of abnormally high ocean temperatures) are projected to increase from 20 days per year (during 1970-2000) to 220-250 days per year
- They cause habitat destruction due to coral bleaching, seagrass destruction, and loss of kelp forests, affecting fisheries sector adversely and also lead to the rapid intensification of cyclones
- Maximum warming will occur in the northwestern Indian Ocean, including the Arabian Sea, while there will be reduced warming off the Sumatra and Java coasts
- "The future increase in heat content is comparable to adding the energy equivalent of one Hiroshima atomic bomb detonation every second, all day, every day, for a decade," says Roxy Mathew Koll, a climate scientist

- 1950-2020 ஆம் காலக் கட்டம் முதல், இந்தியப் பெருங்கடல் ஆனது 1.2 டிகிரி செல்சியஸ் வெப்பமடைந்தது என்பதோடு 2020 முதல் 2100 ஆம் ஆண்டு காலக் கட்டத்தில் மேலும் 1.7 டிகிரி செல்சியஸ் - 3.8 டிகிரி செல்சியஸ் அளவில் வெப்பமடையும் என்று பருவ நிலை மாதிரிகள் குறிப்பிடுகின்றன.
- இது கடலில் காணப்படும் "கடல் வெப்ப அலைகள்" விரைவான புயல் உருவாக்கத்துடன் தொடர்பு கொண்டுள்ளது.
- அவை ஆண்டிற்கு 20 நாட்கள் என்ற தற்போதைய சராசரியிலிருந்து 220-250 நாட்கள் என்ற அளவில் பத்து மடங்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்தியப் பெருங்கடலின் வெப்ப அளவானது, மேற்பரப்பில் இருந்து 2,000 மீட்டர் ஆழம் வரை அளவிடப்படுகிறது.
- இது தற்போது பத்தாண்டுகளுக்கு 4.5 ஜெட்டா-ஜூல்கள் என்ற விகிதத்தில் அதிகரித்து வருகிறது.
- மேலும் இது எதிர்காலத்தில் ஒரு பத்தாண்டுகளுக்கு 16-22 ஜெட்டா-ஜூல்கள் என்ற விகிதத்தில் அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- ஜூல் என்பது ஆற்றல் அலகு மற்றும் ஒரு ஜெட்டா-ஜூல் ஒரு பில்லியன் டிரில்லியன் ஜூல்களுக்குச் சமம் (1021) ஆகும்.

## லா கும்ப்ரே எரிமலை & நிலவாழ் பேரோந்திகள்


- பெர்னாண்டினா தீவில் அமைந்துள்ள லா கும்ப்ரே எரிமலை கடந்த மாதம் வெடித்தது.
- ஈக்வடார் நிலப்பரப்பில் இருந்து 1,125 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள லா கும்ப்ரே எரிமலையானது 2020 ஆம் ஆண்டிற்குப் பிறகு முதல் முறையாக வெடித்து உள்ளது.

- இந்த தீவில் அரிய நிலவாழ் பேரோந்திகளும் (உடும்புகள்) அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றன.
- அவை எரிமலையின் பெரிய பள்ளம் அல்லது கால்டெராவின் விளிம்புப் பகுதிகளிலும், அதன் ஆழமான பகுதிகளிலும் கூடு கட்டி முட்டையிடுகின்றன.
- இது இகுவானிடே குடும்பத்தினைச் சேர்ந்த மிகப் பெரியப் பல்லி இனமாகும்.
- கேலபோகஸ் தீவுகளில் மட்டுமே காணப்படும் மூன்று நிலவாழ் உடும்பு வகைகளில் இதுவும் ஒன்றாகும்.
- மற்றவை சாண்டா ஃபே நிலவாழ் உடும்பு மற்றும் கேலபோகஸ் இளஞ்சிவப்பு நிற நில வாழ் உடும்பு ஆகியனவாகும்.




## கடல்சார் பகுதியில் மேகங்களின் ஒளி திருப்புதல் திறனை மேம்படுத்துதல்

- மேகங்களைத் தூண்டுவித்து, சூரிய ஒளியை மீண்டும் விண்வெளியில் பிரதிபலிக்கச் செய்வதற்காக (திருப்புவதற்காக) வடிவமைக்கப்பட்ட தொழில்நுட்பத்தின் முதலாவது வெளிப்புறச் சோதனையை அறிவியலாளர்கள் மேற்கொண்டுள்ளனர்.
- இந்த புவியியல் சார் பொறியியல் நுட்பம் ஆனது கடல்சார் பகுதியில் மேகங்களின் ஒளி திருப்புதல் திறனை மேம்படுத்துதல் எனப்படுகிறது.
- இது புவியின் அதிகரித்து வரும் வெப்பநிலையைத் தணிக்கக் கூடியதாக உள்ளது.
- இந்தப் புவியியல் சார் பொறியியல் நுட்பமானது கடல் உப்பு அல்லது மற்ற தூசுப் படலங்கள் (வளிமக் கரைசல்) போன்ற சிறிய துகள்களைக் கடலின் மேற்புறத்திருந்து வளிமண்டலத்தில் தெளிக்கும் செயல்முறையினை உள்ளடக்கியது.
- இந்தத் துகள்கள் மேக ஒடுக்கக் கருக்களாகச் செயல்பட்டு, ஏற்கனவே இருக்கும் மேகங்களுக்குள் அதிக எண்ணிக்கையிலான, ஆனால் சிறு சிறு நீர்த்துளிகள் உருவாவதை அதிகரிக்கின்றன.
- இதன் விளைவாக, மேகங்கள் மிகவும் பிரகாசமாகவும் அதிக பிரதிபலிப்புத் திறன் கொண்டதாகவும் மாறும் இதனால் அவற்றின் ஒளி திருப்புதல் திறன்- சூரிய ஒளியை மீண்டும் விண்வெளியில் பிரதிபலிக்கும் திறன் - ஆனது மிகவும் திறம் மிக்க முறையில் அதிகரிக்கிறது.





## பாட்டிலிப்ஸ் சந்திராயணி

- தமிழ்நாட்டின் தென்கிழக்குக் கடற்கரையிலிருந்து ஒரு புதிய 'நீர்க் கரடி' இனங்கள் கண்டறியப் பட்டுள்ளன.
- இது இந்தியக் கடல் பகுதியிலிருந்து அறிவியல் ரீதியாக விவரிக்கப்பட்ட மூன்றாவது மற்றும் கிழக்கு கடற்கரைப் பகுதியில் இருந்து கண்டறியப்பட்ட இரண்டாவது கடல் வாழ் டார்டிகிரேடு (மெது நடையன்) இனமாகும்.
- சந்திரயான்-3 நிலவு ஆய்வுக் கலத்தின் பெயரால் இதற்குப் பாட்டிலிப்ஸ் சந்திரயாணி என்று பெயரிடப்பட்டுள்ளது.
- டார்டிகிரேடுகள் உண்மையான கரடிகளுடன் எந்த தொடர்பும் கொண்டிருக்கவில்லை என்றாலும், பொதுவாக 'நீர்க் கரடிகள்' என்று அழைக்கப்படும் நுண்ணிய அளவிலான அற்புத இனங்கள் ஆகும்.
- பாட்டிலிப்ஸ் சந்திராயணி என்பது பட்டிலிப்ஸ் இனத்தின் கீழ் விவரிக்கப்பட்ட 39வது இனமாகும்.
- இதுவரையில் அறியப்பட்ட அனைத்து டார்டிகிரேடு இனங்களில் 17% கடல் வாழ் டார்டி கிரேடுகளாகும்.



## ஓட்டோலித் வளையங்கள்

- மீன்களின் காதில் அறிவியலாளர்கள் மர வளையங்களைப் போல ஆய்வு செய்யும் வகையிலான ஒரு வகையான கல் (செவிக்கல்) உள்ளது.
- இந்தக் கற்களில் உள்ள வேதிப் பொருட்கள் மீன்கள் உயிருடன் இருக்கும் போது எவ்வளவு ஆற்றலைப் பயன்படுத்தியது என்பதை மதிப்பிட ஆராய்ச்சியாளர்கள் ஒரு வழியைக் கண்டறிந்துள்ளனர்.
- அவை நீலத்துாவி சூரை மீனை (புளூஃபின் டுனா) பருவநிலை நெருக்கடியிலிருந்துக் காக்க உதவும்.
- உயரும் வெப்பநிலையானது இளம் நீலத்துாவி சூரை மீன்களின் வளர்சிதை மாற்ற விகிதங்களை வெகுவாகப் பாதிக்கிறது, குறிப்பாக அவற்றின் ஆற்றல் பயன்பாட்டைப் பாதிக்கிறது.
- ஓட்டோலித் என்பது மீன்களின் காதில் உள்ள ஒரு கல் போன்ற கட்டியாகும்.
- ஓட்டோலித் வளையங்கள், மர வளையங்களைப் போலவே, மீனின் வயதை அறியப் பயன்படுகின்றன.




## லட்சத்தீவில் பவளப் பாறை நிறமாற்ற நிகழ்வு




- கடல் வெப்ப அலைகள் காரணமாக லட்சத்தீவு கடலில் பெருமளவிலான பவளப்பாறை நிறமாற்ற நிகழ்வு பதிவாகியுள்ளது.
- லட்சத்தீவுகள் கடல் பகுதியில் கணிசமான சதவீத அளவிலான கடினப் பவளப் பாறை இனங்கள் கடுமையான நிறமாற்ற நிகழ்விற்கு உட்பட்டுள்ளன.

- இது முதன்மையாக 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தின் பிற்பகுதியில் இருந்து அந்தப் பிராந்தியத்தை நீடித்த காலமாகப் பாதித்து வரும் கடல் வெப்ப அலைகளின் காரணமாக ஏற்பட்டிருக்கலாம்.
- தொடரும் வெப்ப அலைகள் ஆனது கடல் புல்வெளிகள் உட்பட மற்ற முக்கியமான கடல் வாழ்விடங்களையும் அச்சுறுத்துகின்றன.
- பவளப்பாறைகளைப் போலவே, கடற்பரப்புப் புல்வெளிகளும் கடும் வெப்ப அலைகள் காரணமாக, ஒளிச்சேர்க்கை குறைதல், வளர்ச்சி குறைதல் மற்றும் தடைபட்ட இனப் பெருக்கச் செயல்பாடுகள் போன்ற பாதகமானத் தாக்கங்களை எதிர் கொள்கின்றன.

## க்ளைப்டோதோராக்ஸ் புண்யபிரதாய்

- அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள பிரம்மபுத்திரா நதி வடிகால் பகுதியில் க்ளைப்டோதோராக்ஸ் புண்யபிரதாய் என்ற புதிய கெளுத்தி மீன் இனம் கண்டறியப் பட்டுள்ளது.
- பிரம்மபுத்திரா நதிப் படுகையில் உள்ள திஸ்ஸா நதியின் ஒரு சிறிய துணை நதியான துங் நீரோடையிலிருந்து இந்த இனங்கள் சேகரிக்கப்பட்டன.
- ICAR-NBFGR நிறுவனத்தின் ஸ்தாபன இயக்குநரான டாக்டர் புண்யபாரத தாஸ் மீன்வள ஆராய்ச்சியில் அவர் ஆற்றிய மகத்தான மற்றும் மதிப்புமிக்கப் பங்களிப்பை நன்கு கௌரவிக்கும் வகையில் புதிய இனத்திற்கு அவரது பெயரிடப்பட்டுள்ளது.





## உலகின் மிகப்பெரிய நிரந்தர உறைபனி பள்ளம்

- உலகின் மற்ற பகுதிகளை விட ரஷ்யா குறைந்தது சுமார் 2.5 மடங்கு வேகமாக வெப்பமடைந்து வருவதாக அறிவியலாளர்கள் கூறுகின்றனர்.
- "பாதாள உலகத்தின் நுழைவாயில்" என்று அழைக்கப்படும் உலகின் மிகப்பெரியப் பள்ளங்களில் ஒன்று ஒவ்வோர் ஆண்டும் 35 மில்லியன் கன அடியாக விரிவடைந்து வருகிறது.

- செர்பியாவின் நிரந்தர உறைபனி அமைப்பில் அமைந்துள்ள பெரிய பள்ளம் ஆனது அதன் நிலத்தடி உறைபனி உருகுவதால் விரிவடைந்து வருகிறது.
- அதிகாரப்பூர்வமாக படகே (படகைகா) என்று அழைக்கப்படும் இந்தப் பள்ளம் அல்லது மாபெரும் சரிவு என்பது 1991 ஆம் ஆண்டில் செயற்கைக்கோள் படங்கள் மூலம் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு வட்டமான செங்குத்துப் பாறை அமைப்பாகும்.
- ரஷ்யாவின் வடக்கு யாகுடியாவின் யானா உயர்மலைப் பகுதியில், மலையின் ஒரு பகுதி இடிந்து விழுந்ததால் இது உருவானது.
- 650,000 ஆண்டுகள் வரை உறைந்து கிடக்கும் மலைச்சரிவின் எஞ்சிய பகுதிக்குள் காணப்படும் நிரந்தர உறைபனி அடுக்குகளை இந்த சரிவு வெளிக்கொணர்ந்தது.
- இது சைபீரியாவில் உள்ள மிகப் பழமையான நிரந்தர உறைபனி என்றும், உலகின் இரண்டாவது பழமையானது என்றும் அறியப்படுகிறது.



## இந்தியப் பெருங்கடலின் வெப்பநிலை மற்றும் டெங்கு பாதிப்பின் தீவிரம்





- இந்தியப் பெருங்கடலில் கடல்-மேற்பரப்பு வெப்பநிலையில் ஏற்படும் பல்வேறு முரண்பாடுகளுக்கும் உலகளவில் பதிவாகச் செய்யும்ம் டெங்கு தொற்றுநோய்களின் தீவிரத்திற்கும் இடையே ஒரு சாத்தியமான தொடர்பு இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- வெப்பம் மற்றும் ஈரப்பதத்தை பரந்த தூரங்களுக்கு இடமாற்றும் தொலைத் தொடர்புகள், பெரிய அளவிலான வளிமண்டல வடிவமைப்புகள் ஆகியவற்றினால் பிராந்திய வெப்பநிலையில் ஏற்படும் தாக்கம் காரணமாக இந்தத் தொடர்பு சாத்தியம் ஆகிறது.

- டெங்கு என்பது பாதிக்கப்பட்ட ஏடிஸ் வகை கொசுக்கள் கடிப்பதன் மூலம் பரவும் ஒரு வைரஸ் தொற்று ஆகும்.
- 1970 ஆம் ஆண்டிற்கு முன், ஒன்பது நாடுகளில் மட்டுமே மிகவும் கடுமையான டெங்கு பாதிப்புகள் பதிவாகியிருந்தன.
- ஆனால் தற்போது இது உலக மக்கள்தொகையில் சுமார் பாதிப் பேரைப் பாதிக்கிறது என்ற நிலையில் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 100-400 மில்லியன் நோய்த் தொற்றுகள் ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## பச்சை இலைகளின் ஆவியாகும் சேர்மங்கள்

- தாவரங்கள் ஆபத்தில் உள்ள மற்ற தாவரங்களால் வெளியிடப்படும் பச்சை இலைகளின் ஆவியாகும் (GLVs) சேர்மங்களால் ஆபத்தைக் குறித்து உணர்கின்றன என்பதைச் சமீபத்தில், அறிவியலாளர்கள் முதன்முறையாக கண்டறிந்துள்ளனர்.
- தாவரங்கள் மூலக்கூறு எதிர்வினைகளின் தொடரமைப்பினை உள்ளடக்கிய இரண்டு முக்கியப் பாதுகாப்பு வழிமுறைகளைக் கொண்டுள்ளன.
- ஒரு தாவரம் சேதமடையும் போது அதில் எதிர்வினைகள் தூண்டப்பட்டு, GLVகள் விளை பொருட்களாக வெளியிடப்படுகின்றன.
- பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்தாமல் பல்வேறு விவசாயப் பயிர்களைத் தாக்கும் பூச்சிகளை எதிர்த்துப் போராடுவதற்கு என்று இந்த செயல்முறையைப் பயன்படுத்தும் சாத்தியக் கூறை அறிவியாளர்கள் பரிசீலித்து வருகின்றனர்.
- ஆவியாகக் கூடிய சேர்மங்கள் என்பது திட அல்லது திரவ நிலையில் இருந்து ஒப்பீட்டளவில் குறைந்த வெப்பநிலையில் நீராவியாக மாறும் தனிமங்கள் அல்லது சேர்மங்கள் ஆகும்.




## லெபிடோபிகோப்சிஸ் டைஃப்பஸின் மரபணு

- லெபிடோபிகோப்சிஸ் டைஃப்பஸின் மைட்டோகாண்ட்ரியல் என்ற மரபணுவை முதன் முறையாக அறிவியலாளர்கள் ஆய்வு செய்துள்ளனர்.
- இது மேற்குத் தொடர்ச்சி மலைகளின் தனித்துவமான நன்னீர் வாழ் மீன் இனமாகும்.
- இது கேரளாவின் பெரியார் புலிகள் வளங்காப்பகத்திற்குள் மட்டுமே நன்கு காணப் படுகின்றது.

- லெபிடோபிகோப்சிஸ் டைஃப்பஸ் ஒரே கிளை வகையினை கொண்ட இனத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு (மோனோடைப்பிக்) ஆகும்.
- மைட்டோஜெனோம் மரபணு வரிசையாக்கத்தின் நோக்கம் ஆனது, ஓர் இனத்தின் பரிணாம வளர்ச்சியைப் புரிந்து கொள்வதற்கும், அதன் இணை உயிர்களிடமிருந்து அவை எவ்வாறு வேறுபடுகின்றன என்பதைப் புரிந்து கொள்வதும் ஆகும்.
- லெபிடோபிகோப்சிஸ் டைஃப்பஸ் என்பது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் 'அருகி வரும் இனம் ஆக' பட்டியலிடப்பட்ட ஓர் இனமாகும்.



## புதிய முரல் மீன் இனங்கள்

- மத்தியக் கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் (CMFRI) அறிவியலாளர்கள் இந்திய கடல் பகுதியில் இரண்டு புதிய வகை முரல் மீன் இனங்களை கண்டறிந்துள்ளனர்.
- முன்னர் அடையாளம் காணப்பட்ட தட்டையான முரல் மீன்கள் (அப்லென்ஸ் ஹியான்ஸ்) குறைந்தது மூன்று தனித்துவமான இனங்களில் மிகவும் சிக்கலானது என்று ஆராய்ச்சி கண்டறிந்துள்ளது.
- இந்தப் புதிய வகையான மீன் இனங்களுக்கு அப்லென்ஸ் ஜோஸ்பெர்க்மான்சிஸ் மற்றும் அப்லென்ஸ் கிரேகாலி என அறிவியல் ரீதியாகப் பெயரிடப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் தூத்துக்குடியில் இருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகள் மீது இந்த ஆய்வில் கவனம் செலுத்தப்பட்டது.



## UNFF-19

- வனங்களுக்கான ஐக்கிய நாடுகள் மன்ற கூட்டத்தின் 19வது பதிப்பு (UNFF 19) நியூயார்க்கில் நடைபெற்றது.

- இதன் நோக்கமானது உலகளாவிய அளவில், வன இலக்குகளை அடைவதிலும் அதன் முன்னேற்றத்தை அதிகரித்து 2030 ஆம் ஆண்டிற்குள் நிலையான வளர்ச்சியை நோக்கி செல்வதிலும் கவனம் செலுத்துவதாகும்.
- UNFF என்பது ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக மன்றத்தின் (ECOSOC) கீழ் உள்ள ஒரு அமைப்பாகும்.
- இது காடுகளின் மீதான சர்வதேச ஏற்பாட்டின் (IAF) இலக்குகளை ஆதரிப்பது மற்றும் காடு தொடர்பான பிற சர்வதேச ஒப்பந்தங்கள், செயல்முறைகள், அர்ப்பணிப்புகள் மற்றும் நோக்கங்களை முன்னெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலகளவில், 2010 ஆம் ஆண்டு மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கு இடையில், ஆண்டின் சராசரி நிகர வனப்பகுதி அதிகரிப்பில், இந்தியா மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.

## கடற்சாமந்தி

- அகத்தி தீவில் பெருமளவிலான கடற்சாமந்தி வெளிர்தல் நிகழ்வு பதிவானதை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இலட்சத்தீவில் பவளப்பாறை வெளிர்தல் நிகழ்வு ஏற்படுவது ஒரு புதிய நிகழ்வு அல்ல, ஆனால் அந்தத் தீவுக் குழுவில் முதன்முறையாக கடற்சாமந்தி வெளிர்தல் நிகழ்வு பதிவாகியுள்ளது.
- வெளிர்தல் நிகழ்வு ஆனது கடற்சாமந்திகளை நோய்களுக்கு ஆளாக்கி, அதன் அழிவினை அதிகரிக்கிறது.
- கடற்சாமந்தி மென்மையான உடல்கள் மற்றும் கொட்டும் திறன் கொண்ட நீர்வாழ் உயிரினம் ஆகும்.
- அவை பவளப்பாறைகள் மற்றும் உயிருள்ளப் பாறைகளின் நெருங்கிய ஒரு இணை உயிரினமாகும்.



## கேஷய் திமிங்கலங்கள் – அர்ஜென்டினா

- ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக தென்படாமல் இருந்த நிலையில், மாபெரும் கேஷய் திமிங்கலங்கள் அர்ஜென்டினாவின் படகோனியா கடற்கரையில் உள்ள கடல் பகுதிக்குத் திரும்பியுள்ளன.
- இந்த மாபெரும் நீல-சாம்பல் நிற உயிரினங்கள் 1920 மற்றும் 1930 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட இடைவிடாத வேட்டையாடலின் காரணமாக அழிவின் விளிம்பில் இருந்தன.

- கேஷய் திமிங்கலங்கள் பலீன் திமிங்கலக் குடும்பத்தைச் சேர்ந்தவை.
- அவற்றின் நேர்த்தியான, நெறிப்படுத்தப்பட்ட உடமைப்புகள், பொதுவாக நீல-சாம்பல் நிறம் கொண்டவையா வகைப்படுத்தப்படுகின்றன.
- கேஷய் திமிங்கலங்கள் 62-66 அடி நீளம் கொண்டதாகவும், 28-45 மெட்ரிக் டன் வரை எடையுள்ளதாகவும் இருக்கும்.



## வெனிசுலாவின் ஹம்போல்ட் பனிப்பாறை வீழ்ச்சி



- நவீன காலத்தில் தனது பனிப்பாறைகள் அனைத்தையும் முற்றிலுமாக இழந்த முதல் நாடாக வெனிசுலா கருதப் படுகிறது.
- தென் அமெரிக்க நாட்டில் எஞ்சியிருக்கும் பனிப்பாறையானது ஆண்டிஸ் மலைத் தொடரில் உள்ள ஹம்போல்ட் அல்லது லா கொரோனா ஆகும்.
- இது தற்போது "பனிப்பாறை என வகைப்படுத்த முடியாத அளவுக்கு சிறியதாக" மாறி விட்டது.
- எனவே, இந்தப் பனிப்பாறையானது ஒரு பனிக் களமாக மறுவகைப்படுத்தப் பட்டு உள்ளது.
- இந்த நாடு அதன் சியரா நெவாடா டி மெரிடா மலைத் தொடரில் 6 பனிப்பாறைகளைக் கொண்டுள்ளது.
- 2011 ஆம் ஆண்டில் ஹம்போல்ட் தவிர ஐந்து பனிப்பாறைகள் அழிந்து விட்டன.

- அறிவியலாளர்களின் கூற்றுப்படி, இந்தோனேசியா, மெக்ஸிகோ மற்றும் ஸ்லோவேனியா ஆகியவை பனிப்பாறைகள் இல்லாத நாடுகளாக மாற உள்ள நாடுகளின் பட்டியலில் அடுத்த வரிசையில் உள்ளன.

## கவச பாய்மர கெளுத்தி மீன்

- CCMB அறிவியலாளர்கள் சுற்றுச்சூழல் அமைப்புகளை அச்சுறுத்தும் மற்றும் மீன் பிடிப்பில் இழப்பிற்கு வழிவகுக்கும் தீங்கிழைக்கும் வகையிலான மீன்களைக் கண்டறிவதற்கான ஒரு நுட்பத்தினை உருவாக்கியுள்ளனர்.
- கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் நீர்நிலைகளில் காணப்படும் ஆக்கிரமிப்புக் கவசப் பாய்மர கெளுத்தி மீன்கள் காணப்படுவது மற்றும் அதன் பரவலைக் கண்டறிவதற்கு eDNA அடிப்படையிலான அளவீட்டு PCR மதிப்பீட்டு முறையினை அவர்கள் உருவாக்கி உள்ளனர்.
- தென் அமெரிக்கா பகுதியினைச் சேர்ந்த இந்த மீன் இனமானது, ஒரு காலத்தில் அதன் தனித்துவமானத் தோற்றத்திற்காகவும், மீன் தொட்டிகள் மற்றும் மீன் வளர்ப்புப் பகுதிகளில் உள்ள பாசி வளர்ச்சியை அகற்றும் திறனுக்காகவும் அறிமுகப்படுத்தப் பட்டது.
- ஆனால் தற்போது இது கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் உள்ள 60% நீர்நிலைகளில், குறிப்பாக ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா மற்றும் தமிழ்நாடு ஆகியவற்றில் பரவி உள்ளது.
- இது மீன்பிடி வலைகளையும் ஒட்டுமொத்த சுற்றுச்சூழல் அமைப்பையும் சேதப் படுத்துகிறது.
- வெனிசுலாவில் உள்ள புயூர்ட்டோ ரிக்கோவின் நன்னீர் நிலைகளில் முதன்முதலில் இந்த மீன்கள் காணபட்டதாக பதிவாகியுள்ளது.
- இந்த அயல்நாட்டு மீன் இனங்கள் இந்தியாவில் 'பிசாசு மீன்' என்று பெயர் பெற்றுள்ளது.
- மூன்று மாநிலங்களின் நீர்நிலைகளில் இது பரவி வருவதால் 150 வகையான நன்னீர் வாழ் மீன்களுக்கு இது அச்சுறுத்தலாக உள்ளது.




## சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையிலான நீர் சுத்திகரிப்பு முறை

- விசாகப்பட்டினத்தில் உள்ள இந்திய பெட்ரோலியம் & ஆற்றல் கல்வி நிறுவனம் (IIPE) ஆனது, மற்ற ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து, 'மென்சவ்வு மேற்பரப்பு மாற்ற நுட்பம்' எனப்படும் ஒரு பயனுள்ள சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையிலான தீர்வைக் கண்டறிந்துள்ளது.

- பல்வேறு நிலைகளில் நீர்ச் சுத்திகரிப்பில், குறிப்பாக சேறு நிறைந்த நதி நீரின் சுத்திகரிப்பில் உள்ள பிரச்சனைகளைத் தீர்ப்பதனை நோக்கம் கொண்டு உருவாக்கப் பட்டுள்ளது.
- இந்த நுட்பம் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் இருப்பதோடு, நச்சுத்தன்மையற்ற வாயுக்களைப் பயன்படுத்துகிறது.
- இது மேற்பரப்பு மாற்றச் செயல்முறைகளில் கடுமையான இரசாயனங்கள் அல்லது கரைப்பான்களைப் பயன்படுத்துவதற்கானத் தேவையைக் குறைத்து சுற்றுச்சூழல் தாக்கத்தைக் குறைக்கிறது.
- சேறு நிறைந்த நீர் ஆக்ஸிஜன் அளவைக் குறைப்பதோடு, சூரிய ஒளியைத் தடுத்து மாசுபடுத்திகளைக் கடத்துவதால் அதன் வாழ்விடத் தரமிழப்பு, உயிரினங்களின் இடப் பெயர்ச்சி மற்றும் நீர்வழி நோய்களின் பரவல் ஆகியவற்றிற்கு வழிவகுக்கிறது.

## கடந்த 2,000 ஆண்டுகளில் இல்லாத வெப்பமான ஆண்டு




- 2023 ஆம் ஆண்டின் கோடை காலமானது, கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக வடக்கு அரைக்கோளத்தில் பதிவான மற்ற கோடைக் காலங்களை விட மிக வெப்பமானதாக இருந்தது.
- உலகளாவிய நவீன வெப்பநிலைப் பதிவுகள் தொடங்கிய 1850 ஆம் ஆண்டிற்குப் பிறகு, 2023 ஆம் ஆண்டுதான் மிகவும் வெப்பமான ஆண்டாகப் பதிவாகும் என்று அறிவியல் நிபுணர்கள் முன்பே தீர்மானித்தனர்.
- கடந்த ஆண்டின் கோடை காலத்தின் அதீத வெப்பம் ஆனது நவீன காலப் பதிவுகளை விஞ்சியதோடு மட்டுமின்றி, கிபி 246 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கருவிசார் பதிவுகளுக்கு முன்னதாக இருந்த வெப்பமான கோடைக் காலத்தை - அரை டிகிரி செல்சியஸுக்கும் அதிகமான வெப்பநிலையில் விஞ்சியது.
- இது (கிபி 536 ஆம் ஆண்டில்) பொதுவான கோடையை விட கிட்டத்தட்ட 4 டிகிரி செல்சியஸ் வெப்பமாக இருந்தது
- ஐரோப்பிய ஒன்றியத்தின் கோப்பர்நிக்கஸ் பருவநிலை மாற்றச் சேவை நிறுவனம் ஆனது, 2023 ஆம் ஆண்டு சுமார் 100,000 ஆண்டுகளில் மிகவும் வெப்பமானதாக இருப்பதற்கு "மிக அதிக சாத்தியம் உள்ளதாக" கூறியது.

- 1990 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் ஒவ்வோர் ஆண்டும் வெப்ப அலைகள் காரணமாக 43 நாடுகளில் 150,000 க்கும் அதிகமான உயிரிழப்புகள் பதிவாகி உள்ளன.

## அழியும் நிலையில் உள்ள மெய்டே சிறு குதிரைகள்



- மணிப்பூர் அரசு ஆனது, சமீபத்தில் மணிப்பூரி போனி அல்லது மெய்டேய் சகோலைக் பாதுகாப்பதற்காக பல்வேறு அமைப்புகள் மற்றும் சங்கங்களுடன் கைகோர்த்துள்ளது.
- அவற்றின் எண்ணிக்கையானது சமீப காலங்களில் வேகமாகக் குறைந்து வருகிறது என்பதோடு 2003 ஆம் ஆண்டில் 17வது ஐந்தாண்டு கால கால்நடைக் கணக்கெடுப்பில் 1,898 ஆக இருந்த அவற்றின் எண்ணிக்கையானது 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்ட 19வது ஐந்தாண்டு கால்நடைக் கணக்கெடுப்பில் சுமார் 1,101 ஆக குறைந்தது.
- கடந்த 2019 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கால்நடைக் கணக்கெடுப்பில், இந்த எண்ணிக்கை மேலும் குறைந்து 1,089 ஆக இருந்தது.
- இந்தியாவின் அங்கீகரிக்கப்பட்ட ஏழு குதிரை மற்றும் சிறு குதிரை இனங்களில் மெய்டே சகோல் ஒன்றாகும்.
- மற்ற 6 இனங்களில் மார்வாரி குதிரை, கத்தியாவாரி குதிரை, ஜான்ஸ்காரி போனி, ஸ்பிட்டி சிறு குதிரை, பூட்டியா சிறு குதிரை மற்றும் கச்சி-சிந்தி குதிரை ஆகியவை அடங்கும்.

## இந்தியாவில் கங்கை ஓங்கில்கள்

- இந்திய வனவிலங்கு கழகத்தின் கூற்றுப்படி, தற்போது கங்கை மற்றும் அதன் துணை நதிகளில் சுமார் 4,000 ஓங்கில்கள் உள்ளன.
- உத்தரப் பிரதேசத்தில் உள்ள கங்கை ஓங்கில்களின் எண்ணிக்கையானது 2,000 ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இது இந்தியாவில் காணப்படும் மொத்த கங்கை ஓங்கில்களின் எண்ணிக்கையில் பாதிக்கும் மேலான அளவாகும்.
- உத்தரப் பிரதேசத்தில், ஓங்கில்கள் முக்கியமாக சம்பல் நதியில் காணப்படுகின்றன.
- கங்கை நதி ஓங்கில்கள் பார்வைத் திறனில்லாத ஓங்கில்கள், கங்கேஸ் சுசு அல்லது அதன் அறிவியல் பெயரில் பிளாட்டானிஸ்டா கங்கேட்டிகா என்றும் அழைக்கப் படுகிறது.

- இது முக்கியமாக கங்கை நதி மற்றும் அதன் துணை நதிகளான காக்ரா, கோசி, கந்தக், சம்பல், ருப்நாராயண் மற்றும் யமுனை ஆகிய நதிகளின் பெரும் பிரதான நீரோட்டப் பகுதிகளில் காணப்படுகிறது.
- கங்கை நதி ஓங்கில்கள் 2010 ஆம் ஆண்டு மே 18 ஆம் தேதியன்று இந்தியாவின் தேசிய நீர்வாழ் விலங்காக அறிவிக்கப்பட்டது.




## உலக மேய்ச்சல் நிலங்களின் தரமிழப்பு


- ஐக்கிய நாடுகள் சபையின் பாலைவனமாக்களுக்கு எதிரான உடன்படிக்கை அமைப்பு (UNCCD) புதிய அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- உலகில் உள்ள மேய்ச்சல் நிலங்களில் ஏறத்தாழ பாதி தரமிழந்துள்ளதால், அவற்றிற்கான கொள்கைத் தலையீடுகள் தேவைப்படுகின்றன என்பதோடு மேலும் அவற்றைச் சார்ந்த சமூகங்களின் மீது பெரும் கவனம் செலுத்தும் வகையிலான ஆதரவளிப்பும் அவசியமாகும்.
- UNCCD அறிக்கையானது மேய்ச்சல் நிலங்களைக் கால்நடைகள் அல்லது காட்டு விலங்குகள் மேய்கின்ற இயற்கை அல்லது பகுதியளவு இயற்கை சார்ந்த சுற்றுச்சூழல் அமைப்புகளாக வரையறுக்கிறது.
- மேய்ச்சல் நிலங்கள் புல், புதர்கள், முள் புதர்கள், திறந்தவெளி காடுகள் மற்றும் வேளாண் காடு அமைப்புகள் (மரங்கள் மற்றும் பயிர்கள் அல்லது மேய்ச்சல் நிலங்களைக் கொண்ட நிலம்) போன்ற தாவரங்களைக் கொண்டுள்ளது.
- தற்போது, மேய்ச்சல் நிலங்கள் பூமியின் நிலப்பரப்பின் 80 மில்லியன் சதுர கிமீ பரப்பளவில் பரவியுள்ளது (பூமியின் நிலப் பரப்பில் பாதிக்கு மேல்).
- உலக உணவு உற்பத்தியில் 16 சதவீதமும், வளர்ப்பு தாவர உண்ணிகளுக்கு பிரதானமாக ஆப்பிரிக்கா மற்றும் தென் அமெரிக்காவில் 70% தீவனத்தையும் மேய்ச்சல் நிலங்கள் உருவாக்குகின்றன.

- இந்தியாவில், தார் பாலைவனம் முதல் இமயமலைப் புல்வெளிகள் வரை சுமார் 1.21 மில்லியன் சதுர கி.மீ பரப்பளவில் இந்த மேய்ச்சல் நிலங்கள் பரவியுள்ளன.
- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது, 2026 ஆம் ஆண்டினைச் சர்வதேச மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ப்பர்களின் ஆண்டாக (IYRP) நியமித்துள்ளது.




## முதலாவது உலகளாவியச் சதுப்புநில மதிப்பீடு

- சதுப்புநிலச் சுற்றுச்சூழல் அமைப்புகளின் செந்நிறப் பட்டியல் எனப்படுகின்ற இந்த அறிக்கையானது, சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தின் (IUCN) முதல் உலகளாவியச் சதுப்புநில மதிப்பீடு ஆகும்.
- உலகில் உள்ள சதுப்புநில சுற்றுச்சூழல் அமைப்புகளில் பாதி அழியும் அபாயத்தில் இருப்பதாக இந்த அறிக்கை எச்சரிக்கிறது.
- மதிப்பிடப்பட்ட சதுப்புநிலச் சுற்றுச்சூழல் அமைப்புகளில் 50% அழியும் அபாயத்தில் இருப்பதாக அறிக்கை காட்டுகிறது.
- தற்போதுள்ள நிலை மேலும் தொடர்ந்தால் இந்த மதிப்பீட்டில் அடுத்த 50 ஆண்டுகளில் உலகளாவியச் சதுப்புநிலப் பகுதியில் 25% நீரில் மூழ்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- 2050 ஆம் ஆண்டில் சுமார் ~7,065 கிமீ$^2$ (-5%) பரப்பிலான மேலும் அதிக சதுப்புநிலங்கள் அழியும் என்றும், ~23,672 கிமீ$^2$ (-16%) பரப்பிலான நீரில் மூழ்கும் என்றும் கணிக்கப் பட்டு உள்ளது.
- இந்தியச் சதுப்புநிலச் சுற்றுச்சூழல் அமைப்புகள் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு உள்ளன.
- வங்காள விரிகுடா பிராந்தியத்தில் இந்தியா மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகள் இடையேயும் மற்றும் மேற்கில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இடையேயும் பகிர்ந்து கொள்ளப்பட்ட சுற்றுச்சூழல் அமைப்புக்கள் மிகக் குறைவான கவனம் தேவையுள்ள பகுதிகள் பிரிவில் உள்ளன.
- இருப்பினும், இலங்கை மற்றும் மாலத்தீவுகளுடன் இந்தியா பகிர்ந்து கொள்ளும் தெற்கில் உள்ள அதன் சதுப்புநிலச் சுற்றுச்சூழல் அமைப்பு பேரிடருக்கு உள்ளாகும் நிலையில் உள்ள பகுதியாக வகைப்படுத்தப் பட்டுள்ளது.




### GSAP SkILLS இயங்குதளம்


- IUCN அமைப்பானது GSAP SkILLS எனப்படும் உலகளாவிய இனங்களுக்கான செயல் திட்ட இயங்கலை தகவல் அளிப்பு தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- GSAP SkILLS தளமானது உலகளாவிய ஒத்துழைப்பு மற்றும் கூட்டாண்மையை எளிதாக்குவதையும், முடிவெடுப்பவர்கள், இனங்கள் வளங்காப்பாளர்கள் மற்றும் அனைத்து நிலைகளிலும் உள்ள நிபுணர்களை இணைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தளமானது தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் வளங்கள் பற்றிய நிகழ்நேரத் தகவல்களை வழங்குவதோடு, அணுகல் மற்றும் தொடர்பினை உறுதி செய்கிறது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### "Technology on her Terms" அறிக்கை

- யுனெஸ்கோ அமைப்பானது 2024 ஆம் ஆண்டிற்கான பாலினம் சார்ந்த உலகளாவிய கல்வி கண்காணிப்பு அறிக்கையினை சமீபத்தில் வெளியிட்டது.
- இந்த அறிக்கைக்கு "Technology on her Terms" என பெயரிடப்பட்டுள்ளது.
- பெண்களின் கல்வி வாய்ப்புகள் மற்றும் எதிர்கால தொழில்நுட்ப மேம்பாட்டில் தொழில் நுட்பத்தின் தாக்கத்தை அறிக்கை ஆராய்கிறது.
- சமூக ஊடகங்கள் பெண்களின் கல்வியில் மிகவும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதோடு அவர்களின் ஒட்டு மொத்த நல்வாழ்வையும் அது எதிர்மறையாகப் பாதிக்கிறது.
- இளம் பெண் பட்டதாரிகளில் 15 சதவீதம் பேர் STEM தொழில்துறையில் பணியில் ஈடுப்பட்டுள்ளனர் என்ற நிலையில் STEM தொழில்துறையில் பணியில் ஈடுபட்டுள்ள ஆண் பட்டதாரிகளின் சராசரி பங்கு 35 சதவீதம் ஆகும்.

- அறிவியல், பொறியியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகளில் பணிபுரியும் பெண்களின் பங்கு குறைவாக உள்ளது என்பதோடு, 2022 ஆம் ஆண்டில் இந்தத் துறைகளில் பெண்களின் பங்கு 25 சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்தது.





## உலகப் பத்திரிகை சுதந்திரக் குறியீடு 2024

- ரிபோர்ட்டர்ஸ் வித்தவுட் பார்டர்ஸ் (எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு) ஆனது சமீபத்தில் வருடாந்திர உலகப் பத்திரிகை சுதந்திரக் குறியீட்டினை வெளியிட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் 161 ஆம் இடத்தில் இருந்த இந்தியாவின் தரவரிசையானது 2024 ஆம் ஆண்டில் 159 ஆக உயர்ந்தது.
- இதற்கிடையில், பாகிஸ்தான் இந்தியாவை விட ஏழு இடங்கள் முன்னணியில் 152வது இடத்தில் உள்ளது.
- ஆனால், உலகப் பத்திரிகை சுதந்திரக் குறியீட்டில் இந்தியாவின் மதிப்பெண் கடந்த ஆண்டில் இருந்த 36.62 என்ற மதிப்பில் இருந்து 31.28 ஆகக் குறைந்துள்ளது.
- நார்வே மற்றும் டென்மார்க் ஆகியவை RSF பட்டியலில் முதலிடத்தினைப் பெற்றுள்ளன என்ற நிலையில் எரித்திரியா இதில் கடைசி இடத்திலும், அதற்கு முந்தைய இடத்தில் சிரியாவும் இடம் பெற்றுள்ளன.




## 'Aging Well In Asia' அறிக்கை 2024





- ஆசிய மேம்பாட்டு வங்கியானது 'Aging Well In Asia' என்ற ஒரு புதிய அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- தென் கொரியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் பொதுச் சுகாதாரப் பாதுகாப்பு நிலையை அடைந்துள்ளன.
- வங்காளதேசம், இந்தோனேஷியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில், சுகாதார வசதிக்கான அணுகல் நன்கு இல்லாதவர்களில் பாதிக்கும் மேற்பட்ட நபர்கள், ஏழ்மை நிலையின் கடைசி இரண்டு மட்டத்தில் உள்ளனர்.
- வளர்ந்து வரும் ஆசியா மற்றும் பசிபிக் நாடுகளில் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களின் எண்ணிக்கை 2050 ஆம் ஆண்டில் இரு மடங்காக உயர்ந்து 1.2 பில்லியனாக அல்லது மொத்த மக்கள் தொகையில் கால் பங்காக இருக்கும்.
- வயது முதிர்ந்தவர்கள் மத்தியில் 21% என்ற குறைந்த சுகாதாரக் காப்பீட்டுப் பரவல் கொண்ட இந்தியாவுடன் மற்ற நாடுகளும் இடம் பெற்றுள்ளன.

- அதே நேரத்தில், இந்தப் பொருளாதாரங்கள் முதியவர்களிடமிருந்து கூடுதல் உற்பத்தித் திறன் வடிவத்தில் "வெள்ளி ஈவினை - பணியில் ஈடுபட்டுள்ள பிரிவினரின் பங்கினை" பெறுவதற்கான வாய்ப்பினைப் பெற்றுள்ளன.
- இது பிராந்தியத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியைச் சராசரியாக 0.9% உயர்த்தக் கூடும்.
- அடித்தட்டு மக்களுக்கு இலவச மருத்துவச் சேவையை வழங்கும் ஆயுஷ்மான் பாரத் போன்ற திட்டங்களானது அது தொடங்கப்பட்டதில் இருந்து சுகாதாரக் காப்பீட்டுப் பரவலை மேம்படுத்தியுள்ளது.
- இதை மேலும் விரிவுபடுத்துவது நிலைமையை மேம்படுத்துவதோடு 60 வயதுக்கு மேற்பட்டவர்களைப் பொருளாதாரத்திற்கு அதிகப் பங்கினை ஆற்றச் செய்யும்.
- நிதி ரீதியில் தயாராக உள்ள முதியோர்கள் (ஓய்வு பெற்ற 5 ஆண்டுகளுக்கு உட்பட்ட காலத்தில் உள்ளவர்கள்) ஜப்பானில் 86% ஆகவும் இந்தியாவில் 73% ஆகவும் உள்ளனர்.
- ஆனால் இது சீனாவில் 64% ஆகவும், கொரியக் குடியரசில் 58% ஆகவும் சற்று குறைவாக உள்ளது.
- இந்தியாவில் வயது முதிர்ந்த பெண்களின் ஆயுட்காலம் 6.4 ஆண்டுகளாக மிகப்பெரிய அளவில் அதிகரிக்கும் என்ற நிலையில் அதைத் தொடர்ந்து கஜகஸ்தான்; ஜார்ஜியா; மற்றும் ஹாங்காங், சீனா ஆகிய நாடுகளில் வயது முதிர்ந்த பெண்களின் ஆயுட்காலம் 4.6 ஆண்டுகள் ஆக அதிகரிக்கும்.
- வயது முதிர்ந்த ஆண்களின் ஆயுட்காலம் ஆர்மீனியாவில் 6.1 ஆண்டுகள் ஆகவும், அதைத் தொடர்ந்து இந்தியாவில் 5.7 ஆண்டுகள் ஆகவும் மற்றும் ஜார்ஜியாவில் 5.2 ஆண்டுகள் ஆகவும் அதிகரிக்கும்.

## OECD அமைப்பின் பொருளாதாரக் கண்ணோட்ட அறிக்கை

- OECD நாடுகளில் மொத்த பணவீக்கம் ஆனது 2024 ஆம் ஆண்டில் 5% ஆகவும், 2023 ஆம் ஆண்டில் 6.9% ஆகவும், 2025 ஆம் ஆண்டில் 3.4% ஆகவும் குறையும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- 2025 ஆம் ஆண்டின் இறுதியில், OECD நாடுகளின் பணவீக்கம் ஆனது பெரும்பாலான மத்திய வங்கிகளின் 2% என்ற இலக்குகளை நெருங்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- G20 மற்றும் பிற வளர்ச்சி பெற்ற நாடுகளின் பெரும் வளர்ச்சியானது வளர்ந்து வரும் நாடுகளை விட கணிசமாகப் பின்தங்கியுள்ளது.
- ஐக்கியப் பேரரசு 2024 ஆம் ஆண்டில் 0.4% மட்டுமே வளர்ச்சியைக் காணும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. அதன் வளர்ச்சி 2025 ஆம் ஆண்டில் 1% ஆக பதிவாகும்.
- யூரோ பகுதியானது 2024 ஆம் ஆண்டில் சுமார் 0.7% மற்றும் 2025 ஆம் ஆண்டில் 1.5% வளர்ச்சியைக் காணும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- பிரான்ஸ் நாட்டின் வளர்ச்சி இந்த ஆண்டு 0.7% ஆக இருக்கும் ஆனால் 2025 ஆம் ஆண்டில் 1.3% வளர்ச்சியுடன் யூரோ பகுதியில் பிரான்சு பின்தங்கக்கூடும்.
- இதேபோல், இத்தாலியும் இந்த ஆண்டு 0.7% வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இது 2025 ஆம் ஆண்டில் 1.2% ஆக உயரும்.
- ஐரோப்பாவின் "நலிவுற்ற நாடாக" நீண்ட காலமாகக் கருதப்படும் ஜெர்மனி, மிகவும் மிதமான 0.2% என்ற வளர்ச்சியை காணும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- இந்தியா 2024 மற்றும் 2025 ஆகிய இரண்டு ஆண்டிலும் சுமார் 6.6% என்ற நிலையான விகிதத்தில் வளரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது, அதே நேரத்தில் இந்தோனேசியா 2024 ஆம் ஆண்டில் 5.1% உயர்வினையும், 2025 ஆம் ஆண்டில் 5.2% உயர்வினையும் காணும்.
- இருப்பினும், சீன நாட்டின் வளர்ச்சி இந்த ஆண்டு சுமார் 4.9% அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது, ஆனால் இது அடுத்த ஆண்டு 4.5% ஆக மட்டுமே பதிவாகும்.





## வேளாண் உணவு உற்பத்தி முறை பற்றிய உலக வங்கி அறிக்கை


- உலக வங்கியானது, "உயிர் வாழக் கூடிய கிரகத்திற்கான வழிமுறைத் தொகுப்பு: வேளாண் உணவு அமைப்பில் நிகர சுழி உமிழ்வு நிலையை அடைதல்" என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- உலகின் வேளாண் உணவு முறையானது ஆண்டிற்கு சுமார் 16 ஜிகா டன்கள் பசுமை இல்ல வாயுக்களை (GHG) வெளியிடுகிறது என்ற நிலையில் இது உலகளாவிய உமிழ்வுகளில் மூன்றில் ஒரு பங்கு ஆகும்.
- அதிக வருமானம் கொண்ட நாடுகள் கால்நடை சார்ந்த பொருட்களின் மிகப்பெரிய நுகர்வோர் ஆக உள்ளதால், கால்நடைகள் ஒரு முக்கிய உமிழ்வு வெளியீட்டுக் காரணியாக உள்ளன.
- இறைச்சி மற்றும் பால் பொருட்களை உட்கொள்வதால் ஏற்படும் மாசுபாட்டைச் சமாளிக்க கால்நடை வளர்ப்புக்கான நிதி உதவியை செல்வ வளம் மிக்க நாடுகள் குறைக்க வேண்டும்.
- 2016 ஆம் ஆண்டில் அனைத்து வேளாண் மானியங்களில் மூன்றில் ஒரு பங்கு இறைச்சி மற்றும் பால் பொருட்களுக்கு வழங்கப்பட்டது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் வேளாண் உணவு உற்பத்தி சார்ந்த உமிழ்வினைப் பாதியாகக் குறைக்கவும் மற்றும் 2050 ஆம் ஆண்டில் நிகரச் சுழிய உமிழ்வு என்ற இலக்கை அடைய உலகிற்கு உதவவும் வருடாந்திர முதலீடுகள் 18 மடங்கு அதிகரித்து 260 பில்லியன் டாலர் ஆக வேண்டும்.

❖ இந்தியாவின் 8.8 மில்லியன் டீசல் எரிபொருளில் இயங்கும் பாசன நீரேற்றிகளில் கால் பங்கினை சூரிய சக்தியில் இயங்கும் நீரேற்றிகளாக மாற்றுவதன் மூலம், ஆண்டிற்கு 11.5 மில்லியன் டன்கள் வேளாண் உணவு உற்பத்தி சார்ந்த உமிழ்வைக் குறைக்கலாம்.

❖ சீனா, பிரேசில், இந்தியா, அமெரிக்கா, இந்தோனேசியா, காங்கோ ஜனநாயகக் குடியரசு, ரஷ்யக் கூட்டமைப்பு, கனடா, பாகிஸ்தான் மற்றும் அர்ஜென்டினா ஆகிய நாடுகள் வேளாண் உணவு உற்பத்தி சார்ந்த உமிழ்வுகளில் முன்னணியில் உள்ள முதல் 10 நாடுகளாகும்.




## உலகப் புலம்பெயர்வு அறிக்கை 2024




❖ சர்வதேசப் புலம்பெயர்வு அமைப்பு (IOM) ஆனது, சமீபத்தில் தனது 2024 ஆம் ஆண்டு உலகப் புலம்பெயர்வு அறிக்கையினை வெளியிட்டது.

❖ தற்போதைய உலகளாவிய மதிப்பீட்டின்படி, 2020 ஆம் ஆண்டில் உலகில் சுமார் 281 மில்லியன் சர்வதேசப் புலம்பெயர்ந்தோர் இருந்தனர்.


- இது உலக மக்கள் தொகையில் 3.6 சதவீதத்திற்கு சமமாகும்.
- ஐரோப்பா மற்றும் ஆசியா ஆகிய ஒவ்வொன்றிலும் முறையே 87 மற்றும் 86 மில்லியன் சர்வதேசப் புலம்பெயர்ந்தோர் தஞ்சம் புகுந்தனர்.
- சுமார் 71.2 மில்லியன் உள்நாட்டில் புலம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கையுடன் உலகளாவியப் புலம்பெயர்வு ஆனது மிக அதிகமாக உள்ளது.
- அகதிகள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்களின் எண்ணிக்கை 40.7 மில்லியன் ஆக உள்ளது.
- 4.48 மில்லியன் புலம்பெயர்ந்தோருடன், புலம்பெயர்ந்தோருக்கான ஒரு தஞ்ச இலக்கு நாடாக இந்தியா 13வது இடத்தில் உள்ளது.

## உலகின் செல்வ வளம் மிக்க நகரங்கள் 2024 அறிக்கை

| City/Area | Country | Millionaires (USD 1m+) | Centi-millionaires (USD 100m+) | Billionaires (USD 1bn+) |
|---|---|---|---|---|
| New York City | USA | 349,500 | 744 | 60 |
| The Bay Area | USA | 305,700 | 675 | 68 |
| Tokyo | Japan | 298,300 | 267 | 14 |
| Singapore | Singapore | 244,800 | 336 | 30 |
| London | UK | 227,000 | 370 | 35 |
| Los Angeles | USA | 212,100 | 496 | 43 |
| Paris & Île-de-France | France | 165,000 | 286 | 23 |
| Sydney | Australia | 147,000 | 205 | 20 |
| Hong Kong | Hong Kong (SAR China) | 143,400 | 320 | 35 |
| Beijing | China | 125,600 | 347 | 42 |

- நியூயார்க் நகரம் ஆனது உலகின் செல்வ வளம் மிக்க நகரமாக அதன் நிலையைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டுள்ளது என்பதோடு 11 அமெரிக்க நகரங்கள் இந்தப் பட்டியலில் முதல் 50 இடங்களில் இணைந்துள்ளன.
- ஒரு தசாப்தத்திற்கு முன் முதலிடத்தில் இருந்த டோக்கியோ, அதன் அதிக நிகர சொத்து மதிப்புள்ள தனிநபர் மக்கள் தொகையில் பதிவான பெரும் சரிவு காரணமாக தற்போது மூன்றாவது இடத்திற்கு சரிந்துள்ளது.
- முன்னணி ஆசிய நிதி மையமாக சிங்கப்பூர் நான்காவது இடத்திற்கு முன்னேறி உள்ளது.
- பழமையான நிதி மையமான லண்டன் ஐந்தாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.
- இந்தியா இரண்டு நகரங்களுடன் இப்பட்டியலில் முதல் 50 இடங்களில் இடம் பெற்று உள்ளது.
- மும்பை மற்றும் டெல்லி ஆகியவை முறையே 24வது மற்றும் 37வது இடங்களில் உள்ளன


## வேலைப் போக்கு குறியீடு 2024





- மைக்ரோசாப்ட் மற்றும் லிங்க்ட்இன் ஆகியவை 2024 ஆம் ஆண்டிற்கான வேலைப் போக்கு குறியீட்டு வருடாந்திர அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- செயற்கை நுண்ணறிவு (AI) ஆனது உலகெங்கிலும் மக்களின் வேலை செய்யும் பாங்கு, வழி நடத்தும் திறன் மற்றும் பணியமர்த்தும் பாங்கு ஆகியவற்றில் ஒரு தாக்கத்தினை உண்டாக்குகிறது.
- கடந்த ஆறு மாதங்களில், செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு "கிட்டத்தட்ட இரு மடங்காக" அதிகரித்துள்ளது.
- 79 சதவீத நிறுவனங்கள் "போட்டித் தன்மை நிறைந்ததாக இருப்பதற்குச் செயற்கை நுண்ணறிவு ஏற்பு மிகவும் முக்கியமானது" என்று ஒப்புக் கொண்டாலும், 59 சதவீத நிறுவனங்கள் "செயற்கை நுண்ணறிவின் உற்பத்தித் திறன் சார்ந்த ஆதாயங்களைக் மதிப்பிடுவது பற்றி கவலை தெரிவித்துள்ளனர்".
- இந்த அறிக்கையின்படி, 75 சதவீத மக்கள் தங்களது வேலைகளில் ஏற்கனவே செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்துகின்றனர் என்ற நிலையில் அவர்களில் 46 சதவீதம் பேர் சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பே செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்தத் தொடங்கினர்.
- முதலாளிகளின் பார்வையில், 66 சதவீத நிறுவனங்கள் செயற்கை நுண்ணறிவு சார்ந்த திறன் இல்லாத ஒருவரைப் பணியமர்த்த மாட்டோம் என்று ஒப்புக் கொண்டுள்ளனர்.

## இந்தியப் பெருங்கடல் படுகை வாரியான குறியீடு

- இது வெப்பமண்டல இந்தியப் பெருங்கடலில் உள்ள சராசரி கடல்-மேற்பரப்பு வெப்ப நிலை மாறுபாடுகளைக் குறிக்கிறது.
- ஒவ்வொரு நாட்டிலும் ஏற்படும் டெங்கு பெருந்தொற்றுநோய்களின் பாதிப்பு அளவு மற்றும் நேரத்தைக் கணிக்கும் முக்கிய குறிகாட்டியாக இது உருவெடுத்துள்ளது.
- தெற்கு அரைக்கோளத்துடனான அதன் தொடர்பு ஆனது வடக்கு அரைக் கோளத்துடனான அதன் தொடர்பினை விட வலுவானதாகும்.
- இது வெப்பமண்டலப் பகுதிகளில் உள்ள வெப்பநிலையில் அதிக தாக்கத்தை ஏற்படுத்துகிறது.
- இந்தியப் பெருங்கடலின் வெப்பநிலைக்கும் டெங்கு பாதிப்புக்கும் இடையே உள்ள தொடர்பு ஆனது தொலைத் தொடர்புகள், பெரிய அளவிலான வளிமண்டல பாங்குகள் மூலம் வெப்பம் மற்றும் ஈரப்பதத்தை நெடுந்தூரங்களுக்கு மாற்றக் கூடிய பிராந்திய வெப்பநிலையின் தாக்கம் காரணமாக இருக்கலாம்.




## உலக வனவிலங்குகள் மீது இழைக்கப்படும் குற்றங்கள் குறித்த அறிக்கை 2024




- போதைப் பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்தினால் 2024 ஆம் ஆண்டு உலக வனவிலங்குகள் மீது இழைக்கப்படும் குற்றங்கள் குறித்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
- 2015-2021 ஆம் ஆண்டுகளில் 162 நாடுகள் மற்றும் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத வர்த்தகம் ஆனது சுமார் 4,000 தாவர மற்றும் விலங்கு இனங்களை பாதித்தது.

- இவற்றில் 3,250 இனங்கள் CITES உடன்படிக்கையின் பின் இணைப்புகளில் பட்டியலிடப் பட்டுள்ளன.
- 29 சதவீதத்தில், காண்டாமிருகக் கொம்புகளுக்கான வர்த்தகச் சந்தையானது விலங்கு இனங்களில் மிகப்பெரிய பங்கினை கொண்டுள்ளது.
- அதைத் தொடர்ந்து எறும்புத் திண்ணிகளின் செதில்களுக்கான வர்த்தகச் சந்தையானது 28 சதவீதமாகவும், யானை தந்தங்களுக்கான சந்தை 15 சதவீதமாகவும் இருந்தது.
- உலகளாவிய சட்டவிரோத விலங்கு வர்த்தகத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட மற்ற விலங்கு இனங்களில் விலாங்கு மீன் (5 சதவீதம்), முதலைகள் (5 சதவீதம்), கிளிகள் மற்றும் கொண்டைக் கிளிகள் (2 சதவீதம்), மாமிச உண்ணிகள் (2 சதவீதம்), கடலாமைகள் மற்றும் நில ஆமைகள் (2 சதவீதம்), பாம்புகள் (2 சதவீதம்), கடல் குதிரைகள் (2 சதவீதம்) மற்றும் பிற (8 சதவீதம்) ஆகியவை அடங்கும்.


## CWUR 2024 அறிக்கை

| World Rank | Institution | Location | National Rank | Education Rank | Employability Rank | Faculty Rank | Research Rank | Score |
|---|---|---|---|---|---|---|---|---|
| 410 Top 2% | Indian Institute of Management Ahmedabad | India | 1 | 357 | 11 | - | - | 75.4 |
| 501 Top 2.4% | Indian Institute of Science | India | 2 | 323 | 880 | - | 478 | 74.3 |
| 568 Top 2.8% | Indian Institute of Technology Bombay | India | 3 | - | 393 | - | 560 | 73.7 |
| 582 Top 2.8% | Indian Institute of Technology Madras | India | 4 | - | 187 | - | 614 | 73.5 |
| 606 Top 2.9% | Tata Institute of Fundamental Research | India | 5 | - | - | - | 573 | 73.3 |
| 615 Top 3% | Indian Institute of Technology Delhi | India | 6 | - | 155 | - | 686 | 73.2 |
| 632 Top 3% | Delhi University | India | 7 | 532 | 158 | - | 675 | 73.2 |
| 704 Top 3.4% | Indian Institute of Technology Kharagpur | India | 8 | - | 518 | - | 681 | 72.5 |


- உலகளாவிய 64 இந்தியப் பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களானது 2024 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய 2000 பல்கலைக் கழகங்களின் பட்டியலில் இடம் பெற்று உள்ளன.
- அகமதாபாத்தின் இந்திய மேலாண்மை கல்வி நிறுவனமானது முதலிடத்தைப் பெற்று உள்ளது.
- இந்த ஆண்டு, அகமதாபாத்தின் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனத்தின் நிலை சற்று முன்னேறி 410வது தரவரிசையைப் பெற்றுள்ளது.
- இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் 7 இடங்கள் சரிந்து தற்போது 501வது இடத்தில் உள்ளது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஆனது உலகளவில் 582வது இடத்திலும், இந்திய அளவில் 4வது இடத்திலும் உள்ளது.
- அண்ணா பல்கலைக்கழகம், வேலூர் தொழில்நுட்பக் கல்விக் கழகம், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் மற்றும் திருச்சிராப்பள்ளியின் தேசியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆகியவையும் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

## 2023 ஆம் ஆண்டில் இணைய முடக்கங்கள்

- அக்சஸ் நௌ நிறுவனமானது 2016 ஆம் ஆண்டு முதல் உலகளவில் 1,458 முடக்கங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளதாகவும், அவற்றில் சுமார் 773 (53%) இந்தியாவில் பதிவாகி உள்ளதாகவும் கூறியுள்ளது.
- தொடர்ந்து ஆறாவது ஆண்டாக, 2023 ஆம் ஆண்டில் 116 இணைய முடக்கங்களுடன் இந்தியா உலகளாவிய இணைய முடக்கங்களில் முன்னணியில் உள்ளது.
- உலகளவில் பதிவான 283 முடக்கங்களில் 41% பங்கினைக் கொண்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில், 201 ஆக இருந்த இணைய முடக்கங்களின் எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டில் 283 ஆக உயர்ந்தது.
- இந்தியாவில், சுமார் 64 இணைய முடக்கங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களை பாதித்தன.
- இது மணிப்பூரில் பதிவான 47 இணைய முடக்கங்கள் மற்றும் பஞ்சாபில் ஏற்பட்ட மாநிலம் தழுவிய இணைய முடக்கம் ஆகியவற்றால் குறிப்பிடப்படுகிறது.
- இந்தியாவில் 13 மாநிலங்கள் உள்ளூர் அல்லது மாநிலம் தழுவிய அளவில் இணைய முடக்கங்கள் பதிவாகின.
- 2022 ஆம் ஆண்டில் 3 ஆக இருந்த ஐந்திற்கும் அதிகமான இணைய தள முடக்கங்கங்களுடன் கூடிய இந்திய மாநிலங்களின் எண்ணிக்கையானது 2023 ஆம் ஆண்டில் 7 ஆக அதிகரித்த நிலையில் 2022 ஆம் ஆண்டில் 15% ஆக இருந்த ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் நீடித்த இந்தியாவின் அனைத்து இணைய முடக்கங்கள் 41% அதிகரித்தது.
- 2023 ஆம் ஆண்டில், மியான்மர் 37 இணைய தள முடக்கங்களுடன் இந்தியாவினைத் தொடர்ந்து இடம் பெற்றுள்ளது என்ற நிலையில் அதனைத் தொடர்ந்து 34 இணைய தள முடக்கங்களுடன் ஈரான் இடம் பெற்றுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில், 39 நாடுகளில் இணைய முடக்கங்கள் பதிவாகின என்ற நிலையில் பாகிஸ்தானில் 7 இணைய தள முடக்கங்களும், ஈராக்கில் 6 இணைய முடக்கங்களும் பதிவாகின.
- இந்தியா உட்பட ஆறு நாடுகளில் பன்னிரண்டு இணைய முடக்கங்கள் தேர்வுகளில் ஏய்ப்பு நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப் பட்டன.



## உள்நாட்டுப் புலம்பெயர்வு பற்றிய உலகளாவிய அறிக்கை 2024




- 2024 ஆம் ஆண்டு உள்நாட்டுப் புலம்பெயர்வு பற்றிய உலகளாவிய அறிக்கையினை (GRID-2024) ஜெனீவாவில் அமைந்துள்ள உள்நாட்டுப் புலம்பெயர்வு கண்காணிப்பு மையம் (IDMC) வெளியிட்டுள்ளது.
- முந்தைய ஆண்டில் 71.1 மில்லியனாக இருந்த உள்நாட்டில் புலம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கையானது 2023 ஆம் ஆண்டில் 75.9 மில்லியனாக அதிகரித்துள்ளது.
- உள்நாட்டுப் புலம்பெயர்வு என்பது "ஓர் ஆண்டில் தங்கள் நாட்டின் எல்லைகளுக்கு உள்ளேயே மக்கள் கட்டாயமாக புலம் பெயரச் செய்யப்பட்டதைக் குறிக்கிறது”.
- 2022-2023 ஆம் ஆண்டில், குறிப்பாக கடந்த இரண்டு ஆண்டுகளில் மோதல்கள் மற்றும் வன்முறைகள் அதிகப் புலம்பெயர்வுகளை ஏற்படுத்தியுள்ளன.
- 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 68.3 மில்லியன் மக்கள் மோதல் மற்றும் வன்முறையின் காரணமாக உள்நாட்டிலேயே புலம்பெயர்ந்துள்ளனர்.
- சூடான், சிரியா, காங்கோ ஜனநாயகக் குடியரசு, கொலம்பியா மற்றும் ஏமன் ஆகியவை உலகின் உள்நாட்டிலேயே புலம்பெயர்ந்த மக்களில் ஏறக்குறைய பாதிப் பங்கினை கொண்டுள்ளன.
- இது 2022 ஆம் ஆண்டின் எண்ணிக்கையை விட 49 சதவீதம் அதிகமாகும்.
- பேரழிவின் காரணமாக உள்நாட்டிலேயே புலம் பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 7.7 மில்லியனாக இருந்தது; அதில் நான்கில் ஒரு பங்கு நிலநடுக்கங்களால் ஏற்பட்ட புலம் பெயர்வு ஆகும்.
- வானிலை தொடர்பானப் பேரழிவுகள் காரணமாக ஏற்பட்ட உள்நாட்டுப் புலம்பெயர்வு 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டில் மூன்றில் ஒரு பங்கு குறைந்து உள்ளது.
- ஒட்டு மொத்தமாக, 2023 ஆம் ஆண்டில் ஏற்பட்ட உள்நாட்டுப் புலம் பெயர்வுகளில் 56 சதவீதம் பேரழிவுகளாலும், மற்றவை மோதல்களாலும் வன்முறையாலும் ஏற்பட்டவை ஆகும்.

## புவி கண்காணிப்பின் உலகளாவிய மதிப்பைப் பெருக்குதல்

- உலகப் பொருளாதார மன்றத்தினால் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையானது பல்வேறு துறைகளில் புவி கண்காணிப்பு (EO) தொழில்நுட்பங்களின் பொருளாதாரத் திறனைப் பற்றி ஆய்வு செய்கிறது.


- ❖ புவி கண்காணிப்புத் தரவு மற்றும் தொழில்நுட்பத்தினை அதிக அளவில் ஏற்பது, உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.8 டிரில்லியன் டாலர் வரையிலான மதிப்பினைச் சேர்ப்பதன் மூலம் உலகளாவிய வளர்ச்சியை அதிகரிக்க முடியும்.
- ❖ புவிக் கண்காணிப்புத் தரவுகளின் உலகளாவிய மதிப்பு ஆனது, 2030 ஆம் ஆண்டில் 266 பில்லியன் டாலரில் இருந்து 700 பில்லியன் டாலராக அதிகரிக்கும் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- ❖ புவிக் கண்காணிப்புத் தரவு ஆனது, பசுமை இல்ல வாயு உமிழ்வினை ஆண்டுதோறும் 2.2 ஜிகா டன்கள் வரை குறைக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது என்ற நிலையில் இது 476 மில்லியன் கார்களின் உமிழ்வுக்குச் சமம் ஆகும்.
- ❖ ஆசிய பசிபிக் பிராந்தியமானது புவிக் கண்காணிப்பின் மதிப்பைக் கைப்பற்றுவதில் முன்னணியில் இருக்கும் என்பதோடு 2030 ஆம் ஆண்டில் 315 பில்லியன் டாலரினை இது எட்டும்.
- ❖ புவிக் கண்காணிப்பு என்பது புவியின் பல்வேறு செயல்பாடுகள் மற்றும் இயற்பியல், வேதியியல், உயிரியல் மற்றும் மானுடவியல் (மனித) அமைப்புகளையும் உள்ளடக்கிய பண்புகள் பற்றியத் தகவல்களைச் சேகரிக்கும் ஒரு செயல்முறை ஆகும்.




## ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியப் பொருளாதாரக் கண்ணோட்டம்

- ❖ சர்வதேச நாணய நிதியம் (IMF) ஆனது, ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான அதன் பிராந்தியப் பொருளாதாரக் கண்ணோட்டத்தினை 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வெளியிட்டுள்ளது.
- ❖ 2023 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஆசிய-பசிபிக் பகுதியின் வளர்ச்சி பல்வேறு நாடுகளில் வெவ்வேறு பணவீக்க விகிதங்களுடன் எதிர்பார்ப்புகளை விட 5.0% ஆக உயர்ந்தது.
- ❖ 2024 ஆம் ஆண்டிற்கான கணிப்புகள் 4.5 சதவீதம் என்ற ஒரு சிறிய வளர்ச்சி மந்த நிலையை பரிந்துரைக்கின்றன என்பதோடு இது எதிர்காலத்தில் ஏற்பட உள்ள பல அபாயங்களை சமநிலைப்படுத்துகிறது.


- முன்னதாக 6.5% ஆக இருந்த 2024-25 ஆம் நிதியாண்டிற்கான இந்தியாவின் வளர்ச்சி கணிப்பு ஆனது 6.8% ஆக இருந்தது என்ற நிலையில் இது 2025-26 ஆம் ஆண்டிற்கான வளர்ச்சி கணிப்பை 6.5% என்ற அளவில் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- மீள்திறன் மிக்க உள்நாட்டுத் தேவையின் ஆதரவுடன் இந்தியா மீண்டும் மீண்டும் ஏற்படக் கூடிய நேர்மறையான வளர்ச்சி ஆச்சரியங்களுக்கு ஆதாரமாக இருந்தது.
- மேலும், இந்தியாவின் பொருளாதாரத்தினை இயக்குவதில் பொது முதலீடு ஒரு மிக குறிப்பிடத் தக்க காரணியாகும்.




## புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் பற்றிய உலகளாவிய அறிக்கை 2024

- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது, 2024 ஆம் ஆண்டின் புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் (NTD) பற்றிய உலகளாவிய அறிக்கையினை வெளியிட்டு உள்ளது.
- 2021-2030 ஆம் ஆண்டு புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்களுக்கான செயல் திட்டத்தினை செயல்படுத்துவதில் 2023 ஆம் ஆண்டில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் மதிப்பீட்டினை இந்த அறிக்கை வழங்குகிறது.
- 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாத நிலவரப்படி, மொத்தம் 50 நாடுகள் குறைந்தபட்சம் ஒரு புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்களையாவது வெற்றிகரமாக அகற்றி, 100 நாடுகளின் 2030 ஆம் ஆண்டு இலக்கை நோக்கிய பாதி பாதையினைக் கடந்ததைக் குறிக்கிறது.
- 5 நாடுகள் ஒரு புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்களை நீக்கியதற்காகவும், ஒரு நாடு இரண்டு புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்களை நீக்கியதற்காகவும் உலக சுகாதார அமைப்பினால் அங்கீகரிக்கப் பட்டு உள்ளன.
- 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், ஈராக் குறைந்தது ஒரு புறக்கணிக்கப்பட்ட வெப்ப மண்டல நோய்களை ஒழித்த 50வது நாடானது. இந்த நிகழ்வு 2030 ஆம் ஆண்டில் இலக்கினை அடைய வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்ட 100 நாடுகளின் இலக்கை அடைவதற்கான பாதிப் பாதையினைக் கடந்ததைக் குறிக்கிறது.
- 2023 ஆம் ஆண்டில் புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்களின் பட்டியலில் நோமா சேர்க்கப்பட்டது.

- 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், பொது சுகாதாரப் பிரச்சனையாக விளங்கும் உள்ளுறுப்பு லீஷ்மேனியாசிஸை நீக்கியதற்காக உலக சுகாதார அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட முதல் நாடு வங்காளதேசம் ஆகும்.
- இந்திய நாடானது டிராகுன்குலியாசிஸ் மற்றும் யாவ்ஸ் போன்ற புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் இல்லாத நாடாக சான்றிதழ் பெற்றது.




## ஆக்ஸ்போர்டு பொருளாதார அமைப்பின் உலகளாவிய நகரங்களின் குறியீடு 2024

| Rank | City | Country | Economics | Human Capital | Quality of Life | Environment | Governance |
|---|---|---|---|---|---|---|---|
| 350 | Delhi | India | 108 | 51 | 830 | 973 | 380 |
| 411 | Bengaluru | India | 171 | 179 | 847 | 727 | 380 |
| 427 | Mumbai | India | 169 | 126 | 915 | 812 | 380 |
| 472 | Chennai | India | 244 | 109 | 879 | 763 | 380 |
| 521 | Kochi | India | 259 | 560 | 765 | 790 | 380 |
| 528 | Kolkata | India | 166 | 392 | 884 | 919 | 380 |
| 534 | Pune | India | 386 | 181 | 897 | 715 | 380 |
| 550 | Thrissur | India | 326 | 698 | 757 | 581 | 380 |
| 564 | Hyderabad | India | 253 | 524 | 882 | 674 | 380 |
| 580 | Kozhikode | India | 392 | 607 | 783 | 620 | 380 |

- ஆக்ஸ்போர்டு குறியீட்டுப் பட்டியலில் நியூயார்க் முதலிடத்திலும், இலண்டன், சான் ஜோஸ், டோக்கியோ மற்றும் ஜப்பான் ஆகியவை அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.
- இந்தக் குறியீட்டின் முதல் 50 இடங்களில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் உள்ள நகரங்கள் முன்னணி இடங்களைப் பெற்றுள்ளன.
- இந்தக் குறியீட்டில் இந்திய நகரங்களில் டெல்லி முன்னணி இடத்தைப் பிடித்துள்ளது.
- தேசியத் தலைநகரம் ஆனது, உலகளாவியப் பட்டியலில் 350வது இடத்தில் உள்ளது.
- இந்தப் பட்டியலில் பெங்களூரு, மும்பை மற்றும் சென்னை உட்பட பல இந்திய நகரங்களும் இடம் பெற்றுள்ளன.
- இருப்பினும், எந்த ஒரு இந்திய நகரமும் முதல் 300 இடங்களுக்குள் இடம் பெறவில்லை.
- இந்தியாவில் பெங்களூரு 411, மும்பை 427, சென்னை 472, கொச்சி 521, கொல்கத்தா 528, புனே 534, திருச்சூர் 550, ஹைதராபாத் 564 மற்றும் கோழிக்கோடு 580 ஆகிய இடங்களில் இடம் பெற்றுள்ளன.
- திருச்சிராப்பள்ளி (634), கோயம்புத்தூர் (669), மதுரை (691), வேலூர் (729) மற்றும் சேலம் (767) தமிழகத்திலிருந்து இடம் பெற்றுள்ள நகரங்கள் ஆகும்.

## WEF பயணம் & சுற்றுலா மேம்பாட்டுக் குறியீடு 2024


- உலகப் பொருளாதார மன்றத்தின் 2024 ஆம் ஆண்டு பயணம் மற்றும் சுற்றுலா மேம்பாட்டுக் குறியீட்டில் இந்தியாவின் தரவரிசை 39வது இடத்திற்கு உயர்ந்துள்ளது.
- இந்தப் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தைப் பிடித்தாலும், தெற்காசியாவிலும், குறைந்த நடுத்தர வருமானம் கொண்ட பொருளாதாரங்களிலும் இந்தியா மிக உயர்ந்த இடத்தில் உள்ளது.
- அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக, ஸ்பெயின், ஜப்பான், பிரான்ஸ் மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவை 2024 ஆம் ஆண்டு பட்டியலில் முதல் ஐந்து இடங்களில் உள்ளன.
- ஜெர்மனி 6வது இடத்திலும், ஐக்கியப் பேரரசு, சீனா, இத்தாலி மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் முதல் பத்து இடங்களுக்குள் உள்ளன.
- 2021 ஆம் ஆண்டில் முன்னர் வெளியிடப்பட்ட குறியீட்டில் இந்தியா 54வது இடத்தில் இருந்தது.





## உலகளாவிய தண்ணீர் நெருக்கடி அறிக்கை

- இந்தோனேசியாவின் பாலி நகரில் நடைபெற்ற 10வது உலகத் தண்ணீர் மன்றத்தில் உலக வங்கியானது "பகிரப்பட்ட செழுமைக்கான நீர்" என்ற புதிய தலைப்பிலான ஒரு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- உலகெங்கிலும் உள்ள சுமார் 2.2 பில்லியன் மக்கள் பாதுகாப்பான முறையில் மேலாண்மை செய்யப்பட்ட குடிநீர் சேவைகளைப் பெற்றிருக்கவில்லை.
- 3.6 பில்லியன் மக்கள் பாதுகாப்பான முறையில் மேலாண்மை செய்யப்பட்ட சுகாதார சேவைகளைப் பெற்றிருக்கவில்லை, மேலும் 2.3 பில்லியன் மக்கள் அடிப்படையான கை கழுவும் வசதிகளைப் பெற்றிருக்கவில்லை.
- உலக மக்கள் தொகையில் 36% கொண்டுள்ள சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் 11% நன்னீர் மட்டுமே காணப்படுகின்றன, அதே நேரத்தில் 5% மக்கள்தொகை கொண்ட வட அமெரிக்கா நாட்டில் 52% நன்னீர் காணப்படுகிறது.

- உலகளவில், 800 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உச்சகட்ட வறட்சி ஏற்படும் நிலையிலான ஆபத்தில் உள்ளனர், மேலும் அதை விட இரண்டு மடங்கிற்கும் அதிக மக்கள் வெள்ளத்தினால் பாதிப்பிற்கு உள்ளாகும் பகுதிகளில் வாழ்கின்றனர்.
- குறைந்த வருமானம் உள்ள நாடுகளில் உள்ள 56 சதவீத வேலைவாய்ப்புகளில் அதிகப் பங்கினை கொண்டுள்ளன, ஆனால் இது அதிக வருமானம் உள்ள நாடுகளில் 20 சதவீதம் மட்டுமே ஆகும்.
- காங்கோ ஜனநாயகக் குடியரசு ஆப்பிரிக்காவின் மொத்த நீர் வளத்தில் பாதிக்கும் மேலான பங்கினைக் கொண்டுள்ளது.
- சஹேல், தென்கிழக்கு ஆப்பிரிக்கா மற்றும் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவில் உள்ள முக்கியப் பகுதிகள் அதிக தண்ணீர் நெருக்கடிக்கு உள்ளாகின்றன.





## புத்தொழில் மேம்பாட்டிற்கு உகந்த உலகின் 10 முன்னணி நகரங்கள் – 2024




- பிட்ச்புக் நிறுவனம் ஆனது சமீபத்தில் 2024 ஆம் ஆண்டிற்கான அதன் உலகளாவிய துணிகர முதலீட்டுச் சூழலமைவு தரவரிசையினை வெளியிட்டது.

- இது புத்தொழில் மேம்பாட்டிற்கு உகந்த உலகின் முன்னணி 50 நகரங்களைப் பட்டியல் இடுகிறது என்பதோடு மேலும், இந்த சூழல் அமைப்புகளின் மேம்பாட்டினைப் பற்றிய தகவல்களையும் வழங்குகிறது.
- சிலிக்கான் பள்ளத்தாக்கில் அமைந்துள்ள சான் பிரான்சிஸ்கோ இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து அமெரிக்காவின் நியூயார்க் நகரம் மற்றும் சீனாவின் பெய்ஜிங் ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- மும்பை 32வது இடத்திலும், பெங்களூரு 34வது இடத்திலும் இடம் பெற்றதுடன், புத்தொழில் மேம்பாட்டிற்கு உகந்த உலகின் முன்னணி 50 நகரங்களில் இரண்டு இந்திய நகரங்கள் இடம் பெற்றுள்ளன.

## கார்பன் விலை நிர்ணயத்தின் நிலை மற்றும் போக்குகள் 2024





- 2023 ஆம் ஆண்டில், உலக வங்கியின் வருடாந்திர "கார்பன் விலையிடல் நிலை மற்றும் போக்குகள் 2024" அறிக்கையின்படி, கார்பன் விலையிடல் மூலமான வருவாயானது 104 பில்லியன் டாலர்களை எட்டியுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு அறிக்கையின்படி, உலகளாவிய உமிழ்வுகளில் 24% ஆனது தற்போது மதிப்பிடப்பட்டுள்ளது.
- உலகளவில் 75 கார்பன் வரிகள் மற்றும் உமிழ்வு வர்த்தக திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன.
- கார்பன் விலை நிர்ணயக் கருவிகள் உலகளாவிய உமிழ்வுகளில் சுமார் 24 சதவீத உமிழ்விற்கு விலையினை நிர்ணயித்துள்ளது.
- தற்போது நிர்ணயிக்கப் படுவதற்காக என்று பரிசீலிக்கப் படும் கார்பன் வரிகள் மற்றும் உமிழ்வு வர்த்தக அமைப்புகள் (ETSs) இதன் பரவலைச் சுமார் 30% வரையில் உயர்த்தலாம்.
- பிரேசில், இந்தியா, சிலி, கொலம்பியா மற்றும் துருக்கி உள்ளிட்ட பெரிய நடுத்தர வருமான நாடுகள் கார்பன் விலை நிர்ணயம் நடைமுறையில் முன்னேற்றம் அடைந்து வருகின்றன.

# மாநிலச் செய்திகள்

## மக்களவைத் தேர்தலில் புரு சமூகம்

- திரிபுராவில் மீள்குடியேறிய புரு சமூகத்தினைச் சேர்ந்த புலம்பெயர்ந்தோர் நிரந்தர மீள் குடியேற்றத்திற்குப் பிறகு முதல் முறையாக தற்போது மக்களவைத் தேர்தலில் வாக்களித்தனர்.
- மத்திய அரசு மற்றும் திரிபுரா மற்றும் மிசோரம் மாநில அரசுகள் சம்பந்தப்பட்ட ஒரு நான்கு தரப்பு ஒப்பந்தத்தின் விளைவாக 2020 ஆம் ஆண்டில் இது மேற்கொள்ளப் பட்டது.
- அவர்கள் இதற்கு முன்பு திரிபுராவில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் பங்கேற்றுள்ளனர்.
- முந்தைய மக்களவைத் தேர்தலில், 2009 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் புரு சமூகத்தின் புலம் பெயர்ந்தோர் முகாம்களில் அமைந்த மையங்களிலும், 2019 ஆம் ஆண்டில் மிசோரமின் மாமித் மாவட்டத்தில் உள்ள சிறப்பு வாக்குச் சாவடி மையங்களிலும் அவர்கள் வாக்களித்தனர்.
- 1997 ஆம் ஆண்டில் நடைபெற்ற இன மோதல்களைத் தொடர்ந்து, ரியாங் என்றும் அழைக்கப்படும் சுமார் 32,000 ப்ரு இனத்தவர்கள், மிசோரமிலிருந்து தப்பி திரிபுராவில் தஞ்சம் புகுந்தனர்.
- இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, 2018 ஆம் ஆண்டு ஜூலை 03 ஆம் தேதியன்று ஒரு நாற்கர (நான்கு தரப்பு) ஒப்பந்தம் கையெழுத்தானது.
- திரிபுராவில் அமைந்துள்ள தற்காலிக முகாம்களில் உள்ள மொத்தம் 32,876 பேரை உள்ளடக்கிய 5,407 புரு சமூகத்தினைச் சேர்ந்த குடும்பங்களை மிசோரமிற்குத் திருப்பி அனுப்புவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## காலேசர் வனவிலங்கு சரணாலயம்



- ஹரியானாவின் யமுனாநகர் மாவட்டத்தில் உள்ள காலேசர் வனவிலங்கு சரணாலயத்திற்குள் கட்டமைக்கப்படுவதற்காக முன்மொழியப்பட்ட நான்கு அணைகளின் கட்டுமானப் பணிகளைத் தொடங்க உச்சநீதிமன்றம் தடை விதித்து உள்ளது.
- காலேசர் வனவிலங்கு சரணாலயத்தில் சிக்கான், கன்ஸ்லி, கில்லன்வாலா மற்றும் அம்பாவாலி ஆகிய நான்கு அணைகள் கட்டப்படுவதை எதிர்த்துத் தொடரப்பட்ட மனுவை உச்ச நீதிமன்றம் விசாரித்தது.
- இது அப்பகுதியில் உள்ள தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கு எதிர்மறையானத் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று வாதிடப்படுகிறது.
- இந்த வனவிலங்கு சரணாலயம் சிவாலிக் மலையடிவாரத்தில் அமைந்துள்ளது.
- இது இராஜாஜி தேசியப் பூங்கா (உத்தரக்காண்ட்) மற்றும் சிம்பல்பரா தேசியப் பூங்கா (இமாச்சலப் பிரதேசம்) ஆகியவற்றுடன் தொடரிணைப்பினைக் கொண்டுள்ளது.

## உத்தரகாண்ட் மாநிலத்தில் காட்டுத் தீ



- உத்தரகாண்ட் மாநிலத்தின் பௌரி கர்வால் மாவட்டத்தில் உள்ள துமகோட் பகுதியில் உள்ள மலையின் உயர்மட்டப் பகுதியில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் அம்மாநிலத்தின் வனத் துறையால் பதிவு செய்யப் பட்ட 998 காட்டுத் தீ சம்பவங்களில் இதுவும் ஒன்றாகும்.
- மே 06 முதல் 07 வரை மட்டும் 68 தீ விபத்துகள் நிகழ்ந்துள்ளன.
- கடந்த பருவத்தில், அம்மாநிலத்தில் இதுபோன்ற 773 தீ விபத்துகள் பதிவாகியுள்ளன.
- இந்திய விமானப்படை அதன் Mi17 V5 ஹெலிகாப்டர்களை தீயணைப்பிற்காக மேற் கொள்ளப் படும் வானிலிருந்து நீர் தெளிக்கும் நடவடிக்கைகளுக்காக அனுப்பியது.
- இந்தச் சிறப்புத் தீயணைக்கும் நுட்பமானது ஹெலிகாப்டருக்கு அடியில் இருந்து ஒரு கொள்கலனைத் தொங்கவிட்டு, அதில் நீர் நிரப்பி, பின்னர் அதை தீ விபத்து மண்டலத்தின் மீது விடுவிப்பதை உள்ளடக்கும்.
- அணுக முடியாத பகுதிகளில் காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த இந்தச் செயல்முறை மிக இன்றியமையாததவையாகும்.
- காட்டுத் தீயைத் தடுக்க வேண்டி, அரசாங்கம் 'பைருல் லாவோ-பைசே பாவ்' (பைன் இலைகளுக்குப் பணம் பெறுதல்) திட்டத்தினை மேற்கொண்டு வருகிறது.

## நெரியம் ஒலியாண்டர் – கேரளா

- 24 வயது பெண் ஒருவர் மரணமடைந்ததன் காரணமாக, மாநிலத்தில் உள்ள 2,500க்கும் மேற்பட்ட கோவில்களை நிர்வகிக்கின்ற கேரள அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இரண்டு கோவில் வாரியங்கள், ஒலியாண்டர் (அரளி) பூக்களைப் பயன்படுத்த தடை விதித்து உள்ளன.
- நெரியம் ஒலியாண்டர் அல்லது பொதுவாக ஒலியாண்டர் அல்லது ரோஸ்பே என அழைக்கப் படுகின்ற இது உலகம் முழுவதும் வெப்பமண்டல, துணை வெப்ப மண்டல மற்றும் மிதவெப்ப மண்டலங்களில் பயிரிடப்படும் ஒரு தாவரமாகும்.
- வறட்சியைத் தாங்கும் தன்மைக்கு பெயர் பெற்ற இந்தப் புதர்ச்செடி வகையானது பெரும்பாலும் அலங்கார மற்றும் நிலத்தோற்றங்களை வண்ணமயமாக மாற்றுதல் ஆகிய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகிறது.
- ஒலியாண்டரில் வெவ்வேறு வகைகள் உள்ளன என்ற நிலையில் அவை ஒவ்வொன்றும் வெவ்வேறு நிறத்திலான பூக்களைக் கொண்டுள்ளன.
- இதன் வேர்ப்பட்டையிலிருந்துத் தயாரிக்கப்பட்ட எண்ணெய் தோல் நோய்களுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுகிறது.
- சில ஆயுர்வேத சூத்திரங்களில் பயன்படுத்தப்பட இது பரிந்துரைக்கப்பட்டாலும், ஒலியண்டர் நச்சுத் தன்மை கொண்டதாகவும் நீண்ட காலமாக உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- மேலும், இதனை எரிப்பதால் ஏற்படும் புகையை உள்ளிழுப்பதும் போதை தரக்கூடியது ஆகும்.




## தீர்த்தஹள்ளி பாக்கு



- கர்நாடகாவில் விளையும் ரகங்களுள், தீர்த்தஹள்ளி என்ற பகுதியில் விளையும் பாக்கு சிறந்த தரமான பாக்காக உருவெடுத்துள்ளது.
- தீர்த்தஹள்ளி பாரம்பரியமாக பாக்கு வளர்க்கப்படும் ஒரு பகுதியாகும்.
- இங்கு நிலவும் பருவ நிலைகளும் இதன் உற்பத்திக்கு மதிப்பு சேர்க்கின்றன.
- இப்பகுதியில் இருந்து வெளியில் வேறு இடத்தில் பயிரிட்டால் இப்பயிர் அத்தகையத் தன்மையினைக் கொண்டிருக்காது.

## மேற்கு நைல் வைரஸ் – கேரளா




- சமீபத்தில் கேரளா முழுவதும் பரவியுள்ள மேற்கு நைல் வைரஸ் (WNV) என்பது பிலாவி விரிடே குடும்பத்தைச் சேர்ந்த கொசுக்களால் இரத்தத்தின் மூலம் பரவும் ஒரு வைரஸ் (ஆர்போவைரஸ்) ஆகும்.
- மேற்கு நைல் வைரஸ் என்பது கொசுக்களால் முக்கியமாகப் பரவும் ஒற்றை இழை RNA வைக் கொண்ட வைரஸ் ஆகும்.
- இது ஜப்பானிய மூளைக்காய்ச்சல் மற்றும் மஞ்சள் காய்ச்சலை ஏற்படுத்தும் வைரஸ்களை ஒத்தது ஆகும்.
- இந்த வைரஸானது ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு, பாதிக்கப்பட்ட குலெக்ஸ் கொசுக்கள் கடிப்பதன் மூலம் பரவுகிறது.
- அவை பாதிக்கப்பட்டப் பறவைகளிடமிருந்து (பெரும்பாலும் புலம்பெயர்ந்தவை) இந்த வைரஸைப் பெறுகின்றன.
- இது மனிதர்கள், குதிரைகள் மற்றும் பிற பாலூட்டிகளையும் பாதிக்கிறது.


## இந்தியாவில் முதல் முறையாக தென்பட்ட ஜெயிண்ட் ஷ்ரைக்

- இந்தியாவில் முதல் முறையாக அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள தவாங் அருகே ஜெயிண்ட் ஷ்ரைக் பறவை தென்பட்டுள்ளது.
- இப்பறவையானது பொதுவாக சீனாவின் உயரமான பகுதிகளில் காணப்படுகிறது.
- சாம்பல் நிற ஜெயிண்ட் ஷ்ரைக் பறவைகள் உயரமான இடங்களில், புதர்கள் நிறைந்த திறந்தவெளி வாழ்விடங்களில் காணப் படுகின்றன என்பதோடு குளிர்காலத்தில் அவை தாழ்வான பகுதிகளுக்கு இடம்பெயர்கின்றன.



## A வகை கல்லீரல் அழற்சி நோய்த்தொற்று

- கேரளாவின் மலப்புரம் மாவட்டத்தில் A வகை கல்லீரல் அழற்சி நோய்த் தொற்றானது பெருமளவில் ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் சுமார் 8,000 பேர் பாதிக்கப்பட்டு 12 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.
- A வகை கல்லீரல் அழற்சி நோய் என்பது மிகவும் தொற்றக் கூடிய வைரஸால் ஏற்படும் கல்லீரல் தொற்று ஆகும்.
- 99% நோய்ப் பாதிப்புகளில், தொற்று தானாகவே நீங்கி விடும் என்ற நிலையில் அது கல்லீரலை நிரந்தரமாகச் சேதப்படுத்தாது.
- A வகை கல்லீரல் அழற்சி வைரஸ் ஆனது, மலத்திலிருந்து அசுத்தமான உணவு அல்லது தண்ணீரின் மூலமாக வாய்வழி பரவுகிறது.



## சரிஸ்கா புலிகள் வளங்காப்பகம் குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

- சரிஸ்கா வளங்காப்பகத்தின் முக்கியப் புலிகள் வாழ்விடத்தின் (CTH) 1 கிலோமீட்டர் சுற்றளவில் இயங்கும் 68 சுரங்கங்களை மூடுமாறு ராஜஸ்தான் மாநில அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம், 1972 மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம், 1986 ஆகிய இரண்டும் புலிகள் வளங்காப்பகத்திலும் அதைச் சுற்றியுள்ளப் பகுதிகளிலும் கற்சுரங்கம் அமைப்பதைத் தடுக்கின்றன.
- 2005 ஆம் ஆண்டு மே மாதத்தில், டெல்லிக்கும் ஜெய்ப்பூருக்கும் இடையில் உள்ள ஆரவல்லி வளங்காப்பகத்தில் புலிகள் காணாமல் போனது குறித்து விசாரிக்க மத்தியப் புலனாய்வுத் துறைக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.
- நீதிமன்றம் முதன்முதலில் எடுத்து விசாரித்த நிகழ்விற்கு சுமார் 15 ஆண்டுகளுக்குப் பிறகு சரிஸ்காவில் சட்டவிரோதச் சுரங்கப் பிரச்சினையை நீதிமன்றம் விசாரிக்கத் தொடங்கியது.
- 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், அந்தப் பகுதியில் உள்ள 262 சுரங்கங்களை மூடுமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.
- 2005 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், வனப்பகுதிகளில் தற்காலிக சுரங்க அனுமதி வழங்குவதற்கான விதிகளை உச்ச நீதிமன்றம் வகுத்தது.
- ஆனால் 2008 ஆம் ஆண்டு ராஜஸ்தான் அரசாங்கம் சரணாலயத்தின் எல்லை வரையறுக்கப் பட்டதாகக் கூறியதையடுத்து, சரணாலயத்தின் 100 மீட்டர் சுற்றளவுக்கு வெளியே கற்சுரங்கங்களை அமைக்க அனுமதித்த பிறகு அந்தச் சுரங்கங்கள் மீண்டும் செயல்படத் தொடங்கின.



## மேற்கு வங்காளம் மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் OBC இட ஒதுக்கீடு

- தேசியப் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் (NCBC) ஆனது பஞ்சாப் மற்றும் மேற்கு வங்காளத்தில் பொது வேலைவாய்ப்பில் இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான (OBCs) இட ஒதுக்கீட்டை அதிகரிக்கப் பரிந்துரை செய்துள்ளது.
- தற்போது, பஞ்சாப் அரசானது பொது வேலை வாய்ப்புகளில் 25% பட்டியலிடப்பட்ட சாதியினருக்கும் 12% இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குமென மொத்தம் 37% இட ஒதுக்கீட்டை வழங்குகிறது.
- பொது வேலைவாய்ப்பில் இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஒதுக்கீட்டை கூடுதலாக 13% அதிகரித்து, அவர்களுக்கான மொத்த இடஒதுக்கீட்டினை 25% ஆக மாற்ற தேசியப் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் முன்மொழிந்துள்ளது.
- இன்றுவரையில், 143 சமூகங்கள் மாநில OBCகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன, அவற்றில் 83 சாதிகள்/சமூகங்கள் முஸ்லீம் மதத்தைச் சேர்ந்தவை.
- மேற்கு வங்காளத்தில் உள்ள மாநில OBC சமூகங்களின் பட்டியலில் மொத்தம் 179 OBC சமூகங்கள் பட்டியலிடப் பட்டுள்ளன.

## மணிப்பூர் புலம்பெயர்வு 2023




- 2023 ஆம் ஆண்டில் தெற்காசியாவில் மோதல்கள் மற்றும் வன்முறை நிகழ்வுகள் ஆனது 69,000 புலம்பெயர்வுகளைத் தூண்டியுள்ள நிலையில் இதில் மணிப்பூர் வன்முறைகள் மட்டும் 67,000 புலம் பெயர்வுகளுக்குக் காரணம் என்று ஒரு புதிய அறிக்கை கூறுகிறது.
- 2018 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் பதிவான மோதல் மற்றும் வன்முறையால் தூண்டப் பட்ட அதிக எண்ணிக்கையிலான புலம் பெயர்வு இதுவாகும்.
- முக்கால் பங்கிற்கும் அதிகமான புலம் பெயர்வுகள் மணிப்பூருக்குள்ளேயே நிகழ்ந்தன.
- சுமார் ஐந்தில் ஒரு பங்கினர் அண்டை மாநிலமான மிசோரம் மற்றும் சிறிய எண்ணிக்கையிலானோர் நாகாலாந்து மற்றும் அசாம் மாநிலங்களுக்கு புலம் பெயர்ந்தனர்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## மனித ஆய்விற்கான உலாவிக் கலத்திற்கான போட்டி 2024 விருதுகள்

- மனித ஆய்விற்கான உலாவிக் கலத்திற்கான போட்டியில், டெல்லியின் தேசிய தலைநகர் பகுதி மற்றும் மும்பை ஆகியப் பகுதிகளைச் சேர்ந்த இரண்டு இந்திய மாணவர் அணிகளுக்கு நாசா விருது வழங்கியது.
- டெல்லியின் தேசிய தலைநகர் பகுதியைச் சேர்ந்த KIET கல்விக் குழுமம் "கிராஷ் அண்ட் பர்ன்" பிரிவில் விருதை வென்றது.
- மும்பையைச் சேர்ந்த கனகியா இன்டர்நேஷனல் பள்ளி "ரூக்கி ஆஃப் தி இயர்" என்ற விருதைப் பெற்றது.
- உயர்நிலைப் பள்ளிப் பிரிவில் அமெரிக்காவின் டல்லாஸ் பாரிஷ் எபிஸ்கோபல் பள்ளி முதலிடம் பெற்றது.




## சுப்ரமண்ய தரேஷ்வர்

- புகழ்பெற்ற யக்சகானா நாடகக் கலைஞரான சுப்ரமணிய தரேஷ்வர் (67) சமீபத்தில் காலமானார்.
- அவர் தனது மிருதுவான குரலுக்காக 'பாகவதா ஸ்ரேஸ்தா' என்ற புகழைப் பெற்றார்.
- அவர் கர்நாடகாவின் கடலோரப் பகுதியின் ஒரு தனித்துவமான நடன வடிவமான யக்சகானா கலைத் துறையில் 46 ஆண்டுகள் பணியாற்றினார்.
- இது அண்டைப் பகுதியான கேரளாவின் தெய்யம் கலை வடிவத்துடன் ஒத்திருக்கும் தனித்துவமான பாடல், நடனம் மற்றும் நாடகப் பாணியை உள்ளடக்கியது.

## 2024 புலிட்சர் பரிசு வெற்றியாளர்கள்

- கொலம்பியா பல்கலைக்கழகம் 108வது புலிட்சர் பரிசு விழாவை நடத்தியது.
- இது அமெரிக்க நாட்டிற்குள் அந்தந்த துறைகளில் ஒருவரின் சாதனையின் உச்சமாக கருதப் படுகிறது.
- தி நியூயார்க் டைம்ஸ் இதழானது, காசா மோதல்கள் பற்றிய விரிவான செய்திக்காக அதன் மூன்று புலிட்சர் பரிசுகளில் ஒன்றை வென்றது.
- இதர சில பரிசு வென்றவர்களின் பட்டியல்
    - புனைவுக் கதை - ஜெய்ன் அன்னே பிலிப்ஸ் (க்நோஃப்) எழுதிய ‘Night Watch’ என்ற புத்தகம்
    - நாடகம் - எபோனி பூத் இயற்றிய ‘Primary Trust’
    - கவிதை – பிராண்டன் சோமின் ‘Tripas: Poems’ (ஜார்ஜியா விமர்சனப் புத்தகங்கள்)
    - சிறப்புப் பரிசுகள் - கிரெக் டேட் மற்றும் காஸாவில் நடந்த போர் பற்றிய தகவல்களைச் சேகரித்த செய்தியாளர்களும் ஊடகப் பணியாளர்களும்.




## ஃபோர்ப்ஸ் இதழின் 30 வயதிற்குட்பட்ட 30 ஆசிய தொழில்முனைவோர் பட்டியல் 2024

- ஃபோர்ப்ஸ் இதழின் ஒன்பதாவது 30 வயதிற்குட்பட்ட 30 ஆசிய தொழில் முனைவோர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.
- 300 பேரில் 86 இந்தியர்கள் இடம் பெற்றுள்ளனர்.
- 10 பிரிவுகளில் ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் உள்ள இளம் தொழில்முனைவோர், தலைவர்கள் மற்றும் முன்னோடிகள் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.
- இது கலை, பொழுதுபோக்கு, விளையாட்டு, நிதி மற்றும் துணிகர மூலதனம் ஆகிய பிரிவுகளை உள்ளடக்கும்.
- கான்பூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தினைச் சேர்ந்த மூவர் இந்தப் பட்டியலில் இடம் பிடித்துள்ளனர்.
- மெர்லின் இணை நிறுவனர்களான பிரத்யுஷ் ராய், சித்தார்த்தா சக்சேனா மற்றும் சிர்செந்து சர்க்கார் ஆகியோர் நுகர்வோர் தொழில்நுட்பப் பிரிவின் கீழ் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

## ஃபோர்ப்ஸ் இதழின் உலகில் அதிக ஊதியம் பெறும் விளையாட்டு வீரர்கள் பட்டியல் 2024



THE WORLD'S 10 HIGHEST PAID ATHLETES 2024

| | | |
|---|---|---|
| 1. | Cristiano Ronaldo | $260M |
| 2. | Jon Rahm | $218M |
| 3. | Lionel Messi | $135M |
| 4. | LeBron James | $128.2M |
| 5. | Giannis | $111M |
| 6. | Kylian Mbappé | $110M |
| 7. | Neymar | $108M |
| 8. | Karim Benzema | $106M |
| 9. | Stephen Curry | $102M |
| 10. | Lamar Jackson | $100.5M |

- ஃபோர்ப்ஸ் இதழின் பட்டியலின் படி கிறிஸ்டியானோ ரொனால்டோ ஃபோர்ப்ஸ் இதழின் உலகில் அதிக ஊதியம் பெறும் விளையாட்டு வீரர்களின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.
- அவரைத் தொடர்ந்து ஜான் ரஹ்ம் (கோல்ப்), லியோனல் மெஸ்ஸி (கால்பந்து) மற்றும் லெப்ரான் ஜேம்ஸ் (கூடைப்பந்து) ஆகியோர் உள்ளனர்.
- முதல் முறையாக, அதிக ஊதியம் பெறும் முதல்-10 விளையாட்டு வீரர்கள் ஒவ்வொருவரும் 100 மில்லியன் டாலருக்கும் அதிகமாக ஊதியம் பெற்றுள்ளனர்.
- 2019 ஆம் ஆண்டிற்குப் பிறகு முதன்முறையாக ஃபோர்ப்ஸ் இதழின் பட்டியலில் முதல் 50 இடங்களுக்குள் பெண்கள் யாரும் இடம் பெறவில்லை.

## சர்வதேசப் புக்கர் பரிசு 2024

- ஜெர்மன் எழுத்தாளர் ஜென்னி எர்பென்பெக் மற்றும் மொழிபெயர்ப்பாளர் மைக்கேல் ஹாஃப்மேன் ஆகியோர் சர்வதேச புக்கர் பரிசை வென்றுள்ளனர்.
- ஜென்னி எழுதிய கைரோஸ் புனைக் கதையினை மைக்கேல் மொழிபெயர்த்துள்ளார்.
- முன்னர் மேன் புக்கர் சர்வதேசப் பரிசு என்று அறியப்பட்ட இது 2005 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- ஐக்கியப் பேரரசு அல்லது அயர்லாந்தில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப் பட்ட ஒரு புத்தகத்திற்காக இது ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.
- இந்தப் பரிசானது, உலகளாவியப் புனைவுக் கதைகளை மேம்படுத்துவதையும், மொழி பெயர்ப்பாளர்களின் பணியைக் கொண்டாடுவதையும் பெரு நோக்கமாகக் கொண்டு உள்ளது.

### இராணுவ தளபதி ஜெனரல் பாண்டேவின் பதவிக் காலம்

- அமைச்சரவையின் நியமனக் குழுவானது, இராணுவத் தளபதி ஜெனரல் மனோஜ் பாண்டே ஓய்வு பெறும் தேதியைத் தாண்டி, 2024 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதி வரை பதவி வகிப்பதற்கு மேலும் ஒரு மாத கால பதவி நீட்டிப்பை வழங்கியுள்ளது.
- பொதுவாக, படைப்பிரிவுத் தலைவர்களின் பதவிக்காலம் 62 வயது அல்லது மூன்று ஆண்டுகள் இவற்றில் எது முந்தையதோ அதுவாகக் கருதப்படும்.
- இது போன்ற நிகழ்வு கடந்த காலத்தில் ஒருமுறை மட்டுமே நிகழ்ந்துள்ளது.
- 1975 ஆம் ஆண்டு இராணுவத் தளபதி ஜெனரல் G.G. பேவூரின் பதவிக் காலத்தினை இந்திரா காந்தி தலைமையிலான அரசு ஓராண்டு வரை நீட்டித்து உத்தரவிட்டது.

## விளையாட்டுச் செய்திகள்

### எலோர்டா கோப்பை 2024

- கஜகஸ்தானின் அஸ்தானாவில் நடைபெற்ற 3வது எலோர்டா கோப்பை (2024) போட்டியில் இந்தியக் குத்துச்சண்டை அணி குறிப்பிடத்தக்க வெற்றியினைப் பெற்று உள்ளது.
- இரண்டு முறை உலக சாம்பியன் பெற்ற நிகத் ஜரீன் மற்றும் மீனாக்சி இந்தியாவிற்கு இரண்டு தங்கப் பதக்கங்களைப் பெற்றுத் தந்துள்ளனர்.
- அனாமிகா (50 கிலோ) மற்றும் மனிஷா (60 கிலோ) இந்தியாவுக்கு வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றுத் தந்துள்ளனர்.
- இந்திய ஆடவர் குத்துச்சண்டை வீரர்கள் 4 பதக்கங்களையும், மகளிர் குத்துச்சண்டை வீராங்கனைகள் 8 பதக்கங்களையும் வென்றனர்.
- இந்திய அணியானது 2 தங்கம், 2 வெள்ளி, 8 வெண்கலம் என 12 பதக்கங்களுடன் எலோர்டா கோப்பை போட்டியில் தனது பங்கேற்பினை நிறைவு செய்துள்ளது.



## ICC ஆடவர் T20 உலகக் கோப்பை போட்டியின் விளம்பரத் தூதர்

- சர்வதேச கிரிக்கெட் சபையானது (ICC) வரும் 9வது ICC ஆடவர் T20 உலகக் கோப்பைப் போட்டிக்கான விளம்பரத் தூதராக பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் ஷாஹித் அப்ரிடியை நியமித்துள்ளது.
- இந்தப் போட்டியினை மேற்கிந்திய தீவுகள் மற்றும் அமெரிக்கா இணைந்து நடத்த உள்ளன.
- இந்தியக் கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங், மேற்கிந்திய வீரர் கிறிஸ் கெய்ல் மற்றும் ஜமைக்கா தடகள வீரர் உசைன் போல்ட் உட்பட மதிப்பிற்குரிய விளம்பரத் தூதர்களின் குழுவில் அப்ரிடி இணைய உள்ளார்.




# முக்கிய தினங்கள்

## சர்வதேச தொழிலாளர் / மே தினம் - மே 01

- 1886 ஆம் ஆண்டில், தொழிலாளர்கள் தினசரி அடிப்படையிலான எட்டு மணி நேர வேலை நேரத்தினை நிர்ணயிக்க கோரி அமெரிக்காவில் ஒரு மிகப்பெரிய அளவிலான ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.
- சிகாகோவின் ஹேமார்க்கெட் சதுக்கத்தில் தொழிலாளர் கூட்டம் மீது குண்டுவீசித் தாக்கப் பட்டதைத் தொடர்ந்து, அமெரிக்கா முழுவதும் உள்ள தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைக் கோருவதற்கும் மற்றும் மேம்பட்ட வேலை/பணிச் சூழல்களுக்காகப் போராடுவதற்கும் ஒன்றிணைந்தனர்.
- 1889 ஆம் ஆண்டில், செகண்ட் இன்டர்நேஷனல் எனப்படுகின்ற சோசலிச மற்றும் தொழிலாளர் கட்சிகளின் உலகளாவியச் சங்கமானது பாரீஸ் நகரில் கூடி இந்த நாளை அறிவித்தது.

- இந்தியாவில் முதல் தொழிலாளர் தினம் ஆனது 1923 ஆம் ஆண்டு மே 01 ஆம் தேதி அன்று சென்னையில் கொண்டாடப்பட்டது.
- இந்துஸ்தானின் லேபர் கிசான் கட்சி தொடங்கப்பட்டு, தோழர் சிங்காரவேலர் இந்தக் கொண்டாட்டங்களுக்குத் தலைமை தாங்கினார்.




## மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநில தினம் - மே 01




- சுதந்திரத்திற்குப் பிறகு, பம்பாய் (மும்பை) பகுதியானது மராத்தி, குஜராத்தி, கொங்கனி மற்றும் கட்ச்சி ஆகிய மொழி பேசும் மக்களைக் கொண்ட ஒரு மாநிலமாக அங்கீகரிக்கப்பட்டது.

- இது 1956 ஆம் ஆண்டு மாநில மறுசீரமைப்புச் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டது.
- எனினும், விரைவில் இது குழப்பம் மற்றும் துயரத்திற்கு வழிவகுத்தது.
- பம்பாய் மக்களிடையே இருந்த மொழி வேறுபாடுகள் அம்மாநிலத்தின் ஒற்றுமையை சீர்குலைத்து, பிரச்சனைகளுக்கு வழிவகுத்தது.
- எனவே இந்திய அரசானது பம்பாய் மறுசீரமைப்புச் சட்டத்தினை இயற்றியது.
- 1960 ஆம் ஆண்டு மே 01 ஆம் தேதியன்று, குஜராத் மற்றும் மகாராஷ்டிரா ஆகியவை இரண்டு வெவ்வேறு மாநிலங்களாக அங்கீகரிக்கப்பட்டன.

## உலக சூரை மீன் தினம் - மே 02

- இத்தினமானது, சூரை மீன் வளங்காப்பின் அதீத முக்கியத்துவம் பற்றிய ஒரு விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- ஒமேகா-3 கொழுப்பு அமிலங்கள், புரதம் மற்றும் முக்கிய வைட்டமின்களை கொண்டு உள்ளதால், சூரை மீன் (டுனா) அதன் ஆரோக்கியம் சார்ந்தப் பல நன்மைகளுக்காக மிகப் பிரபலமானதாக உள்ளது.
- இந்தப் புலம்பெயர்ந்த துனா மீன் இனங்கள் ஆனது கடல்களில் பிடிக்கப்படும் அனைத்து மீன்வளத்தின் மதிப்பில் 20 சதவிகிதம் மற்றும் உலகளவில் வர்த்தகம் செய்யப் படும் கடல் சார் உணவுகளில் 8 சதவிகிதம் ஆகும்.

## பத்திரிக்கைச் சுதந்திர தினம் - மே 03

- வின்ட்ஹோக் பிரகடனத்தின் ஆண்டு நிறைவு ஆனது உலகப் பத்திரிகைச் சுதந்திர தினமாக கொண்டாடப்படுகிறது.
- யுனெஸ்கோ அமைப்பின் பொது மாநாட்டின் பரிந்துரையைத் தொடர்ந்து, 1993 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் இந்த நாள் அறிவிக்கப் பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "A Press for the Planet: Journalism in the Face of the Environmental Crisis" என்பதாகும்.

## சர்வதேச சூரிய தினம் - மே 03

- சூரிய ஆற்றலின் முக்கியத்துவம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துவதன் அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- இது முதன்முதலில் 1978 ஆம் ஆண்டில் புவி தினத்தை நிறுவிய டெனிஸ் ஹேய்ஸ் என்பவரால் முன்மொழியப்பட்டது.
- 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 ஆம் தேதியன்று முதன் முதலில் சூரிய தினம் கொண்டாடப் பட்டது.




## நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் தினம் - மே 04




- உலகெங்கிலும் உள்ள நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களின் கடின உழைப்பு மற்றும் தியாகங்களை இத்தினம் போற்றுகிறது.
- வீடுகள், தொழில்துறைகள் மற்றும் சமூகங்களுக்கு ஆற்றலை வழங்குவதில் அதன் முக்கியப் பங்கை இந்த நாள் நமக்கு நினைவூட்டுகிறது.
- நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் தினத்தின் வரலாறு 1575 ஆம் ஆண்டில் ஸ்காட் லாந்தில் முதல் நிலக்கரிச் சுரங்கம் திறக்கப் பட்டதுடன் தொடங்குகிறது.
- இந்தியாவில், முதல் நிலக்கரிச் சுரங்கம் ஆனது 1774 ஆம் ஆண்டில் ராணிகஞ்ச் நிலக்கரி வயல் பகுதிகளில் நிறுவப் பட்டது.

## சர்வதேச தீயணைப்பு வீரர்கள் தினம் - மே 04

- தங்கள் சமூகத்தைப் பாதுகாப்பதற்காக தங்கள் உயிரைப் பணயம் வைக்கும் தீயணைப்பு வீரர்களைக் கௌரவிப்பதே இத்தினத்தின் நோக்கமாகும்.
- தங்களின் உயிரை ஆபத்தில் ஆழ்த்தி மற்றொரு உயிரைக் காப்பாற்றும் தீயணைப்பு வீரர்களின் தியாகங்களை அங்கீகரித்துப் பாராட்டும் நாளாக இது அனுசரிக்கப் படுகிறது.

- அனைத்து தீயணைப்பு வீரர்களின் புரவலரான புனித ஃப்ளோரியனின் சிறப்பு தினத்துடனான தொடர்பிற்காக இந்தத் தேதியானது தேர்ந்தெடுக்கப் பட்டது.
- 1998 ஆம் ஆண்டு டிசம்பர் 02 ஆம் தேதியன்று, விக்டோரியாவின் லிண்டன் நகரில் ஏற்பட்ட கடுமையான காட்டுத் தீயை அணைக்கப் போராடிய ஐந்து தீயணைப்பு வீரர்கள் உயிரிழந்தனர்.


## உலக கை சுகாதார தினம் - மே 05




- இந்த உலகளாவிய நிகழ்வானது நோய்கள் மற்றும் தொற்றுநோய்கள் பரவுவதைத் தடுப்பதில் கை சுகாதாரத்தின் முக்கியத்துவத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2009 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தப் பிரச்சாரம் ஆனது, உலகளவில் கை சுகாதாரத்திற்கு ஆதரவாக 'மக்களை ஒன்றிணைப்பதை' நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாடு, கை சுகாதாரம் உள்ளிட்டவை மீதான புதுமையான மற்றும் தாக்கம் நிறைந்த பயிற்சி மற்றும் கல்வி மூலம் சுகாதார மற்றும் பராமரிப்புப் பணியாளர்களின் அறிவு மற்றும் திறனை மேம்படுத்துதல்" என்பதாகும்.

## சர்வதேச பேறுகால மருத்துவப் பணியாளர்கள் தினம் - மே 05

- இது 1992 ஆம் ஆண்டு பேறுகால மருத்துவப் பணியாளர்களின் பல சேவைகளைக் கொண்டாடவதற்காக சர்வதேச மருத்துவச்சிகள் கூட்டமைப்பினால் (ICM) அறிவிக்கப் பட்டது.
- கர்ப்பம், மகப்பேறு மற்றும் மகப்பேற்றுக்குப் பிறகான காலங்களில் பெண்களுக்கு பாதுகாப்பு வழங்குவதில் மருத்துவச்சிகள் வகிக்கும் ஒரு முக்கியப் பங்கை இந்த நாள் கௌரவிக்கிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'Midwives: A Vital Climate Solution' என்பது ஆகும்.




## சர்வதேச சிறுத்தைகள் தினம் - மே 03

- இது சிறுத்தைகள் மற்றும் அவற்றின் பாதுகாப்பு மற்றும் வளங்காப்பு பற்றிய விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சிறுத்தை (பந்தெரா பார்டஸ்) பெரும் பூனை குடும்பத்தில் உள்ள இனங்களில் மிகச் சிறியதாகும்.
- IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் சிறுத்தையின் பாதுகாப்பு நிலை எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனமாகும்.
- 2018 ஆம் ஆண்டில் 12,852 ஆக இருந்த இந்தியாவின் சிறுத்தைகளின் எண்ணிக்கை 8% அதிகரித்து 2022 ஆம் ஆண்டில் 13,874 ஆக உயர்ந்துள்ளது.
- சுமார் 65% சிறுத்தைகள் ஷிவாலிக் நிலப்பரப்பில் உள்ள பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு வெளிப் புறங்களில் காணப்படுகின்றன.
- மத்தியப் பிரதேசத்தில் அதிக எண்ணிக்கையிலான சிறுத்தைகள் (3,907) உள்ளன என்ற நிலையில் அதைத் தொடர்ந்து மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் காணப்படுகின்றன.





## உலகத் தடகளத் தினம் - மே 07

- சர்வதேசத் தடகளக் கூட்டமைப்பு (IAAF) ஆனது, 1912 ஆம் ஆண்டு ஜூலை 17 ஆம் தேதியன்று சுவீடனின் ஸ்டாக்ஹோம் நகரில் நிறுவப்பட்டது.

- 2019 ஆம் ஆண்டு முதல், இந்த அமைப்பு உலகத் தடகளம் (World Athletics) என்று குறிப்பிடப் படுகிறது.
- முதல் உலகத் தடகளத் தினம் ஆனது 1996 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'World Mile Challenge' என்பதாகும்.


## உலக ஆஸ்துமா தினம் - மே 07

- ஒவ்வோர் ஆண்டும் மே மாதத்தின் முதல் செவ்வாய்க் கிழமையன்று உலக ஆஸ்துமா தினம் அனுசரிக்கப்படுகிறது.
- உலகளாவிய ஆஸ்துமா முன்னெடுப்பு (GINA) அமைப்பானது 1993 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- முதல் உலக ஆஸ்துமா தினம் ஆனது 1998 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- ஆஸ்துமாவால் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்த ஒரு விழிப்பு உணர்வை பரப்புவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Asthma Education Empowers" என்பது ஆகும்.




## ரவீந்திரநாத் தாகூர் ஜெயந்தி - மே 07

- 1861 ஆம் ஆண்டு மே 07 ஆம் தேதியன்று, ரவீந்திரநாத் தாகூர் கொல்கத்தாவில் உள்ள ஜோராசங்கோ தாகுர்பாரி எனுமிடத்தில் பிறந்தார்.
- இவர் கவிஞர், பாடலாசிரியர், நாடக ஆசிரியர், நாவலாசிரியர், எழுத்தாளர் மற்றும் தத்துவஞானி எனப் பன்முகம் கொண்டவர் ஆவார்.
- 1913 ஆம் ஆண்டில் இலக்கியத்திற்கான நோபல் பரிசைப் பெற்ற இவர் முதல் ஐரோப்பியர் அல்லாத நபர் ஆவார்.
- இந்தியா, வங்காளதேசம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கான தேசிய கீதங்களையும் அவர் எழுதியுள்ளார்.





## உலக கேலிச் சித்திர நிபுணர்கள் தினம் - மே 05

- உலகெங்கிலும் உள்ள கேலிச்சித்திர நிபுணர்களின் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பைக் கொண்டாடுவதற்காக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- தேசிய கேலிச்சித்திர நிபுணர்கள் சங்கம் (NCS) ஆனது 1946 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- "தி யெல்லோ கிட்" என்ற குறும்பு நிறைந்த கேலிச்சித்திரக் கதாபாத்திரத்தின் முதல் பிரசுரத்தை அங்கீகரிப்பதற்காக இந்தத் தேதி தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இது 1895 ஆம் ஆண்டு மே 05 ஆம் தேதியன்று நியூயார்க் உலகச் செய்தித்தாளில் வெளி வந்தது.



## BRO அமைப்பின் 65வது ஸ்தாபன தினம் - மே 07

- எல்லைப்புறச் சாலைகள் அமைப்பு ஆனது 1960 ஆம் ஆண்டு மே 07 ஆம் தேதியன்று நிறுவப் பட்டது.
- இது பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.
- எல்லைச் சாலைகள் அமைப்பு ஆனது உலகின் மிகவும் சவாலான மற்றும் வாழ்வதற்கு கடுமையான நிலப்பரப்புகளில் சாலைகள், பாலங்கள் மற்றும் சுரங்கப் பாதைகளை கட்டமைத்துப் பராமரிக்கும் அதன் அசைக்க முடியாத அர்ப்பணிப்பிற்காகப் புகழ் பெற்றது.
- இது ஒரு முதன்மையான உள்கட்டமைப்பு கட்டுமான நிறுவனமாக உருவெடுத்துள்ளது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "விரைவுபடுத்தப்பட்ட உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்" என்பதாகும்.





## உலகச் செஞ்சிலுவை மற்றும் செம்பிறை தினம் - மே 08

- சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறை இயக்கத்தின் மனிதாபிமானப் பணிகள் மற்றும் கொள்கைகளை மதிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது அனைத்தும் 1859 ஆம் ஆண்டில் சுவிஸ் தொழிலதிபரான ஹென்றி டுனான்ட் இத்தாலியில் நடைபெற்ற சோல்ஃபெரினோ போரின் பயங்கரத்தை எதிர்கொண்டதை அடுத்து தொடங்கியது.
- பெரும் உத்வேகம் பெற்ற டுனன்ட்டின் கருத்துக்கள், 1863 ஆம் ஆண்டில் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் (ICRC) உருவாவதற்கு வழி வகுத்தது.
- 1946 ஆம் ஆண்டில், ஹென்றி டுனான்ட்டின் பிறந்தநாளான மே 08 ஆம் தேதியினை செஞ்சிலுவைச் சங்கத்தை கௌரவிக்கும் தினமாகக் கொண்டாடுவதற்கான பெரும் கருத்தாக்கம் முன்வைக்கப்பட்டது.
- இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, முதல் உலகச் செஞ்சிலுவை தினம் கொண்டாடப் பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "I give with joy, and the joy I give is a reward" என்பதாகும்.

## உலக இரத்த அழிவுச் சோகை நோய் தினம் - மே 08

- இந்த நோயைப் பற்றிய தவறான எண்ணங்களை நீக்கி, மேம்படுத்தப்பட்ட சிகிச்சை மற்றும் பராமரிப்புத் தேர்வுகளை நோக்கிய மேம்பட்ட ஆராய்ச்சிக்கு ஆதரவளிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தலசீமியா (இரத்த அழிவுச் சோகை நோய்) என்பது ஹீமோகுளோபின் அளவு குறைவாகவும், இயல்பு நிலையுடன் ஒப்பிடும் போது அது இரத்த சிவப்பணுக்களின் எண்ணிக்கை குறைவாக காணப்படும் ஒரு மரபுவழிக் கோளாறாகும்.
- ஹீமோகுளோபின் என்பது ஆக்ஸிஜனைக் சுமந்து செல்வதற்குக் காரணமான புரதம் ஆகும்.
- இந்த நாள் சர்வதேச தலசீமியா கூட்டமைப்பினால் (TIF) 1994 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Empowering Lives, Embracing Progress: Equitable and Accessible Thalassemia Treatment for All" என்பதாகும்.




## உலக இடம்பெயரும் பறவைகள் தினம் - மே 11

- இந்த நாள் ஒவ்வோர் ஆண்டும் மே மற்றும் அக்டோபர் மாதங்களில் கொண்டாடப் படுகிறது.
- இந்த ஆண்டு, புவியின் வெவ்வேறு அரைக்கோளங்களில் பறவைகள் வலசை போகும் போக்கில் நிலவும் மாறுபட்ட சுழற்சி முறைகள் காரணமாக, இது மே 11 மற்றும் அக்டோபர் 12 ஆகிய தேதிகளில் அனுசரிக்கப்படுகிறது.
- இது வலசை போகும் பறவைகள் மற்றும் அவற்றின் வாழ்விடங்களைப் பாதுகாப்பதன் அவசியத்தை எடுத்துரைப்பதற்காக ஆண்டுதோறும் நடத்தப்படும் ஒரு விழிப்புணர்வு பிரச்சாரமாகும்.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'Protect Insects, Protect Birds' என்பதாகும்.





## மகா ராணா பிரதாப் ஜெயந்தி - மே 09


- ஜூலியன் நாட்காட்டியின்படி, மகா ராணா பிரதாப் அவர்கள், 1540 ஆம் ஆண்டு மே 09 ஆம் தேதியன்று பிறந்தார்.
- மஹாராணா பிரதாப் ராஜஸ்தானின் மேவார் பகுதியை ஆட்சி செய்த ஒரு இந்து இராஜபுத்திர அரசர் ஆவார்.
- இராஜபுத்திரர்களின் சிசோடியா குலத்தைச் சேர்ந்த இவர், இந்நாட்டை ஆட்சி செய்த மரியாதைக்குரிய மன்னர்களில் ஒருவராக அறியப்படுகிறார்.
- முகலாயப் பேரரசர் அக்பருக்கு எதிராகப் போரிட்ட ஹல்திகட்டி போரில் அவர் புகழ் பெற்றார்.
- 1597 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், மகா ராணா பிரதாப் நிறைய காயங்கள் பட்டு, ஜனவரி 29 ஆம் தேதியன்று உயிரிழந்தார்.

## உலக தோல் அழிவு நோய் தினம் - மே 10

- உலகெங்கிலும் உள்ள, இந்தப் பலவீனப்படுத்தும் நோயால் பாதிக்கப்பட்டு உடல் முழுவதும் பல்வேறு அறிகுறிகளுடன் போராடுபவர்களுக்காக இந்த நாள் அனுசரிக்கப் படுகிறது.
- லூபஸ் (தோல் அழிவு நோய்) என்பது ஒரு தன்னுடல் தாக்க நோயாகும் என்பதோடு இந்த பாதிப்பில் நமது உடலின் நோயெதிர்ப்பு அமைப்பானது நமது உடலின் திசுக்கள் மற்றும் உறுப்புகளைத் தாக்குகிறது.
- இந்த வீக்கம் மூட்டுகள், தோல், சிறுநீரகங்கள், இரத்த அணுக்கள், மூளை, இதயம் மற்றும் நுரையீரல் ஆகியவற்றினைப் பாதிக்கும்.
- உலகளவில் சுமார் 5 மில்லியன் மக்கள் தோல் அழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களில் 1.5 மில்லியன் பேர் அமெரிக்காவில் மட்டும் வாழ்கின்றனர்.




## தேசியத் தொழில்நுட்பத் தினம் - மே 11




- இந்த தினமானது 1998 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான அணுகுண்டு சோதனையை நினைவு கூருகிறது.
- இந்திய ராணுவமானது, ராஜஸ்தானில் பொக்ரான் II என்ற பெயரில் ஐந்து அணுகுண்டு சோதனைகளை நடத்தியது.
- இந்தியாவின் ஏவுகணை நாயகன் என்றழைக்கப்படும் டாக்டர் APJ அப்துல் கலாம் அவர்களின் தலைமையில் இந்தச் சோதனைகள் நடத்தப்பட்டன.
- பொக்ரான் II சோதனையின் மாபெரும் வெற்றிக்குப் பிறகு, உலகின் ஆறாவது அணுசக்தி நாடாக இந்தியா அறிவிக்கப்பட்டது.
- அடுத்த ஆண்டு, 1999 ஆம் ஆண்டு மே 11 ஆம் தேதியன்று, தொழில்நுட்பச் சபையானது தேசியத் தொழில்நுட்பத் தினத்தின் தொடக்க விழாவை ஏற்பாடு செய்தது.

## சர்வதேச செவிலியர் தினம் - மே 12

- இந்த நாள் நவீன செவிலியர் பணிகளுக்கு அடித்தளமிட்ட புளோரன்ஸ் நைட்டிங்கேலின் பிறந்த நாளைக் குறிக்கிறது.
- சர்வதேச செவிலியர் தினம் சுகாதாரத் துறையில் செவிலியர்களின் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது நோயாளிகளை கவனித்துக் கொள்வதற்காக என்று 24 மணி நேரமும் செயல்படும் செவிலியர்களின் முயற்சிகளுக்கு நன்றி தெரிவிக்கும் வாய்ப்பாகவும் உள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்கான கருத்துரு 'நமது செவிலியர்கள். நமது எதிர்காலம். கவனிப்பின் பொருளாதாரச் சக்தி' என்பதாகும்.

## சர்வதேச குடும்ப தினம் - மே 15




- இந்த நாள் குடும்ப நல்வாழ்வை ஊக்குவிக்கிறது மற்றும் குடும்பங்களைப் பாதிக்கும் சமூக, பொருளாதார மற்றும் மக்கள்தொகை மாற்றங்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபை (UNGA) 1993 ஆம் ஆண்டில், இந்த நாளைக் குடும்பம் தொடர்பான பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த நிறுவியது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு: 'குடும்பங்கள் மற்றும் காலநிலை மாற்றம்' என்பதாகும்.

## தேசிய டெங்கு தினம் - மே 16

- இது நோயின் பரவல், தடுப்பு மற்றும் சிகிச்சை குறித்த ஒரு பொது விழிப்புணர்வை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- டெங்கு (Den-gee) என்பது ஏடிஸ் இனத்தின் (ஏடிஸ் ஈஜிப்டி) பாதிக்கப்பட்டப் பெண் கொசுக்கள் கடிப்பதன் மூலம் மனிதர்களுக்கு நோய் தொற்றுக் கிருமிகளால் பரவும் ஒரு வைரஸ் நோயாகும்.
- டெங்கு வைரஸ் நான்கு தனித்துவமான குருதி நுண்ணுயிர் வகைகளை (டென்-1, டென்-2, டென்-3 மற்றும் டென்-4) கொண்டுள்ளது.

- 2023 ஆம் ஆண்டில், டெங்கு காய்ச்சலால் சுமார் தொண்ணூற்று நான்காயிரம் பாதிப்புகள் மற்றும் தொண்ணூற்றொரு இறப்புகள் பதிவாகியுள்ளன.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு "டெங்கு தடுப்பு: நாளையப் பாதுகாப்பு நமது பொறுப்பு" என்பதாகும்.




## சர்வதேச ஒளி தினம் - மே 16

- இது நமது சமூகம் மற்றும் நமது அன்றாட வாழ்வின் பல்வேறு அம்சங்களைப் புரட்சி கரமாக்குவதில் ஒளி மற்றும் ஒளி சார்ந்தத் தொழில்நுட்பங்களின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1960 ஆம் ஆண்டில் இயற்பியலாளரும், பொறியியலாளருமான தியோடர் மைமனால் பரிசோதிக்கப் பட்ட லேசரின் முதல் வெற்றிகரமான இயக்கத்தை இந்த நாள் நினைவு கூருகிறது.
- இந்த வருடத்தின் கருத்துரு 'நம் வாழ்வில் ஒளி' என்பதாகும்.

## உலக தொலைத் தொடர்பு தினம் - மே 17

- இந்தத் தினமானது சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் நிறுவப்பட்டதை நினைவு கூருவதற்காகவும், 1865 ஆம் ஆண்டில் முதல் சர்வதேச தந்தி உடன்படிக்கையானது கையெழுத்திடப்பட்டதையும் நினைவு கூரும் விதமாகவும் அனுசரிக்கப் படுகிறது.
- இணையம் மற்றும் பிற தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்கள் (ICTகள்) சமூகம் மற்றும் பொருளாதாரங்களுக்கு வழங்கக்கூடிய நன்மைகள் பற்றிய விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் உலகத் தகவல் சமூக தினம் என்றும் அழைக்கப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான கருத்துருவானது "நிலையான மேம்பாட்டிற்கான எண்ணிமப் புத்தாக்கம்" என்பதாகும்.


## ஹோமோஃபோபியா, பைபோபியா மற்றும் டிரான்ஸ்ஃபோபியாவுக்கு எதிரான சர்வதேச தினம் - மே 17

- ❖ இந்தத் தினமானது பாலியல் மற்றும் பாலினப் பன்முகத்தன்மையின் மீதானப் பெரும் கொண்டாட்டத்தினைக் குறிக்கிறது.
- ❖ ஓரினச்சேர்க்கை அல்லது ஓரினச்சேர்க்கையாளர்களுக்கு எதிரான பகுத்தறிவற்ற பயம், வெறுப்பு அல்லது பாகுபாடு ஆகியவை ஓரினச் சேர்க்கையாளர்கள் மீதான வெறுப்பு என்று பொருளாகும்.
- ❖ பைபோபியா என்பது இருபால் அல்லது இருபாலினராக அடையாளம் காணப்பட்ட அல்லது உணரப்பட்ட நபர்களின் மீதான வெறுப்பினைக் குறிக்கிறது.
- ❖ அடிப்படையில் டிரான்ஸ்ஃபோபியா என்பது, திருநர்கள் மீதான பயம் அல்லது வெறுப்பின் வெளிப்பாட்டைக் குறிக்கிறது.
- ❖ இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கொண்டாட்டத்தின் கருத்துரு: "No one left behind: equality, freedom, and justice for all" என்பதாகும்.

## உலக உயர் இரத்த அழுத்த தினம் - மே 17

- ❖ உயர் இரத்த அழுத்தத்தைத் தடுத்தல், கண்டறிதல் மற்றும் சிகிச்சை அளிப்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ உயர் இரத்த அழுத்தம் ஆனது இருதய நோய்களை உருவாக்கச் செய்வதற்கான ஒரு முதன்மையான காரணியாகும்.
- ❖ இத்தினமானது 2005 ஆம் ஆண்டு மே 14 ஆம் தேதியன்று உலக உயர் இரத்த அழுத்தக் கழகத்தினால் (WHL) தொடங்கப்பட்டது.
- ❖ 2006 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் மே 17 ஆம் தேதியானது உலக உயர் இரத்த அழுத்த தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- ❖ இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, " Measure Your Blood Pressure Accurately, Control It, Live Longer!" என்பதாகும்.

## உலக எய்ட்ஸ் தடுப்பூசி தினம் - மே 18



- எச்.ஐ.வி தொற்று மற்றும் எய்ட்ஸ் நோயைத் தடுப்பதற்கான தடுப்பூசியின் அவசரத் தேவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான உலகளாவிய முயற்சியாக இது செயல்படுகிறது.
- 1997 ஆம் ஆண்டு மே 18 ஆம் தேதியன்று அப்போதைய அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் அவர்கள் ஆற்றிய உரையின் ஆண்டு நிறைவினை இந்தத் தினம் நினைவு கூருகிறது.
- முதல் உலக எய்ட்ஸ் தடுப்பூசி தினம் ஆனது 1998 ஆம் ஆண்டு மே 18 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்டது.

## சர்வதேச அருங்காட்சியக தினம் - மே 18

- இது அருங்காட்சியகங்கள் பற்றிய ஒரு பொது விழிப்புணர்வை ஏற்படுத்துவதை பெரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முதலாவது சர்வதேச அருங்காட்சியக தினம் ஆனது 1977 ஆம் ஆண்டில் சர்வதேச அருங்காட்சியகச் சபையினால் (ICOM) ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான அருங்காட்சியகங்கள்" என்பதாகும்.

## உலக அளவியல் தினம் - மே 20




- இந்த நாள் என்பது 1875 ஆம் ஆண்டு மே 20 ஆம் தேதியன்று மீட்டர் உடன்படிக்கை கையெழுத்தானதை நினைவு கூர்கிறது.
- அளவியல் என்பது அளவீடு பற்றிய அறிவியல் ஆய்வு ஆகும்.
- இந்த உடன்படிக்கை மூலம், சர்வதேச எடைகள் மற்றும் அளவீடுகள் வாரியம் (BIPM) நிறுவப் பட்டது.
- BIPM என்பது தரப்படுத்தப்பட்ட அளவீட்டு முறையின் பயன்பாட்டை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்தும் ஓர் அமைப்பாகும்.

- இது நிலையான எடை அலகு ஆக சர்வதேச கிலோகிராம் முன்மாதிரி (IPK) உருவாக்க வழிவகுத்தது.
- சர்வதேச மீட்டர் முன்மாதிரி ஆனது நீளத்தின் நிலையான அலகாகத் தேர்ந்தெடுக்கப் பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, நிலைத்தன்மை என்பதாகும்

## சர்வதேச வானியல் தினம் - மே 18

- இது பேரண்டத்தின் பெரும் முக்கியத்துவத்தினை மதித்துக் கொண்டாடுவதற்காக அனுசரிக்கப் படுகிறது.
- விண்வெளியில் நிகழும் நிகழ்வுகளைக் கவனிப்பதற்காக ஆண்டுக்கு இருமுறை இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- 2024 ஆம் ஆண்டில், இது வசந்த காலத்தில் மே 18 ஆம் தேதியன்றும், இலையுதிர் காலத்தில் அக்டோபர் 12 ஆம் தேதியன்றும் அனுசரிக்கப்படும்.
- இந்த நாள் 1973 ஆம் ஆண்டில் வடக்கு கலிபோர்னியாவின் வானியல் சங்கத்தின் தலைவராக இருந்த டக் பெர்கர் என்பவரால் தொடங்கப்பட்டது.




## உலக தேனீ தினம் - மே 20

- மகரந்தச் சேர்க்கையின் முக்கியத்துவம், அவை எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் மற்றும் நிலையான மேம்பாட்டிற்கு அவற்றின் பங்களிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபை இத்தினத்தினை நிர்ணயித்தது.
- இந்த தேதியானது அன்டன் ஜான்சாவின் (1734-1773) பிறந்த நாளுடன் ஒத்துப் போகிறது.
- அவர் 18 ஆம் நூற்றாண்டில் தனது சொந்த நாடான ஸ்லோவேனியாவில் நவீன தேனீ வளர்ப்பு நுட்பங்களை அறிமுகம் செய்து முன்னோடியாக விளங்கினார் என்பதோடு இவர் வியன்னாவின் அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தேனீ வளர்ப்பு ஆசிரியராகவும் இருந்தவர் ஆவார்.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Bee Engaged with Youth" என்பதாகும்.

## தேசிய தீவிரவாத எதிர்ப்பு தினம் - மே 21

- சமூகத்தில் தீவிரவாதம் மற்றும் வன்முறை ஆகியவற்றின் தீய விளைவுகள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் ஆறாவது பிரதமரான முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்களின் நினைவு தினம் ஆனது ஒவ்வோர் ஆண்டும் இத்தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- அவர் 1991 ஆம் ஆண்டு மே 21 ஆம் தேதியன்று ஸ்ரீபெரும்புதூரில் நிகழ்ந்த தற்கொலை தாக்குதலால் படுகொலை செய்யப்பட்டார்.




## உலகப் பேச்சுவார்த்தை மற்றும் மேம்பாட்டிற்கான கலாச்சாரப் பன்முகத்தன்மை தினம் - மே 21

- பல்வேறு தேசங்கள், பிரதேசங்கள் மற்றும் மக்கள் ஆகிய பல்வேறு கலாச்சாரங்களுக்கு இடையே உள்ள இடைவெளியைக் குறைக்க வேண்டி மக்களை ஊக்குவிப்பதே இந்த நாளின் குறிக்கோள் ஆகும்.
- 2001 ஆம் ஆண்டில், யுனெஸ்கோ அமைப்பானது கலாச்சாரப் பன்முகத்தன்மை குறித்த உலகளாவியப் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டது.
- இது முதன்முதலில் 2002 ஆம் ஆண்டில் கொண்டாடப் பட்டது.
- கலாச்சாரம் மற்றும் படைப்பாற்றல் துறையானது உலகளவில் 48 மில்லியனுக்கும் அதிகமான வேலைவாய்ப்புகளைக் கொண்டுள்ளது என்ற நிலையில் அதில் சுமார் பாதியளவு பெண்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.
- இது தற்போதுள்ள அனைத்து வேலைவாய்ப்பில் 6.2% மற்றும் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.1% ஆகும்.
- 30 வயதுக்குட்பட்ட அதிக எண்ணிக்கையிலான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் வாய்ப்புகளை வழங்கும் துறையாக இது உள்ளது.




## சர்வதேச உயிரியல் பன்முகத் தன்மை தினம் - மே 22

- இது 1993 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் இரண்டாவது குழுவால் நிறுவப் பட்டது.
- முதலில், உயிரியல் பன்முகத்தன்மை தொடர்பான உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த தினத்தைக் குறிக்கும் வகையில் டிசம்பர் 29 ஆம் தேதியன்று இந்தத் தினம் கொண்டாடப் பட்டது.
- இருப்பினும், 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 20 ஆம் தேதியன்று, 1992 ஆம் ஆண்டில் ரியோ டி ஜெனிரோ புவி உச்சி மாநாட்டில் இந்த உடன்படிக்கை ஏற்றுக் கொள்ளப் பட்டதன் நினைவாக மே 22 ஆம் தேதியன்று இத்தினம் மாற்றப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Be Part of the Plan" என்பதாகும்.

## மகப்பேறின் போது பிறப்புறுப்பில் ஏற்படும் காயத்தினைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் - மே 23

- இது தாய் மற்றும் புதிதாகப் பிறந்த பச்சிளம் குழந்தைகளின் ஆரோக்கியத்தை நன்கு மேம்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும் வளர்ச்சியடைந்த நாடுகளைப் போலவே வளர்ந்து வரும் நாடுகளில் மகப்பேறின் போது பிறப்புறுப்பில் ஏற்படும் காயத்தினை அரிதான ஒன்றாக மாற்றும் நோக்கத்துடன் அனுசரிக்கப் படுகிறது.
- மகப்பேறின் போது பிறப்புறுப்பில் ஏற்படும் காயம் என்பது பிரசவத்தின் போது ஏற்படக் கூடிய மிகவும் தீவிரமான மற்றும் மோசமான காயங்களில் ஒன்றாகும்.
- இது சரியான நேரத்தில், உயர்தர மருத்துவச் சிகிச்சையை அணுகாமல் நீண்ட நேரம் நீடித்த, தடைப்பட்ட பிரசவத்தினால் பிறப்புப் பாதை மற்றும் சிறுநீர்ப்பை அல்லது மலக்குடல் ஆகியவற்றுக்கு இடையே ஏற்படுகிற ஒரு துளை ஆகும்.
- ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதியில், ஆசியா, அரபு பிராந்தியம் மற்றும் இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளில் சுமார் 2 மில்லியன் பெண்கள் இந்தக் காயத்துடன் வாழ்கின்றனர்.
- ஒவ்வோர் ஆண்டும் உலகளவில் 50,000 முதல் 100,000 புதிய பாதிப்புகள் உருவாகின்றன.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Breaking the Cycle: Preventing Fistula Worldwide" என்பதாகும்.




## உலக கடலாமைகள் தினம் - மே 23

- கடலாமைகள் மற்றும் நில ஆமைகளின் வாழ்க்கை முறை மற்றும் வாழ்விடம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது மற்றும் அது குறித்து நல்ல புரிதலுடன் அவற்றின் நல்வாழ்வுக்கு பங்களிக்கும் படி மக்களைத் தூண்டச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 2000 ஆம் ஆண்டு அமெரிக்க நில ஆமை மீட்பு நிறுவனத்தால் கடலாமைகள் மற்றும் நில ஆமைகளைப் பற்றி நன்றாகப் புரிந்து கொள்ள மக்கள் ஒன்று கூடுமாறு வலியுறுத்தும் விதமாகத் தொடங்கப்பட்டது.
- சில சமயங்களில் அவை ஒன்றையொன்று தவறாகக் கருதப்பட்டாலும், கடலாமைகள் மற்றும் நில ஆமைகள் ஆகிய இரண்டும் வெவ்வேறு உயிரினங்கள் ஆகும்.
- அண்டார்டிகாவைத் தவிர, பிற பகுதிகளில் காணப்படும் கடலாமைகள் சிறந்த தகவமைப்பு உடையவை என்பதோடு அவை எல்லா கண்டங்களிலும் காணப் படுகின்றன.
- தென்கிழக்கு வட அமெரிக்கா மற்றும் தெற்காசியாவில் பெரும்பாலான கடலாமை இனங்கள் உள்ளன.



## கடல்சார் பணிகளில் பெண்களுக்கான சர்வதேச தினம் - மே 18


- இந்த வருடாந்திர நிகழ்வானது, ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச கடல்சார் அமைப்பினால் (IMO) தொடங்கப்பட்டது.
- இந்தத் தொழில் துறையில் பெண்களின் பங்களிப்பை முன்னிலைப்படுத்துவதும், பெண்களை அதிக அளவில் சேர்க்கும் முயற்சிகளை வலியுறுத்துவதுமே இந்த நாளின் நோக்கமாகும்.
- இந்தத் தொழில் துறையானது முழு கடற்கரையிலும் மதிப்பு உருவாக்கம் மற்றும் வேலை வாய்ப்பினை உறுதி செய்கின்ற கப்பல் நிறுவனங்கள், கப்பல் கட்டும் தளங்கள், உபகரணங்கள் மற்றும் சேவை வழங்குநர்களை உள்ளடக்கியது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Safe Horizons: Women Shaping the Future of Maritime Safety" என்பதாகும்.

## காமன்வெல்த் தினம் - மே 24

- காமன்வெல்த் உறுப்பினர் நாடுகளிடையே பொதுவான வரலாறு, பன்முகத்தன்மை மற்றும் பகிரப்பட்ட மதிப்புகளை நினைவுபடுத்துவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- காமன்வெல்த் தினமானது முதலில் மே 24 ஆம் தேதியன்று (விக்டோரியா மகா ராணியின் பிறந்தநாள்) கொண்டாடப்பட்டது.
- ஆனால் காலனித்துவ அகற்றம் மற்றும் பிற காரணிகளால், அது பின்னர் மார்ச் மாதத்தின் இரண்டாவது திங்கட்கிழமைக்கு மாற்றப்பட்டது.
- ஐக்கியப் பேரரசு, ஆஸ்திரேலியா மற்றும் கனடா ஆகிய நாடுகள் மார்ச் மாதத்தின் 2வது திங்கட்கிழமையன்று இத்தினத்தினைக் கொண்டாடுகின்றன.
- மே 24 ஆம் தேதியன்று, இந்திய நாடானது பெலிஸ் போன்ற நாடுகளுடன் சேர்ந்து இந்தத் தினத்தினைக் கொண்டாடுகிறது.
- இந்தியா காமன்வெல்த் அமைப்பின் மிகப்பெரிய உறுப்பினர் நாடாகும் என்பதோடு இந்த சங்கத்தின் மொத்த மக்கள் தொகையில் சுமார் 60% பங்கினைக் கொண்டுள்ளது.

## ஆப்பிரிக்க தினம் - மே 25

- இது 1963 ஆம் ஆண்டு இந்நாளில் ஆப்பிரிக்க ஒன்றிய அமைப்பு (தற்போது ஆப்பிரிக்க ஒன்றியம்) நிறுவப்பட்டதை நினைவுகூருகிறது.
- இது அதிகாரப்பூர்வமாக ஆப்பிரிக்கச் சுதந்திர தினம் என்றும் பின்னர் ஆப்பிரிக்க விடுதலை நாள் என்றும் அழைக்கப்படுகிறது.
- இது காலனித்துவம் மற்றும் பொருளாதாரச் சுரண்டலுக்கு எதிரான கூட்டு ஆப்பிரிக்க எதிர்ப்பின் மூலம் உருவானது.
- ஆப்பிரிக்க ஒன்றியம் இன்று 1.2 பில்லியன் மக்களைக் கொண்ட இயக்கமிக்க கண்டமாக தன்னைப் பிரதிநிதித்துவப்படுத்த முயல்கிறது.




## சர்வதேச மார்கோர் தினம் - மே 24

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது மே 24 ஆம் தேதியை சர்வதேச மார்கோர் (திருகு கொம்பு காட்டு ஆடு) தினமாக அறிவித்தது என்பதோடு அது 2024 ஆம் ஆண்டில் முதல் முறையாக கொண்டாடப் பட்டது.
- மார்க்கோர் (காப்ரா ஃபால்கோனேரி) என்பது மத்திய மற்றும் தெற்காசியாவின் மலைப் பகுதிகளில் காணப்படும் ஒரு மரபார்ந்த மற்றும் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த இனமாகும்.
- ஆப்கானிஸ்தான், இந்தியா, பாகிஸ்தான், தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் உள்ளிட்ட பகுதிகளில் இவை காணப்படுகின்றன.
- IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் "அச்சுறுத்தல் நிலையினை அண்மித்த உயிர் இனமாக" மார்க்கோர் வகைப்படுத்தப்பட்டுள்ளது.




## உலக மனப்பித்து நோய் விழிப்புணர்வு தினம் - மே 24




- ஸ்கிசோஃப்ரினியா (மனப்பித்து) நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் எதிர்கொள்ளும் சவால்கள் மீது உலகளாவிய கவனத்தைக் கொண்டு வருவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பிரெஞ்சு மருத்துவர் டாக்டர் பிலிப் பினெலின் நினைவாக மே 24 ஆம் தேதியானது இத்தினத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டது.
- மனநோயாளிகளுக்கு மனிதாபிமானமிக்க சிகிச்சை வழங்கியதில் இவர் ஒரு பெரும் முன்னோடியாகக் கருதப்படுகிறார்.
- ஒரு நபரின் சிந்தித்தல், உணர்தல் மற்றும் தெளிவாக நடந்துகொள்ளும் திறனை பாதிக்கிற ஸ்கிசோஃப்ரினியா என்பது ஒரு கடுமையான மனநலக் கோளாறு ஆகும்.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Celebrating the Power of Community Kindness" என்பதாகும்.


## காணாமல் போன குழந்தைகளுக்கான சர்வதேச தினம் – மே 25

- காணாமல் போன குழந்தைகளின் அவல நிலையைக் கண்டறிதல், விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் குடும்பங்களை மீண்டும் ஒன்றிணைக்கும் முயற்சிகளை வலுப்படுத்துதல் ஆகியவற்றை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1979 ஆம் ஆண்டு மே 25 ஆம் தேதியன்று நியூயார்க் நகரில் 6 வயது ஈடன் பாட்ஸ் பள்ளிக்குச் செல்லும் போது பேருந்தில் இருந்து கடத்தப்பட்ட வழக்கினைத் தொடர்ந்து இது குறித்த கருத்தாக்கம் தொடங்கியது.
- 1983 ஆம் ஆண்டில், அமெரிக்க அதிபர் ரொனால்ட் ரீகன் ஆண்டுதோறும் எண்ணற்ற குழந்தைகள் காணாமல் போகும் நிலையை அடையாளம் கண்டு சரி செய்வதற்காக தேசிய காணாமல் போன குழந்தைகள் தினத்தை அறிவித்தார்.
- தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) சமீபத்தியத் தரவுகளின்படி இந்தியாவில் 47,313க்கும் மேற்பட்ட குழந்தைகள் காணாமல் போயுள்ள நிலையில் இவர்களில் 71.4 சதவீதம் பேர் 18 வயதினை எட்டாத இளம் சிறுமிகள் ஆவர்.
- 2022 ஆம் ஆண்டிற்கான தரவுகள் மேற்கு வங்காளத்தில் அதிக எண்ணிக்கையிலான குழந்தைகள் - 12,455 (1,884 சிறுவர்கள் மற்றும் 10,571 சிறுமிகள்) – காணாமல் போய் உள்ளதைக் காட்டுகிறது.




## சுய-ஆட்சி அல்லாத பிரதேசங்களின் மக்களுடனான சர்வதேச ஒற்றுமைக்கான வாரம் - மே 25 - 31

- ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தில், சுய-ஆட்சி அல்லாத பிரதேசம் என்பது "இன்றும் முழு அளவிலான சுய ஆட்சியினை அடையாத மக்கள்" என வரையறுக்கப் படுகிறது.
- 1946 ஆம் ஆண்டில், ஐநாவின் எட்டு உறுப்பினர் நாடுகள் தங்கள் நிர்வாகத்தின் கீழ் உள்ள 72 பிரதேசங்களை சுய-ஆட்சி இல்லாதவை என்று கருதுவதாகப் பட்டியலிட்டன.
- 1959 ஆம் ஆண்டிற்கு முன் எட்டு பிரதேசங்கள் சுய ஆட்சிப் பெற்றன.
- 1963 ஆம் ஆண்டில், 1960 ஆம் ஆண்டு காலனியாக்க விலக்கம் குறித்த பிரகடனம் பொருந்தக் கூடிய 64 பிரதேசங்களின் திருத்தப்பட்டப் பட்டியலுக்கு சட்டமன்றம் தனது ஒப்புதல் அளித்தது.
- 1960 முதல் 2002 ஆம் ஆண்டு வரை, 54 பிரதேசங்கள் சுய ஆட்சியினை அடைந்தன.
- தற்போது, 17 சுய ஆட்சியற்றப் பிரதேசங்களே மீதமுள்ளன.



## உலக கால்பந்து தினம் 2024 - மே 25

- 1924 ஆம் ஆண்டு மே 25 ஆம் தேதியன்று, 1924 ஆம் ஆண்டு பாரீஸ் கோடைக் கால ஒலிம்பிக் கால்பந்து போட்டியில் உலகின் அனைத்து நாடுகளின் அணிகளும் பங்கேற்றன.
- 1924 ஆம் ஆண்டு கால்பந்துப் போட்டியின் 100வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இந்த ஆண்டு பாரீஸ் நகரில் கோடைக் கால ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது.
- 1902 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட FIFA கூட்டமைப்பானது மிகவும் படிப்படியாக உலகக் கால்பந்தின் நிர்வாக அமைப்பாக மாறியது.
- FIFA கூட்டமைப்பில் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர் எண்ணிக்கையினை விட அதிகமாக 211 உறுப்பினர் நாடுகள் உள்ளன.
- 1900 ஆம் ஆண்டு பாரீஸ் கோடைக் கால ஒலிம்பிக் போட்டியில் கால்பந்து அறிமுகப் படுத்தப் பட்டது.
- மகளிர் கால்பந்துப் போட்டியானது, 1996 ஆம் ஆண்டு அட்லாண்டா கோடைக் கால ஒலிம்பிக் போட்டியில் அறிமுகப்படுத்தப்பட்டது.

## சர்வதேசப் பெண்களின் ஆரோக்கியத்திற்கான நடவடிக்கை தினம் - மே 28

- இது பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் மற்றும் உரிமைகள் மற்றும் பெண்களுக்கான நீதி வழங்குவதற்கான கோரிக்கையை எழுப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1987 ஆம் ஆண்டு கோஸ்டாரிகாவில் நடைபெற்ற மகளிர் சுகாதாரக் கூட்டத்தின் போது, இலத்தீன் அமெரிக்க மற்றும் கரீபியன் மகளிர் சுகாதார வலையமைப்பு (LACWHN) இந்த நாளை அனுசரிப்பதற்கான முன்மொழிவினை முன் வைத்தது.
- இந்தப் பிரச்சாரம் ஆனது வரலாற்று ரீதியாக மிகவும் பல ஆண்டுகளாக பெண்களின் சுகாதாரப் பாதுகாப்பு, வறுமை, கருக்கலைப்பு, எச்.ஐ.வி/எய்ட்ஸ், கருத்தடை மற்றும் அவற்றின் மீதான அரசாங்கப் பொறுப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.



## உலகப் பட்டினி தினம் - மே 28

- உலகப் பட்டினி தினம் ஆனது 2011 ஆம் ஆண்டில் தி ஹங்கர் பிராஜக்ட் என்ற ஒரு அமைப்பினால் நிறுவப்பட்டது.
- இந்த உலகளாவிய முன்னெடுப்பானது, நாள்பட்ட பட்டினியால் அவதிப்படும் கோடிக் கணக்கான மக்களைப் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலகில் 783 மில்லியன் மக்கள் பட்டினி நிலையை எதிர்கொள்கின்றனர்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'Thriving Mothers. Thriving World' என்பதாகும்.

## ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படை வீரர்களுக்கான சர்வதேச தினம் - மே 29

- 1948 ஆம் ஆண்டில் "ஐக்கிய நாடுகள் சபையின் படைப்பிரிவு மேற்பார்வை அமைப்பு" அல்லது UNTSO என பெயரிடப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படை யானது பாலஸ்தீனத்தில் செயல்படத் தொடங்கிய தேதி இதுவாகும்.
- இந்த நாளில், ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காப்பு நடவடிக்கைகளில் பெரும் பணியாற்றும் அனைத்து ஆடவர் மற்றும் மகளிரின் தொழில்முறை, அர்ப்பணிப்பு மற்றும் தைரியத்திற்குக் கௌரமளிக்கும் விதமாகவும், அமைதிக்காக வேண்டி உயிர் நீத்தவர்களின் நினைவை போற்றும் விதமாகவும் இத்தினம் அனுசரிக்கப் படுகிறது.
- வன்முறை, விபத்துக்கள் மற்றும் நோய்களின் விளைவாக இன்று வரை 3,900 ராணுவம், காவல்துறை மற்றும் பொதுமக்கள் அமைதி காப்புப் பணியில் தங்கள் உயிர்களை இழந்துள்ளனர்.
- ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காப்புப் படையினர் பலதரப்பட்டக் கலாசாரப் பின்னணிகளைக் கொண்டும், தொடர்ந்து வளர்ச்சியடைந்து வரும் உறுப்பினர் நாடுகளையும் சார்ந்தவர்கள் ஆவர்.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Fit for the Future: Building Better Together" என்பதாகும்.

## சர்வதேச எவரெஸ்ட் சிகர தினம் – மே 29

- 1953 ஆம் ஆண்டில் நியூசிலாந்து நாட்டினைச் சேர்ந்த சர் எட்மண்ட் ஹிலாரி மற்றும் நேபாளத்தைச் சேர்ந்த டென்சிங் நோர்கே ஆகியோர் எவரெஸ்ட் சிகரத்தின் மீது ஏறிய முதல் சாதனையினை இந்த நாள் நினைவுகூருகிறது.
- எட்மண்ட் ஹிலாரி இறந்த 2008 ஆம் ஆண்டில் இந்த நாள் நிறுவப்பட்டது.
- எவரெஸ்ட் சிகரம் இமயமலையின் ஒரு முக்கியப் பகுதியான மஹாலங்கூர் ஹிமால் உள் மலைத்தொடரில் அமைந்துள்ளது.
- சீன-நேபாள எல்லையானது 8,848.86 மீட்டர் உயரத்தில் உள்ள எவரெஸ்ட் சிகரத்தின் மிக உயரமான இடத்தின் வழியாக கடப்பதாக பொதுவாக ஒப்புக் கொள்ளப் படுகிறது.





## உலக செரிமான ஆரோக்கிய தினம் - மே 29

- செரிமான பிரச்சனைகளைத் தடுப்பதையும், அதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது முதன்முதலில் 2005 ஆம் ஆண்டில் உலக இரைப்பைக் குடலியல் அமைப்பினால் (WGO) தொடங்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Your Digestive Health: Make It a Priority" என்பதாகும்.

## உலக தைராய்டு தினம் - மே 25

- தைராய்டு சுரப்பியின் முக்கியத்துவத்தைப் பற்றியும், தைராய்டு நோய் உள்ளவர்கள் முறையாகக் கண்டறியப்பட்டு, சிகிச்சை வசதிகளைப் பெறுவதையும் நாம் எவ்வாறு உறுதி செய்வது என்பதைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த நாள் ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1965 ஆம் ஆண்டு மே 25 ஆம் தேதியன்று, ஐரோப்பிய தைராய்டு சங்கம் நிறுவப்பட்டது.
- இந்த அமைப்பு தான் உலக தைராய்டு தினத்தை முதலில் அங்கீகரித்தது.
- கழுத்தின் அடிப்பகுதியில் அமைந்துள்ள ஒரு சிறிய சுரப்பியான தைராய்டு சுரப்பி என்பது தைராக்ஸின் மற்றும் ட்ரையோடோதைரோனைன் ஆகிய இரண்டு முக்கிய ஹார்மோன்களை உற்பத்தி செய்கிறது.
- குறைவான மற்றும் அதிகப்படியான அயோடின் காணப்படும் இரண்டு நிலைகளிலும் முறையே ஹைப்போ தைராய்டிசம் மற்றும் ஹைப்பர் தைராய்டிம் என்ற பாதிப்புகள் றபடும்.
- சுமார் 4.2 கோடி இந்தியர்கள் தைராய்டு நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, தொற்றா நோய்கள் (NCDs) என்பதாகும்.




## சர்வதேச உருளைக்கிழங்கு தினம் - மே 30

- ❖ இந்த நாளானது முதல் முறையாக இந்த ஆண்டு அனுசரிக்கப்படுகிறது.
- ❖ உருளைக்கிழங்கு 16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் அறிமுகப் படுத்தப் பட்டு பின்பு அது உலகின் பிற பகுதிகளுக்கும் பரவியது.
- ❖ சுமார் 5000 வகைகளுடன், உருளைக்கிழங்கின் பன்முகத்தன்மை உலகளாவிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது.
- ❖ உலகளவில் அரிசி மற்றும் கோதுமைக்கு அடுத்தபடியாக இது மூன்றாவது அதிகளவில் நுகரப்படும் உணவுப் பயிர் ஆகும்.
- ❖ உலகில் மொத்தம் 159 நாடுகளில் மொத்தம் 17.8 மில்லியன் ஹெக்டேரில் உருளைக் கிழங்கு பயிரிடப்படுகின்றன.
- ❖ உலகில் ஆண்டுதோறும் 374 மில்லியன் டன் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப் படுகிறது.
- ❖ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Harvesting Diversity, Feeding Hope" என்பது ஆகும்.

## கோவா மாநில தினம் - மே 30

- ❖ 1947 ஆம் ஆண்டில் இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு, போர்த்துகீசியர்களை தங்கள் பகுதிகளை விட்டுக் கொடுக்குமாறு கோரியது என்று இருப்பினும் போர்த்துகீசிய அரசு அதற்கு மறுத்தது.
- ❖ 1961 ஆம் ஆண்டில், இந்திய அரசு ஆனது விஜய் நடவடிக்கையினைத் தொடங்கி டாமன் மற்றும் டையூ தீவுகளையும் கோவாவையும் இந்தியாவுடன் இணைத்தது.
- ❖ கோவா அந்தஸ்து வாக்கெடுப்பு எனப்படும் ஒரு கருத்துக் கணிப்பு ஆனது 1967 ஆம் ஆண்டில் நடத்தப் பட்டது.
- ❖ கோவா இந்தியாவின் ஒன்றியப் பிரதேசமாக மாறுவதற்கு ஆதரவாக வேண்டி மக்கள் வாக்களித்தனர்.
- ❖ 1987 ஆம் ஆண்டு மே 30 ஆம் தேதியன்று, இந்தப் பிரதேசம் பிரிக்கப்பட்டு கோவா மாநிலம் உருவாக்கப்பட்டது.
- ❖ டாமன் மற்றும் டையூ ஒன்றியப் பிரதேசமாகவே இருந்தது.

## உலக ஆவுளியா தினம் - மே 28

- ❖ துகோங், பொதுவாக கடல் பசு என்று அழைக்கப்படுகிறது.
- ❖ ஆவுளியாக்கள் ஆனது கடல் ஆமைகள், கடல் குதிரைகள், கடல் வெள்ளரிகள் மற்றும் இதர இனங்கள் போன்ற அருகி வரும் கடல் வாழ் இனமாகும்.
- ❖ இந்தியா உட்பட பல்வேறு நாடுகளின் கடலில் பிரத்தியேகமாக வாழும் தாவர உண்ணி பாலூட்டிகளில் தற்போதுள்ள ஒரே இனம் இதுவாகும்.
- ❖ ஆவுளியாக்கள் முதலில் குட்டிகளை ஈன்று, பின்னர் தனது உடலில் பால் உற்பத்தி செய்து பாலூட்டுகின்றப் பாலூட்டிகளாகும்.




## புகையிலை எதிர்ப்பு தினம் - மே 31


- ❖ இந்த வருடாந்திர நிகழ்வு ஆனது உலக சுகாதார அமைப்பினால் (WHO) தொடங்கப் பட்டது.
- ❖ தங்கள் உயிரைக் கொள்ளும் புகையிலைச் சந்தைப்படுத்தல் உத்திகளில் இருந்து தங்களைப் பாதுகாக்க அரசாங்கங்களை வலியுறுத்துகின்ற உலகெங்கிலும் உள்ள இளையோர்களுக்கு இது ஒரு தளத்தை வழங்குகிறது.
- ❖ அனைத்து பிராந்தியங்களிலும் உள்ள வயது வந்தவரை விட குழந்தைகள் மின்சார சிகரெட்டுகளை அதிக விகிதத்தில் பயன்படுத்துகின்றனர்.
- ❖ உலகளவில் 13-15 வயதுடைய சுமார் 37 மில்லியன் இளையோர்கள் புகையிலையைப் பயன்படுத்துகின்றனர்.
- ❖ 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Protecting Children from Tobacco Industry Interference" என்பதாகும்.




# இதரச் செய்திகள்

## விண்கல் மோதலால் உருவான லூனா பள்ளம்

- நாசாவின் லேண்ட்சாட் 8 செயற்கைக் கோள் ஆனது, இந்தியாவின் குஜராத்தின் கட்ச் மாவட்டத்தில் அமைந்துள்ள சுமார் 6,900 ஆண்டுகள் பழமையான மோதலால் ஏற்பட்ட பள்ளத்தின் திகைப்பூட்டும் படங்களைப் படம் பிடித்துள்ளது.
- அதன் புவி வேதியியல் பகுப்பாய்வானது "இது ஒரு விண்கல் தாக்கத்தின் சிறப்பியல்பு அடையாளங்களைக் கொண்டுள்ளது" என்பதைக் கண்டறிந்தது.
- இந்தப் பள்ளத்திற்கு, அருகிலுள்ள கிராமத்தின் பெயரால் இது லூனா என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இது அறிவியலாளர்கள் மற்றும் ஆர்வலர்களின் ஆர்வத்தைத் தூண்டியுள்ள ஒரு புவியியல் அதிசயமாகும்.
- தோராயமாக 1.8 கிலோமீட்டர் விட்டம் கொண்ட லூனா பள்ளத்தின் வெளிப்புற விளிம்பு ஆடன்கு பள்ளத்தின் தரைப்பகுதியிலிருந்து சுமார் 20 அடி உயரத்தில் உள்ளது.
- இந்தப் பள்ளத்தில் உள்ள மண்ணில் காணப்படும் தாவர எச்சங்களின் கதிரியக்க கார்பன் காலக்கணிப்பு ஆனது, விண்கல் தாக்கம் சுமார் 6,900 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டது என்பதை தீர்மானிக்க அறிவியலாளர்களுக்கு உதவியது.
- லூனா பள்ளம் ஹரப்பா குடியேற்றத்தின் ஒரு பழங்கால எஞ்சியப் பகுதிக்கு அருகில் உள்ளது.



## 90 மில்லியன் ஆண்டுகள் பழமையான தாவர உண்ணி டைனோசர்


- அர்ஜென்டினாவைச் சேர்ந்த தொல்லுயிரியல் ஆராய்ச்சியாளர்கள் புதிய நடுத்தர அளவிலான தாவர உண்ணி டைனோசரை கண்டறிந்ததாக அறிவித்துள்ளனர்.
- இது வேகமாக ஓடக் கூடியதாகவும், 90 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இன்றைய படகோனியாவில் கிரெட்டேசியஸ் காலத்தின் பிற்பகுதியில் வாழ்ந்ததாகவும் கருதப் படுகிறது.
- சாகிசரஸ் நெகுல் என்றப் பெயரிடப்பட்ட இந்த விலங்கு பியூப்லோ பிளாங்கோ என்ற இயற்கைக் காப்பகத்தில் கண்டறியப்பட்டது.
- இந்த மிகப்பெரிய சாகிசரஸ் 2.5 அல்லது 3 மீட்டர் நீளமும், 70 சென்டிமீட்டர் உயரமும் (8 முதல் 10 அடி நீளம் மற்றும் 27 அங்குல உயரம்) கொண்டது.



## உலகின் ஆழமான கடல் துளை

- இலத்தீன் அமெரிக்க நாடான மெக்சிகோவில் உலகின் மிக ஆழமான (கடல்) நீலத் துளையினை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- அவர்கள் கடல் மட்டத்திலிருந்து 1,380 அடி அல்லது 420 மீட்டர் கீழே சென்றுள்ளனர், ஆனால் அது அந்தத் துளையின் முடிவு அல்ல.

- டாம் ஜா' கடல் துளை (TJBH) எனப்படும் இதுவரை அறியப்பட்ட "ஆழமான கடல் துளை", யுகடன் தீபகற்பத்தில் உள்ள சேதுமால் விரிகுடாவில் அமைந்துள்ளது.
- இதன் ஆழத்தினை சிகாகோவில் உள்ள டிரம்ப் கோபுரத்தின் உயரத்துடன் ஒப்பிடச் செய்ய லாம்.
- கடல் துளைகள் என்பது நீர் நிரப்பப்பட்ட செங்குத்துக் குகைகளாகும் என்பதோடு, அவை சுண்ணாம்பு, பளிங்கு அல்லது ஜிப்சம் போன்ற கரையக் கூடிய பொருட்களால் ஆன பாறைக் கட்டமைப்பு உள்ள கரையோரப் பகுதிகளில் காணப்படும்.
- கடல் துளைகளில் பொதுவாக நன்னீர், உப்பு அல்லது கலப்பு கட்டமைப்பில் உள்ள ஒத அலையின் தாக்கம் கொண்ட தண்ணீர் காணப்படும்.
- இதற்கான நன்கு அறியப்பட்ட எடுத்துக்காட்டுகள் தென் சீனக் கடலில் உள்ள டிராகன் துளை மற்றும், மாபெரும் கடல் துளை மற்றும் கரீபியனில் உள்ள டீனின் கடல் துளை ஆகியனவாகும்.
- எகிப்தில் உள்ள தஹாப் கடல் துளை மற்றும் பெலிஸில் உள்ள மாபெரும் கடல் துளை ஆகியவை மற்ற உதாரணங்களாகும்.





## பறவைக் காய்ச்சலால் ஏற்பட்ட முதல் கடற்பசு உயிரிழப்பு

- நார்வேயின் ஆர்க்டிக் தீவுகளுள் ஒன்றில் பறவைக் காய்ச்சலால் கடற்பசு ஒன்று உயிரிழந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
- பறவைக் காய்ச்சல் ஆனது முதன்மையாக வாத்துகள் போன்ற வைரஸ் சுமந்து செல்லும் பறவைகள் மூலம் பரவுகிறது.
- பாதிக்கப்பட்டப் பறவைகளை உட்கொள்வதாலும், பிற விலங்குகளுடன் நெருக்கமாக வாழ்வதால் பாலூட்டிகளும் இதனால் பாதிக்கப் பட்டுள்ளன.
- இரண்டு டன் எடை வரை வளரக்கூடிய கடற்பசு முதன்மையாக மீன்களை உண்ணக் கூடியவை ஆனால் இது சில சமயங்களில் கடல் வாழ் பறவைகளையும் உண்ணும்.



### 7000 ஆண்டுகள் பழமையான வரலாற்றுக்கு முந்தைய குடியேற்றம் - செர்பியா

- வடகிழக்கு செர்பியாவின் பனாட் பகுதியில் மாபெரும் அளவிலான வரலாற்றுக்கு முந்தைய காலத்தினைச் சேர்ந்த குடியேற்றப் பகுதியானது கண்டறியப்பட்டுள்ளது.
- தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் இதுவரை அறியப்பட்ட குடியேற்றத்தை புதிய கற்காலத்தின் பிற்பகுதியை விட மிகவும் பிந்தையக் காலத்தினை (சுமார் 7,000 ஆண்டுகளுக்கு முந்தைய) சேர்ந்ததாக கூறுகின்றனர்.
- வடகிழக்கு செர்பியாவின் பனாட் பகுதியில் டாமிஸ் நதிக்கு அருகில் இந்த குடியிருப்பு அமைந்துள்ளது.
- வின்கா கலாச்சாரம் என்பது இந்த காலக் கட்டத்தில் தென்கிழக்கு-மத்திய ஐரோப்பாவின் ஒரு பகுதியில் வாழ்ந்து வந்த ஒரு வரலாற்றுக்கு முந்தைய இனக் குழு ஆகும்.




### புவியின் ஒளிச்சேர்க்கைக்கான பழமையான சான்று


- ஒளிச்சேர்க்கையின் தோற்றம் பற்றிய மதிப்புமிக்க நுண்ணறிவுகளை வழங்கும் பண்டைய நுண்ணிய தைலகாய்டு கட்டமைப்புகளை அறிவியலாளர்கள் கண்டறிந்து உள்ளனர்.
- இந்த சிறிய புதைபடிவங்கள் என்பவை பழங்காலப் பாறை அமைப்புகளுக்குள் இரண்டு பில்லியன் ஆண்டுகளுக்கும் மேலாக பாதுகாக்கப் பட்டிருந்தன.
- இந்த உயிரியல் கட்டமைப்புகள் ஆனது, புதைபடிவ வடிவத்தில் பாதுகாக்கப்பட்ட சயனோபாக்டீரியாவின் எச்சங்களாகும் என்பதோடு அவை சுமார் 1.75 பில்லியன் ஆண்டுகளுக்கு முந்தையவையாகும்.

- பூமியில் இன்று வரை பதிவு செய்யப்பட்ட மிகப் பழமையான ஒளிச்சேர்க்கை சான்று இதுவாகும்.
- சயனோபாக்டீரியாக்கள் ஒளிச்சேர்க்கை செய்யும் நுண்ணிய உயிரினங்கள் ஆகும்.
- தைலகாய்டுகள் குளோரோபிளாஸ்டின் உட்புறச் சவ்வுக்குள் இணைக்கப்பட்ட வட்டு வடிவ பைகள் ஆகும்.
- சயனோபாக்டீரியாவில் ஆக்ஸிஜன் ஒளிச்சேர்க்கை செயல்பாடு நிகழ்வதற்கு அவை அவசியமாகும்.




## நியண்டர்தால்களின் பேச்சு திறன்

- நியண்டர்தால்கள் நவீன மனிதர்களுக்கு நிகரான பேச்சு ஒலிகளைக் கேட்கும் மற்றும் உருவாக்கும் திறன் கொண்டவர்கள் என்பதற்கான பல்வேறு ஆதாரங்களை அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டுள்ளனர்.
- அவர்கள் நவீன கால மனிதர்களைப் போலவே, குரல் தொடர்பிற்குத் தேவையானதாக கூறப்படும் 4 முதல் 5 கிலோஹெர்ட்ஸ் வரம்பிலான சிறந்த செவித்திறனைக் கொண்டு இருந்தனர்.
- நியாண்டர்தால்கள் மற்றும் சிமா ஹோமினின் மூதாதையரின் காது உறுப்புகளின் கட்டமைப்புகள் - தோராயமாக 430,000 ஆண்டுகளுக்கு முந்தையப் புதைபடிவங்கள்- இதற்காகப் பகுப்பாய்வு செய்யப்பட்டன.



## டிரைக்கோடெர்மா ஆஸ்பெரெல்லம்





- ❖ லூதியானாவில் உள்ள பஞ்சாப் மாநில வேளாண் பல்கலைக்கழகம் (PAU) ஆனது, டிரைக்கோடெர்மா அஸ்பெரெல்லம் (2% WP) என்ற ஒரு உயிரியக்கக் கட்டுப்பாட்டுக் காரணியினை உருவாக்கியுள்ளது.
- ❖ உயிரியக்கக் கட்டுப்பாட்டு காரணியானது பாஸ்மதி அரிசியின் பயிர்களைத் தாக்கும் கொடிய 'தாள் அழுகல்' அல்லது 'பக்கனே' நோயை தடுக்க பஞ்சாப் விவசாயிகளுக்கு உதவும்.
- ❖ ஹரியானாவுடன் சேர்த்து இந்தியாவின் பாஸ்மதி ஏற்றுமதியில் 70 சதவீதத்திற்கும் அதிகமானப் பங்களிப்பை வழங்கும் பஞ்சாபில் இது ஒரு பெரிய மேம்பாடாக கருதப் படுகிறது.
- ❖ ஒரு மண்ணில் உள்ள விதை மூலம் பரவும் நோய்க்கிருமியான ஃபுசாரியம் வெர்டி சில்லியாய்ட்ஸ் என்ற பூஞ்சையால் ஏற்படும் இந்த நோய், தாவரத்தின் வேர் வழியாக இந்தத் தொற்றினைப் பயிரின் பிற பகுதிகளுக்குப் பரப்புகிறது.

## யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பிராந்தியப் பதிவேட்டின் நினைவகம்

- ❖ ராமசரிதமனாஸ், பஞ்சதந்திரம் மற்றும் சஹ்ருதயலோக-லோகனா ஆகிய மூன்று இந்திய இலக்கியப் படைப்புகள் ஆனது யுனெஸ்கோவின் உலக ஆசிய-பசிபிக் பிராந்தியப் பதிவேட்டில் சேர்க்கப்பட்டுள்ளன.
- ❖ ராமசரிதமனாஸ், 16 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த இந்தியப் பக்தி இயக்கக் கவிஞர் துளசிதாஸ் அவர்களால் அவாதி மொழியில் இயற்றப்பட்ட ஒரு காவியக் கவிதை ஆகும்.
- ❖ காஷ்மீரி மொழி அறிஞர்களான ஆச்சார்யா ஆனந்தவர்தன் மற்றும் அபினவகுப்தா ஆகியோரால் 15 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட சஹ்ரதயலோக-லோகனா, அதன் அழகியல் காரணமாக இப்பட்டியலில் சேர்க்கப்பட தேர்ந்தெடுக்கப்பட்டது.
- ❖ யுனெஸ்கோ அமைப்பின் MOW திட்டம் என்பது ஆவணப் பாரம்பரியங்களை, குறிப்பாக அரிதான மற்றும் அருகி வரும் பாரம்பரியங்களைப் பாதுகாத்தல் மற்றும் அணுகுதல் மற்றும் பயன்படுத்துவதை பெரும் நோக்கமாகக் கொண்ட ஒரு சர்வதேச ஒத்துழைப்பு உத்தி ஆகும்.

- UNESCO அமைப்பின் இணைய தளத்தின்படி, 2023 ஆம் ஆண்டு மே மாத நிலவரப்படி, சர்வதேச MoW பதிவேட்டில் 494 கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன.
- இருப்பினும், MoW பதிவேடு பிராந்திய மட்டங்களிலும் செயல்படுகிறது.

## சாஹுல் கண்டம்




- புதிய தொல்பொருள் பதிவுகள், 70,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பகால மனிதர்கள் பயணித்த அட்லாண்டிஸ் போன்ற நிலப்பரப்பு குறித்த ஆதாரங்களை வழங்குகின்றன.
- ஒரு காலத்தில் சாஹுல் என்று அழைக்கப்பட்ட இந்த மாபெரும் கண்டம் ஆனது, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு ப்ளீஸ்டோசீன் சகாப்தத்தின் போது வெளிப் பட்ட ஒரு நிலப்பரப்பாகும்.
- இந்தக் காலகட்டத்தில் பூமி பிற்காலப் பனி யுகத்தின் மையக் கட்டத்தில் இருந்தது.
- பனிப்பாறையாக்க நிகழ்வானது, கடல் மட்டம் குறைவதற்கு வழிவகுத்ததால், முன்பு நீரில் மூழ்கியிருந்த கண்ட அடுக்குகளின் பகுதிகளை வெளிப்பட்டன.
- இது தற்போது ஆஸ்திரேலியாவின் பிரதான நிலப்பகுதி எனப்படும் வடக்கில் பப்புவா நியூ கினியா மற்றும் தெற்கில் டாஸ்மேனியாவுடன் இணைக்கும் நிலத்தை வெளிப்படுத்தியது.

## பண்டைய போபாப் மரங்கள்

- பண்டைய போபாப் மரங்களின் தோற்றத்தின் மீதான மர்மத்தை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- டி.என்.ஏ ஆய்வுகளின்படி, இந்தச் சிறப்பு மிக்க மரங்கள் முதன்முதலில் மடகாஸ்கரில் 21 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றின.
- அவற்றின் விதைகள் பின்னர் கடல் நீரோட்டங்கள் மூலமாக ஆஸ்திரேலியாவிற்கும், ஆப்பிரிக்காவிற்கும், கொண்டு செல்லப்பட்டு பிறகு தனித்துவமான உயிரினங்களாக உருவாகின.

- உலகின் எட்டுப் பெருக்க மர இனங்களில் ஆறு இனங்கள், மாபெரும் அடிமரங்களை கொண்டத் தனித்துவமான மரங்கள் வரலாற்று ரீதியாக பெரிய காடுகளில் வளர்ந்து வருகின்ற மடகாஸ்கரைப் பூர்வீகமாக கொண்டுள்ளன.
- பெரும்பாலும் போபாப் மரங்கள் 1,000 ஆண்டுகள் வாழக் கூடியவை என்பதோடு, ஒரு ஹெக்டேர் நிலத்தில் முழுமையாக வளர்ந்த எட்டு போபாப் மரங்கள் வளரும்.
- மடகாஸ்கரில் அதான்சோனியா பெரேரி எனப்படும் உலகின் அரிதான போபாப் மரம் காணப் படுகிறது.
- மாபெரும் லெமூர்ஸ் அல்லது மாபெரும் ஆமைகள் போன்ற பெரிய உடல் கொண்ட விலங்குகள் போபாப் மரங்களின் விதைகளை அவற்றின் சாணத்தின் மூலமாகப் பரப்புவதில் முக்கியப் பங்கு வகித்தன.
- ஆனால் அவை சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு அழிந்துவிட்டன.
- இந்த விலங்குகள் இல்லாமல், பெருக்க மரங்களின் விதைகள் திறம்பட்ட முறையில் பரவாது.




## 1.5 பில்லியன் ஆண்டுகள் பழமையான "மாபெரும்" வைரஸ்கள்

- 1.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய மாபெரும் வைரஸ்கள் யெல்லோஸ்டோனின் புவி வெப்ப நீரூற்றுகளில் கண்டறியப்பட்டுள்ளன.
- வழக்கமான வைரஸ்களுடன் ஒப்பிடும் போது இவை மிகப் பெரிய மரபணுக்களைக் கொண்டிருப்பதாலும் மனிதர்களுக்கு எந்த ஆபத்தையும் ஏற்படுத்தாததாலும் இந்த வைரஸ்கள் 'மாபெரும்' வைரஸ்கள் என்று பெயரிடப்பட்டுள்ளன.
- ஆனால் இவை ஒற்றை செல் உயிரினங்கள் உருவாகும் போது பூமியில் இருந்த சூழ்நிலைகள் எப்படி இருந்தன என்பதை விளக்கக் கூடியவையாக உள்ளன.
- யெல்லோஸ்டோனின் வெப்ப நீரூற்றுகள் குறைந்தபட்சம் 15,000 ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் பகுதியில் உள்ள கடைசி பனிப்பாறைகள் உருகிய பிறகு உருவாகி, பிறகு வெந்நீரூற்றுக்கள் உருவாக அவை வழிவகுத்தன.
- 1872 ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட அமெரிக்காவின் யெல்லோஸ்டோன் தேசியப் பூங்கா உலகின் முதல் தேசியப் பூங்கா ஆகும்.





## நைல் நதியின் பழமையான கிளை

- செயற்கைக்கோள் படங்களைப் பயன்படுத்தி, வல்லுநர்கள் பிரமிடு பகுதிகளுக்கு அருகில் ஒரு பழங்கால நதி கிளை இருந்ததற்கான சாத்தியமான இடங்களை அடையாளம் கண்டுள்ளனர்.
- இந்த செயற்கைக்கோள் படங்கள் ஒரு காலத்தில் பிரமிட் பகுதிகளுக்கு அருகில் பாய்ந்த 64-கி.மீ. நீளமுள்ள முன்னாள் ஆற்றின் கிளை இருப்பதைக் குறிக்கின்றன.
- இந்த ஆற்றின் கிளைக்கு அரபு மொழியில் பிரமிடுகள் என்று பொருள்படும் "அஹ்ரமத்" என்று பெயரிட வேண்டும் என்று அவர்கள் முன்மொழிந்துள்ளனர்.
- ஏறத்தாழ 4,200 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கிய ஒரு பெரிய வறட்சிக்குப் பிறகு காற்றில் வீசும் மணல்களின் அளவு அதிகரித்தது, இந்த நதிக்கிளை கிழக்கு நோக்கி நகர்வதற்கு காரணமாக அமைந்திருக்கலாம் என்று அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.
- மணல் திரட்சியுடன் சேர்ந்த இந்த நகர்வு ஆனது, இறுதியில் ஆற்றில் வண்டல் படிந்து மறைவதற்கு வழிவகுத்தது.




## பழமையான அறியப்பட்ட மனித வைரஸ்கள்



- 50,000 ஆண்டுகள் பழமையான நியாண்டர்டால் எலும்புகளில் பண்டைய வைரஸ்கள் இருந்ததற்கான ஆதாரங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- வைரஸ்களின் உடைந்த துண்டுகள் பண்டைய காலத்தில் வைரஸ்களின் "சாத்தியமான இருப்பை" பரிந்துரைக்கின்றன.
- நியாண்டர்தால்கள் மீதான இந்த வைரஸ்களின் தாக்கம் சரியாக தெரியவில்லை.
- நியாண்டர்தால்கள் அடினோவைரஸ், ஹெர்பெஸ்வைரஸ் மற்றும் பாப்பிலோமா வைரஸ் போன்ற மூன்று பொதுவான நவீன மனித வைரஸ்களால் பாதிக்கப்படலாம் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.
- நவீன கால மனிதர்களில், அடினோவைரஸ்கள் சளி மற்றும் காய்ச்சல் போன்ற அறிகுறிகள், தொண்டை புண் மற்றும் சிவந்த கண் ஆகியவற்றை ஏற்படுத்தும்.
- இந்தக் கண்டுபிடிப்புகள் மனிதரை தாக்கும் வைரஸ்களின் பழமையான எச்சங்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்றன என்பதோடு, இது இதற்கு முன்னதாகக் கண்டறியப் பட்ட பழமையான வைரசின் ஒரு முந்தைய சாதனையினை சுமார் 20,000 ஆண்டுகள் வித்தியாசத்தில் விஞ்சியது.
- முந்தைய சாதனையானது, சைபீரியாவில் 31,000 ஆண்டுகள் பழமையான குழந்தைப் பற்களில் காணப்பட்ட ஒரு பொதுவான சளிப் பாதிப்பினை ஏற்படுத்தும் வைரஸ் கண்டறியப் பட்டதாகும்.

## ரெமல் புயல்

- கரையைக் கடந்த ரெமல் புயல் ஆனது, மேற்கு வங்காளம் மற்றும் வங்காளதேசத்தின் தென்மேற்கே மோங்லாவுக்கு அருகில் உள்ள கடலோரப் பகுதிகளை பாதித்தது.
- இந்தப் பகுதியில் உள்ள வெப்பமண்டலப் புயல்களுக்கு பெயரிடும் தரநிலை மரபுப்படி ஓமன் நாட்டினால் இப்பெயரிடப்பட்டது.
- அரபு மொழியில் ரெமல் என்றால் 'மணல்' என்று பொருள்படும்.
- வங்காள விரிகுடாவில் இந்த பருவத்தில் பருவமழைக்கு முந்தையதாக ஏற்பட்ட முதல் புயல் ரெமல் ஆகும்.


Cyclone 'Remal'
May 28 (11:30 am)
Well Marked Low Pressure Area
(20-30 kmph, gusting to 40)
May 27 (11:30 pm)
Depression
(40-50 kmph, gusting to 60)
Assam
INDIA
Meghalaya
BANGLADESH
Dhaka
May 27 (11:30 am)
Cyclonic Storm
(60-70 kmph, gusting to 80)
Forecast track
West Bengal
INDIA
Kolkata
May 26 (11:30 pm)
Severe Cyclonic Storm
(110-120 kmph, gusting to 135)
May 26 (11:30 am)
Severe Cyclonic Storm
(110-120 kmph, gusting to 135)
May 25 (11:30 pm)
Cyclonic Storm
(75-85 kmph, gusting to 95)
MYANMAR
Observed track
Source: IMD
Bay of Bengal

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★